சொ. சண்முகம்

# அனிச்ச அடி

[ மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை
நாடகப் போட்டியில் பரிசு பெற்றது ]

ஆசிரியர் :
புலவர் ஆ. பழநி

கழக வெளியீடு

அரசு



இந்நாடகத்தின் ஆசிரியரான புலவர் திரு ஆ பழநி 7—11—'31 இல்-காரைக்குடியில் வேளாண் குலத்தில் தோன்றியவர். தம் இருபத்தாறும் அகவையில் மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் பயின்று புலவர் பட்டம் பெற்றார். கடந்த பத் தாண்டுகளாகக் காரைக்குடி மீனாட்சிசுந்தரேசுவரர் உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றி வருகிறார். திருப்பத்தூர் வட்டத் தமிழாசிரியர் கழகச் செயல ராகத் திகழ்கிறார்.

கழகம் நடத்திய திருக்குறள் புத்துரைப் போட்டியில் பரிசு பெற்றவர். இவர்தம் 'அன்னி ஞிமிலி' என்னும் நாடகம் தமிழகத் தமிழாசிரியர் கழக நாடகப் போட்டி யில் பரிசு பெற்றது.

தனிக்காக்கட்டு ரூ. 6-00

# அனிச்ச அடி

புலவர் ஆ. பழனி

கழக வெளியீடு

கழக வெளியீடு : ௧௫௭௬

# அனிச்ச அடி

[மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை
நாடகப் போட்டியில் பரிசு பெற்றது]

*
* *
*

ஆசிரியர் :
**புலவர் ஆ பழநி**
மீ சு உயர்நிலைப்பள்ளி
காரைக்குடி

*
* *
*

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1
1973

© ஆ. பழநி (1931)

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.

Branches:
Tirunelveli-6 Madurai-1 Coimbatore-1
Kumbakonam

Ed 1 May 1973

O31,2N31,1
N73

ANICHA ADI

Appar Achakam, Madras-1. (1/2)



மனோன்மணீயம் ஆசிரியர்

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, M.A., F.R.H.S.

1891ஆம் ஆண்டில்

மேனாட்டுமுறைதழுவி

முதன்முதல் வெளிவந்த

**மனோன்மணீயம்**

என்னும் நாடகத்தை

ஒப்பதொரு

நாடக நூல் தோன்றாத

குறையினை நீக்கும்பொருட்டுக்

கழகம் அமைத்த

நாடகப் போட்டியில்

பரிசு பெற்ற

**அனிச்ச அடி**

என்னும்

இந் நாடக நூல்

**பேராசிரியர் சுந்தரம் பிள்ளை**

அவர்களை நினைந்து

நன்றி செலுத்தும்பொருட்டாக

உரிமையாக்கப்படுகின்றது.

——

## அறிவிப்பு

இந் நாடக நூற்பதிப்பு
ஒவ்வொன்றின் விற்பனையிலிருந்து
நூலாசிரியர்க்கு
விற்பனையூதியம் (ராயல்டி)
100 க்கு 10 விழுக்காடு
வழங்கிவருவதோடு
பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள்
திருவுருவச் சிலையமைப்புக்கும்
சிலையமைப்புக்குப் பின்
அவர்கள் திருப்பெயரால் ஏற்படுத்தும்
பரிசுத் திட்டத்துக்குமாக
100 க்கு 10 விழுக்காடு
வழங்கப்பெறும்.

## பதிப்புரை

இயல், இசை, நாடகமென்னும் முத்திறத்திலும் ஒத்தமைந்த சிறப்புடைமையான் செந்தமிழ் முத்தமிழ் என்னும் தனிக்குறியீடுபெற்றுத் திகழ்வதாயிற்று. ஆயின், நாளடைவில் இயற்றமிழ் ஒன்றே யேற்றம் பெற்றுச் சிறப்புற ஏனைய இசைத்தமிழும் நாடகத்தமிழும் மங்கி மறையலாயினமை தமிழன்னையின் தவக்குறையேயாகும். முத்தமிழ்க் காவியமாகிய 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்' ஆயிரத்தெண்ணூறுண்டுகட்கு முன்னர்த் தோன்றி அருங்கலைவாணர்க்கு விருந்தாயமைந்தது. அதன்பின்னர் அதற்கிணையானதொரு முத்தமிழ்க் காவியமோ, தனி நாடகக் காவியமோ தமிழ் மொழியிற் றோன்றாமை வியப்புக்கும் சிந்தனைக்கு முரியதாகும்.

இலக்கியத் தகுதிவாய்ந்த செம்மொழி நாடகங்கள் ஒன்றுந் தோன்றா நிலையில், கலையார்வலர் சிலரால் பேச்சுத் தமிழ் உரையாடலும், பழகு தமிழ்ப் பாடல்களும் கொண்ட நாடகங்கள் சில எழுதப்பெற்றன. அவை 'விலாசங்கள்' என்ற பெயரில் 19ஆம் நூற்றாண்டில் தமிழகத்துப் பொதுமக்களிடையே உலாப் போந்தன. அவற்றைக் கண்ட அறிஞர் பெருமக்கள் உள்ளம் நொந்தனர். ஆங்கிலமொழியி லமைந்த 'ஷேக்ஸ்பியர்' நாடகங்களைப் போன்று நமது தமிழ் மொழியில் மாண்புறு நாடகங்களில்லையேயென் றேங்கினர். இவ்வாறு அறிஞர் பலர் திண்ணியராக எண்ணியதன் விளைவே போன்று திருவனந்தைச் சுந்தரம் பிள்ளையவர்கள் 'மனோன்மணீயம்' என்னும் இலக்கியச் சிறப்புமிக்க நாடகத்தை யியற்றித் தமிழன்னையின் குறைபோக்கிப் பொன்றாப் புகழ் பெற்றார். அவர் தமிழ்த்தாயின் அடிமைத் தளைகளை அகற்றியதோடு அவளது சீரிளமைத் திறத்தையும்

வியந்து பாடினர். அதனால் தமிழன்னையின் புகழ் உலக அரங்கில் ஓங்குவதாயிற்று. " தற்காலத் தமிழ் நாடகத் தந்தை " யென அவர்தம் பெயர் தமிழ் இலக்கிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப் பெறுவதாயிற்று.

1891ஆம் ஆண்டில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் ''மனோன்மணீயம்'' என்னும் செந்தமிழ் நாடகத்தை இயற்றிய பின்னர் இந்நாள் வரை அதுபோன்ற பிறிதொரு நாடகம் தமிழ் மக்களின் இதயத்தையும் எண்ணத்தையும் கவரத்தக்க வகையில் தோன்றவில்லை. ஏறத்தாழ எழுபத்தைந்து ஆண்டுகளாக மனோன்மணீயமே மீண்டும் மீண்டும் பன்முறை பல்கலைக் கழகத்தில் பாடமாக வைக்கப்பெற்று வருகின்றது.

" மனோன்மணீயம் " போன்று அருங்கதைப் பாங்கும் அக்கதையை விளக்குமுகத்தான் நீதிகள், பழமொழிகள், உவமைகள், மெய்ப்பொருட்கருத்துக்கள், அறிவியற் கருத்துக்கள் முதலியவை ஏற்றபெற்றியியைந்தமைந்து ஆற்றொழுக்குத் தமிழ்நடையுங் கொண்ட வேறொரு நாடகம் தோன்றுதல் எளிதன்றாயினும் அத் துறையில் இற்றைத் தலைமுறையினர் ஒரு சிலரையேனும் ஊக்குவித்தற் பொருட்டு இக்கழகத்தார் ஆயிரம் (1000) வெண்பொற் காசுகளைப் பரிசுத் தொகையாகக் கொண்ட " மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை நாடகப்போட்டி "யை 1971இல் நடத்தினர். இப்போட்டியில் கலந்து கொண்டு பரிசு பெற்றதே " அனிச்ச அடி " என்னும் இந்நாடக நூலாகும்.

பழந்தமிழ் இலக்கியத்தைப் பயின்றார் உள்ளத்தில் ''பெண் கொலை புரிந்த நன்னன்'' என்ற தொடர் நீங்காது நிலைபெற்றிருக்குமொன்றாகும். தன் தோட்டத்து மாவின் பசுங் காயினைத் தின்றதற்காகப் பைங்



கொடி ஒருத்தியை நன்னன் கொலை புரிந்தான் என்பது வரலாறு. நாடகத்தில் பல திருப்பங்களைத் தந்து நன்னனை நல்லவனாக்கிக் காட்டுகிறார் இந்நாடகத்தின் ஆசிரியர். ஆற்றொழுக்கான நடையில் ஆன்றோர் மொழிகளை ஆங்காங்கே பெய்து முன்னோர்மொழி பொருளேயன்றி அவர்மொழியும் பொன்னேபோல் போற்றியிருக்கும் நாடக ஆசிரியரின் பாங்கு பாராட்டுதற்குரியது.

நடுவுநிலையுள்ளத்துடன் இந்நாடகநூலை யோதுவார் இந்நூல் ஓரளவுக்கு மனோன்மணீயத்தின் சாயலைப் பெற்றிருப்பதையொப்புக் கொள்வர். எனினும், மனோன்மணீயத்தின் ஆழமும் அருமைப்பாடும் தத்துவ வித்தகத் தொடர்ப்பாடும் தவநனி விழுமியன வென்பதை யுன்னாமலிரார். எங்கள் முதன்முயற்சியில் மனோன்மணீயத்தின் சாயலான ஒரு நாடக நூலைத் தோற்றுவிக்க வியன்ற பேற்றினையெண்ணி மகிழ்கின்றோம். ஆயினும், மனோன்மணீயத்திற் கிணையேயானவொரு நூலைத் தோற்றுவித்த பின்னரே யாங்கள் முழுமன நிறைவு கொள்ளற்கியலும். அறிஞர் பெருமக்களின் ஊக்குவிப்பே அம்முயற்சியில் எங்களுக்குத் தூண்டுகோலாகும்.

மனோன்மணீய நாடக நூலை நன்கு பயின்று அதன் சாயலே போன்று இனிய தமிழில் எளிய நடையில் உவமைகள், நீதிகள், பழமொழிகள் முதலிய அணி நலன்கள் திகழ இந்நாடகத்தை ஆக்கியளித்த புலவர் திரு. ஆ. பழநி அவர்கட்குக் கழகம் பெரிதும் நன்றிக் கடப்பாடுடையதாகும். முதன் முயற்சியிலே மனோன்மணீயத்துக் கோரளவு ஒப்பதொரு சிறந்த இலக்கிய நாடகத்தை இயற்றிய இவ்வாசிரியரின் திறமையினைத் தமிழறிஞர் பெருமக்கள் பெரிதும் போற்றி ஊக்கமளிப்பார்களென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

போட்டிக்கு வந்த நாடகங்களைச் சீர்தூக்கி ஆய்ந்த நாடகப் போட்டிக் குழுவின் தலைவர் டாக்டர் ந. சஞ்சீவி,

எம்.ஏ., எம்.லிட்., பி.எச்டி. அவர்கட்கும், அக்குழுவின் உறுப்பினர்களாய்த் திகழ்ந்து பரிசுக்குரிய நாடகத்தினை ஆய்ந்துதேர்ந்த திருவாளர்கள் அவ்வை தி. க. சண்முகம், தி. க. பகவதி, எம்.எல்.சி., கவிஞர். எஸ். டி. சுந்தரம், டாக்டர். சி. பாலசுப்பிரமணியம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி., தணிகை உலகநாதன், தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை, இரா. கலியாணசுந்தரம் பிள்ளை பி.எஸ்ஸி. , டாக்டர் இரா. குமரவேலு, எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி., க. ப. அறவாணன் எம்.ஏ., பி.ஒ.எல்., தாயம்மாள் அறவாணன் எம்.ஏ., இரா. முத்துக்குமார சாமி, எம்.ஏ. பி.லிப்., ஆகியோர்க்குக் கழகம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

21—4—1971 இல் ‘மனோன்மணீயம்’ போன்ற சிறந்த இலக்கிய நாடகம் தோன்ற வேண்டுமென்று ரூபா ஆயிரம் பரிசு ஏற்படுத்தி எழுதியனுப்பிய அறிக்கையினைப் பார்வையிட்டுச் சில திருத்தங்களைச் செய்து ஊக்கமூட்டிய மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்கு நன்றிசெலுத்துங் கடப்பாடுடையோம்.

தமிழ்கூறு நல்லுலகத்தில் தமிழ் பயிற்றும் பல்கலைக் கழகங்கள் இந்நாடகநூலைப் பாடமாக்கி இத்துறையில் இக்கழகம் போட்டி நிகழ்த்தி மேலும் பல நல்ல நூல்களைப் பெற்று வெளியிடுவதற்குப் பேரூக்கமளித்தல் வேண்டுமென விழைகிறோம்.

சென்னை
31–5–1973 } சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| உரிமையுரை | | ௩ |
| பதிப்புரை | | ௫ |
| முன்னுரை | | ௧௧ |
| வாழ்த்துப்பா | | ௧௬ |
| நன்றியுரை | | ௨௧ |
| கதைச் சுருக்கம் (தமிழ்) | | ௨௩ |
| The story of Anicha Adi | | ௩௬ |
| இக் கதைக்கு அடிப்படையாக அமைந்த இலக்கியப் பகுதி | | ௩௭ |
| கதை மாந்தர் | | ௩௮ |
| களத்தில் மொழிந்த கதை | | ௪௬ |
| தமிழ் வாழ்த்து | | 1 |
| முதல் அங்கம் - | முதற் களம் | 5 |
| ,, | ௨ ஆம் களம் | 14 |
| ,, | ௩ ஆம் களம் | 31 |
| ,, | ௪ ஆம் களம் | 39 |
| ,, | ௫ ஆம் களம் | 50 |
| இரண்டாம் அங்கம் - | முதற் களம் | 58 |
| ,, | ௨ ஆம் களம் | 67 |
| ,, | ௩ ஆம் களம் | 78 |
| ,, | ௪ ஆம் களம் | 94 |
| மூன்றாம் அங்கம் - | முதற் களம் | 103 |
| ,, | ௨ ஆம் களம் | 111 |
| ,, | ௩ ஆம் களம் | 117 |
| நான்காம் அங்கம் - | முதற் களம் | 123 |
| ,, | ௨ ஆம் களம் | 131 |
| ,, | ௩ ஆம் களம் | 136 |

நான்காம் அங்கம் - ச ஆம் களம் 144

ஐந்தாம் அங்கம் - முதற் களம் 151
,, உ ஆம் களம் 159
,, ந ஆம் களம் 166
,, ச ஆம் களம் 171
,, ரு ஆம் களம் 176

பின்னிணைப்பு :

மேற்கோள் விளக்கம் (பழமொழிகள்) 183
இலக்கியப் பகுதி 188
அகப்பொருள் துறை விளக்கம் 196

---

# முன்னுரை

முன் தோன்றி மூத்த தமிழ் - முத்தமிழாய் வளர்ந்த தமிழ் - மூவேந்தர் மடி தவழ்ந்து முச்சங்கம் நடந்த தமிழ் - வரலாற்றில் ஏற்பட்டுவிட்ட வளைவுகளால் தாக்குண்ட போதிலும் தளராது நிலைத்து வாழ்தலையும் தாழாது நிமிர்ந்து நிற்றலையும் எண்ணுந்தோறும் இறும்பூது கொள்ளாதிருத்தல் இயல்வதன்று.

தமிழ் மொழியின் ஆளும் பரப்புக் குறைக்கப்பட்டு விட்டது. உண்மைதான். ஆனால், அது வாழும் தகுதியையோ - ஆளும் திறத்தையோ இழந்துவிடவில்லை. கிளை மொழிகள் தோன்றித் தனிக்குடித்தனம் வைத்துக் காலங்கள் பல கழிந்துவிட்டன. எனினும், தமிழ் தலைமையினை இழந்துவிடவுமில்லை ; தன்னியல்பு குன்றித் தளர்ந்து விடவுமில்லை.

வடமொழியும் பின்னர் வந்த ஆங்கிலமும் தமிழின் வாழ்வைக் கவர்ந்து கொள்ள இடையருது முயன்று வந்துள்ளன - முயன்றும் வருகின்றன. ஆயினும், தமிழ் திடமொழிந்து தேம்பி நிற்கவுமில்லை; தேய்வேனோ ?- மாய்வேனோ ? என்று திகைத்திடவுமில்லை. எல்லை சுருங்கினும் அல்லல் பெருகினும் 'எல்லையறு பரம்பொருள்போல் முன்னிருந்தபடி இருக்கின்ற' எம் உயிரினும் இனிய தீந்தமிழ் தன் பகையோடு போராடிய நேரத்திலும் தன் மக்கள் வகையோடு வாழ்தற்கான வழிகளையும் வழங்கியுள்ளது.

மண் எவ்வளவுதான் உரம் பெற்றிருந்தாலும் மழையின்மையும் நோய் நொடிகளும் சேருமானால் செடியின் வளர்ச்சி தடைப்படல் இயற்கைதானே ! தமிழின் நிலையும் இதுதான். வேற்று மொழிகளின்

புறப்பகை ஒரு பக்கம் ; 'நாமமது தமிழரெனக் கொண்டிங்கு' வாழ்ந்து நலிவு செய்யும் உட்பகை ஒரு பக்கம். இரண்டினையும் வென்று நிலைத்திருக்கின்றதே தமிழ் என்று எண்ணும்போதுதான் தமிழின் ஆற்றலை உலகம் வியக்கிறது. நல்லவர்களின் உள்ளம் அப் பேராற்றல் கண்டு பெருமிதமும் பேருவகையும் எய்துகின்றது

பிரெஞ்சு நாட்டு அறிஞர் வித்தர்யூகோ (Victor Hugo) தாம் எழுதிய 'நகையாளன்' (Laughing man) என்ற நெடுங் கதையில் 'கொம்பராசிகோ' (Comprachicos) என்றொரு கொடியவர் கூட்டம் ஐரோப்பாவில் இருந்ததாகக் கூறுவார். அக்கூட்டத்தினர் செல்வர்வீட்டுப் பிள்ளைகளைக் கவர்ந்து சென்று உருவத்தைச் சிதைத்தும் பெயரை மாற்றியும் வேடிக்கை காட்டிப் பொருள் ஈட்டுவாராம். பெற்றோர்கள் தம் பிள்ளையை நேரில் காண நேரினும் தம் பிள்ளையென்று கண்டறிய முடியாதாம். உருவத்தை மாற்றுவதில் திறமைமிக்க அரதிகானன் (Hardquinonne) என்ற அறுவை மருத்துவன் அந்நாளில் புகழ்பெற்று விளங்கினானாம். இவற்றைப் படிக்கின்ற பொழுதெல்லாம் - உருமாற்றத்திற்காளான குழந்தைகளை நினைக்கின்ற பொழுதெல்லாம் எனக்குத் தமிழின் நினைவுதான் வரும். 'தமிழே ! உன்னைச் சுற்றினும் ஒரு 'கொம்பராசிகர்' கூட்டம் இருக்கின்றதேயம்மா! 'அரதிகானன்கள்' அறுவைக் கருவியோடு நீ ஈன்றெடுத்த கலைக் குழந்தைகளைச் சுற்றிச்சுற்றி ,வருகின்றார்களே'-இப்படித் தான் என் மனம் எண்ணும்.

தமிழன் தமிழிசையைத் தனக்குத் தொடர்பில்லாதது போலக் கருதுகிறான். தமிழ்க் கலைகளைத் தனக்கு உறவில்லாதன போல ஒதுக்குகிறான். தமிழ் நாகரிகத்தை அயலாகக் கருதுகிறான். ஏன் ? தமிழ் மொழியைக் கூட அயன்மொழியாகக் கருதும் மனப்பான்மை அரும்பி நிற்கின்றது என்றால் தமிழ்நாட்டுக் கொம்பராசிகர்களின் திறமையை எண்ணி வியப்பதா ? தமிழனின் அறியாமையை எண்ணி இரங்குவதா ?



இசைக்கலைஞன் பாடுகிறான். இது என்ன பண் என்று ஒருவரைக் கேட்டால் 'புறநீர்மை' என்கின்றார். பாடுபவனைக் கேட்டால் 'பூபாளம்' என்கிறான். ஒருவன் 'காந்தாரம்' என்பதை மற்றவன் 'மோகனம்' என்கிறான். சரி, இரண்டிற்கும் வேறுபாடு உண்டா என்றால் பெரியதொரு வேறுபாடு இல்லை. வேறுபாடு மிகச் சிறியது தான். அஃதும் பாடும் முறையிலேதான் என்கின்றான். இதனை இருவரும் ஏற்றுக் கொள்கின்றனர். இங்கே தான் தமிழ்நாட்டு அரதிகானனின் கைவரிசையை உணருகிறோம். ஐரோப்பிய அரதிகானன் உருவத்தைச் சிதைத்துப் பெயரை மாற்றியது போலவே தமிழ்நாட்டு அரதிகானனும் பாடும் முறையைத் திரித்துப் பெயரை மாற்றியுள்ளான். தமிழன் தன்னுடைய கலையையே இனங் கண்டுகொள்ள முடியாமல் தவிக்கிறான்.

ஆடற்கலை (பரத நாட்டியம்) இன்றளவும் அழியாமல் வாழும் கலையாகவே இருக்கின்றது. ஆனால், இக்கலை விளக்கும் நூல்கள் வடமொழியில் குடியேறியுள்ளன.

தமிழனின் சிற்பக்கலை இன்றும் சிறந்து விளங்குகின்றது. ஆனால், அச்சிற்பக்கலை பற்றிய நூல்கள் தமிழில் ஒழிக்கப்பட்டு வடமொழியில் திணிக்கப்பட்டுள்ளன.

கட்டடக்கலையும் மடிந்து போய்விடவில்லை. விண்ணளந்து நிற்கும் வியன்பெருங் கோயில்களே அக்கலை மடியவில்லை என்பதையும் அது மாற்றாருக்குரியதன்று என்பதையும் எடுத்துக்காட்டி நிற்கின்றன. ஆனால், தமிழனுக்கேயுரிய கட்டடக்கலை நூல்கள் வேற்றுமொழி மாளிகையில் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன.

கலைகள் நம் கண்முன்னே வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால், அக்கலைகளைப் பற்றிய இலக்கணங்கள் வேற்றுமொழிக்குள் ஒளிந்து கொண்டிருக்

கின்றன. இல்லை; ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றன. சரி போகட்டும். இக்கலைகள் அவ்வேற்றுமொழியாளர்க்கும் உரியவைதாமா என்றால் அவர்தம் கலைகள் வேறாகித் தனித்தியல்கின்றன. உண்மை இவ்வாறிருக்கவும் இத்தகைய மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்துள்ளன? இப்பொழுதுதான் 'தமிழ்நாட்டுக் கொம்பராசி'களின் கைவண்ணம் எத்தகையது என்பதை நாம் முழுமையாக அறிய முடிகிறது. ஏனைய கலைகளைக் காட்டிலும் நாடகக் கலைதான் கொம்பராசிகளின் கூட்டத்திற்கு முழுமையாகப் பலியாகியுள்ளது.

தமிழில் நாடகக் கலை செழித்து வளர்ந்த பகுதியாக இருந்தது என்பதைத் தொல்காப்பியத்தாலும் சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற நூல்களாலும், அவற்றிற்கெழுந்த உரைகளாலும் அறிந்து கொள்கிறோம். ஆனால், இன்றோ பழைய நாடக நூல்களும் இல்லை. நாடகக் கலை பற்றிய இலக்கணங்களும் இல்லை. அவையெல்லாம் தமிழ்நாட்டு 'அரதிகானன்'களின் அறுவைக் கருவியால் தம் உயிரையே இழந்துள்ளன என்பதை வரலாற்றை வகைப்படுத்திக் காண்பவர் அறியாமலிரார்.

இயற்றமிழ் எத்தகைய மோதலையும் எதிர்த்து நின்று வெற்றி கண்டுவிட்டது. இசைத் தமிழோ வண்ணம் மாறினும் வடிவம் மாறாமல் வாழ்ந்து வருகிறது. நாடகத் தமிழோ ஏறத்தாழ முழுமையாகவே அழிக்கப்பட்டுவிட்டது. நாடகத் தமிழ் இல்லாமல் 'முத்தமிழ்' என்ற வழக்காறு குறைபாடுடையதன்றோ! இக்குறை அகற்றப்பட வேண்டாவா? தமிழுக்கு வந்த கறை துடைக்கப்பட வேண்டாவா? - என்று கருதிய பேராசிரியர் சுந்தரனார் 'மனோன்மணீயம்' என்ற நாடக நூலை யாத்துத் தமிழன்னைபால் மனங்குழைந்து நின்று 'ஒள்விரலணியாக் கொள்' எனக் கொடுத்தார். இளமைப் பருவத்திலேயே இயற்கை அவரை அழையாதிருப்பின் சுவை முதிர்ந்த நாடகங்கள் பலவற்றை ஆக்கி அளித்திருப்பார். தமிழின் பொறியின்மை அவர் மறைந்தார்.



சுந்தரனாருக்குப் பின்னர்ச் சிலர் இத்துறையில் முயன்றுள்ளனர். இயன்றமட்டும் உழைத்தும் உள்ளனர். எனினும், தமிழில் நாடக நூல்கள் போதுமான அளவு வெளிவரவில்லை என்ற குறை கூறப்பட்டே வந்தது.

இந்நிலையில் துறைதோறும் துறைதோறும் தமிழ் வளர்க்கும் தூய தொண்டை மேற்கொண்டுள்ள சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் புதிய நாடகங்களைப் பெற்றுத் தமிழன்னை பொலிவுறல் வேண்டுமெனக் கருதி இரண்டாண்டுகட்கு முன்னர்ச் செய்யுள் நாடகப் போட்டியொன்றனை ஏற்படுத்தினர். தமிழ் நாட்டின் எருதந்துறை (Oxford) என்று சிறப்பிக்கத்தக்க அரும்பணிகள் பலவும் ஆற்றியுள்ளது கழகம் என்பதை யாரும் அறிவர். அக்கழகத்தின் உயிர்ப்பாகவும், உள்ளொளியாகவும் விளங்குகின்ற தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்களின் பேருள்ளத்தில் நாடகப் போட்டி பற்றிய எண்ணம் அரும்பியதை என் நற்பேறு என்றே கருதுகிறேன். அப் போட்டிக்கென யான் ஈன்றெடுத்த மகளே 'அனிச்ச அடி' என்பாள். அவள் அழகும் இளமையும் அணியெனப் பூண்டும், நடையும் பொருளும் உயிரெனக் கருதியும் வருகின்றாள். வருகின்ற இம்மகள் ஆயிரம் வெண்பொன் பரிசிலை எனக்கு வாங்கித் தந்ததோடு 'இவள் தந்தை என்னோற்றான் கொல்' என்னும் இசை மொழியினையும் ஈட்டித் தந்துள்ளாள்.

செய்யுள் நாடகத்துறை இப்பொழுதுதான் வளர்ச்சியின் முதற்படியில் நிற்கின்றது. இந்நிலையில் சிறந்த நாடக உத்திகளை எவ்வாறு அறிந்து கொள்வது? பல நாடகங்கள் தோன்றியிருக்குமேல் அவற்றை வழிகாட்டியாகக் கொண்டு செல்லுதல் கூடும். அவ்வாறு இல்லாமையால் இயற்றமிழ் இலக்கியங்களிற் காணப்

படும் நாடகப் பண்புக் கூறுகள் இந்நாடகத்துள் பயன் படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாகச் சிலம்பு, குறுந்தொகை, அகநானூறு, கலித்தொகை போன்ற நூல்களில் அமைந்த நாடகப் பண்புக் கூறுகள் இயன்ற அளவு எடுத்தாளப்பட்டுள்ளன. மேலும், இந்நாடகம் சங்க காலத்தையும் அக்கால நிகழ்ச்சிகளையும் விவரிப்பது ஆதலின், இதுவே ஏற்புடையதாகவும் எனக்குத் தோன்றியது.

நாடகத்தைப் படிக்கும் நண்பர்கள் இந் நாடகத்தில் மனோன்மணீயத்தின் சாயலைக் காட்டிலும் சங்க இலக்கியத்தின் தோற்றமும், சிலம்பின் நிழலுமே மிகுதியாகத் தோன்றுவதாகக் கருதினால் அதற்குப் பெரியதொரு காரணியம் நாடகம் நிகழும் காலத்தைப் படிப்பவர் கண்முன் தோற்றுவிக்க வேண்டும் என்ற என் அவாவே யாகும். இதில் ஓரளவு வெற்றியடைந்துள்ளதாகவே கருதுகிறேன்.

செய்யுள் நாடகம் எழுதுதல் சிக்கலானது என்றால் வரலாற்று நிகழ்ச்சியைச் செய்யுளில் நாடகமாக்குவது 'இடியப்பச் சிக்கல்' என்றே இயம்பவேண்டும். அதிலும் சங்க காலத்தை ஒட்டிய வரலாறு என்றால் கேட்க வேண்டுவதே இல்லை. இருள் நிரம்பிச் செறிந்து நிற்கும் இவ்வரலாற்றுப் பகுதியை அறிந்துகொள்ளப் பலநூல்களை நான் தேடியலைந்தபோது எழுஞாயிறு போல் என்முன் தோன்றி ஐய இருளை அடியோடகற்றிக் காலவேறுபாடுகள் என்ற களையை அகழ்ந் தெறிந்தது தமிழறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் எழுதிய 'துளுநாட்டு வரலாறு' என்ற நூலே யாகும். அந்நூலாசிரியர்க்கு என் நன்றியைப் புலப் படுத்திக் கொள்கின்றேன்.

நான் தமிழ்க் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த நாளில் 'பெண் கொலைபுரிந்த நன்னன்' 'ஒன்று மொழிக் கோசர் போல வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே'



என்ற குறுந்தொகை வரிகள் என்னுள்ளத்தில் ஆழப் பதிந்து கருக்கொள்ளத் தொடங்கின. இவ்விரு வரிகளையும் அடிப்படையாகக் கொண்டு ஓர் உரைநடை நாடகத்தை ஆக்க வேண்டும் என்ற அவா என் னுள்ளத்தில் அவ்வப்போது அரும்பும். ஆனால், அவ் வரும்பு ஏறத்தாழப் பன்னிரண்டாண்டுகள் மலராத மொட்டாகவே என்னுள்ளத்துட் கிடந்தது. கழகத்தின் நாடகப் போட்டி பற்றிய அறிவிப்பும், கவியரசு முடியரச னாரின் தூண்டுதலுமே இந்நாடக அரும்பைப் போதாக்கி மலரச்செய்த புது ஞாயிறும் அதன் பொற்கதிரு மாகும்.

புதுமடல் விரிந்த இந் நாடக நறுமலர் இப்பொழுது உங்கள் கைகளில் தவழ்கின்றது. இதன் மணம் நுகர்ந்து நலம் பாராட்ட வேண்டியது இனி உங்கள் பொறுப்பு.

காரைக்குடி
27-5-1973

அன்பன்
ஆ. பழநி.

*கவியரசு முடியரசனாரின்*

# வாழ்த்துப்பா

பாட்டென்ற பேரால் பழுதுபட்ட சொற்றொடரைக்
கேட்டென்ற நெஞ்சம் கிறுகிறுத்தேன் - வேட்டெழுந்து
நாடகமாம் நன்மருந்தை நண்பன் பழநியெனும்
பாடல்வலான் தந்தான் படைத்து. ௧

தேன்கலந்து தந்தனனே தெள்ளமுதந் தந்தனனே
நான்கலந்தே இன்புற்றேன் நாடோறும் - வான்பறந்தேன்
வாட்டும் துயர்துறந்தேன் வையம் தனைமறந்தேன்
பாட்டை அவன்படிக்கக் கேட்டு. ௨

கூற்றமிலா வாழ்வு கொடுத்த தமிழ்த்தாயே
ஏற்றவரம் இம்மகற்கும் ஈந்தருள்வாய் - சாற்றுக்
கனிச்சுவையை விஞ்சும் கவிமாலை நின்றன்
அனிச்சஅடிக் கீந்தான் அவன். ௩

*[இந்நாடகம் போட்டிக்கு அனுப்பப் பெறு முன்னர் முழுமையும் படிக்கக் கேட்ட கவியரசு முடியரசனார் அவர்கள் இறுதியில் இவ்வெண்பாவைப் பாடியருளினர்.]*

# நன்றியுரை

"அனிச்ச அடி" என்னும் இவ்வழகு மகள் தோன்றத் துணைநின்றோர் சிலர்; தோன்றிய அவளைத் தொல்லியல் வழாப் பெண்ணெனுமாறு வளர்த்த செவிலியர் சிலர்; மை தீட்டியும் அணி பூட்டியும் அழகு படுத்திய ஆர்வலர் சிலர்; அவர்கட்கெல்லாம் நெஞ்சமொன்றிய நன்றியைக் கூறவேண்டுவது இன்றியமையாததாகும்.

கழகத்தின் நாடகப் போட்டி பற்றிய விதிமுறைகளை என்கையிலே தந்து வினைமேற் கொள்கென ஊக்கியும் வெற்றி பெறுகென வாழ்த்தியும் அமையாது நாடக முழுமையும் படிக்கக் கேட்டு ஏற்ற திருத்தங்களை எடுத்துக் கூறியும், இறுதியில் வாழ்த்துப் பாக்களால் எனக்குக் கூற்றமிலா வாழ்வு கொடுக்க விழைந்த என் உடன்பிறவா அண்ணல் **கவியரசு முடியரசனார்** அவர்களைத் தொழுதல் அல்லது நன்றியை எழுதுதல் இயல்வதன்று.

கவியரசு அவர்களைப் போலவே எனக்குத் தோன்றாத் துணையாய் நின்றவர் இரா. நடராச பிள்ளை, பி.ஏ.,பி. டி., அவர்கள். எனக்குத் தந்தையனையார். அவர்கள் நாடகத்தைப் படிக்கக் கேட்டும், பயன்படு மாற்றங்கள் பல கூறியும் கதைச்சுருக்கத்தை ஆங்கிலத்தில் எழுதியும், அச்சுப் படிவங்களை ஒப்புநோக்கிப் பிழைகளைத் திருத்தியும் உதவி புரிந்துள்ளனர். செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஈடாகாது என்பதன்றோ தமிழ்மறை!

மேலைப் புலத்தின் நாடக இலக்கணங்கள் கீழைப் புலத்தின் நாடக இலக்கியங்களில் பொருந்திக் கிடக்கும் முறைமையை முற்றத் தெரிந்த—நுண்மாண் நுழைபுல மிக்க பண்டாரகர் தமிழண்ணல் எம். ஏ., பி. எச்டி,

அவர்கள் இந்நாடகத்திற்கு வேண்டும் கருத்துரைகளை வழங்கியுள்ளமைக்கு நான் என்ன கைம்மாறு காட்டுதல் **இயலும் ?**

இந்நாடகத்தின் முதல் அங்கம் முடிவுற்று இரண்டாம் அங்கம் தொடங்கப்பெரு நிலையில் உடல் நலங் குன்றி வாடினேன். நாடகத்தைத் தொடர்ந்து எழுதுதல் இயலாது என்ற முடிவிற்குங்கூட வந்து விட்டேன். அப்பொழுதெல்லாம் ஆர்வமொழிகளால் என் தளர்ச்சியை நீக்கியும், உடல் சிறிது நலம் பெற்ற பின்னர் நாடகத்தைத் தொடர்ந்து எழுத ஊக்கவுரை கூறியும், எழுதிய நாடகத்தைப் படியெடுத்து உதவியும் பல்லாற்ருனும் துணைநின்ற ந. சத்தியவேலு எம். ஏ., பி. டி. அவர்கட்கும், சுப. பழநிவேலு, எம். ஏ., பி. எஸ்., பி. டி. அவர்கட்கும் உள்ளம் நிரம்பிய நன்றியை உரிமையாக்குகிறேன்.

போட்டியில் இந்நாடகத்தைத் தேர்ந்தெடுத்த தேர்வுக் குழுவினர்க்கும் இந்நாடகம் மேலும் சிறப்புறப் "பத்துக் கட்டளைகள்" (பத்துப் பரிந்துரைகள்) வழங்கிய டாக்டர். இரா. குமரவேலன் அவர்கட்கும், புலவர் தணிகை உலகநாதன் அவர்கட்கும் என் நன்றி என்றும் உரியது.

தமிழகத்தின் தென்பகுதியில் இருக்கும் என்னைத் தமிழகம் முழுமையும் அறியுமாறு தம் நாடகப் போட்டி வாயிலாக அறிமுகப்படுத்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கும், தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

அன்பன்

ஆ. பழநி

## கதைச் சுருக்கம்

சேரநாட்டுப் படைத்தலைவன் ஆய் எயினன் தன் மகள் சுரும்பார் குழலியைப் படைத் துணைத்தலைவன் அருளாழிக்கு மணமுடித்து மகிழ்ந்துள்ளான். மகள் வயிறு வாய்த்துள்ளாள் என்பதையறிந்து எயினனும் அவன் மனைவி அணிவளையும் மகிழ்ச்சி கொண்டுள்ளனர். அப்பொழுது அங்கு வந்த அருளாழியும் சுரும்பார் குழலியும் துளுநாட்டு மன்னன் நன்னன் பிறந்தநாள் விழாவைக் காண நறவுப்பட்டினம் செல்ல விழைவதாகக் கூறினர். அதைக் கேட்ட எயினன் துளுநாட்டுப் படைத் தலைவன் மிஞிலி சுரும்பார்குழலியை மணமுடிக்க வேட்டுப் போர் தொடுத்ததையும் அதில் தன் மகனை இழந்ததையும் மிஞிலி தோற்றோடியதையும் எடுத்துக் கூறி மிஞிலி மாருச் சினமுடையவன் ஆதலின், செல்ல வேண்டா எனத் தடுக்கிருன். குழலி விழாக் காணும் விருப்பத்தை வற்புறுத்த, அங்கு வந்த புலவர் பரணர் வயிறு வாய்த்த நிலையில் பெண்ணின் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமெனக் கூறி, மோசிகீரனுர்க்கு முடங்கல் தருவதாகவும் கூறினுர். அதற்கு உடன்பட்ட எயினன், துளுநாட்டில் தங்கியிருக்கும்பொழுது தங்களை இன்னுர் எனக் காட்டிக்கொள்ளலாகாது என்றும், வாய்மை பேசுதல் தகாது என்றும் கூறி அனுப்புகிருன்.

விழாக்கோலம் பூண்டுள்ள நறவுப் பட்டினத்தில் பலகாட்சிகளை அருளாழியும் குழலியும் கண்டு களிக்கின்றனர். அந்நாட்டு மக்களின் விருந்தோம்பும் பண்பைக் கண்டு வியக்கின்றனர். ஆடல் அரங்கும், பாடல் அரங்கும் தனியிடத்தே அமர்ந்து கண்டும் கேட்டும் களிக்கின்றனர். பாடினி பாடும் பாடலில் சேரநாடு பழிக்கப் படுவதை யறிந்த அருளன் சினங்கொள்ள

இடமறியாது சினங்கொள்ளல் ஏதமாய் முடியுமென்பதை எடுத்துக்காட்டி, குழலி அருளனை அமைதிப்படுத்துகிறாள். மனக் குழப்பத்தோடு இல்லம் மீள்கின்றனர்.

மறுநாட்காலைப் போதில் குழலி பெண்களுடன் யாற்றிற்கு நீராடச் செல்கிறாள். பெண்கள் இயற்கையழகில் ஈடுபட்டும், மலை, யாறு, செங்கோல் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடியும் ஆற்றில் நீராடப் போகும் வேளையில் குழலி அயலில் உள்ள மாந்தோப்பில் கட்டுக்காவல் மிக்குள்ளதை வினவ, மற்றப் பெண்கள் அது அரசனுக்குரியது என்றும் அதன் காயோ கனியோ ஆற்றில் வரினும், நிலத்திடைக் கிடப்பினும் எடுத்துண்ணல் குற்றமென்றும் அதற்குரியது கொலைத் தண்டனை என்றும் கூறினர். பின்னர் நீராடினர். அப்பொழுது குழலியின் கையில் மாங்காய் ஒன்று அகப்படக் கருவுற்றவள் ஆதலின், மாங்காயின்மீது விருப்பம் கொண்டு பிறரறியாமல் தின்றால் துன்பம் வாராது என நினைத்துத் தனியே சென்று உண்டனள். அப்பொழுது நீரினுள் மூழ்கி வந்தாளொருத்தி குழலியின் முன்னே எழ, மாங்காய் உண்பதை அறிந்து பதறி 'உண்ணாதே! உண்ணாதே' என உரத்துக் கூவ, ஏனைய பெண்டிரும் அவ்வாறே கூவ அதனைக் கேட்ட காவலர் விரைந்து வந்து குழலியை அரண்மனைக்குக் கூட்டிச் சென்றனர்.

நன்னன் திருவோலக்கத்தில் குழலியைக் குற்றத் தொடர்பாக வினவுகிறான். குழலி குற்றம் புரிந்தது உண்மை யென்று கூறித் தான் யார் என்பதைக் கூறாது மறைத்து விடுகிறாள். அவையில் இருந்த மிஞிலி வந்திருப்பவள் சுரும்பார் குழலியென்பதை அறிந்து கொண்டு, தன்னை மணக்க மறுத்ததோடு தனக்குப் பெரிய தோல்வியையும் விளைவித்த அவளை வஞ்சனையாற் கொல்லத் துணிகிறான். அவன் நன்னனிடம் அவள் 'ஒற்றறிய வந்தவள்' என்று கூறுகிறான். தான் யாரென்று கூறாது மறைத்ததை எடுத்துக் காட்டுகிறான். இந்நிலையில் நன்னன் குழலியை 'நீ யார் என்பது கூறுக', எனக் கேட்க, அவள் தன் தந்தை கூறியதற்கேற்ப உண்மையை மறைத்துத் தான் வஞ்சி நகரத்தினள் என்றும், வணிகன் மகளென்றும், தன் பெயர் தாமரை என்றும் கூறுகிறாள். இதனை யறிந்த மிஞிலி அவளை நோக்கிச் 'சுரும்பார் குழலி' என அழைக்க அவள் நிமிர்ந்து துணுக்குறுகின்றாள். இதனை அவன் நன்னனுக்குக் காட்டி, அவள் எயினன் மகள் என்றும் வெளியத்தைச் சேர்ந்தவள் என்றும் கூறி அவள் யார் என்பதைப் புலவர் மோசிகீரனார் அறிவார் என்றும், மோசிகீரனாரை நோக்கித் 'தமிழ்மீது ஆணையாக இவள் யாவள் என்பதைக் கூறுக' என்றும் சொல்கிறான். மோசிகீரனார், எயினன் மகள் என்பதையும் குழலி என்பதையும் ஏற்றுக் கொண்டு அவள் ஒற்றறிய வரவில்லை என்றும், விழாக் காண வந்தவள் என்றும், கருவுற்றமையே குற்றம் செய்யக் காரணம் என்றும் கூறி மன்னிக்க வேண்டுகிறார். அவள் நிறைக்குப் பொன்னும், எண்பத்தொரு களிறும் தண்டம் தருவதாகக் கூறுகிறார். குழலி பொய்யுரைத்தமையால் மனம் திரிந்த நன்னன் ஏற்றுக்கொள்ளாது கொலைத் தண்டம் விதித்து விடுகிறான்.

குழலியை இழந்த அருளாழி அவளை எரித்த புறங்காட்டிலே நின்று புலம்புகிறான். தான் ஏன் இனியும் வாழவேண்டும் என்றும், இந்நிலை வரும் என்று தெரிந்திருந்தால் இந்நகருக்கு வந்திருக்க மாட்டேனே என்றும் குழலியின் குணவியல்புகளைப் பலபட நினைந்து புலம்புகிறான். அப்பொழுது அங்கு வந்த கோசர் குலத்தைச் சார்ந்த கணியன் கீரன் அவனுக்கு ஆறுதல் கூறுகிறான். அருளாழி மாமரத்தை அடியோடு அழிக்காது அந்நாட்டை விட்டு அகல்வது இல்லை யென்றும், மிஞிலியைக் கொன்று அவன் எலும்பைத் தூணாக நட்டுக் குழலியின் ஈமத்தில் கூரை வேய்வதாகவும் வஞ்சினம் கூறுகிறான். இதனைக் கேட்ட கணியன் கீரன் மாமரத்தை அழிக்கச் சூழ்ச்சி ஒன்றை விவரித்து அவனைத் தன்னில்லத்திற்கு அழைத்துச் செல்கிறான்.

மகளுக்குற்ற கொடிய முடிவைக் கேட்ட எயினன் ஆருத்துயரில் உழல, சேரநாட்டு மன்னன் நார்முடிச் சேரல் ஆறுதல் மொழிந்து நன்னன் இழைத்த தீமைகட் கெல்லாம் உரிய பயனை அடையும் நேரம் வந்து விட்டது என்றும், துளுநாட்டின் வடக்கேயுள்ள புன்னாட்டார் நன் னனை எதிர்க்கப் படைத்துணை கேட்டுள்ளதாகவும் அவர் களுக்கு உதவுவதன் மூலம் நன்னனை அழிக்கப் போவ தாகவும் கூறினன். எயினன் அவனிடம் படைக்குத் தலைமை யேற்பவர் யார் என வினவச் செங்குட்டுவன் என மறுமொழி கூறுகிறான் நார்முடிச்சேரல். தன்னையொரு படைவீரனாகவாவது அனுப்ப வேண்டும் என்றும், பழி வாங்கத் துடிப்பதாகவும் எயினன் கூற, உணர்ச்சி வயப் பட்ட நிலையில் போருக்குச் செல்லல் தகாது எனத் தடுத் ததையும் கேளானாய்த் தன்னைப் படையொடு அனுப்ப வில்லை என்றால் அயிரை மலையின் உச்சியில் இருந்து வரைபாய்ந்து இறக்க விரும்புவதாகவும் வற்புறுத்த, நார்முடிச்சேரல், எயினன் படையொடு செல்வதற்கு ஒருப் படுகிறான்.

கணியன் கீரன் மாமரத்தை வீழ்த்தச் சூழ்ச்சி செய்கிறான். நன்னனின் போர்யானைக்கு உணவுக் கவளத்தில் மருந்து சேர்த்து மதங்கொள்ள வைத்து மாந்தோப்பை அழிக்கச் செய்கிறான். மறைவாக இருந்து அழிவைக் கண்டு மகிழ்ந்திருந்த அருளாழி உணர்ச்சி வயப்பட்டு வெளிப்போந்து கூவ யானையொன்று அவனைத் தூக்கி எறிகிறது. அதனால் நினைவிழந்த அருளாழியைக் கணியன் கீரன் வீட்டுக்குக் கொண்டுசெல்கிறான்.

போர்க்களம் சென்ற எயினனைப் பற்றிய செய்தி யொன்றும் வாராமையால் மனம் வருந்திய அணிவளை ஆறுதல் பெறும்பொருட்டுப் பரணர் வீட்டுக்கு வருகிறாள். அவர் ஏடும் ஆணியும் கொண்டு எழுதத் தொடங்கும் நேரமெனக் கண்டு ஒருபுறத்தே அமர்ந்து பாடுவதைக் கேட்கிறாள். வையாவிக்கோப் பேகன் கண்ணகியை நீங்கியதும் அவளை அவன் மனையாள்பால் தாமும்,



கபிலரும், அரிசில் கிழாரும், பெருங்குன்றூர் கிழாரும் முயன்று சேர்த்து வைத்ததையும் பாடக் கேட்கிறாள். பின்னர் அவரிடம் தனக்குற்ற துன்பத்தைக் கூறித் தான் கண்ட கனவையும் கூறுகிறாள். கண்ணகிக்குப் பேகன் திரும்பக் கிடைத்ததுபோலத் தனக்கு எயினன் கிடைப்பானா என்று உருக்கத்தோடு கேட்கிறாள். எயினனின் போர்த் திறத்தையும், கனவின் இயல்பையும் எடுத்துக் கூறிக் கவலை விடுக எனப் பரணர் ஆறுதல் கூறி அனுப்புகிறார்.

சிறிது குணமடைந்த அருளாழி தன் பெற்றோரும் குழலி பெற்றோரும் எத்தகைய துன்பம் அடைந்தனரோ என்றும், இவ்வாறு முடங்கிக் கிடக்கின்றேனே என்றும் வருந்தக் கணியன் மகள் அனிச்ச அடி அவனுக்கு ஆறுதல் கூறுகிறாள். ஊக்கம் கொள்ளுமாறு தூண்டுகிறாள். அதுபோது செங்குட்டுவன் அங்குத் துறவிவேடத்தில் வர, அருளாழி சேரநாட்டு நிலைபற்றி வினவுகிறான். எயினன் இறந்ததும், எயினன் இறப்பினைக் கேட்ட அளவிலே அணிவளை உயிர் நீங்கியதையும், அருளாழியின் பெற்றோர் மகனைக் காண்பதற்காக உயிர் தாங்கியிருப்பதையும் கூறி நன்னனிடமிருந்து பூழி நாட்டை மீட்கவும் நன்னனை ஒழிக்கவும் போர் தொடங்க விருப்பதாகவும், அதற்காகப் பௌவத் தீவில் நடக்கும் ஆய்வுக் கூட்டத்திற்கு வருமாறும் கூறிச் செல்கிறான். பின்னர் அருளாழியும் அனிச்ச அடியும் மலைச்சாரல் வழி நடந்து சென்று இயற்கையழகைக் கண்டு மகிழ்கின்றனர். அப்பொழுது அருளாழி 'என் பொருட்டு இத்துணைத் துன்பத்தையும் நீ தாங்குதல் ஏன்' என்று கேட்க அனிச்ச அடி தன் னுள்ளத்தை வெளிப்படுத்தாது வேறொன்று கூறி மறைத்து விடுகிறாள்.

இஃதிவ்வாறிருக்கத் துளுநாட்டில் மிஞிலி அரசன் நன்னனிடம் சேரநாட்டை வெல்ல இதுவே தக்கசமயம் என்றும் காலம் தாழ்த்தாது போர் தொடுத்தல் வேண்டும் என்றும் கூறுகிறான். சேர நாட்டின் படை வன்மையைத் தான் கண்டவாறு ஒற்றர் தலைவனும் எடுத்துக் கூறுகிறான்.

அதனைக் கேட்ட நன்னன் குறும்பர் தலைவனும் பவளத் தீவின் அரசனுமாகிய வேங்கைமுகனை அதுபற்றிக் கருத்துக் கூறுமாறு கேட்க அவனும் போர் தொடங்குதல் தக்கதே என்று கூறுகிறான். அவ்வாறாயின் போர்த் திட்டத்தை விவரித்துக் கூறுமாறு நன்னன் மிஞிலியைப் பணிக்க அவன் தான் பூழியிலிருந்து வஞ்சி நோக்கிப் படை கொண்டு செல்வதாகவும், வேங்கை முகன் பவளத்தீவி லிருந்து தொண்டியைத் தாக்கி அங்கிருந்து வஞ்சி நோக்கி வருவான் என்றும், இரண்டிற்கும் இடையில் அகப்பட்ட பகைவர் அழிவர் என்றும் இடையில் தம் நாட்டின் கிழக்கிலிருந்து கொங்குச் சேரர் ஏதம் விளைத்தால் அவர்களை நன்னன் எதிர்த்தழிப்பது என்றும் விவரிக்கிறான்.

அருளாழி வஞ்சிநகரம் சென்ற பின்னர் அனிச்சஅடி தனியே இருந்து இரங்குகின்றாள். தன் மனத்தே தோன்றியுள்ள மாற்றம் அருளாழியால் நேர்ந்தது என்றும் அவன் வாரா திருப்பின் இத்துன்பம் இல்லை என்றும் கருதி வருந்த, அவண் வந்த அவள் தோழி மான்விழி 'அவனிடம் உள்ளம் திறந்து கூறாது இன்று ஏன் வருந்து கின்றனை' என்று கேட்க, 'அவனிருக்கும் சூழலில் எவ்வாறு என்மனம் திறந்து கூறுவேன்! மேலும், அவன்றன் சூளுரை முடிக்க என் விருப்பம் தடையாய்விடின் என் செய்வேன்! இதனினும் என் ஆசையைத் தீய்த்துக் கொள்ளலே தக்கது' என்று கூறுகிறாள். அப்பொழுது அங்கு வந்த கணியன்கீரன் அருளாழி நலமாய் உள்ள செய்தியும், பௌவத் தீவில் நல்ல முடிவுகள் எடுத் துள்ளமையும், இன்னும் பதினைந்து நாளில் வரவிருக் கின்றான் என்ற செய்தியும் கூறுகின்றான். 'இதனை யாருக்கும் கூறாதீர்' என்றும் எச்சரிக்கின்றான்.

நன்னன் தனியே அமர்ந்து, கழிந்த நாள் இழைத்த தீமைக்காக வருந்துகிறான். கனவு தோன்றி அலைப் பதையும், அதனால் உள்ளம் நடுக்குறுதலையும் எண்ணி வருந்துகிறான். அப்பொழுது மிஞிலி அங்கு வரத் தன்



வருத்தத்தை எடுத்து மொழிகிறான். குழலியின் முகம் அடிக்கடி தோன்றித் தன்னை அலைப்பதனால் ஏதம் வருமோ? என்கிறான். மிஞிலி நன்னனுக்கு ஆறுதல் கூறி, கழிந் ததற்கு வருந்தலாகாது என்றும், கொடியவர்களை அழிப்பது அரசியல் நெறியே என்றும், வீரரும், மக்களும், பாணரும், துடியரும், இரவலரும் புதிய போரினை எதிர் நோக்கி யுள்ளனர் என்றும், இந்நிலையில் அவன் அவ்வாறு சோர்ந்திருத்தல் தகாது என்றும் ஆறுதல் கூறுகிறான்.

நியமத்திற்கு வந்த அருளாழியிடம் கணியன்கீரன் பௌவத் தீவில் எடுத்த முடிவுகள் பற்றிக் கூறவேண்டு கிறான். வேங்கை முகனும் பிறரும் அறியாமல் மாந்தைத் துறையில் மரக்கலப் பயிற்சிகள் நடப்பதாகவும், இப் போரில் தமக்கு உதவுமாறு சோழனைக் கேட்டு வந்துள்ள தாகவும், சோழன் மறுத்ததையும் முடங்கல் தந்ததையும் கூறுகின்றான். அதைக் கேட்ட கணியன்கீரன் தான் எப்படியும் சோழனைப் போரில் இழுத்து விடுவதாகக் கூறி அதற்குரிய வழியையும் கூறித் தான் வெளியிற் சென்று மீள்வதாகவும் அதற்குள் உணவுக்கு ஏற்பாடு செய்யு மாறும் அனிச்சஅடியிடம் கூறிச் செல்கிறான். எதையோ சிந்தித்திருந்த அருளாழியிடம் அனிச்சஅடி என்ன நினைத்தனை என்று கேட்க; அரசியலால் உறவும் கூட ஒழிதலை எண்ணினேன் என்று கூறி,

'உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பமே
இறவினால் பெறுவது எண்ணிலா இன்பமே'

என்று வலியுறுத்திக் கூற, 'உறவினை நீ வெறுப்பவ னாயின் நியமத்திற்கு ஏன் வந்தாய்! கூறுக' என அவன் தன் மனத்திலுள்ளது மொழியாளாய், 'என் துன்பத்தை நீக்கிய செயல் புரிந்தீர் ஆதலின், நன்றியுணர்ச்சியான் வந்தேன்' என்று கூறுகிறான். தன்பால் உறவு கொள் ளுதலை அருளாழி விரும்பிலன் போலும் என்று கருதி யவளாய் வேறொன்று பேசி மாற்றிவிடுகின்றாள்.

கணியன்கீரனின் திட்டப்படி மிஞிலியின் கையில் போலி முடங்கல் கிடைக்குமாறு அருளாழி அகப்பட்டுக் கொள்கிருன். சிறையில் அடைக்கப்பட்டுப் பலவாறு எண்ணிக் கிடக்கின்ருன். அனிச்சஅடி தன் உள்ளத்தைக் குறிப்பால் உணர்த்தியும் அதனை அறிந்து கொள்ளா தவனைப் போல நடந்து கொண்டதையும், தன்மனத்துள்ள வேட்கையை வெளிப்படுத்தாது மறைத்ததனையும் எண்ணி வருந்துகிருன். அவ்வாறு எண்ணிக் கிடந்தபோது காவலன் ஒருவன் கணியன் கீரன் ஏற்பாட்டின்படி உணவு கொண்டு வந்து கொடுக்கிருன். உணவை மூடியுள்ள துணியை விலக்க அத்துணியில் அவ்வுணவை உண்ண வேண்டாவென்றும், அதில் வைத்துள்ள குழம்பினைக் காலதர்க் கம்பியில் வைத்தால் அது எளிதில் ஒடியும் என்றும், அதிலுள்ள கயிற்றின் துணையால் இறங்கி இரண்டு கல் மேற்கு நோக்கி வந்தால் நறவுப் பட்டினம் செல்லும் வழி தென்படுமென்றும், அங்கே கணியன்கீரன் காத்திருப்பதாகவும் எழுதியிருந்தது.

கணியன்கீரன் வேறொரு பணியின் நிமித்தம் சென்றமையால் அருளாழியின் வருகைக்காக அனிச்ச அடி காத்திருக்கின்ருள். காலம் தாழ்ப்பது குறித்துப் பலவாறு எண்ணிக் கலங்குகின்ருள். 'உறவு' பற்றி ஏன் அவ்வாறு கூறினன்! உறவுடையார் எல்லாரும் ஒழிந்ததனுலா? அல்லது இவ்வாறு கூறி என் மனத்தை அறியவா?' என்று பலவாறு கருதும் வேளையில் அருளாழி வருகிருன். நலம் வினவியபின் இருவரும் தனி வழியே செல்லுகின்றனர். எல்லாம் குறித்தவாறு நடந்தனவா? என்று அனிச்ச அடி கேட்க, கணியன்கீரன் வாராதது தவிர எல்லாம் இனிதே நடந்தன என்று அருளாழி கூறுகிருன். கணியன்கீரன் வாராது தான் வந்ததை அவன் விரும்பிலன் போலும் எனத் தவருக எண்ணிய அனிச்சம் தான் சிறிது நேரமே உறவாய் வருவ தாகவும், விடியுமுன் தன்னுறவுபோய் விடும் என்றும் சினக்குறிப்போடு கூற, வருந்திய அருளாழி 'இவ்வாறு



நீ கூறுவாயென்பது தெரிவனேல் சிறையை நீங்கி வந்திரேன்' என்று கூறுகிருன். பேச்சை மாற்றுவதற்காக இப்பொழுது நாம் எங்கு வந்துளோம் என்று அவன் வினவி 'நண்டுகள் உன் வளையொலிக்கஞ்சி யோடுதல் காண்க' என்று கூற, சினம் நீங்காத அனிச்ச அடி 'நண்டும் கண்டு அஞ்சியொதுங்குமாறு வாழ நேர்ந்த நிலை நன்'றென, அருளாழி தனித்து நிற்குமொரு பெண் நண்டினைக் காட்டி, அது அனிச்ச அடியின் அழகுமுக நோக்கி மயங்கிநிற்பதாகக் கூற, அனிச்ச அடி அந் நண்டினைச் சுட்டி,

'உறவினுல் உறுவது ஒழிகலாத் துன்பமே,
இறவினுல் பெறுவது எண்ணிலா இன்பமே'

என்பதை அறிந்த ஆண் அலவன் இதனை நீங்கியது போலும் என்று கூறி அலவனை நோக்கி 'அலவ! நீ அலை யால் அலைபடுகின்றனை; யான் விதியால் அலைபடுகின்றேன். இருவேம் வாழ்க்கையும் ஒன்றே. அலைவந்து மீள வழி யில்லாமையால் 'உணங்கல்' என்று பிறர் கூற வாழ்வு முடிந்த நம் கூட்டத்தவர் வாழ்வைக் கண்டுளேமன்றே; என்று கூறித் தன்னெஞ்சத்தை வெளிப்படுத்துகின்ருள். பின்னர் ஆண்டிருந்த சிறிய கலத்தைக் கடலில் செலுத்தித் தொண்டி நோக்கிச் செல்கின்றனர். ஒன்றும் மொழியாதிருந்த அருளாழியை நோக்கி 'ஏன் பேசாதிருக் கின்றனை' என்று வினவ, 'நீ அலவனெடு மொழிந்தன என்னெஞ்சைச் சுட்டுள்ளன' என்று கூறி,' 'இவ்வளவு வெறுப்பினிடையிலும் எனக்குதவுதல் எதற்காக' என்று கேட்க, 'எம்வீட்டிற்கு வந்து நன்றி கூறுவாயல்லவா? அதற்காகவே உதவினேன்' என்று சிறிது சினமும் நகையும் கலந்து கூறி அருளாழியைத் தொண்டிக் கண்மையில் விட்டுவிட்டுக் கடலில் மீள்கிருள். வரும் வழியில் தான் சினக்குறிப்போடு பேசியதை எண்ணி வருந்தியவாறு வந்த அவளை வேங்கைமுகன் வழியில் மறித்துத் தன் கலத்தில் ஏற்றிப் பவளத் தீவிற்குக் கொண்டு செல்கிருன்.

வஞ்சி நகரத்தில் சேரன் நார்முடிச்சேரல் தன் மந்திரச் சுற்றத்தினரைக் கூட்டித் துளுநாட்டின்மீது போர் தொடக்குதல் குறித்து ஆய்வு நடத்துகிறான். அமைச்சர், மிஞிலி போரைத் தொடக்குமுன் நாமே போரைத் தொடக்குதல் வேண்டும் என்றும், வேங்கை முகன் கலங்கள் பவளத் தீவிலிருந்து வெளிப்படவிடாது மடக்க வேண்டும் என்றும் கூறுகிறார். செங்குட்டுவன் கடற்படை பவளத் தீவை அழித்து நறவுத் துறையைத் தாக்கிக் கடம்பின் பெருவாயிலை நோக்கி வரவேண்டும் என்றும் இதற்கிடையில் புன்னாட்டில் கலாம் தோன்று மாறு செய்யவேண்டும் என்றும் கூறுகிறான். இறுதியில் நார்முடிச்சேரல் இப்போரில் தலையாய முனை இரண்டு என்றும், துணையாகும் முனை இரண்டு என்றும் விளக்கிக் கூறிக் குட்டுவன் கடல்மேற் சென்று பவளத் தீவைத் தாக்குவது என்றும், அருளாழி பூழி வழியாகத் தாக்குதல் தொடுப்பது என்றும், தான் கொங்கு நாட்டிலிருந்து பாரத்தினை நோக்கி வருவதாகவும், இதே நேரத்தில் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் புன்னாட்டில் கலாம் தோன்றச் செய்வது என்றும் கூறிப் பவளத் தீவில் வேங்கைமுகனின் கலப்படைப் பெருக்கத்தை மறைவாக அறிந்து வருமாறு அருளாழியை ஏவுகிறான்.

அருளாழி முன்னிரவுப் போதில் பவளத் தீவைச் சுற்றிவந்து உடன் வந்தான் வருகைக்காகக் காத்திருக்கின்றான். வேங்கைமுகன் நூறு கலங்களை முறைப்படுத்தியுள்ளமையும் தம் நாட்டில் முந்நூறு கலங்கள் தக்க பயிற்சி பெற்றிருப்பதையும் எண்ணியிருக்கும் நேரத்தில் யாரோ வரும் ஒலிகேட்க மறைந்திருந்து நோக்க அனிச்ச அடியும் வேங்கைமுகன் மகன் கோட்புலியும் வருவதைக் காண்கிறான். அனிச்ச அடி எவ்வாறு இங்கு வந்தாள் என்று வியப்படையும்பொழுது கோட்புலி தன்னை மணந்து கொள்ளுமாறு அனிச்ச அடியை வற்புறுத்த அவள் மறுக்கிறாள். ஏன் மறுக்கின்றாய் என அவன் கேட்கக் குறும்பர் குலத்தினைக் குறைத்துப் பேசுகின்றாள்.



கொள்ளையடிக்கும் குலத்தவர் எனப் பழிக்கின்றாள். இதனாற் சினமுற்ற கோட்புலி சினந்து அவள் கூந்தலைப் பற்றி இழுத்துச் செல்லும் வேளை அருளாழி வெளிப்பட்டுத் தடுக்க இருவர்க்கும் போர் நிகழ்கின்றது. போரில் கோட்புலி குத்துப்பட்டு வீழ்கிறான். அருளாழியும் அனிச்சமும் கடற்கரை நோக்கித் திரும்பும்பொழுது கோட்புலி தன் கையிலிருந்த குறுவாளால் எறிய அது அனிச்ச அடியின் கழுத்தில் பாய அவள் கீழே சாய்கிறாள். அருளாழி அவளைத் தன் தோளில் சுமந்து வெளியத்திற்குக் கொண்டு வருகிறான்.

வெளியத்தில் பரணர் வீட்டில் அனிச்ச அடி நோய்வாய்ப்பட்டுத் தங்கியுள்ளாள். பரணர் மருத்துவரை வினவ, அவர் அனிச்சத்திற்குற்ற நிலையை எடுத்து விளக்கி அவளுடைய குருதிக்குழல் சிதைந்துள்ளமையால் அவளை உணர்ச்சி வயப்படாவாறு பார்த்துக் கொள்க என்று கூறுகின்றார். மருத்துவர் சென்ற பின்னர்ப் பரணர் அனிச்ச அடிக்கு ஆறுதல் கூறி அவள் உயிர்வாழ வேண்டிய இன்றியமையாமையை வெளிப்படுத்துகின்றார். அனிச்சம் அருளாழியைப் பற்றி வினவ, அவன் வஞ்சி சென்றுள்ளான் என்றும், படைத்தலைமை ஏற்றுப் பூழி செல்லவிருக்கின்றான் என்றும், இன்னும் சிறிது நேரத்தில் உன்னைக் கண்டு உன்னிடம் விடைபெற வருவான் என்றும் கூறுகிறார்.

அப்பொழுது அருளன் அங்கு வந்து அவள் நலம் வினவத் தன் நலங்கூறிப் போரில் வென்று வருக என வாழ்த்துகிறாள். 'யான் துன்புறும் வேளை எனக்குதவினாய் நீ துன்புறும் வேளை உனக்கு உதவாது போகிறேனே' என்று வருந்திய அருளனைத் தடுத்து அவன் பெறும் வெற்றிச் செய்தியே தனக்கு நலம்தரும் என்று கூறி இதற்கு முன் தானறியாது கூறிய புன்மொழிகளைப் பொறுத்து, அவற்றை மறக்குமாறு வேண்டுகிறாள். அப்போது அருளாழி 'நீ அலவனொடு மொழியவும், நான்

அழைத்தும் நில்லாது கலத்தினைச் செலுத்தவும் உன்னை ஊக்கியது எவ்வுணர்ச்சி என்பதைக் கூறுக' என வேண்ட, 'போலி மயக்கத்தினால் இவ்வணம் பொய் மொழிந்தேன்' என்றும், 'எஞ்சியவற்றையும் சொல்ல விடாது என்னை ஏதோ ஒன்று தடுக்கின்றது' 'என்றும் 'நீ பகைவரைப் புறங்கண்டு வரும் நாளில் என்னுள்ளத்தில் உள்ளனவெல்லாம் வெளிப்படக் கூறி வெற்றிப் பரிசில் வழங்குவேன்' என்றும் கூறி அனுப்புகிறாள்.

நன்னன் அரண்மனையில் போர் பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அமைச்சர் பூழிக்களத்தில் நிகழ்ந்தனவற்றை விவரித்துக் கூறுகிறார். கிழக்கில் நார் முடிச் சேரலைத் துணைப்படைத்தலைவன் மதவலி எதிர்த்து நிற்பதாகக் கூறும் வேளையில் புன்னாட்டிலிருந்து வந்த தூதுவன் கலாம் மூண்ட செய்தியைக் கூறிப் படைத்துணை வேண்டுகிறான். இந்நிலையில் நறவிலிருந்து வந்த வீரன் பவளத்தீவு அழிந்ததையும் வேங்கைமுகன் வீழ்ந்ததையும், நறவு முற்றிய குட்டுவன் வெற்றி பெற்றுள்ளான் என்றும் தலைநகர் பாரத்தை நோக்கி வரப்போகிறான் என்றும் கூறுகிறான். இந்நிலையில் நன்னன் வினை முதிர்ந்து வீயும் காலம் வந்ததை எண்ணி வருந்த அமைச்சர் பழைய வெற்றிகளை எடுத்துக் கூறி ஊக்குகிறார். நன்னன் சேரர் படை தனித்து வரின் வெல்லலாம் என்றும் ஒரு குலப் பிறப்பாட்டியின் கண்ணீரையும் துணையாகக் கொண்டு வருதலின் வெல்லல் இயலாது என்றும் கூறப் பூழியி லிருந்து வந்த வீரனொருவன் மிஞிலி பின்னோக்கிச் செல்லு மாறு தள்ளப்பட்டதையும் கடம்பின் வாயிலில் தங்கி யுள்ளதையும் சேரர்படை முற்றியிருப்பதையும் கூற மற்றொரு வீரன் வந்து பாரத்தைக் குட்டுவன் படையொடு நெருங்கி விட்டான் என்று கூறுகிறான். இது கேட்ட நன்னன் 'பெண்கொலை புரிந்த ஒரு பழியே எனக்குப் போதும், நன்னன் பகைகண்டு அஞ்சினான் என்னும் இன்னொரு பழியையும் பெற விரும்பிலேன்' என்று கூறிக் குட்டுவனை எதிர்க்கப் போகிறான்.



பரணர் வீட்டில் நோயுற்றிருக்கும் அனிச்சம் போர்க் களத்தின் நிலையறிய அவாவுகின்றாள். அவள் உணர்ச்சி வயப்படின் தீங்கு நேருமே என்பதற்காக விளக்கமாகக் கூறாது பொதுவாகச் சேரர்படை வெற்றி பெற்று வருகின்றது என்று கூற, பரணரும் கீரனும் தானறியத் தகாது என்று மறைப்பதாகக் கருதி, வெற்றி கிடைத் திருக்குமானால் ஏன் என்னை அறியவிடாது மறைத்துப் பேசுகிறீர்கள் என்று கேட்டு விட்டு 'அருளாழி உனக்கு என்ன நேர்ந்ததோ அறிகிலேன்' என்று கூறிப் புலம்பு கிறாள். அப்பொழுது போர்க்களத்திலிருந்து ஒரு வீரன் வர, பரணர் அனிச்ச அடியிடம் களத்தின் நிலைமையைக் கூறுக எனப் பணிக்கிறார். வீரன் குட்டுவன் பெற்ற வெற்றியைக் கூறிப் பின்னர் மிஞிலிக்கும் அருளாழிக்கும் நடந்த தனிப்போரை விவரித்துக் கூறி மிஞிலி அருளாழி யாற் கொல்லப்பட்டதையும் வேங்கைமுகன் மாண்டதையும் எடுத்துக் கூற உணர்ச்சி வயப்பட்ட அனிச்சஅடி உரத்த குரலில் பலவாறு பேசி 'அருளாழி! நீ யாண்டுளாய்!' என்று கூவுகின்றாள். இதனால் வாய்வழியே குருதி கசிகின்றது. கணியன் மருத்துவரை அழைத்து வருமாறு ஏவலனை அனுப்புகின்றான்.

வெற்றி பெற்ற அருளாழி நேரே நறவுப்பட்டினம் சென்று சுரும்பார் குழலியை எரித்த ஈமத்தினருகில் நின்று தான் சூளுரை முடித்ததையும், எல்லாம் மீட்ட யான் குழலியை மீட்க இயலாதவனாக உள்ளேனே என்றும் வருந்தும் வேளையில் பரணரும் கணியன் கீரனும் அங்கு வந்து அவன் பெற்ற வெற்றியைப் பாராட்டுகின்றனர். அப் பொழுது அருளாழி 'குழலியின் ஈமத்தில் நின்று மனங் கரைந்து நின்ற வேளையில் பூளைச் செடியின் வாடல் ஒன்று காற்றினால் என் கைகளை வந்தடைந்தது. இது குறிக்கும் பொருள் யாதும் உண்டோ என்பதைக் கீரனார் தெரிவிப் பாராக' என மொழிய, கீரன் இதனால் தீமையே விளையு மெனக் கூறத் திடுக்கிட்ட அருளாழி அனிச்ச அடியின் நிலை எவ்வாறு உளது என்று வினவ, பரணர் உலகின்

இயல்பை எடுத்து விளக்கி வெற்றிச் செய்தி கேட்டு வீறிட்டலறிய அனிச்சத்தின் குருதிக் குழல் பழுதுபடக் குருதி பொங்கியதையும், அவள் மீளா உலகம் புக்கதையும் கூற, அருளாழி பல செய்திகளையும் நினைந்து புலம்பி இறுதியில் அவர்களை நோக்கி 'வெற்றி பெற்று வருவேன் முன்னர்ச் சில கூறுவதாக மொழிந்தனள். அதனை உங்களிடம் கூறியதுண்டோ' என வினவ, 'எம்மிடம் அவள் ஏதும் சொல்லவில்லை. எனினும், உயிர் போகு முன் அவள் கூறிய சொல்லைக் குறித்து வைத்துளேன் என்று பரணர் கூற அதனை இப்பொழுதே கூறுக என அருளாழி வேண்ட,

> 'உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பமே
> இறவினால் வருவது எண்ணிலா இன்பமே'

இதுவே அனிச்சஅடி கூறியது எனப் பரணர் கூறக் கேட்ட அருளாழி மயங்கி வீழ்கிறான். பரணர் பதைத்துக் கணியன் கீரனை அழைத்து நாடிபார்க்கக் கூறுகிறார். அவன் கையைப் பிடித்துப் பார்த்து 'ஐயோ! அவலம் சூழ்ந்ததே! உடலை நம்மிடம் கொடுத்துவிட்டு அவள் கூறிய சொல்லிற்கு விளக்கங் கேட்க விரும்புபவன் போல அனிச்ச அடியைத் தொடர்ந்து போய்விட்டானே' என்று உள்ளம் அழிந்து கூறுகின்றான்.

---

## இக்கதைக்கு அடிப்படையாக அமைந்த இலக்கியப் பகுதி வருமாறு:

மண்ணிய சென்ற ஒண்ணுதல் அரிவை
புனறரு பசுங்காய் தின்றதன் தப்பற்
கொன்பதிற் றொன்பது களிற்றொ டவணிறை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிரையத்துச் செலீஇயரோ வன்னை
ஒருநாள் நகைமுக விருந்தின் வந்தெனப்
பகைமுக வூரிற் றுஞ்சலோ விலளே.

—குறுந்தொகை, 292

'மகிழ்நன் மார்பே வெய்யை யானீ
அழியல் வாழி தோழி நன்னன்
நறுமா கொன்று நாட்பிற் போக்கிய
ஒன்றுமொழிக் கோசர் போல
வன்கட் சூழ்ச்சியும் வேண்டுமாற் சிறிதே.'

—குறுந்தொகை, 73

---

## கதை மாந்தர்

| | | |
|---|---|---|
| 1. | அருளாழி | சேரர் படைத் துணைத் தலைவன், கதைத் தலைவன் |
| 2. | சுரும்பார் குழலி | அருளாழியின் மனைவி |
| 3. | ஆய் எயினன் | சுரும்பார் குழலியின் தந்தை சேரர் படைத்தலைவன் |
| 4. | அணிவளை | ஆய் எயினன் மனைவி |
| 5. | அனிச்சஅடி | கோசர் குலப்பெண் |
| 6. | கணியன் கீரன் | அனிச்சஅடியின் தந்தை |
| 7. | மிஞிலி | துளு நாட்டுப் படைத்தலைவன் |
| 8. | நன்னன் | துளுநாட்டு அரசன் |
| 9. | நார்முடிச்சேரல் | சேரமன்னன் |
| 10. | செங்குட்டுவன் | நார்முடிச் சேரலின் இளவல் |
| 11. | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | நார்முடிச் சேரலின் இளவல் |
| 12. | பரணர் | சேரநாட்டுப் புலவர் |
| 13. | மோசிகீரனார் | துளு நாட்டுப் புலவர் |
| 14. | வேங்கைமுகன் | குறும்பர் தலைவன், பவளத் தீவின் அரசன் |
| 15. | கோட்புலி | வேங்கைமுகனின் மகன் |
| 16. | ஒற்றர் தலைவன் | துளுநாட்டு ஒற்றர் தலைவன் |

அமைச்சர், ஏவலர், பெண்டிர், கண்டோர்
மற்றும் சிலர்.

---

## THE STORY OF ANICHA ADI, THE EPIC DRAMA

(*R. Natarajan*, B.A., B.T.,)

*Surumbaar Kuzhali*, the daughter of *Eyinan*, is the wife of the renowned warrior *Arulazhi*. He is well versed in the art of war. At the time the play commences, *Surumbaar Kuzhali* is an expectant mother. She longs to visit the city of *Naravu pattinam*. The people of *Naravu pattinam* are preparing to celebrate the birthday of their ruler *Nannan*. There resides the evil hearted *Mignili*. Fearing harm from him *Eyinan* is unwilling to allow *Surumbaar Kuzhali* and her husband on their proposed visit to *Naravu pattinam*. On the advice of the poet *Paranar* he gives his consent. They are asked to go in disguise and to be very careful during their sojourn there.

At *Naravu pattinam* one day *Surumbaar Kuzhali* goes to bathe in the river in the company of some maid friends. An unripe mango fruit comes floating in the water within her reach. Overcome by the natural tendency peculiar to expectant mothers, she seizes and bites it. The companions are shocked and asked her to desist from eating it. The unripe mango fruit belongs to the king and king alone. It is the royal decree that none else should touch it. Transgressors are condemned to death. As a consequence of biting the unripe mango fruit she is branded a culprit and brought before the king *Nannan*. She hides her identity on interrogation.

Yet she cannot escape the eagle eyed evil genius *Mignili* who is present in the royal court. He recognizes who she is. Not to let slip the unexpected opportunity of wreaking

vengeance on *Eyinan*, he declares that the culprit is no less a person than the daughter of *Eyinan* and no doubt she has come on the unholy mission of spying. The king is roused and gets infuriated. *Surumbaar Kuzhali* is condemned to death.

Bereaved of his young sweet heart killed in a cruel manner for a trivial offence—if offence it could be called at all—*Arulazhi* vows to uproot the venomous tree and vicious *Mignili*. He finds a friend in *Kanian Keeran* belonging to the race of *Kosars*. Kanian Keeran consoles and comforts *Arulazhi* and takes him home at *Niyamam*. There he unfolds a scheme for destroying the tree. He counsels patience till the scheme is carried out.

*Kanian Keeran* has an intimate friend who is in the service of *Nannan*. Before taking the royal elephants to the river for bath *Kanian Keeran's* friend feeds one of the elephants with poisoned food. The elephant gets mad on the way and ferociously attacks other elephants. The enraged elephants get wild and run hither and thither. Entering the mango grove they destroy it by uprooting the trees.

*Arulazhi*'s joy knows no bounds. Lost in joy he walks in front of an elephant that catches him in his trunk and flings him aloft. *Arulazhi* falls down unconscious. *Kanian Keeran* takes him home. Through the unfailing and loving attention of *Anicha adi*, the daughter of *Kanian Keeran*, he gets well by and by. While convalescing the Prince *Senguttuvan*, brother of *Narmudicheral* pays him a visit and he gives him the news of the demise of *Eyinan* and *Anivalai*.



*Narmudicheral* intends to seize back the *Poozhinadu* conquered and annexed by *Nannan*. He makes preparations to go to war, with *Nannan*. A war council is convened and *Arulazhi* is invited to attend it. *Mignili* is not silent either. He goads *Nannan* to surround and attack *Cheranadu*. It is passing through its lowest ebb. It has lost its able commander. Its trade across the seas has been hit hard by *Vengaimukan* the ruler of the *Coral Island*. *Vengaimukan* is in the camp of *Nannan*. Hence *Nannan* too is on the war path.

*Arulazhi* is not back-yet from *Cheranadu*. *Anicha adi* is full of anxiety for him. She is puzzled with herself. What has happened to her of late? Thenral, the south breeze and moonlight afflict her by their heat. Is it expedient to confide her love to him? Only recently he has lost his wife. He has not yet fully recovered from the agony. Granting that he pays heed to her attentions, won't it check him from wreaking his vengeance? Will it be said of him that he failed to retrieve the honour of his family because of his love towards her? Should she hide within herself the innate flame of love? Should she keep herself aloof however attracted by his looks, demeanour and valour? Tossed among such thoughts she remains perplexed. *Nannan* is by nature a good hearted soul. He feels penitent for having meted out capital punishment to *Surumbaar Kuzhali*. She appears in his dream. Her face is red with anger. She shreaks out to him "Nemesis is come". *Nannan* awakes alarmed and shudders in dread. At another time he dreams of trying to pick a mango from a tree. The fruits thereon suddenly change into human faces laughing at him; the flowers change into flesh and the bees change into vultures trying to tear off the flesh. Struck with

horror. Nannan sinks into an abyss of despair. Mignili tries to dispel his gloom. "What was done was right. The King can do no wrong. Penitence is a needless exercise. It is better to give up grieving and go ahead with the preparations for war" he says. *Arulazhi* is sent by the *Chera-king* to the *Chozha King* to seek his help in the event of war with *Nannan*. The *Chozha* King is unwilling to help and sends a letter to that effect through *Arulazhi*. *Kanian* is not happy over it. He intercepts the letter and recasts it slightly. (Before continuing his journey *Arulazhi* converses with *Anicha adi*) Having in mind the relationship between Chera and Chozha he comes to the conclusion that even near relatives are not to be depended upon in times of great need. He quotes the lines "Attachment generates endless miseries. Detachment but leads to countless pleasures." *Anicha adi* is piqued by these lines. She takes them to mean that he does not love her. So she asks him "why should you come here at all?" she says. He replies "I come to thank you for your help." These words make *Anicha adi* sad.

*Arulazhi* continues his journey. He falls into the hands of *Mignili*. He is put in prison. *Arulazhi* escapes from the prison through the help of Kanian Keeran and goes to meet him on the road leading to. *Naravu pattinam*.

There he meets *Anicha adi* instead of her father. They stroll along the beach. The crabs there, run away seeing them. "See there! Frightened by the sound of your bangles the crabs flee" says *Arulazhi*. *Anicha adi* already piqued in her heart says "Such a wretch I have become. Even the crabs despise me." Pointing to another



crab that is sticking to its place *Arulazhi* says "Look! This crab stands enchanted by the charm of your face." To this *Anicha adi* replies "Not that. The crab knows well that "Attachment generates endless miseries. Detachment but leads to countless pleasures". *Arulazhi* is struck dumb by these remarks. Silently they get into a boat and reach *Thondi*. Arulazhi asks her "You seem to dislike me. Still you help me. Why?." 'In the hope that you would come to my home one day and say "Thank you", she retorted sharply. Leaving him at Thondi, she rows back the boat. On the way she is captured by *Vengaimukan* who takes her to his Coral Island and keeps her there in captivity.

*Narmudicheral* thinks the time is ripe for striking *Nannan*. *Arulazhi* is given command to attack *Poozhi*. *Chenguttuvan* is to invade the Coral Island. *Thulunadu* is to be attacked on the east from the *Kongunadu* by Narmudicheral. On the north in the *Punnadu*, *Aadu Kotpaattu Cheralathan* is to arouse the people to rebellion.

Meanwhile, Arulazhi is sent to the Coral Islands to watch the movements of enemy's warships. At the Coral Islands, *Kotpuli* the son of *Vengaimukan* falls in love with *Anicha Adi Kotpuli* begs her to marry him. She ridicules him and derides his tribe. Enraged, he drags her by her locks. *Arulazhi* comes out from his hiding with sword in hand and a duel ensues. With deadly wounds *Kotpuli* falls down on the ground. *Arulazhi* leaves the place with *Anicha adi*. *Kotpuli* flings his poisoned scimitar at *Anicha adi* It pierces her neck from behind. *Arulazhi* takes her to *Paranar* and leaves her in his care.

Sometime later he comes to see her. He says "You nursed me while I was ill, now that you are ill I go away without helping you." She wants him to go to war "Won't you please reveal your heart to me at least this time?" asks *Arulazhi*. Suspecting her love might stay him long she says "Pardon me for my past impudence. When you return with victory from the battlefront I shall pour out my whole heart to you. Farewell." *Arulazhi* is off.

The war is on. News from the various battlefronts reach *Nannan*. Unable to bear the brunt of the attack of *Chera*, *Mignili* retreats to *Kadampin Peruvaayil*. *Arulazhi* comes there and surrounds *Mignili*. *Vengaimukan* is destroyed in his island by *Senguttuvan*. From there *Senguttuvan* proceeds to attack *Naravu pattinam* and Paaram the capital or *Thulunadu*. A rebellion has broken out in *Punnadu*. *Narmudicheral* invades from the east. *Nannan* understands well that he is face to face with grim destruction. He has already earned the bad repute of having killed an innocent young woman. Lest it would be said of him that he was cowardly, he enters the battlefield and dies fighting.

*Anicha adi* is anxious about *Arulazhi*. The physician forbids telling her anything exciting. News about the war is withheld from her. Suspecting that something has happened to *Arulazhi* she laments. Just then a soldier from the battlefront comes and tells her about the end of *Mignili* and the victory of *Arulazhi*. The news is too much for her. In her joy she cries " Where are you my Arul ? Where are you my love." Thereon blood gushes forth through her mouth and she faints dead.



After slaying *Mignili* in the fight, *Arulazhi* finds out the cremation ground where the body of *Surumbaar Kuzhali* was consigned to flames. He stands still a few moments and sadly utters "I have recovered everything but you." *Kanian Keeran* and the poet *Parana* arrive there. *Arulazhi* enquires about the health of *Anicha adi*. He laments her loss and asks if she told them anything in her last moments. They say that she used to murmur to herself the lines

"Attachment generates endless miseries,
Detachment but leads to countless pleasures".

*Arulazhi* is shocked and smitten. He falls down fainting. " He has followed her to get the import of those words, alas !" say *Paranar* and *Kanian Keeran*.

———

# களத்தில் மொழிந்த கதை

| அங்கம் | களம் | |
|---|---|---|
| I | 1 | சுரும்பார் குழலியும் அருளாழியும் நன்னன் வெள்ளணிவிழாக் காணும் விருப்பத்தை வெளியிடல் |
| | 2 | விழாக் கோலம் புனைந்த நறவுப்பட்டினப் புனைந்துரை - அகப்பொருள் விளக்கப் பாடல்கள். |
| | 3 | மலைவளம், யாற்றுவளம், செங்கோற் சிறப்பு - சுரும்பார் குழலி மாவின் பசுங்காய் உண்ணல். |
| | 4 | மிஞிலியின் வஞ்சனை - குழலி கொலைத் தண்டனைக் காளாதல். |
| | 5 | குழலியை இழந்த அருளாழியின் புலம்பலும் சூளுரையும். |
| II | 1 | மகளை இழந்த எயினனுக்கு நார்முடிச் சேரலின் ஆறுதல் மொழி - புன்னாட் டார்க்குப் போர்த்துணை போக விரும்பிய எயினனுக்கு இசைவளித்தல். |
| | 2 | கணியன் கீரன் யாற்றையும் சருகையும் பற்றி எண்ணுதல் - கீரன் சூழ்ச்சியால் மாமரக்கா அழிதல். |
| | 3 | எயினனைப் பற்றிய செய்தியறியாது வருந்திய அணிவளை பரணர் இல்லம் வரல் - பேகன் கண்ணகி வரலாறு - கனவுபற்றிய அச்சம். |



| அங்கம் | களம் | |
|---|---|---|
| | 4 | செங்குட்டுவன் அருளாழியைக் காணப் பொய்யுருத் தாங்கி வரல் - அருளாழியும் அனிச்சமும் மலைவளம் காணல். |
| III | 1 | நன்னன் தம் மந்திரச் சுற்றத்தோடு சூழ்தல் - சேர நாட்டின்மீது போர் தொடுக்கத் திட்டமிடுதல். |
| | 2 | அனிச்ச அடி அருளன் பிரிவாற் கவறல் - தோழியொடு உரையாடல். |
| | 3 | நன்னன் குழலிக்கிழைத்த கொடுமைக்காக வருந்துதல் - மிஞிலி இஃது அரசியல் நெறியே என ஆறுதல் கூறுதல். |
| IV | 1 | அருளாழி நியமம் வருதல் - அனிச்சத்திடம் தன்னுள்ளத்தை மறைத்துப் பேசுதல். |
| | 2 | நன்னன் சிறையில் அருளன் மனப் போராட்டம். |
| | 3 | அருளன் அனிச்சம் மனப்போராட்டத்தின் உச்சநிலை. |
| | 4 | நார்முடிச் சேரல் தன் மந்திரச் சுற்றத்தினரோடு சூழ்தல் - நாட்டன்பு - போர் முறை பற்றிய செய்திகள். |
| V | 1 | அருளன் பவளத்தீவில் ஒற்றறிதல் - அனிச்சத்தைக் காணல் - கோட்புலி வாளால் அனிச்சம் காயமுறல். |
| | 2 | அருளன் போர்க்கு விடைபெற அனிச்சத்திடம் வரல் - இருவரும் தம் உள்ளத்தை வெளிப்படுத்தச் சிறிது முயலல் - அனிச்சம் முழுமையாகத் தெரிவியாமை. |

3 நன்னன் அவையில் தோல்விச் செய்திகள் தொடர்ந்து வரல்.

4 நன்னன் மிஞிலி போரில் அழிதல் - அருளனின் வெற்றிச் செய்தி கேட்ட அனிச்சம் உணர்ச்சி வயப்பட்டுக் கூவுதல் - வாய்வழியே குருதி பொங்க உயிரிழத்தல்.

5 சூளுரை முடித்த அருளன் குழலியை எரித்த புறங்காட்டில் நின்று வருந்தல் - அனிச்சத்தின் மறைவினைக் கேட்ட அருளன் மயங்கி வீழ்ந்து மடிதல்.

---



# அனிச்ச அடி

## தமிழ் வாழ்த்து

1. வெளியானாய் ; வெளிதவழும்
விசையானாய் ; திசைதோறும்
விரைந்து செல்லும்
வளியானாய் ; எம்மவரின்
வாய்திறந்து நாவசைய
வரும்போ தெல்லாம்
மொழியானாய் ; எங்குலத்து
முதலானாய் அறம்பலவும்
முகிழ்க்கச் செய்யும்
களியானாய் ; தமிழானாய் !
கண்ணானாய் ! எங்கட்கோர்
கடவுள் ஆனாய்.

2. கையசைத்தோம் ; உளங்காட்டக்
கண்ணசைத்தோம் இவையசைத்தும்
காணா தாக,
மெய்யசைத்தோம் ; அசைத்தென்ன ?
மேவுபயன் எய்தாமல்
மயங்கும் நாளில்

---

வெளி - அண்டவெளி, விசை - ஆற்றல், வளி - காற்று. களி - மகிழ்ச்சி, உளங்காட்ட - உள்ளத்தின் குறிப்பைப் பிறர்க்கு விளக்கிக் காட்ட, காணாதாக - போதாது ஆக.

மையசைத்தே விண்படரும்
மதிபோலெஞ் சிறுநாவில்
மையங் கொண்டே
பொய்யசைத்துப் பொருளுணர்த்தும்
புலமளித்தாய்! நலமளித்தாய்!
போற்று கின்றோம்.

3. துலைகாட்டும் அறங்காட்டித்
தொன்னெறியின் உருக்காட்டித்
தூய வாழ்க்கை
நிலைகாட்டி, யோர்குழுவாய்
நிலைபெறுமோர் நெறிகாட்டி,
நெஞ்சை யள்ளும்
கலைகாட்டி, நாகரிகக்
கவின்காட்டிப் பண்பாடும்
காட்டும் தாய்க்குச்
சிலைநாட்டி வணங்கேமோ?
திருவாட்டி புகழ்பாடித்
தித்தி யேமோ?

4. திடமொழிக்கும் நலமொழிக்கும்
சேர்ந்தமொழி தனையழிக்கும்
செயல்மி குந்த
வடமொழிக்கும் அயன்மொழிக்கும்
வால்பிடித்துத் தாள்பிடித்து
வயிறு கொள்வார்

---

மையசைத்தே-மேகத்தை யசைத்து, விண்படரும்-விண்ணில் செல்லும், மையங்கொண்டு - நடுவில் தங்கி, பொய்யசைத்து - அறியாமையை அசைத்தெடுத்து, புலம் - அறிவு, துலைகாட்டும் - துலாக்கோல்போல் விளங்கும், கவின் - அழகு, தித்தியேமோ - மகிழ்ச்சியடையேமோ, திடமொழிக்கும் - வலிமையை அழிக்கும், வயிறுகொள்வார் - வயிற்றை நிரப்பிக்கொள்வார்.



கடமொழிக்கும் படியுடலிற்
கலந்தவர்தம் உணர்வவித்துக்
கட்டு கின்ற
விடமொழிக்க நினதுதிரு
விழியருளை யவர்முகத்து
வீழ்த்து கம்மே!

5. ஒருதனியாய் இருங்கடல்சூழ்
உலகமெலாம் நீயாண்டாய்;
உருத்தெ திர்ந்த
செருவுடையார் தருமிடரால்
திகிரிசெலும் மிடந்தேய்ந்தும்
தேயா யாகித்
திருமலரின் திகழ்ந்திடுநின்
திறங்கண்டு திகைப்படையேன்;
தேயத் தேயப்
பொருவரிய மணஞ்செய்யும்
பொன்னுரம் விளைபொதிகைப்
பூத்தாய் அன்றே!

6. வேத்தியலும் பொதுவியலும்
வீழ்ந்ததனுல் மனமுடைந்து,
மேற்பு லத்தார்
கூத்தியலும் முறையனைத்தும்
குறைவறநன் கறிந்ததிரு
வனந்தைக் கோமான்

---

கடம் - கடன், கடமை. விடமொழிக்க - நஞ்சையழிக்க, வீழ்த்துகம்மே - வீழ்த்துக + அம்மே, உருத்து - சினந்து, பொருவரிய - ஒப்பில்லாத, பொன்னுரம் - பொன்னிறச் சந்தனம், பூத்தாய்-தோன்றினுய், கூத்தியலும் முறை-கூத்து + இயலும்முறை - கூத்துநடக்கும் முறைமை, திருவனந்தைக் கோமான் - பேராசிரியர் சுந்தரம்பிள்ளை.

மீத்திகழும் கூத்தியல்நூல்
மேனுளிற் செய்தளித்தான்;
மேலோன் இட்ட
பாத்திவழி நீரிறைத்துப்
பயிர்வளர்க்கும் இளையேனைப்
பாலிப் பாயே!

7. ஐந்துபெருங் காப்பியமும்,
அளப்பரிய தொகைப்பாட்டும்,
அறத்தின் மாந்தர்
உய்ந்தொளிருங் குறள்நூலும்,
ஒல்காத்தொல் காப்பியமும்,
உரையும், நின்றன்
பைந்தளிரின் திருவடிக்கே
படைத்தளித்த எம்முன்னோர்ப்
பற்றி யானும்
நெய்துவந்தேன் சிற்றுடை
நினதிடையில் அணிந்தருள்வாய்
நெஞ்சு வந்தே!

*தமிழ் வாழ்த்து விருத்தம் 7க்கு வரி—28*
*களம் 21க்கு வரி—3773*

*ஆகமொத்தம் வரி—3801*

---

*மீத்திகழும்-மேம்பட்டுத் திகழும், பாலிப்பாயே - காப்பா யே*

## முதல் அங்கம்

### முதற் களம்

**இடம் :** *வெளியம்—ஆய்எயினன் இல்லம்.*

**உறுப்பினர் :** *ஆய்எயினன், அவன் மனைவி அணிவளை.*

**நேரம் :** *காலை.*

**ஆய்எயினன் :** திருந்திழாய்! நீயென் திரும்பியும் நோக்கியும்
இருந்தும் எழுந்தும் எங்கோ மனத்தினைப்
போய்வர விடுத்தனை புகலுதி!

**அணிவளை :** அன்பீர்!
ஆய்நுதற் சுரும்பார் குழலியும், அவடன்
காயிலை நெடுவேற் கணவனும் நம்மனை
வருவார் எனச்சொலி வந்தான் ஒருவன்;
பொருவில் லனைய புருவத் தாள்தனைக்
காணுதற் கவாவிய கருத்தால் இவ்வணம்
இருந்தேன்;

**ஆய்எயி :** ஓ! ஓ! என்மகள் வருகையா?
முருந்தோ என்ன முகிழ்க்கும் முறுவலாய்!
ஏவலன் வேறென் இயம்பினன்?

**அணிவளை :** நம்மகள்
ஆற்றும் இல்லறப் பணிகள் அனைத்தும்
போற்றி யுரைத்தனன்; புரையிலா மனத்தொடு
மாமியும் மாமனும் மருகியின் கால்மலர்
பூமியிற் படவும் பொருஅ ராகிக்

---

*முருந்து - மயிலிறகின் அடிப்பாகம்.*

காக்கும் திறமும் கழறினன் ; பெருந்திரு
ஆக்கும் கணவன் அணியுட லோம்பிக்
கொண்ட குறிப்பின் குறிவழி யொழுகிப்
பெண்டெனின் இவளே பெண்டெனப் பலரும்
வாழ்த்தவும் ஏத்தவும் வாழ்கிரு ளென்ருெரு
ஊழ்த்த மலர்த்தேன் ஒழுகுஞ் சொல்லைப்
பெய்தான் செவியில் ;

**ஆய்எயி :** பெண்ணே அனைத்தும்
மெய்தான் ! அவள்யார் நின்மக ளல்லளோ ?
அன்பை அமுதோ டளைந்து கொடுத்தும்,
வன்பிலாப் பண்பை வளரிசைக் குழைத்தும்,
பணிவும் இன்சொலும் பாவையர் தமக்குநல்
அணியும் அழகும் ஆமென் றுணர்த்தியும்,
நாடொறும் நாடொறும் நயந்து நயந்து
கேடொருங் ககலக் கெழுமநற் பண்புகள்
வளர்த்தனை யன்றோ ? வளர்ந்தாள் புகழை
வளர்த்தாள் இதிலென வாய்மைமிக் குளது ?
பெற்றோர் மகிழப் பிறங்கினுள் செய்தி
மற்றே தேனும் சொற்றதும் உண்டுகொல் ?

**அணிவளை :** இன்னென்று சொன்னுன்

**ஆய்எயி :** ஏனித் தயக்கமென்
கண்ணென்று பாவாய் செவியிடைக் கழறுக !

**அணிவளை :** 'உங்கள் பெயரை உரிமை கொள்ளவோர்
திங்கட் குழவி திருவயிற் றெழுந்தான்'
கண்டை மானும் காதற் சொல்லின்
உண்டையென் செவிக்கொள் *றுதவிப் போயினன்;*

**ஆய்எயி :** கிழவி கிழவன் எனப்பிறர் மொழியக்
குழவிப் பேரன் குதிக்குநாள் எந்நாள் ?

**அணி :** எட்டுத் திங்கள் இன்னும் பொறுத்தால்
பட்டுக் கன்னம் பனிமலர்க் கைகள்

---

**ஊழ்த்த** - முதிர்ந்த, **திங்கட்குழவி** - உவமத்தொகை. **கண்டை** - கற்கண்டை.



தொட்டுத் தூக்கித் தோளிடைக் கிடத்தி
இன்பத் தொகையை எண்ணி மகிழலாம் ;

*[ஆய்எயினன் எதையோ எண்ணியவனுக வாளாவிருக்க அணிவளை வினவுகின்ருள்]*

ஏனிந்த அமைதி ? இருசெவிக் கேட்டுத்
தேனிப்ப தல்லால் திகைப்புற லென்னே ?

**ஆய்எயி :** திகைப்பிலை தேமொழி ! சென்றநாள் நிகழ்ச்சிகள்
வகைப்பட மனத்திரை வளர்ந்தன வேறில் ;
அரும்பாய்ப் போதாய் அலராய் வளர்ந்த
சுரும்பார் குழலியின் தோற்றமும் வளர்ச்சியும்
எண்ணினேன் எண்ணி இரங்கினேன் ; அந்தப்
பண்ணினேர் மொழியால் வளர்ந்த பகையையும்
உன்னினேன் ; நினைவில் உலரா நிகழ்ச்சியென்
கண்ணினுள் என்றும் கரையா துளது ;
மகட்கொடை வேட்டு மறப்புகழ் மிஞிலியோர்
பகற்பொழுது நம்மைப் படைகொடு சூழ்ந்ததும்,
வெளியத்தை முற்றிய வேழப் படையால்
புளிய மரங்கள் புடைபெயர்ந் தழிந்ததும்,
பருந்தும் நரியும் படுகளம் சுற்றி
விருந்தென அருந்தி விலாஅப் புடைத்ததும்,
ஆயிடை நிகழ்ந்த அடுபோர்ச் சூழலில்
மேயநம் மைந்தன் மிஞிலியின் வேலை
மார்பிடைத் தாங்கி மடிந்ததும், மிஞிலியின்
சார்புகள் நீக்கித் தணல்படு மனத்தொடு
சுருள்வா ளேந்திநான் கடுகிச் சுழற்ற
எறும்நிறை மிஞிலியின் இருதோட் புறத்தும்
குருதிப் புனல்யாறு கொப்பளித் தொழுகக்
கருதியது பெருனுய் மிஞிலி கழிந்ததும்,
ஒழுக்கமும் ஆண்மையும் உயர்குடிப் பிறப்பும்

---

**தேனிப்பது** - இன்பமடைவது. **வெளியம்** - சேரநாட்டில் உள்ளதோர் ஊர், **மிஞிலி** - நன்னன் படைத்தலைவன், **எறும்** - வலிமை.

இழுக்கிலா மறத்துறைக் கல்வியும் எய்திய
மறவன் திறவன் மன்படைத் தலைவன்
உறவன் ஆமென ஒண்டொடி தேர்ந்ததும்,
சுற்றமும் நட்பும் சூழ்ந்தொருங் கிருக்க
உற்றநல் லோரையில் ஒண்டொடி குழலி
கோடி உடுத்துக் குறுநடை நடந்து
நேடிய மணமகன் அருகில் நின்றதும்,
வயிறு வாய்த்த செயிரிலா மகளிர்
எயிறு விளங்க எதிரெதிர் நின்று
நெல்லும் மலரும் நிரைத்துத் தூவி
'சொல்லும் பொருளும் ஆமெனப் பிணைவீர் ;
உற்ற கடமைகள் ஒருவாது பேணிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆகென'க்
கண்டனம் அல்லமோ கடிமண நிகழ்வை!
மண்டுமந் நினைவுகள் மனத்திரை ஓடின ;

**அணி :** கண்ணறி யாவணம் கயத்தின் நீரை
விண்ணெறிப் பரிதி விழுங்குதல் போலக்
கால மென்னும் கழியருள் மருத்துவன்
சாலவும் துன்பில் சலிப்புறு வண்ணம்
மறதி என்றொரு மருந்துநமக் கருளி
உறவரும் துயரை ஒழித்ததால் உய்ந்தனம்!

*[புலவர் பரணர் உள்ளே வர]*

**ஆய்எயி :** பொய்யா நாவிற் புலவோர் தலைவ!
செய்யாத் தவமும் செய்தனென் போலும்,
ஐயாஅ! உன்றன் அடிமலர் இவண்பட ;

**பரணர் :** கையா றென்னை? கண்களேன் பனித்தல்?
அன்னாய் அணிவளே! அவலம் என்னை?

---

நல்லோரை - நன்னேரம், நேடிய - கருதிய, செயிரிலா - குற்றமிலா, வயிறுவாய்த்த - பிள்ளை பெற்ற, பெற்றோன் - கணவன், பெட்கும் - விரும்பும், கயம் - குளம், சாலவும் - மிகுதியும், கையாறு - துன்பம்.



ஒன்னார் தந்த உறுதுயர் உண்டுகொல்?

**அணி :** தந்தை யனையீர் யாரும் தந்திலர் ;
இந்தக் கண்ணீர் இன்பக் கண்ணீர்!
வயிறு வாய்த்தனள் மகளென வறிந்த
செயிரிலா இன்பத் திளைப்பின் கண்ணீர்!

**பரணர் :** வாழிய குழலி! வயிற்றிடை வளரும்
ஆழியின் முத்தும் அறம்போல் வாழிய!
பாட்டியும் பாட்டனும் ஆனேம் என்ற
வாட்டம் ஒன்றும் மனத்துள் இலையே?

**அணி :** இதற்கியா ரேனும் இரங்குவார் உண்டா?
இதனினும் சிறந்த இன்பமு முண்டா?

**பரணர் :** மகளும் மருகரும் நலமாய் உளரா?

*[அப்பொழுது அருளாழியும் குழலியும் நுழைந்து]*

**அருளாழி :** இகவாப் புகழ்மிகு இயற்றமிழ் வல்லீர்!
எல்லா நலமும் இனிதே பெற்றுளோம் ;
நல்லாய் நின்னடி நயந்தனம் ;

**பரணர் :** மக்காள்!
செந்தமிழ் போலச் சிறந்து வாழியர் ;

**அணி :** கொந்தார் குழலி! கொழுநற் பயந்தோர்
நன்னலந் தானா?

**குழலி :** நலந்தா னன்னாய் ;
நென்னலெம் பணியாள் நின்பால் வந்தியான்
மொழிந்தன எல்லாம்

**அணி :** மொழிந்தான் மகளே!
பழியிலா இல்லறப் பயன்விளை நின்திறம்
அனைத்தும் கேட்டோம்; அருஞ்செவிக் கேட்டொறும்
இனைத்தென வரைகிலா இன்பமும் உற்றோம் ;

---

இகவாப் புகழ் - நீங்காப் புகழ், கொந்தார் குழலி - பூங்கொத்துக்களை நிறையச் சூடிய குழலினையுடையவள், கொழுநற் பயந்தோர் - கணவனைப் பெற்றோர், நென்னல் - நேற்று, வந்தியான் - வந்து+யான், இனைத்தென வரைகிலா - இவ்வளவு என்று வரையறுக்க முடியாத.

குலத்தின் பெருமையைக் குன்றென உயர்த்திய
நலத்தினை வியந்தோம்;

**குழலி :** நற்றவப் பயனால்
ஈன்றவ ராக யானுமைப் பெற்றேன்;
தோன்றுமென் விருப்பெலாம் துளியும் மறாஅது
ஆற்றினிர்; அதுபோல் இன்றுமெம் அகத்தே
தோற்றிய விருப்பையும் சொல்வேன்; அதனையும்
அருளுமா றிரந்தேன்;

**ஆய்எயி :** ஆயிழாய் எம்மைத்
தெருளாது இவ்வணம் தெரித்தல் தகாஅது:
உன்றன் மகிழ்வெம் உயிரின் மகிழ்வெனக்
கொண்ட எம்குறிப்பை அறிந்திலை கொல்லோ!
வேட்கை இற்றென விளம்பின் மறுகணம்
ஏற்கப் பட்ட திதுவெனல் அல்லால்
மறுப்பே னெனநீ மனந்துணிந் ததுதான்
அறுப்ப தென்மனத்தை; ஆதலின் மகளே
உள்ளங் கருதியது உரைப்பாய்!

**குழலி :** தந்தையீர்
பள்ளங் கருதிப் பாயுவெள் ளம்போல்
எந்நாட் டிருந்துமித் தென்னாடு குழுமி,
கண்ணும் செவியும் மனமும் களிக்கத்
திசைதொறும் திசைதொறும் இசைபரந் தெழுந்த
வசையிலா நன்னன் வயங்குவெள் ளணிநாள்
திறமெலாம் கண்டு திளைத்தற் பொருட்டு
நறவுப் பட்டினம் யாஞ்செல விழைந்தனம்;
கண்ணிலாக் குருடரும் காதிலாச் செவிடரும்
எண்ணிலாப் பேதையும் எனஇவ ரல்லால்
வெள்ளணி காண விரும்பா ரிலரெனும்

---

தெருளாது - தெளியாது, தெரித்தல் - கூறுதல், **வேட்கை** - **விருப்பம்,** நறவுப் பட்டினம் - துளுநாட்டுத் துறைமுகப் பட்டினம், எண்ணிலா - சிந்தனையில்லாத, வெள்ளணி - பிறந்த நாள் விழா.



ஒள்ளிய பழமொழி ஓர்ந்துளே மன்றே!
பெண்டான் விழைவைப் பேசலும் தன்னைக்
கொண்டான் உள்ளக் குறிப்பின் வழியே
ஆதலின் எம்முள அவாவினை உரைத்தோம்;
காதலின் மிக்கீர் கருதியது செய்க!
(ஆய்எயினன் ஒன்றும் மொழியாதிருக்க)
விருப்பத்தை எடுத்து விளம்பிய போதெலாம்
ஒருப்பட் டேனென உரைப்பதே யல்லால்
சிந்தித்தெவ் வுரையும் செப்பா திருத்தலெம்
புந்தியில் இஃதோர் புதுமையாய்த் தோன்றுமால்!

**ஆய்எயி :** அன்னாய்! உன்றன் அவாநிறை வேற்றலில்
இந்நாள் வரைக்கும் இடர்ப்பா டொன்றிலை;
எண்ணிச் செயற்குள தெதனையும் நின்மனம்
கண்ணிய தில்லை; கயமலர்க் கண்ணாய்!
மறுப்பே னெனஒரு மறுக்கம் வேண்டா!
இருப்பினு மனைத்தும் எண்ணித் துணிதலே
தக்கதென் றென்னுளம் கருதும்;

**குழலி :** தந்தையீர்
எக்கா ரணத்தால் எஞ்செலவு தகாது?

**எயினன் :** மகளே! மிஞிலி மகட்கொடை வேட்டொரு
பகலே செய்தன பார்த்தனை அன்றோ?
வஞ்சனை மிஞிலி வாழும்நா டன்றோ?
அஞ்சுதென் உள்ளம்

**குழலி :** அரும்பெறல் தந்தாய்
போர்க்குண மிஞிலி பொருந்துவது பாரம்;
மேற்கடல் நறவியாம் விழைவது; ஆயிடை
சேணெடுந் தொலைவுள தாதலின் ஏதமில்;

**எயினன் :** வாணெடுங் கண்ணியுன் வாதமிக நன்று!
பாரமும் நறவும் சேணிடைய உண்மை;
யாரஃ தறிவர்; ஆண்டும் மிஞிலி

---

ஓர்ந்துளேம் - அறிந்துளேம், பெண்டான் - பெண்+தான், புந்தியில் - அறிவில், கண்ணியது - கருதியது, மறுக்கம் - மயக்கம், பாரம் - துளுநாட்டுளதோர் ஊர்.

வருவனேல் ஏதம் வருதலும் ஒருதலை ;
செருவிழை மிஞிலியின் செற்றம் எளிதில்
அடங்குவ தில்லை ; அறிவேன் அதனை ;
நுடங்கிடை ! இந்த நோக்கம் தானெனை
மயக்குறுத் துவது ;

**குழலி :** மதியிர் ! இதனை எம்
பயக்குறை என்றே பகர்ந்திடல் வேண்டும் ;
சேரர் படையின் நேரிலாத் தலைவர்
ஆர்புகழ் ஆஅய் எயினன் அரும்பெறற்
காதல் மகளெனல் கரந்தொரு வாணிகன்
போதல் போலப் போயினென் வருவது ?

[அப்பொழுதும் ஆய்எயினன் அமைதியாயிருக்க]

**பரணர் :** வேழப் படையும் விரைபரிப் படையும்
சூழப் புகுந்து தொக்க போழ்திலும்
கலங்கிலா நீஇவண் கலங்குதல் விந்தை ;
புலங்கொளல் வேண்டுமவள் புகன்ற தொன்றனை ;
ஊரும் பேரும் உரையாது கரந்து
சேறுமேல் துன்பம் சேருமா றில்லை ;
பன்னாட் டகத்தர், பன்மொழி பேசுநர்,
தன்னாட் டகத்துத் தருமுறை ஈண்டி
இருக்கும் பொழுதில் இவர்களை மட்டும்
பொறுக்கிச் சலித்துப் புடைத்துத் தேடுதல்
எவ்வணம் இயலும் ? மேலும் இவர்தாம்
செவ்வணம் கரப்பர் ! சிறுசேய் வயிற்றில்
வளருநாள் உள்ளே வளரு மவாவைத்
தளருறச் செய்தல் தக்கது மன்றும் ;

ஏதம் - துன்பம், ஒருதலை - உறுதி, செருவிழை - போரை விரும்பும், செற்றம் - சினம், பயக்குறை - நல்வினைப்பயன் இன்மை, கரந்து - மறைந்து, ஈண்டி - நெருங்கி, சேறுமேல் - செல்லுமேல்



என்மனக் கருத்தினை இற்றென மொழிந்தேன்;
பொன்மனத் தாய்நீ புரிந்தது செய்க !

**ஆய்எயி :** நல்லீர் இந்நிலை யான்செயத் தக்கது
சொல்வீ ராயின் துணிவேன் அவ்வணம் ;

**பரணர் :** அஞ்சுவ வெல்லாம் அஞ்சியாங் கெய்தித்
துஞ்சுவ செயுமெனத் துணிதலும் இல்லை ;
அஞ்சுவ தின்றி ஆய்ந்து செய்யினும்
துஞ்சிட வருமேல் துடைக்குமா றில்லை ;
ஆதலின் கற்பனை அளவில வளர்த்துச்
சாதலின் ஒன்றைச் சரியெனத் துணிக !
மூத்தஎம் நண்பர் மோசி கீரனுக்
கியாத்த முடங்கல் யான்தரு வேன் ; அவண்
தங்குவீ ராயின் சலிப்பன நேரா ;

**ஆய்எயி :** துளுநாட் டெல்லையுள் உளநாள் மட்டும்
வழுநீர் அங்கு வாய்மைகடைப் பிடித்தல் ;
என்ன நேரினு மியாரெனக் காட்டாது
சொன்ன பரிசே மீளச் சூளுரை
கொள்வீ ராயின் குளிருமென் னுள்ளம் ;
வெள்வீ முகையை வென்றிடு நகையாய் !
வெள்ளணி காணும் விழைவு நிறைவேறக்
கொள்ளுக செலவுமகிழ் கூர்ந்திடு மாறே.

புரிந்தது - நினைத்தது, துஞ்சுவ - அழிவன, துடைக்குமாறு - நீக்குமாறு, முடங்கல் - கடிதம், வழு - குற்றம், வாய்மை கடைப் பிடித்தல் வழு என மாற்றுக, வெள்வீமுகை - வெள்ளிய முல்லை மொட்டு.

## முதல் அங்கம்

### இரண்டாம் களம்

**இடம்:** *நறவுப்பட்டினம். நன்னன் வெள்ளணிநாள் விழா நிகழ்ச்சிகளை அருளாழியும், சுரும்பார் குழலியும் கண்டு களிக்கின்றனர். மக்கள் வெள்ளம்போல் கடற்கரையிலும் நகரிலும் திரண்டு நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கின்றனர்.*

**நேரம் :** *மாலை.*

குழலி : கண்ணெனக் கருதும் தந்தையின் உள்ளம்
புண்ணெனு மாறியாம் போந்ததை எண்ணி
வருந்திய துன்பெலாம் வளரா தழிக்கும்
மருந்தெனத் திகழுமிவ் வையகப் பெருவிழா
காணுக் கண்கள் காணுக் கண்களே !
சேணுட் டிருந்து சேர்ந்தபல் மொழியினர்
தொகையை எண்ணித் துணிதலொல் லாது !

அருளாழி : நகைமொழி ! இந்த நகர்விழாக் கோலம்
கொள்ளுதற் கெத்தனை குறியா முயற்சிகள் ?
உள்ளினெவ் வுள்ளமும் மருளல் ஒருதலை ;
வாழையின் குருத்தும், தாழையின் மடலும்,
மாழையின் வண்ணம் காட்டியெம் மருட்டும் ;
தெங்கின் குலையும் நுங்கின் தொகுதியும்
தொங்குத லில்லாத் தூண்யாண்டு மில்லை ;
வண்ணத் துகிற்கொடி வருகென அழைக்க

சேணுடு - தொலைவில் உள்ள நாடு, மாழை - பொன்.



உண்ணென உரைக்கும் உறுகனிக் குலைகள் ;
பொன்னிற மலரான் புனைந்த மாலைகள்
மின்னிறம் காட்டிஎவர் விழியையும் தடுக்கும் ;
செல்வாரை எல்லாம் சிறைசெயும் தரையில்
நல்லார் இட்ட நன்னிறக் கோலம் ;

குழலி : கோலம் இவையெனின் குண நலம் கூறல்
ஞாலம் அளக்க நண்ணுதல் ஒக்கும் ;
வேற்றவர் வருகையை விழைவோர் வாயில்கள்
பூத்தொளிர் தாமரைப் பொய்கையை மானும் ;
அகிலும் சாந்தும் அணிபெறத் துலங்கா
நகிலும் குழலும் யாண்டும் காண்கிலம் ;
வண்ணமும் திருந்திய வடிவமும் தூய
எண்ணமும் உடையார் இலங்கிழை மகளிர்;
எம்மொழி பேசினும் எதிர்கொண் டினியவாம்
செம்மொழி உணவொடு சேர்த்துண் பிக்கும்
இவரே விருந்தின் இயல்புணர்ந் தோரே !
பவரே மிடைந்த பல்பூம் பந்தரின்
கீழிருந் தெவரொடும் கிளைநலம் பேசுவர்
தாழிருங் கூந்தல் தையன் மார்கள் ;
நறவுத் துறையா ? நானில மக்களின்
உறவுத் துறையா ? வென்பதை யோர்கிலம் !
துவ்வா நறவும் துய்த்ததோ நறவென
எவ்வாய் மருங்கும் எழுந்துகளி புரளும் ;
வீடெலாம் ஏற்றிய விளக்கின் ஒளியால்
மாடெலாம் பகலாய் வயங்கித் தோன்றும் ;

அருளாழி : கடலின் திரையும், காற்றினுல் அரங்கில்
உடலும் திரையும் ஒத்தெழுந் தசைதல்
இருபே ரரங்குகள் எதிரெதிர் வாய்த்தபோல்
வருவோர் மருட்டும் ; வானிலா முகத்தில்

*அகிலும் சாந்தும், நகிலும் குழலும் என்பதை எதிர் நிரனிறையாகக் கொள்க. பவர் - கொடி, மிடைந்த - நெருங்கிய. துவ்வா நறவு - நறவுப் பட்டினம், மாடு - பக்கம், உடலும் - மோதும், வானிலா - தூயநிலா.*

எண்ணரும் உணர்ச்சிகள் எழுப்பியும் காவினால்
பண்ணமை தாளம் பாஅற் படுத்தியும்,
விழியும் விரலும் விரைந்துதொழிற் படுத்தி,
மொழியும் குறிப்பும் முறைமுறைக் காட்டியும்,
ஆடற் றொழிலின் அலகெலாம் அளந்து
பாடற் பொருளைப் பார்ப்பவர்ப் பதித்தும்
ஆடுமிவள் திறமெவ் ஆடவர் உளத்தையும்
ஆடும் படிசெயும்;

**குழலி :** அப்படி யாயின்
நீங்களும் ஆடவர் ஆதலின் நிற்றல்
தீங்காய் முடியும்; செல்லுவம்; மேலும்
மேற்புல யவனர்கள் விரித்தவங் காடியுட்
பாற்படும் பொருளைப் பார்க்கநாள் போதா!
முத்துக் குவியலும், முரிசெம் பவளமொடு
தத்தும் கடல்தரு தாரக் குவியலும்,
தந்த வினைஞரும், தாவிலா வடபுலம்
வந்த வினைஞரும் தந்திறம் காட்டிய
கலைப்பொருட் டொகுதியும், களிமனாற் சீனர்
விலைப்பட இயற்றிய விருந்தின் பொருளும்,
காண்டொறும் காண்டொறும் கழியா வேட்கையைத்
தூண்டுவ தல்லால் துடைக்குமா றில்லை;

**அருளாழி :** முத்தைப் படியால் முகந்துவிலை கூறும்
வித்தகம் காணியர்! வீரர்கை வாளில்
எத்தனை வகையுள! எத்தனை வடிவுள!
அத்தனை வகையிலும் அருங்கலைத் தொழிலுள;
அணியும் மணியும் அயற்புலம் தொகுத்த
துணியும் பிணிகையும் தொகுத்த வங்காடி
ஒழுகை என்னும் உவரியின் மீண்டிவண்

---

*பாஅற் படுத்துதல் - பகுதிப் படுத்துதல், அலகு - குறியீடு, அங்காடி - கடை, தாரம் - பண்டம், விருந்தின் பொருள் - புதிய பொருள், வித்தகம் - வியப்பு, பிணிகை - மார்புக் கச்சு, ஒழுகை - வரிசை.*



எழுகை மகளிர்க் கியலாது போலும்;

**குழலி :** கண்படும் அனைத்தும் வாங்கினீர் போலப்
புண்படல் நன்றால்!

**அருளாழி :** பூவிதழ்க் கண்ணாய்!
பொருளின்றி உரைத்ததைப் பொருளாக் கொண்டு
மருளல் வேண்டா! மணற்குன் றொருசிறைத்
தென்கால் எழுந்து சுழன்று திரிதரும்
புன்காற் பந்தர் புகுதும் எழுக;

*[இருவரும் பந்தரில் அமர்ந்ததும் இசை யரங்கில் பாட்டொலி எழுகிறது.]*

**குழலி :** ஒளியுமிழ் விளக்கின் ஒழுகைதோன் றுவது
களிதமிழ்ப் பண்ணிசை கறங்கும் அரங்கெனாக்
குழலும் யாழும் வழாஅது மரபின்
முழவொடு புணர்ந்த வளரிசை கூறும்;
குழலும் குரலும் பிரித்துக் கூறுதல்
விழலே எனுமாறு விறலிசை எழுமால்!
ஒடுங்கிய இசையிலும் உச்சத் துயிர்ப்பிலும்
நடுங்காக் குரலின் நலத்தை என்சொல்ல!

**அருளாழி :** ஆளத்தி முடிந்தது; அருந்தமிழ்ப் பாடல்
தாளத்தி னொழூஉம் தையாஅல் கேட்குவம்;

*(பாடினி பாடுகின்றாள்)*

### தோழி கையுறை மறுத்தது

**பாடினி :** பொன்காட்டும் வண்ணவிதழ்ப்
புரியவிழா மலர்தொடுத்துப்
போகா யாகி
மின்காட்டும் இடையாட்கு
மிகப்பொருந்து மெனமொழிந்து
மெலிந்து நிற்றல்

---

*மருளல் - மயங்குதல், ஒருசிறை - ஒருபக்கம், தென்கால் - தென்றல், புன்கால் - சிறிய தூண், கறங்கும் - ஒலிக்கும், வழாஅது - வழுவாது, ஆளத்தி - ஆலாபனை.*

என்காட்டும் அறிவுடையார்க்
கெனவோராய் [1]பாண்டியர்கள்
எதிர்நில் லாமல்
வெந்காட்டும் பொழுதெறிந்த
வெண்ணாரம் வேலியெலாம்
விளங்கு மூரேம்.

கண்காட்டும் நெய்தலொடு
கடிமலர்கள் பலதொடுத்துக்
கையி னேந்திப்
பண்காட்டும் மொழியாட்குப்
பயன்படுப வெனமொழிந்து
பணிந்து நிற்போய்
[2]வண்காட்டும் மேற்கடலில்
வாள்யவன ரிரிந்தோட
வளைத்த செல்வம்
விண்காட்டும் மீன்களென
வீடுதொறும் வீடுதொறும்
விளங்கு மூரேம்.

வண்டுதாப் பொன்மலரில்
வயிரமணி பதித்ததனை
வாங்கி வந்தே

---

1. பாண்டியர் படைத்தலைவன் நெடுமிடல் அஞ்சி மிஞிலியிடம் தோற்ற செய்தி கூறப்படுகிறது.

2. யவனர்களின் மரக்கலங்கள் துளு நாட்டவராலும், கடற்குறும்பராலும் கொள்ளையடிக்கப்பட்ட வரலாற்றுச் செய்தி கூறப்படுகிறது.

வெந் - முதுகு, வெண்ணாரம் - முத்தாரம், இரிந்தோட - சிதைந்தோட, வண்டுதாப் பொன்மலர் - வெளிப்படை,



கண்டுதா விட்டாட்குக்
கையுறையென் றெனையிரந்தோய்
[1]களங்காய்க் கண்ணித்
திண்டோளன் பூழியினைச்
செருவாயில் இழந்ததனால்
சேர்ந்த செல்வம்
கண்டாரும் காணாரும்
கண்டறியா மருட்கைகொளக்
காட்டு மூரேம்.

(இதனைக் கேட்டு அருளாழி சினங் கொள்கின்றான்.)

அருளாழி : நார்முடிச் சேரலை யார்வசை மொழிவது!
பார்அவர் நாவைக் கூர்வாட் படுப்பேன்!
இசையரங் காவிது? ஏதிலார்ப் பழிக்கும்
வசையரங் கிதனை வளர்த்துக் களிக்கும்
நன்னன் பெருங்குணம் நகைப்பிற் குரியது!
[இவன் உரத்துப் பேசுவதைப் பிறர்கேட்பின்
தீதாய் முடியுமே எனப்பதறி]

குழலி : கொன்னே சினங்கொளின் என்னாங் கொல்லோ?
அருகில் ஆரும் நின்மொழி கேட்பரேல்
வெருகின் கையில் வீழ்ந்த கிளியென
அழிதல் உறுதி; ஆதலின் சினத்தைக்
கழிதல் அறிவாம்; இடத்தினைக் கணித்தல்
வேண்டும் என்பதை விளக்கும் குறளை
மீண்டும் எடுத்து விளக்குதல் வேண்டுமோ?
ஊரும் பேரும் உரையீ ராகி
யாரும் அறியா இயல்பொடு கெழுமி

---

1. நார்முடிச் சேரலிடமிருந்து பூழி நாட்டை நன்னன் கவர்ந்து கொண்டதை இவ்வாறு பாடுகிறாள்.

கண்டுதா - கண் + தூதாக, பூழி - நன்னன் கவர்ந்து கொண்ட சேரநாட்டுப் பகுதி, செருவாயில் - போர்க்களத்தில், மருட்கை - மயக்கம், கொன்னே - பயனின்றி, வெருகு - பூனை.

நலத்தொடு மீள்கென நவின்ற தந்தைசொல்
கலத்தொடு கவிழ்ந்த பாலெனக் கழிதல்
முறையோ ? நமக்கொரு தீங்கு மூளுமேல்
நறைமலர்த் தாராய் ! நமைப்பயந் தாரை
மீளா அவலம் விழுங்குதல் ஒருதலை ;
வாளா விருத்தலே வாய்மையா மாதலின்
எல்லா மறந்திவ் வின்னிசைப் பாடல்
ஒல்லா தெனினும் மூங்கையை யொப்ப
இருத்தல் வேண்டுமென இரந்தேன் ! பிழையேல்
பொறுத்தல் வேண்டுவென் ;

**அருளாழி :** புரையிலா நலத்தாய்!
நல்லூழ் வயத்தால் ஆரும் கேட்டிலர் ;
அல்லூ ழாயின் கருதவும் அஞ்சுவென் ;
உரிய நேரத்தில் உறுத்த சினத்தை
இரியச் செய்தனை ! சரிஇனிக் கேட்போம் ;

**(இன்னிசைப் பாடலைக் கேட்கின்றனர்)**

## கழற்றெதிர் மறை

**பாடினி :** நீலப்பைம் போது நிகர்க்கும் கருவிழிகள்
காலன்கை வேலைக் கடுக்கும் எனஉணரேன்
காலன்கை வேலைக் கடுக்கும் எனஉணரின்
கோலச்சீர் மேவும் குளிர்சாரல் நண்ணேனால்

அரக்காடும் வாயின் அமுத இதழென்னைக்
குரக்காடும் படியாட்டும் குறிப்பை உணரேனால்
குரக்காடும் படியாட்டும் குறிப்பை உணர்வேனேல்
நிறக்காடு போல்விரியும் நீள்சாரல் நண்ணேனால்

விட்டெரிக்கும் சீத விரிநிலவு போன்றமுகம்
சுட்டெரிக்கும் நெஞ்சைச் சுழலவிடும் எனஉணரேன்

---

அவலம் - துன்பம், ஒல்லாது - பொருந்தாது, மூங்கை - ஊமை, இரிய - அழிய, கடுக்கும் - ஒக்கும், அரக்காடும் - அரக்குப் போன்ற, குரக்கு - குரங்கு, சீதம் - குளிர்ச்சி.



சுட்டெரிக்கும் நெஞ்சைச் சுழலவிடும் எனஉணரின்
மட்டிறைக்கும் சோலை மலைச்சாரல் நண்ணேனால்!

பஞ்சுறங்கும் நூலைப் பழிக்கும் சிறுநுசுப்பில்
நெஞ்சுறங்கும் என்றன் நினைவுறங்கு மெனவுணரேன்
நெஞ்சுறங்கும் மென்றன் நினைவுறங்கு மெனவுணரின்
மஞ்சுறங்கும் சாரல் மலையருவி நண்ணேனால் !

## தோழி வரைவு கடாயது

மின்னைப் பழிக்கும் அயில்வேல்
கொடுநீ மிகையிருளில்
தன்னை நினைந்து தனிவழி
வாரல்! தகவுடையாய் !
என்னை யினிநா னியம்புத
லோத மெழுந்தசையப்
புன்னைச் சிறுமுகை முத்தெனத்
தோன்றும் பொழிலகத்தே.

சுறவு வழங்கும் இருங்கழி
நீந்தித் துடியிடையாள்
உறவு வழங்கும் ஒருசுவை
நச்சல்! உரவுடையாய்!
புறவு முழுதும் அரும்பறப்
பூக்கப் புதுமலரில்
நறவு துளிர்க்க அளியின
மூழ்கும் நறும்பொழிலே

சிலர்வாய்ச் சிலர்வாய்த் தனிமொழி
யாகிச் சிறப்பறியாப்
பலர்வாய் அலராய் மலர்ந்திட
வாரல் ! பனிமலையால்

---

நுசுப்பில் - இடையில், மஞ்சு - மேகம், அயில்வேல் - கூரிய வேல், வாரல்-வராதே, ஓதம்-அலை, சுறவு-சுறுமீன், இருங்கழி- கரிய கழி, நச்சல் - விரும்பாதே, புறவு - காடு, அளியினம் - வண்டினம்.

புலரா மணலில் அலவன்
    விரல்கள் புதைதடத்தை
மலரின் இதழால் மறைத்திடும்
    ஞாழல் மலிவிடத்தே.

### இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னெஞ்சிற்குக் கூறியது

வேய்தரும் இசையை நுட்ப
    வினைவலான் இசைக்கப் பக்கல்
தோய்விலாச் செவிடன் கேட்டுச்
    சுவைபெற வியலா தென்ன
நோய்தரு மவன்றான் வேலி
    நோக்கியே நின்றா னேனும்
வாய்திறந் துரைகள் பேசும்
    வகையின்றிக் கிடக்கின் றேனால்

புதுப்பெயல் வருதல் கண்டும்
    புகுந்தாடும் வேட்கை மிக்கும்
விதிர்ப்புற்றுத் தயங்கு கின்ற
    வெப்புநோ யாளன் போல
விதுப்புறும் அவன்றான் அந்த
    வேலியின் புறத்தா னேனும்
மதுப்படும் மார்பின் மூழ்கி
    மகிழ்ந்தாடும் வகையில் லேனால்.

முன்னுழை திருடன் கையில்
    மூரித்தேள் கதுவத் தன்னின்
பின்னுளான் றனக்கும் கூடப்
    பேசிட முடியா மைபோல்

அலவன் - நண்டு, ஞாழல் - ஒரு மரம், வேய் - புல்லாங்குழல், பெயல் - மழைநீர், விதிர்ப்புற்று - நடுக்குற்று, வெப்புநோய் - காய்ச்சல், விதுப்பு - விருப்பு, மூரித்தேள் கதுவ - வலிமையான தேள்கொட்ட.



என்னுடன் உறைவா ளேனும்
    என்னுயிர் அனைய தோழி
தன்னுடன் பேசித் துன்பம்
    தவிர்க்கவும் வகையில் லேனால்.

### வரைவு நீட்டித்தவழித் தோழி இயற்பழித்தாளாகத் தலைவி இயற்பட மொழிந்தது

தந்ததென்ன துன்பமின்றித்
    தலைவர்நந் திறத்தெனா
நொந்துநொந்து கூறலந்த
    நோய்மைதா னங்காதலர்
தந்ததென்னி னேற்றமைந்து
    தாங்குகின்ற இன்பமெற்
கிந்தநாளி லுயிர்தளிர்க்கு
    மேதுவென்ப தறிதியால்.

மண்ணிழிந்து செல்வதான
    மாயநீரில் அறிவெனும்
கண்ணிழந்து மேயவந்த
    கலக்கமென் றுரைத்தியால்
விண்ணிழிந்து பொழிவதென்ன
    விழியிழிந்து பொழியினும்
உண்ணெகிழ்க்கு நாடனட்
    புயர்ந்ததென்ப தறிதியால்.

நவ்வியொன்று தேடிவந்து
    நகைமொழிந்து வினவுவான்
செவ்விகண்டு நாம்நகைக்கச்
    சேர்ந்ததிந்தத் துன்பெனா
எவ்விடத்து மேசொலற்க
    இனியநெஞ்சி லுறைபவன்
செவ்விகாணு மறிவுனக்குச்
    சிறிதுகூட வில்லையால்

உண்ணெகிழ்க்கும் - உள்ளத்தை நெகிழ்விக்கும், நவ்வி - மான், செவ்வி - தன்மை.

### தலைமகள் பொழுது கண்டழிந்தது

அல்லிமலர் இதழ்விரிய,
அரும்பவிழ்ந்து கொடியாட
அடியில் லாத
நெல்லரியும் அரிவாள்போல்
நிலவின்கீற் றெழுந்தாட,
நிரல்ப டாத
பல்லியத்தின் முழக்கமெனப்
பறவையினம் முரசுசெயப்
பகலும் மாய
எல்மறையும் மறைவதனால்
எவனெஞ்சே நீமயங்கி
இருக்கு மாறே.

அருங்கானில் ஆவினங்கள்
அறுகருந்திக் கழுத்துமணி
அதிரச் செல்ல,
இருங்குஞ்சிக் கோவலன்வாய்
எழுப்புமிசை பரந்தொழுக,
இழையைப் போலும்
மருங்கசையு மடவார்கள்
மனைதோறும் விளக்கேந்தி
மாடம் சேர்க்க,
சுருங்குகதிர் கடலொழியச்
சுழன்றுசுழன் றெவனெஞ்சே
சோரு மாறே.

நிரல்படாத - ஒழுங்குபடாத, பல்லியம் - இசைக் கருவிகள், முரசுசெய - பேரொலி செய்ய, எல் - ஞாயிறு, அறுகு - அறுகம்புல், இருங்குஞ்சி - கரிய தலைமுடி, கோவலன் - முல்லைநில ஆயன், மருங்கு - இடை.



வலைகவரும் மீனேற்றி
வருகலங்கள் துறைதோறும்
வந்து நிற்க,
விலைகூறும் நுளைச்சியர்கள்
வீதிதொறும் வீதிதொறும்
விளிஎ ழுப்ப,
மலையேறி விழும்பரிதி
மறைவதனா லிருள்பரவ,
மறித்து வீழும்
அலையாறிக் கடலவிய
அலமரலுற் றெவனெஞ்சே
அலையு மாறே.

### காம மிக்க கழிபடர் கிளவி

கடலலையில் வருகயல்கள்
கரையிலுனக் குணவுதர
[1]மடலவிழும் முடத்தாழை
மரமுறங்கு மிளங்குருகே!
படர்நலியத் தனியிருந்து
பனியருவி விழிபொழிய
இடர்வழங்கு மவருணர
இயம்பலுனக் கரிதலவே

கலங்கள்-மரக்கலம், துறை - துறைமுகத்தில் நிறுத்துமிடம், நுளைச்சியர் - நெய்தல் நிலப்பெண்டிர், விளி - மீன் விற்கும் ஒலி, மறித்து - தடுக்கப்பட்டு, அலையாறி - அலைகள் ஓய்ந்து, அலமரல் - மனச்சுழற்சி.

1. முயற்சியின்றி அலைதந்த கயலையுண்டு, உயர்ந்த மரத்தை நாடாது தாழ்ந்த முடத்தாழையில் உறங்கும் முயற்சியில்லாக் குருகாதலின் நீ எனக்கு உதவாய் என்பது குறிப்பு.

[1]விரிமலரில் உறைநறவம்
விரும்பிநனி யருந்தியயற்
பெரியமரச் சிறுகிளையிற்
பிரசமிசை விழிவளரும்
கரியநிறச் சிறையளியே
கனலினிடை யுறையுநிணம்
இரிந்துருகு மெனவுருகும்
எனதுநிலை சொலலரிதோ

[2]பறவையுணும் சிறியகயல்
படர்முட்கள் விரிகின்ற
நிறமலரின் புதையுண்ண
நிலவிவரும் புலவுமணம்
அறவொழியும் படிமணக்கும்
அடர்புன்னை இரும்பொழிலே
விறலுடையார்க் கெனதுநிலை
வெளிக்கொணரல் நினக்கரிதோ

---

1. நறவத்தை நனியுண்டதால் மயங்கியிருக்கும் நீ என்னிலை உணராய் என்பதும், பெரிய மரத்தில் வாழும் நீ தாழ்ந்திருக்கும் எனக்கு உதவாய் என்பதும், அளியென்ற பெயர் தாங்கியும் இரங்குகின்றாய் அல்லை என்பதும், அயலில் யான் துயருழக்க அதனை யறியாது உறங்கல் நின்பெயர்க்கு இழுக்கென்பதும் குறிப்பு.

2. பறவை யுண்ட மிச்சிலாகிய முள்ளை மலரால் புதைத்து, புலவு நாற்றத்தை மலர் மணத்தால் மாற்றிப் பிறர் அறியாதவாறு மறைப்பதில் வல்ல இரும்பொழிலே நீ என்னிலையை வெளிப் படுத்தாய் என்பது குறிப்பு.

நறவம் - தேன், பிரசம் - தேன்கூடு, அளி - வண்டு, நிணம் - கொழுப்பு, இரிந்து - அழிந்து, புலவுமணம் - புலால் நாற்றம், அற - அறவே.



## தன்னுட் கையாறெய்திடு கிளவி

அந்திவர, மலர்முகத்தில்
அரும்பிவரும் கண்ணீர்முத்
தசைந்து நிற்க,

முந்திவரும் இளந்தென்றல்
மூட்டுமெரி தாளாமல்
முன்னும் பின்னும்

நொந்தழிந்து நடுங்குதியே!
நுடங்குமிளங் கொடியே! யுன்
நோக்க றிந்து

வந்தணைந்து பின்னீங்கும்
வன்கணவன் எனக்கேபோல்
வாய்த்து ளானோ?

தெற்கெழுந்து வருகின்றாய்;
திசைதோறும் திரிகின்றாய்;
செழுங்காக் கண்டால்

புக்கணைந்து தேடுகிறாய்;
போகுமிட னறியார்போற்
புலம்பு கின்றாய்;

எற்கலந்து பிரிந்தான்போல்
இளங்காற்றே! நீயுமோ
ரிரக்க மில்லான்

சொற்குலந்து வாடுதியோ
தோள்தழுவும் வேட்கையினால்
சுழல்கின் றாயோ?

---

கண்ணீர் - கள் + நீர், நுடங்கும் - அசையும், வன்கணவன் - கொடியவன், புக்கு - புகுந்து, எற்கலந்து - என்னைக் கலந்து, சொற்குலந்து - சொல்லுக்காக வருந்தி.

கள்ளுறங்கும் மலர்கொடியின்
கண்ணுறங்கும் ; படர்மரத்தின்
கரிய கோட்டில்
புள்ளுறங்கும் ; விரிநிலவும்
புகைநிறத்து முகிலுக்குள்
புதைந்து றங்கும் ;
நள்ளிரவில் என்கடலே
நடுங்குகுரல் எழுப்புகிறாய் !
நலங்க வர்ந்தே
உள்ளுறையும் ஒருவனை
ஒருவினனே என்னைபோல்
உளம்ப றித்தே.

## வெறியாட்டயர்ந்துழித் தோழி அறத்தொடு நின்றது

[1]கூனல் நுதலி நலமழியக்
கூர்வேல் முருகே முதலென்போய்
ஏனல் காக்கும் மலைக்குறவன்
எய்த கவண்தன் குறிதப்பி
மானின் மருமம் பட்டதனால்
மயங்கும் மயக்கை மட்டொழுகும்
வானல் அருவி நீர்போக்கும்
மலையும் கேட்கப் பாடுவையோ !

---

கோட்டில் - கிளையில், ஒருவினனே - நீங்கினனே, என்னைப் போல் - என் தலைவனைப்போல், ஏனல் - தினைப்புனம், மட்டு - தேன், வானல் அருவி - தூய நல்ல அருவி.

*1.* மலைக்குறவன் எய்த கவண் குறிதப்பி மானைத் தாக்கி மயக்கத்தை உண்டாக்க அம்மயக்கத்தை அருவிநீர் போக்கினாற் போல, 'முருகால் விளைந்தது இவள் நோய்' என்று நீ கூறிய குறிதப்பிய சொல்லால் மயங்கி நிற்கும் இவள், நீ மலைநாடன் கேட்கப் பாடுவையேல், அது கேட்டுத் தலைவன் வர மயக்கொழிவாள் என்பது உள்ளுறை.



[1]ஒளியும் நலமும் ஒருங்கேக
ஒளிவேல் முருகே முதலென்போய்
அளியுண் டேறல் நனியுண்ண
அறிவு மயங்கும் இருங்கடுவன்
கிளியின் அலகைக் கோவையெனக்
கிள்ளும் ; அலகாற் கிளிகொத்தத்
தெளியும் ; உணரும் ; உளம்நாணும்
சிலம்பும் கேட்கப் பாடுவையோ !

[2]பிறைபோல் நுதலின் கவினழியப்
பெரியோன் முருகே கரணியமென்
றறையும் முதுவாய் வேலாநீ
அடரிய சோலை இருளூடே
நறைசேர் பிடவம் இதழ்விரிய
நள்ளிருள் விண்மீன் எனத்தேறி
சிறைசேர் கூகை குரல்காட்டும்
சிலம்பும் கேட்கப் பாடுவையோ !

---

*1.* தேனுண்ட மயக்கில் கடுவன் கிளியின் அலகைக் கோவைப் பழமென மயங்கினாற் போல வேல! வெறியேறிய மயக்கால் இவள் நோய் முருகால் விளைந்ததென மயங்கினை என்பதும், கிளி கொத்தியதால் கடுவன் தன்னுணர்வு பெற்றாற் போல நீ சிலம்பு கேட்கப் பாடின், சிலம்பன் வரத் தன்னுணர்வு பெறுவாய் என்பதும், கடுவன் தன் செயற்கு நாணினாற் போல தலைவனால் விளைந்ததே இவள் நோய் என்பதை அறிந்து நாணுவை என்பதும் உள்ளுறையாகும்.

*2.* சோலையின் செறிவினால் இருள் ஏற்பட அதனிடையே பிடவம் மலர, அதனை விண்மீன் என மயங்கிய கூகை இரவு வந்துவிட்டது எனக் குரல் காட்டினாற் போல இவள் நோய் எற்றினான் ஆயிற்று என்பதனை ஆராயாது முருகால் நேர்ந்தது என மயங்கிக் கூறினாய். நீ சிலம்பன் கேட்கப் பாடுவையேல் அவன்வர உண்மை விளங்கும் என்பது உள்ளுறை.

நறை - தேன், பிடவம் - ஒரு மலர்.

**அருளாழி :** குழலி என்மனம் குழப்பமிக் குளதால்!
எழலே விழைந்தனென்; இருத்தல் விழைகிலேன்;
நாரொன் றுளத்தாய் நல்விழிக் குணவா
வேறொன்று காணவும் விழைந்தில தென்மனம்;
போதல் புரிவோம்; பொன்மலர்க் குழலாய்
ஆதலும் அதுவே யாதலைத் தெளிந்தே.

ஆசிரியப்பா வரி : *122*
இசைப்பாடல் 28 × 4 : *112*
மொத்த வரி : *234*

---

எழல் - எழுதல், நார் - அன்பு.



# முதல் அங்கம்

## மூன்றாம் களம்

**இடம் :** *ஆற்றங்கரை செல்லும் வழி.*
**உறுப்பினர் :** *குழலி, பெண்டிர் (நீராடச் செல்லல்)*
**நேரம் :** *புலர்காலை.*

பெண் க : அங்கும் இங்கும் அலைந்த குழந்தை
எங்கும் தேடி இறுதியில் அன்னையின்
தோளிற் கிடந்து துவளுதல் போலக்
கால்பொர அலைந்த கருமுகிற் கூட்டம்
மலையின் தோளில் நிலைபெற் றுறங்கும்
கலையைக் காணவிக் கண்கள் போதா!

பெண் உ : விண்ணின் இழிந்த வெண்முகிற் கூட்டமோ
பண்ணின் திறங்கொடு பாறையின் இறங்கி
அருவிப் பெயரான் அழைக்கப் படுவது!

பெண் ங : வெருவிப் பதுங்கும் வெண்முயல் தாவுதல்
கலிப்பாட் டோசையைக் காட்டுதல் அறிக!
புலிப்பெயர் மரப்பூப் பொன்னிறம் காண்க!
வெடித்துச் சிரிக்கும் வெண்மலர்க் கொத்தை
ஒடித்துக் கடுவன் உவப்பொடு மந்திக்குக்
கையுறை கொடுத்தல் காண்மின்! காண்மின்!

குழலி : எய்யுறை இல்போல் இருங்கனி கிடக்கும்
நறும்பலா மரவடி நன்னுதால் காண்க!
விரும்பலா மனத்தையும் விழைவுறச் செய்யும்
பெருந்தேன் அடைகள் மரக்கிளைப் பிறங்குதல்

---

*கால் பொர - காற்று மோத, கலையை - அழகை, வெருவி - அஞ்சி, புலிப்பெயர் மரம்-வேங்கை மரம், எய்யுறை இல்போல்-முள்ளம்பன்றி தங்கும் வீட்டைப்போல.*

திருந்திழை மகளிர்முகம் பொருந்தாமை நாணிக்
கான்றொளி மழுங்கிக் கறுத்துக் கிளைதொறும்
ஞான்றுகொள் மதியெனத் தோன்றுதல் அறிக!

**பெண் க:** மீனென்று விழியினாய்! மிரளும் பிணைக்குப்
புல்வாய் புல்வாய்ப் பொருத்தி ஊட்டலும்,
வாயினுள் இரையை வளர்பார்ப்புக் கூட்டித்
தாயினுள் சுரக்கும் தாவிலா அன்பை
எடுத்துக் காட்டலும் இறும்பூ துடைத்து;
தொடுத்துக் கட்டிய தொடையலீ தென்னக்
கொத்தாய் மலர்ந்த குறுமலர் காணின்
பித்தா யாவதே பெரிதும் இயற்கை!

**பெண் உ:** கயற்கணால் நோக்கியும், அலைக்கை வீசியும்,
செயற்படு தாளச் சீரொடு நடந்தும்
மெல்லக் குதித்தும், விரைவுட னிழிந்தும்,
பல்மலர் ஆடையைப் பாங்குற அணிந்தும்,
கருதும் துறையைக் கவினுற விளக்கியும்,
வெருவா தமைதி விளங்கத் தோன்றியும்,
நெளிந்தும், வளைந்தும், நிமிர்ந்தும், கண்படாது
ஒளிந்தும், தோன்றியும் உருக்கரந் தொடுங்கியும்,
நடந்தும் படர்ந்தும், நல்லவர் உளத்தைக்
கடந்தும் ஓடுமிக் கானாறு தெரியின்
வேத்தியல் பொதுவியல் ஆமென விளங்கும்
கூத்தியல் வல்ல குமரியென் றுரைப்பர்!

**பெண் க:** தடங்கணீர்! நாட்டின் தாவிலா வளத்தைத்
தொடங்குக பாட்டில்; தூமொழி! நீதான்

---

கான்றொளி - கான்ற+ஒளி, வெளிப்படுத்திய ஒளி, ஞான்று கொள் மதி - தூக்கிட்டுக் கொள்ளும் மதி, பிணை - பெண் மான், புல்வாய் - ஆண் மான், புல்வாய்ப் பொருத்தி - புல்லைவாயிற் பொருத்தி, இறும்பூது - வியப்பு, தொடையல் - மாலை, கருதும் துறையை - நீர்த்துறையை, அகப்பொருள் புறப்பொருள் துறையை, கடந்தும் - வெற்றி கொண்டும், வேத்தியல் - அரசர்க் காடும் கூத்து, பொதுவியல் - பொதுமக்கட்காடும் கூத்து.



மலையின் வளத்தை மறக்கிலாத் தென்னிசைக்
கலையின் விளங்கக் காட்டுவாய் தோழி!

**பெண் : உ** நெல்லிருக்கும் தேனிருக்கும் நீரிருக்கும் நீலமணிக்
கல்லிருக்கும் இங்கா? கலியிருக்கும்—பல்லுயிர்க்கும்
வாழில் எனவிளங்கி வற்றா வளங்கொழிக்கும்
ஏழில் மலையிஃதென் பேன்.
சாந்த மிருக்கும்; சரிவில் தினையிருக்கும்;
ஏந்து கிளையில் இனிய கனியிருக்கும்:
பூந்தாது புக்காடிப் போகாத வண்டிருக்கும்;
ஈந்தும் குறையாத எண்ணில் வளமிருக்கும்;
ஏலம் இருக்கும்; இருங்கறியின் நல்விளைவால்
ஞாலம் விலைபேச நல்ல பொருள்குவிக்கும்;
வேண்டாமை வாய்த்த விழுப்புகழோர் பாட்டிலெலாம்
தூண்டா விளக்காய்த் துலங்கிப் பொலிந்திருக்கும்;
தாழில் புகழைத் தனக்கே உரிமைகொளும்
ஏழில் மலையிஃதென் பேன்.

**பெண் க:** கார்நறு நீலக் கண்ணாய் யாற்றின்
நீர்க்கொடை ஏற்றி நீயொன்று பாடித்தை;

**குழலி:** [1]மேனிலத்தி னெப்பொருளும் மேவுமேல் நின்னைவந்து
தாழ்நிலத்துக் கொண்டுய்க்கும் தன்மைகண்டும்—வானிலத்
நீரேற்றி மாந்தர் நெறியேற்ற லால்யாறே [தில்
ஊரேற்றிப் பாடும் உவந்து.

---

ஏழில்மலை - துளுநாட்டில் உள்ளதொருமலை, கலி - வறுமை, சாந்தம்-சந்தனம், ஏலம்-ஏலக்காய், கறி - மிளகு, தாழில் - தாழ்ச்சியில்லாத, பாடித்தை - பாடுவாயாக, கழியவவால் - பேராசையால்.

1. தன்னைச் சேர்ந்த மேல்நிலைப் பொருள் எதனையும் தாழ்நிலத்தில் கொண்டு தள்ளும் இயல்புடையது ஆறு ஆதலின், இதில் நீராடும் மேற்குடிப் பிறந்த குழலியையும் பழிவயப்படச் செய்து அழிக்கப் போகிறது என்பது குறிப்பு. வானிலத்தில் - (வால்+நிலத்தில்) நல்ல நிலத்தில்.

[1]கழியவவால் கெண்டை கருதியமீன் கொத்தி
சுழியிழுத்துக் கொள்ளவுயிர் சோர—எழிலிதரும்
வெள்ளநீ ரேந்தி விரிந்த பசிப்பிணியைத்
தள்ளும்நீ எங்கள் தலை.
[2]கோடிரியும் தீம்பழத்தைக் கொள்ள வருகயலை
மாடிருக்கும் பாம்பின் வயிற்றுணவாத்—தேடிநிதம்
ஆக்கவரும்நீ அலவோ உயிர்க்குலத்தைக்
காக்க விழைந்தாய் களித்து.

பெண் ௧: களையா மலர்க்குழல்! கறையிலாப் பண்ணில்
வளையாச் செங்கோல் வாய்மைநீ பாடித்தை;

பெண் ௨:

### தரவு

செக்கர்வான் ஞாயிற்றைச் செழுமலர்கள் நோக்குநல்போல்
மக்களெல்லாம் அறந்திரியா மன்னன்கோல் நோக்குவ
வானேக்கி நோக்கி வளருமுயிர் குடியெல்லாம் [ரால்;
கோனேக்கி வாழ்கின்ற குறிப்புடைய என்பரால்;
சிறைவளராப் பார்ப்புகள் தாய்ச் சிறையொடுங்கல்
[போற்குடிகள்
குறைவளராச் செழுங்கோலின் குளிர்நிழலி
[லொடுங்குவவால்;
வளிசூழ்ந்து வையகத்தை வழுவின்றிக் காப்பதுபோல்
களிசூழ்ந்து குடியுயரக் காப்பதுகோல் என்பரால்;

---

1. யாறு மீனைக்காட்டி மீன் கொத்தியின் மனத்தில் ஆசையை வளர்க்கச் சுழியிருப்பதை யறியாத மீன்கொத்தி மீனைப் பற்றப்போய்ச் சுழியிற்பட்டு அழிந்தாற்போல மாவின் பசுங் காயைக் காட்டிக் குழலிக்கு ஆசையைத் தோற்றுவித்து அழிவிக்கப் போகிறது என்பது குறிப்பு.

2. பழத்தைக் கதுவவரும் அவாவினுல் கயல் அயலில் இருக்கும் பாம்பை யறியாது வந்து அதற்கு உணவாகி அழிந்தாற்போலக் குழலியும் பசுங்காய் தின்னும் அவாவினுல் அண்மிய தீவினையை அறியாது அழியப் போகிருள் என்பது குறிப்பு.

சுழி - நீர்ச்சுழி, எழிலி - மேகம், கோடிரியும் - கோடு + இரியும், கிளையிலிருந்து நீங்கும், மாடு - அயலில், பார்ப்புகள் - குஞ்சுகள், சிறை - சிறகு, ஒடுங்கல் - தங்குதல், வளி - காற்று.



### தாழிசை

பசியும் பிணியும் படராது புறம்போட்டி
வசியும் வளனும் வளர்க்குந்தாய் நீயலையோ?
சான்ருண்மை என்னும் தகைமை வளர்ந்தோங்கத்
தோன்ருந் துணைச்செவிலி எனத்துணிதல் வியப்பாமோ?
அன்னடையைப் போக்கி அறிவுறுத்தி மக்கள்குல
நன்னடையை நல்குவிக்கும் நற்றந்தை நீயலையோ!
அறமும் தவமும் அரசோச்சும் படியுதவுந்
திறமும் உனதென்ற சீர்த்தி யறிந்திலமோ?
துன்ப விருள்ஒட்டித் துலக்கமுற எத்திசையும்
இன்ப ஒளியேற்றும் எழிற்பரிதி நீயலையோ!
அல்லன வெல்லாம் அழித்துப் புதுக்கிப்பின்
நல்லன வாக்குதலால் நடுப்பொருளும் நீயலையோ?
எனவாங்கு, (தனிச்சொல்)

### சுரிதகம்

எனப்பல வாறு நினைப்புகழ்ந் தேத்திய
செம்மொழி எல்லாம் செவிவழிப் படர
எம்மனக் கட்டிலில் ஏற்றி வைத்துளேம்;
அருந்தொழிற் படுமுன் ஆற்றலெம் புலக்கோர்
விருந்தென மருட்டும்; வீவிலா துலகைக்
காக்குநீ வாழியர் என்பேம்—
ஆக்கம்நீ உலகுக் காதலைத் தெளிந்தே.

பெண் ௧: ஆடியைப் போல அலையிலாப் புனலில்
கூடிக் குடைந்து குளித்திட வம்மின்!

குழலி: பூவும் பிஞ்சும் பொருந்திக் குலுங்கும்
மாவினைச் சூழ்ந்து மற்றெங்கும் காணுக்
கட்டும் காவலும் மிகுந்து காணுதல்
மட்டும் எனக்கு மட்டுப் படவிலை!

பெண் ௧: அரசர்க் குரிய அருமா வாதலின்
விரைசெறி குழலாய்! விதித்துள திவ்வணம்;

---

புறம்போட்டி - புறம்பு + ஓட்டி, வசி - மழை, அன்னடை - (அல் + நடை) தீயொழுக்கம், சீர்த்தி - மிகுபுகழ், நடுப்பொருள் - இறைவன், அல்லன - தீயன (குறிப்பு வினையாலணையும் பெயர்), புலக்கு - அறிவுக்கு, வீவிலாது - அழிவிலாது, ஆடி - கண்ணுடி.

நீரிடை வரினும் நிலத்திடைக் கிடப்பினும்
யாருமம் மரப்பொருள் எடுத்தல் செய்யார் ;
அறியினும் அறியா தெடுப்பினும் எடுப்பார்க்
குரியது கொலேயெனல் ஊரெலாம் அறியும் ;
மன்னற் குரியவை மற்றவர் கவர்தல்
பொன்னுதால் இங்கே பொறுக்கிலாக் குற்றம்
எனவே நறுமா இன்கனி காய்வரு
முனமே விலகி முழுகுதல் நம்கடன் ;

*[நீரில் இறங்கி ஆடுகின்றனர். குழலி கையில் மாங்காய் ஒன்று அகப்படுகிறது. அவள் மற்றவர்களை விட்டுச் சிறிது விலகிச் சென்று]*

**குழலி :** *(தனிமொழி)*
அடுக்களைக் கிணற்றில் அமுதமெழுந் தாலென
என்கைக் கேனிப் பசுங்காய் எதிர்ந்ததோ !
உண்கை தீதென உரைத்துள் ளனரே !
சூலுறு மகளிரைச் சொல்லொணு வேட்கையால்
மாலுறுத் துவ்திம் மாவின்கா யன்ரே ?
வயவுறு மெனக்கு வாய்த்த புதையலேச்
செயலறி கில்லேன்; சேய்மையர் உணரின்
தீங்காய் விடுமெனத் தெரிவையர் தெரித்தன
நீங்காது செவியில் நின்றுகுரல் கொடுக்கும் ;
விடுத்தலும் இயலேன் ; விழைவினுல் வாயில்
மடுத்தலும் இயலேன் ; கிணற்றினுள் வீழ்ந்த
குழவியை எடுப்பதா? கொல்லெரி சூழ்ந்த
மழலேயை எடுப்பதா ? மயங்குமோர் தாய்போல்
வயவவா ஒருபால் மன்னவன் ஆணே

---

மரப் பொருள் - மரத்தின் பொருள், முழுகுதல் - நீராடுதல் என்பதோடு குறிப்பாக, குழலியின் வாழ்வே மூழ்கப் போகிறது என்பதையும் காட்டுகிறது. உண்கை-உண்ணுதல், மாலுறுத்து-மயக்கப்படுத்தி, வயவுறும் - சூலுறும், செயலறிகிலேன் - செய்வதறியேன், மடுத்தலும் - உண்ணலும்.



செயல்எனத் தடுத்துச் சீறுவது ஒருபால் ;
எதுநான் துணிதல் என்றறி யாமல்
மதுவாய்ப் பட்டாரின் மயக்கம் கொண்டுளேன் ;
பிறரறி யாமலிந் நறுமாத் திரள்காய்
ஒருசிறை சென்றுயான் உண்பனேல் ஏதம்
உறவரு மாறிலே !

*(உண்ணுகிருள்)*

ஒ ! இப் பசுங்காய்ச்
சுவைதான் எத்தனே !

*(நீரினுள் மூழ்கி அவள்முன் எழுந்த ஒருத்தி இதனைக் கண்டுவிடுகிருள்)*

**பெண் உ :** அறியாச் சுடரிழாய் !
நவைதான் செய்தனே ! நறுமாப் பசுங்காய்
உண்ணுதல் ஒழிமதி !

**பெண்டிர் அனைவரும் :** உண்ணுதல் ஒழிமதி !

*(அயலில் நின்ற காவலருள் ஒருவன் இதுகேட்டு)*

**காவலன் க :** 'உண்ணுதல் ஒழிமதி ! உண்ணுதல் ஒழிமதி !'
என்னும் பேரொலி எழுந்தது வா ! வா !

*[இருவரும் குழலிவாயில் காயிருப்பதைக் கண்டு விடுகின்றனர்]*

**காவ உ :** அன்னையீர் ! இங்ஙனம் அரசின் ஆணையைக்
கொன்னே மீறிய குற்றம் புரிந்துளீர் ;
ஆதலின் மன்னவன் அரண்மனைக் கெழுக !

**பெண் உ :** தீதென அறியாப் பேதை யயலவள்
குறியாது செய்தவிக் குற்றம் பொறுக்க !

**காவ க :** பொறுத்தலும் ஆய்ந்து புரைதென் படுமேல்
ஒறுத்தலும் வேந்தர்க் குரிய எம்மல ;

---

செயலெனல் - செய்யாதே என, நவை - குற்றம், ஒழிமதி - ஒழிவாயாக, குறியாது - திட்டமிடாது, புரை - குற்றம், ஒறுத்தலும் - தண்டித்தலும், எம்மல - எமக்குரியனவல்ல.

உரைப்பவை எல்லாம் அவையிடை உரைப்பீர் !
சிறைப்பட் டீர்யாம் செய்வதொன் றிலமே.

| | | |
|---|---|---|
| ஆசிரியம் | வரி | —100 |
| வெண்பா 4 | ,, | — 16 |
| பஃறொடை வெண்பா 1 | ,, | — 10 |
| கலிப்பா 1 | ,, | — 25 |
| | | 151 |

---

# முதல் அங்கம்

## நான்காம் களம்

**இடம் :** நன்னன் திருவோலக்கம்.
**காலம் :** முற்பகல்.
**உறுப்பினர் :** நன்னன், மிஞிலி, மோசிகீரனுர், அவையோர், மக்கள்.

*[காவலன் உள் நுழைந்து]*

**காவலன்:** மண்கா ணத்தன் வடிவே லுயர்த்திய
கொண்கா னத்தின் கொற்றவ வாழி !
வசையிலாக் கொற்றம் வாழியர் ! நின்பால்
நசையிலாப் பகைவர்க்கு நன்கா டருளிய
கொடையின் மூத்த கொள்கைய வாழி !
நடையின் வழுவா நன்னர்கோ வாழியர் !
காசிலா ஆணையைத் தூசென மதித்து
ஆசில் நறுமா அயின்ரு ளொருத்தியைக்
காவலர் வாயிலிற் கடுகிக் கொணர்ந்துளர்
ஏவல் யாது ?

**நன்னன் :** தருக விவணவள் ;
[உள்ளே வந்ததும்]
மாவின் காயை மடுத்ததும், மடுப்பின்
சாவினைத் தரூஉம், என்னுமெம் மாணையை
அறிந்துள் ளமையும், ஆர்நீ என்பதும்
செறிகுழல் ! மொழிக !

**குழலி :** சிறியவிப் பசுங்காய்
உண்டதும், உண்டார் ஒறுத்தலுக் குரியார்
என்றலும் அறிந்தயான் இவ்வினை புரிந்ததும்
மெய்யே ;

---

*மண் காண - பிறர் மண்ணை வெற்றிகாண, கொண்கானம் - துளுநாட்டின் மற்ருெரு பெயர், இன்றைய கொங்கணம்.*

கன்னன்: ஆயினிவ் வுய்யாத் தவற்றைத்
தையாஅல் நீசெயத் தக்கவோர் கரணியம்
அறிதல் விரும்பினென் அவையிடைக் கூறுக!

குழலி: மறிதல் இல்லா மனப்படும் ஆசையால்
குற்றம் புரிந்ததே யல்லால் மன்னவன்
கொற்றம் பழிக்கும் குறிப்பினே னல்லேன்;

மிஞிலி: (தனக்குள்)—(குழலியை உற்றுநோக்கி அடையாளம் கண்டுகொள்கிறான்)
'எயினன் மகளிவள்! எவ்வணம் வந்தனள்?
செயிர்புரிந் ததனால் சிறைப்பட் டுள்ளாள்;
குழலியுன் றந்தை கொடுத்த பரிசெனும்
அழலினும் நெஞ்சில் அவியா துளது;
விசைபடு சுருள்வாள் வீச்சின் றழும்புகள்
தசையிற் கிடந்து தணலாய் எனைச்சுடும்;
மணம்பட விரும்பாது மறுத்தநீ இன்று
பிணம்பட வந்துளாய்; பிழைப்புக் கெல்லாம்
அறுவடைத் திருநாள் அல்லவோ இன்று!
செருவிடைத் தோற்றேன்; சிறுமகள் உன்னைக்
கறுவினால் அழிக்கும் கருத்தில் தோற்கிலேன்;
என்பால் உறவெனும் இழையை அறுத்தனை;
உன்பால் உடலுயிர் உறவினை அறுப்பேன்!
[வெளிப்படையாக]
கொற்றம் பழிக்கும் குறிப்பிலை என்றால்
மற்றவர் கூறியும் மதிக்கா திதனை
இழைத்தது தானென்? எதையோ கூறிப்
பிழைத்திடல் எண்ணும் பேதைமை விடுக!
மனப்படும் ஆசை எனச்சொலு மதனைக்
கனப்படு குழையாய்! கழறுக அவையில்;

---

*மறிதல் - சாதல், இஃது இப்பொருட்டாதலை அரிச்சந்திர புராணம், மயான - 38ஆம் செய்யுளில் காண்க. செயிர் - குற்றம், செருவிடை - போரிடை, கறுவினால் - மனவைரத்தினால், கொற்றம் - அரசு, கனப்படுகுழையாய் - திரண்ட காதணியை அணிந்தவளே.*



குழலி: பெண்பா லார்கள் நாணும் பேச்சினை
வன்பால் அவையிடை வளர்த்துக வென்றல்
நாணுதும்; அதற்கா நல்கும் எதனையும்
பூணுதும்; பெரியீர் பொருந்துவது செய்க!

கன்னன்: வாட்படை மறவ! வருந்துவ துரையல்!
சேட்படு நாட்டவர் சிரிப்பிற் கிடனா
அன்னைக் குலத்தவர் நன்னன தவைக்கண்
இன்னணம் கூறி இகழ்ந்திடப் பட்டார்
எனலியாம் அஞ்சுதும்; இசைவிளங்கு கற்புக்
கனலியர் வெருவுவது கழறா தொழிமதி!
அன்னாய்! இவன்சொற் கலமரல் ஒழிக!

மிஞிலி: மன்னர் மன்னவ! என்பிழை பொறுக்க!
'சற்றும் இவளை நம்புதல் சரியிலை
ஒற்றாய்ந்து செல்லும் ஒழுக்கினள்' எனநம்
ஒற்றர் சிலர்வந் துரைத்தனர் நம்பால்;
ஊரும் பேரும் உரையாது கரப்பின்
ஆரும் இவள்பால் ஐயமே கொள்வர்;

கன்னன்: மின்புரை இடையாய்! மேயவிக் கூற்றுக்
கென்னுரை இறுத்தி?

குழலி: இசைசால் கொற்றவ!
வானவர் நகரென வையகம் போற்றித்
தேனமர் மலரின் திகழ்தரு வஞ்சியில்
அரும்பொருள் வணிகன் அருமகளை யாகி
வரும்பொருள் அறியாது வழக்காட் பட்டுள
என்பெயர் தாமரை என்னுவர்; இசைமிகு
மன்பெரு வெள்ளணி கண்டு மகிழ்வுற

---

*கழறுக - கூறு, வன்பால் - சொற்கடுமையினால், உரையல் - கூறாதே, சேட்படு நாட்டவர் - தொலை நாட்டவர், எனலியாம் - (எனல்+யாம்) என்று கூறுவதையாம், அன்னாய் - அன்னை போன்றவளே, அலமரல் - மனஞ்சுழலல், தேனமர் - வண்டுகள் விரும்பும், மலரின் - மலரைப் போல, வெள்ளணி - (அரசனின்) பிறந்தநாள் விழா.*

நின்னகர்ப் புக்கேம் ; நீரிடைப் பசுங்காய்
தின்னலால் விளைந்த தித்தீவினை

**மிஞிலி :** (இகழ்ச்சியாக) தேமொழி
செம்மொழி புகன்றனை ! சேரர் தலைநகர்
எம்மருங் கினரும் ஏற்றப் படுதலின்
நறவுப் பட்டினம் நானில மக்களான்
வெருவப் படுமென விளக்கநினைத் தாயோ ?
தேனமர் மலரின் யாவரும் விரும்பும்
கோனகர் வஞ்சி எனநீ குறித்ததில்
இந்நகர் நயத்தலை யாவரும் விரும்பார் ;
புன்னகர் இதனிடைப் புகுதல்செய் யாரென
எள்ளிநீ உரைத்தன இருசெவிப் பறையினுட்
கொள்ளிபாய்ந் தாலெனக் கொளுவியது பேதாய் !

**குழலி :** பிறந்த நாட்டின் பெருமையை இங்கே
சிறந்த தென்னச் செப்பிய தல்லால்
இப்பெரு நாட்டின் பெருமையை இழித்துச்
சொற்புனைந்து கூறித் தூற்றும் சிறுமைகள்
என்மனத் தில்லை ;

**மிஞிலி :** எனினச் சிறுமைகள்
என்மனத் தேயுள வெனநீ உரைக்கும்
குத்தல் மொழியின் குறிப்பையும் உணர்கிறேன் ;
பத்துநா றாகப் பாவைநீ பொய்யை
வித்தக மாக விளம்பினும் அவையெலாம்
மணல் வீடாக மண்ணிடைச் சரிதலை
தணல்மொழி ! அறிவை ; தாவிலா மன்னவன்
திருமுன் னிவ்வாறு திரித்துப்பொய் கூறுதல்
வஞ்சி நகரத்து வஞ்சியர்க் குரிய
வாய்மையே போலும் ; மடத்தகாய் ! நாடுகள்
சேய்மைய வெனினும் செறிந்த ஒற்றினால்

---

**புன்னகர்** - தாழ்ந்த நகரம், கொளுவியது - (தீ) பற்றியது, **வித்தகமாக** - திறமையாக, தணல் மொழி - நெருப்புப் போன்ற சொல்லினை யுடையாள், அறிவை - அறிவாய்.



அண்மைய வாய்விடும் அதுநீ அறிகிலை ;
ஆமைக் குலகம் ஆழ்கிண றாகலாம் ;
அரசின் உலகமும் ஆழ்கிண றாகுமோ ?
உண்மைநான் கூறுதல் எனநீ மொழியின்
யாவரும் ஒப்புவேம் எனுமுன் கற்பனை
தீவரும் பஞ்சாய்ச் சிதைதலை அறிவை ;
சுரும்பார் குழலி !

[தன் பெயர் கூறக்கேட்ட குழலி, குனிந்து நின்றவள் அச்சத்தோடு நிமிர்ந்து பார்க்கிறாள்]

துணுக்குறல் எதற்கு ?
விரும்பாச் செயல்பல விளைப்பதற் கென்றே
எயினன் உன்னை ஏவி யுள்ளனன் !

**நன்னன் :** (வியப்போடு)
அயில்வேற் படையாய் ஆரிவள் ? புரிந்தன
எஞ்சாது கூறுக !

**மிஞிலி :** இசைகெழு வேந்தே !
துஞ்சாது தொழிற்படும் துரிசிலா ஒற்றரின்
வந்த செய்தியை வகைப்பட மொழிவேன் ;
தந்த மேனியள் தலைநகர் வஞ்சியைச்
சார்ந்தவள் அல்லள் ; தளரா வெளியம்
சேர்ந்தவள் ; ஆண்டுள சேரர்படைத் தலைவன்
ஆஅய் எயினனின் அரும்பெறல் மகளிவள் ;
போயந் நாட்டிடைப் புக்கவர் மறையெலாம்
கொண்டு வருகெனும் குறிப்போ டுய்த்துளான் ;
மண்டமர்க் கடந்தோய் ! மற்றிவள் நம்மிடம்
தன்பெயர் தாமரை என்றதும் தவறே ;
சுரும்பார் குழலி என்பதிவள் பெயரே ;
கரந்துள செய்தியில் கண்டன விவையினும்

---

புரிந்தன - செய்தன, துஞ்சாது - சோர்விலாது, துரிசிலா - குற்றமிலா, தந்தமேனியள் - தந்தம் போன்ற மேனியாள், மறை - இரகசியம், மண்டமர்க் கடந்தோய் - நெருங்கிச் செய்யும் போரில் வென்றோய்.

கரந்ததெத் தனேயோ ! கண்டறி வார்யார் !
**நன்னன் :** வேற்கணுய் ! இவன்ருன் விளம்பிய வற்றுள்
ஏற்பதற் கியலா திருப்பவை உளவேல்
கூறுதல் உன்கடன் ; ஒன்றுமே கூருது
ஆறுதல் உண்மையை அறியத் துணைசெயா ;
**மிஞிலி :** வாய்மை பிறழ்ந்தவர் வாய்ச்சொல் வீசுதல்
தூய்மையும் அன்று ; துணிதலும் இயலாது ;
கையொடு பட்ட கள்வன் கவிழ்ந்து
நெய்யொடு பட்ட நிமிராத் திரிபோல்
இருப்பது தானே உலகத் தியற்கை ;
ஒறுப்பது புரிந்தாள் ஒன்றும் மொழியலள் ;
செருத்தொழில் வல்லாய் ! செய்வது மொழிக ;
**நன்னன் :** எயினன் மகளென இயம்பினே ; அவளோ
செயிரிலா வாணிகன் சேயென மொழிந்துளாள் ;
ஐயப் படுமா றவள்செய லிருப்பினும்
மெய்யைத் தெளிந்திட மேலும் சூழ்குவம் ;
**மிஞிலி :** கையிடை யிருக்கும் கனியென விளங்குமிவள்
பொய்யுரை உண்மையிற் பொய்யுரை என்பதை
அறிதல்நீ வேண்டின் அறிவு முத்தவோர்
பெரியவர் இவணுளார் ;
**பலகுரல்கள் :** யாரப் பெரியார் ?
**நன்னன் :** எல்வளை இவளை யாரெனக் கூறும்
நல்லவர் யாவர் ?
**மிஞிலி :** நற்றமிழ் வல்ல
மோசி கீரனர் முற்றும் அறிவார் ;
ஆசிலாக் கேள்வி ஆன்றதமிழ்ப் புலவீர் !
ஆவியின் மேலாம் அருந்தமிழ் ஆணையாக்
காவியின் அழகிய கண்ணியிவள் யாரெனல்

*ஆறுதல் - அமைதி கொள்ளுதல், ஒறுப்பது புரிந்தாள் - தண்டித்தற் குரியன செய்துள்ளாள், சேய்-குழந்தை (மகள்), சூழ்குவம் - ஆராய்வோம், எல்வளை - ஒளிபொருந்திய வளையல் அணிந்த குழலி, ஆசிலா - குற்றமிலா, ஆன்ற - மாட்சிமை பொருந்திய. காவியின் அழகிய - கருங்குவளை மலரினும் அழகிய.*



மொழிதல் வேண்டுவென் !
**மோசிகீரனர் :** மூரித் தடக்கையாய் !
(தனக்குள்)
எதுநான் இயம்புவ தெதுநான் விலக்குவது !
எதுநான் செயினு மேதமாய் முடியாது
தீருதல் இல்லை ! தீவினை முதிர்ந்து
சோருதல் செய்திடச் சுற்றிய தம்மவோ !
(வெளிப்படையாக)
இரும்பொறை நாடன் ஒருமக ளென்பதும்,
சுரும்பார் குழலி இவள்பே ரென்பதும்
அறிவேன் ; ஆயினும் ஆயிழை மறையினைத்
தெரிவான் வந்ததாத் தெரித்த வொன்றனை
மனங்கொளத் தயங்குவென் ; மறைதெரி தற்கே
கனங்குழை வந்தனள் என்றும் கருதிலேன் ;
**நன்னன் :** வஞ்சனை யாட்டியின் வழுவிலாப் பொய்யை
எஞ்சலி லாதிவண் இயம்பினீர் நன்றி !
இழுக்கிலா வவையில் இப்பொய் மொழிந்தவள்
ஒழுக்கினைப் புகழும் உந்தம் மொழியினை
மறுத்தலைப் பொறுக்க ! மற்றிவள் கொலையின்
ஒறுத்தலுக் குரியவள் !
**மோசி :** ஒளிறுவாட் பொருபடை
நெடுந்தகாய் ! இந்த நிலத்திடை ஒருவன்
கெடுந்தகை எண்ணின் கிளக்கிலா மருட்கை
தோற்றுதல் கண்டனம் ; துகளிலா அறத்தைப்
போற்றுதல் புரியுநர் பழியினல் பொன்றலும்,
காவா தழித்தவர் கரையிலா இன்பம்
தாவா தெய்தலும், தரையில் ஒரோவழி

*மூரி - வலிமை, இரும்பொறை நாடன் - சேரநாட்டைச் சேர்ந்தவன், தெரிவான் - தெரிவதற்காக, வந்ததா - வந்ததாக, பொறுக்க - பொறுத்துக் கொள்க, கொலையின் ஒறுத்தல் - கொலையினல் தண்டித்தல், கெடுந்தகை - கெடும் தன்மை, கிளக்கிலா - சொல்ல வியலா, பொன்றலும் - அழிதலும், தாவாது - குறையாது.*

நிகழ்ந்திடும் நிகழ்வே ; நெடுவே லண்ணல்
இகழ்தலும் புகழ்தலும் எண்ணு தவற்றின்
மாய்படு தோற்றம் மயக்கிலா தறிவார்
காய்சினம் படாஅர் ; கருதிக் கருதி
உண்மையைக் கண்டவர் உறுத்தவெத் துன்பையும்
எண்மைய வாக எள்ளுவர் ; யானுரை
வாய்மை யொருத்தியின் வாழ்வினைப் பறித்திடும்
நோய்மையை எண்ணின் நோய்க்கென வுண்ட
மருந்தே உயிரை மாய்த்திடல் போலாம் ;
முள்ளை முள்ளால் எடுக்க முயல்பவர்
நெருப்பை நெருப்பால் அவிக்க நினைவரோ !
விருந்தென வந்த வேற்றுநாட் டவளை
ஓம்புதல் புரிந்தில மாயினும் உயிர்க்கொரு
தீம்புநே ராவணம் செய்தல் விழைகுவென் ;

நன்னன் : இரங்கிய நெஞ்சும் இறங்கா அறமும்
பிறங்கினிர் ஆதலின் பெண்ணிவட் காகப்
பரிவுகொண் டுரைத்தீர் ! பழிவே றென்றும்
புரிந்தில ளெனினும் புனல்தரு பசுங்காய்
உண்ணின் தீங்கெனல் உரைக்கக் கேட்டும்
பண்ணிய செயலே பறிப்பதிவள் உயிரை ;

மோசி : ஒறுத்தல் என்பது ஒரேஎ தன்மையாய்
இருத்தல் தகாஅது ; எத்தகு சூழலில்
இழைத்தனர் குற்றம் என்பதை யாய்ந்து
பிழைத்ததைக் கொள்கெனப் பேசும் பொருள்நூல்;
சூழலை யாய்ந்துவே றென்றுகூ றாது
காணலை நயப்பின் கலக்கமொன் றில்லை ;
அறிவும் அவாவும் அடர்த்தெழு மாறல்
அறிவே மிகுதியும் அடியற் றெழிவது ;

மாய்படு தோற்றம் - மறைந்துள்ள தோற்றம், எண்மைய - எளிமைய, எள்ளுவர் - இகழ்வர், நோய்மை - துன்பம், விருந்தென - புதியவளாக, ஓம்புதல் - பாதுகாத்தல், தீம்பு - தீங்கு, இறங்கா - தாழாத, பிறங்கினிர் - துலங்கினீர், காணலை - காணுதலை, நயப்பின் - விருப்பினால்.



அறமும் விதிகளும் ஆயிரம் வகுத்தும்
மறமும் பழிகளும் மண்ணிடை அழிந்தவோ ?
பெண்மக ளாதலின் பேசுதல் நாணி
உண்டற் குரிய கரணிய முரைத்திலள் ;
மண்ணும் சாம்பரும் உண்ணும் பொருளாய்ப்
பண்ணும் வயவுநோய்ப் பட்டவள் ஆதலின்
புனல்தரு புளிமாப் போற்று துண்டனள் ;
எனல்தான் உண்மை இதுநீ காணியர் ;

நன்னன் : குற்றச் சூழ்நிலை கொண்டு தெரியினும் ;
குற்றத்தின் கடுமை குறையுமே யல்லால்
மற்றக் குற்றம் மறைந்துபோ மாறிலை ;
முற்றும் உணர்ந்தீர் ! முறைமையிஃ தன்றோ ?

மோசி : குற்றத்தை நீக்கக் கோரினேன் அல்லேன் ;
குற்றத்தின் கடுமையைக் **குறைத்தலே வேண்டினென் ;**
கொலையின் நீக்கிக் குழலிநிறை பொன்படு
சிலையும், ஒன்பதிற் றென்பது களிறும்,
தண்டம் செலுத்துதும் ; தாவிலாச் சூலுறு
பெண்டென் பதனாற் பிழைபொறுத் தருள்க ;

நன்னன் : ஒருபிழை செய்யின் ஒறுத்தலில் மாற்றம்
தருதல் இயலும் ; தமிழ்வல் லாயிவள்
அறங்கூ றவையிடை ஆயிரம் பொய்சொலித்
திறம்பட நடித்த தீவினைச் செயலும்,
நீர்தரு பசுங்காய் ஆர்தல் விருப்பொடு
பேரர சாணையைப் பிழைத்த செயலும்,
பகைப்புலத் தாளிவள் பற்றார் நாட்டிடைத்
திகைப்புறச் செய்துள தீமையும், நோக்கின்
ஒறுத்தலில் மாற்றம் உவந்திலென் இதற்குப்
பொறுத்தருள் செய்க !

கரணியம் - காரணம், சாம்பரும் - சாம்பலும், பண்ணும் - செய்யும், புனல்தரு புளிமா - நீரிலே வந்த புளிப்புச் சுவையுடைய மாங்காய், போற்றுது - காவாது, காணியர் - காண்பாயாக, உவந்திலென் - விரும்பிலேன்.

**மோசி :** பொன்றாப் புகழோய்!
அறத்தினை வழுவாத் திறங்கெழு நின்மனம்
மறத்தினைச் செய்ய வைத்ததோ தீவினை!
(அவையை நோக்கி)
பற்றலர் மகளெனப் பகைமுகங் காட்டுவீர்
மற்றும் இவளோர் மகளெனல் கருதிரோ?
களிற்றினைக் காணக் குடத்தினுட் கைவிடும்
தெளிவினை எண்ணி அழவோ! திகைக்கவோ!
இயற்றிய பிழைக்கே யாவரும் ஒறுப்பர்;
வயிற்றிடைக் கருவும் வஞ்சனை புரிந்ததோ?
பொய்மையின் தோற்றப் பொலிவினால் மயங்கி
மெய்மையைக் காலிடை மிதித்துத் துவைத்துளீர்!
வஞ்சகச் சிலந்தி வலையாற் சிற்றுயிர்
அஞ்சுற வெளவினும் அழியும் நாள்வரின்
கூடும் சிலந்தியும் கூட்டாய் அழிதல்கண்
கூடென வறியும் கூரறி விலிரோ?
ஊன்றக் கொடுத்த உறுதடி உயிரை
வாங்கிய தென்னஎன் வாய்மை கெடுத்ததே!
தன்னந் தனியே தவித்திடு இவடன்
கன்னம் வழியும் கண்பொழி புனலும்
நெஞ்சக் கூட்டின் நீங்கா அழுக்கெலாம்
எஞ்சாது கழுவி இரக்கம் ஒளிவிடச்
செய்திட லிலையோ? சிறுமையி னீங்கி
உய்திட மிலையோ உங்கட் கெல்லாம்;
அடைக்கல மானவள் ஆருயிர் காவாக்
கடைக்குல மாயினேன்!

**கண்டார் கூற்று: 1.** கருவுறு மகவை
ஒறுத்தல் புரியின் ஒளியினை அரசு
நிறுத்தல் எவ்வணம்? நெடுமுகில் தவழும்;

---

பற்றலர் - பகைவர், வெளவினும் - கவர்ந்து கொள்ளினும், கண்கூடு - கண் காணுவது (பிரத்தியட்சம்), உய்திடம் - உய்தி பெறும் வலிமை, கடைக்குலம் - தாழ்ந்த குலம்.



ஏழில் மலையும் இசைகெழு நறவும்
பாழில் லாகும் பருவம் வந்ததோ?
அரவம் பசியையே கருதலும், தேரை
விதியை எண்ணி வீழலு மாயதே!
கொண்பெருங் கானம் குவித்துள புகழினி
என்படுங் கொல்லோ! என்படுங் கொல்லோ?

**கண் : 2.** அவல நெருப்பில் முகமலர் வெதும்பக்
கவலை பெருகிய கையறு நெஞ்சமொடு
மோசி கீரனார் மொழிந்தன கேட்டும்
பேசில னாகிப் பேரிசைக் கோயிலுட்
புகுந்ததை எண்ணின் புரையிலார் வாழத்
தகுந்தநா டீஃதெனத் தழைக்குமா றிலையே!

---

பாழில் - பாழிடம், கையறு - துன்புறு, கோயிலுள் - அரண்மனையினுள், தழைக்குமாறு - மகிழுமாறு.

## முதல் அங்கம்

### ஐந்தாம் களம்

இடம் : சுடுகாடு.

நேரம் : மாலை.

உறுப்பினர் : அருளாழி, கணியன்கீரன்.

[குழலியின் உடல் நெருப்பில் அழிய அருளாழி பேசுதல்
கணியன்கீரன் பின்னிருந்து கேட்டல்]

அருளாழி : எண்ணமும் ஆசையும் எதிர்வரு கால
வண்ணமும் கொழுந்தாய் வளரும் நெருப்பிடை
நீறுய்க் கனிந்தது ! நிழலாய் மறைந்தது !
ஆறுத் துயரில் அலைபடச் செய்து
மீளா உலகம் மேயினை ! நின்னொடு
வாழா வாழ்க்கையும் வாழ்வாங் கொல்லோ !
ஆம்பலும் ஆரமும் நாறுநின் மேனி
சாம்பரும் என்புமாச் சரிந்து கிடப்பதைக்
கண்டுமுயிர் தாங்கும் கன்மனத் தென்நிகர்
உண்டோ உலகிடை ? ஓயாது சுழலும்
காலத் திகிரியின் கதித்த எயிறென்
கோலக் குறுமகட் கொள்ள விழைந்ததே !
கடந்த காலத்தின் களிப்பெலாம் பிடிக்குள்
அடங்கும் சாம்பரின் கிடங்காய் முடிந்ததே !
கோட்டைகள் இடித்துக் குறுமண லாக்கிப்
போட்டுளேன் ; அந்தப் புழுதியுள் திளைத்துளேன்;
எண்ணக் கோட்டையை எரிவாய்ப் படுத்தி

---

நீறுய் - சாம்பலாய், ஆம்பல் - அல்லி, ஆரம் - சந்தனம், திகிரி - சக்கரம், கதித்த எயிறு - பருத்த பற்கள்.



துண்ணெனக் காலம் தொலைத்திடு மென்பதை
அறியாச் சிறுவன் ஆயினேன் ; அதனால்
குறியா விழுமக் கொல்லுலைப் பட்டுளேன் ;
நீல விழியும், நெய்கனி குழலும்,
வாலெயிறு தோன்ற வழங்கிய நகையும்,
ஏழிசை நாணிய இன்சொற் றொகுதியும்,
தாழிசை வெரூஉம் தளர்படு நடையும்,
அன்பென உரைக்கும் அளப்பிலாத் தன்மையைக்
கண்பட வாழ்ந்து காட்டிய திறமும்,
இருமுது குரவரும் ஒருமன முடையராய்ப்
பெருநலக் குறுமகள் இவளெனப் பேசிட
இல்லறம் போற்றிய எழிலும், விருந்தொடு
சொல்லறம் பேணலில் சோர்விலாத் தகையும்
என்றுநான் காண்பேன் ! இனியெவ் வுலகம்
சென்றுநான் காண்பேன் சேயிழாய் அம்மவோ!

#### வேறு

1. விழவினைக் கண்டு விழிகுளிர வந்தேற்கு
இழவினைக் காணும்பேர் எவ்வம் வரலறியேன் ;
இழவினைக் காணும்பேர் எவ்வம் வரலறியின்
குழலியுனைச் சூழ்ந்த கொடுநெருப்பில் இழவேனால் !

2. என்பெரும் வாழ்வை எனக்கிலா தெனுமாறு
கொண்பெரும் கானமாம் குறிப்பை உணரேனால் ;
கொண்பெரும் கானமாம் குறிப்பை உணர்வேனேல்
பண்பொருங் காஞையைப் பறிகொடுத்து நில்லேனால் !

3. இருவராப் புக்கவரில் எதிர்பாரா வண்ணம்
ஒருவரே மீள உறுமென்ப தறியேனே ;

---

குறியா - அளவிட முடியா, வாலெயிறு - தூயபல், வெரூஉம் - அஞ்சும், இருமுது குரவர் - பெற்றோர் ; விழவு - திருவிழா, எவ்வம் - துன்பம், கொண்பெருங் கானம் - கொள்ளுகின்ற பெரிய புறங்காடு, துஞநாடு.

ஒருவரே மீள உறுமென்ப தறிவேனேல்
கருவினாற் பொலிந்தாயைக் கையிழந்து நில்லேனால் !

4. மகவை மடிக்கிடத்தி மகிழ்தருவாய் எனுமாசை
உகநீ எரியீமத் துட்கிடப்பாய் எனவறியேன் ;
உகநீ எரியீமத் துட்கிடப்பாய் எனவறியின்
அகவா மயிலுன்னோ டயற்புலத்து வாரேனால் !

5. தொட்டிலிற் சேயுறங்கத் தொடங்குமுனே கால்கழித்த
கட்டிலில் நீயுறங்கும் காலம் வரலறியேன் :
கட்டிலில் நீயுறங்கும் காலம் வரலறியின்
கொட்டியின் மலர்வாயாய் பகைநாடு குறுகேனால் !

6. பொய்யுரைத்தால் ஒன்றும் புரைவருவ தில்லையெனும்
பொய்யுரையே என்னுயிரைப் போக்கும் எனவறியேன்;
பொய்யுரையே என்னுயிரைப் போக்கும் எனவறியின்
பொய்யுரையேம்! பொய்யுரையேம்! பொய்யேஉரையேமால்?

[கணியன்கீரன் அவன் தோளைத் தழுவி]

கணியன் கீரன் : எவ்வம் தணிமதி இளைஞ ! வாழ்வெனும்
பௌவத்தில் இவ்வணம் பருவரல் தோன்றுதல்
இயற்கை என்பது தெளிக ; இதற்கா
மயற்கை கொள்ளுமெச் செயற்கையும் நீங்குக !

அருளாழி : ஊனில், உயிரில், உணர்வில், நினைவில்
பாலில் நெய்யாப் படர்ந்தவள் அழிவுக்
கலமரல் செயற்கை ஆமெனக் கூறுதல்
புலமருக் காட்சியோய் புண்படச் செய்யும்;
மடம்படு சாயல் மறைந்த பின்னரும்
உடம்பொடு திரிந்துயிர் ஒம்புகின் றேனே !

கணியன் : திடம்பட வேண்டுவல் ! செய்வினை வழித்தாம்
உடம்பொடு நந்தம் உயிர்க்குள தொடர்பைச்
செவ்வனம் அறியின் செயலறவுக் காட்பட்
டிவ்வணம் மொழியாய் ! இறந்தவர்க் காக
இருப்பவ ரெல்லாம் இறக்கத் துணியின்
இருப்பவ ராரிவ் விருங்கடல் உலகில் ?
உலகெலாம் சுடுகா டாகியோர் வெறுமை
நிலவுமே யல்லால் நிகழ்வுகள் தோன்றா !
ஈமப் படுக்கையின் எரியழல் வாய்க்கு
வாமக் கொழுநரை வழங்கிய பெண்டிர்
வாழ்ந்ததும் இலையோ ? வளர்ந்த பிள்ளையை
ஆழ்ந்துபடு குழியின் அடிவயிற் றுணவாத்
தந்துயிர் வாழும் தாயரும் இலரோ ?
தந்தையை அன்னையைத் தளராக் கூற்றுவன்
நுதிவேற் கொடுத்த நோதலுக் கஞ்சி
கதிவே றிலமெனக் கலங்கியுயிர் விடுத்த
பிள்ளையர் எத்தனை பிறங்கினார் உலகில் ?
தன்னையர் எத்தனை தவிர்ந்தனர் வாழ்வை ?
சாதல் சாதல் என்றுளஞ் சாம்பி
நோதல் ஒழிமதி ! நோக்குக உலகை !
ஒளியும் மணமும் உமிழ்ந்திடு மலர்கள்
விளியும் பொழுது வேறா ரரும்பின்
தோற்றம் கண்டோம் ; தொலைத்திட முடியாக்
கூற்றுவன் புகுந்த குடிலின் அவலத்தைப்
புதிய குழந்தையின் புன்னகை மாற்றலும்,
மதிய முகத்தினள் மலரைக் களைந்து
கைம்மைவாய்ப் படலும், கடிமணம் வாய்த்தவள்

---

உக - அழிய, எரியீமம் - ஈமஎரி, சுடுகாட்டு நெருப்பு, அகவா மயில் - கூவா மயில், கால்கழித்த கட்டில்-பிணந்தூக்கும் பாடை, கொட்டியின் மலர் - (செந்நிறமுடைய) கொட்டியின் மலர், குறுகேனால் - அடையேனால். என்னுயிர் - என்னுயிர் போன்ற குழலியை, பௌவம் - கடல், மயற்கை - மயக்கம், மடம்படு - இளமைத் தன்மை பொருந்திய.

திடம்பட - மனத்திடம் கொள்ள, செவ்வனம் - நன்கு, செயலறவு - துன்பம், வாமக் கொழுநர் - அழகிய கணவன்மார், நுதிவேல் - கூரிய வேல், தன்னையர் - அண்ணன்மார், சாம்பி - ஒடுங்கி, குடில் - குடிசை, வீடு.

மெய்ம்மலி உவகையொடு கொய்ம்மலர்ப் பிணையல்
சூடலும், வாழ்வைச் சுவைத்தலும், இன்பில்
ஆடலும் உலகின் அமைப்பெனல் கண்டோம் ;
சாப்பறை யோர்பால் கறங்கவும், சான்ருேர்
நாப்பறை வாழ்த்த நன்முழ வொலித்தலும்
கண்டன மன்றே ! கருதிலாப் பொழுதில்
மண்டிய துன்பை மனங்கொளல் இன்றி
அழுதலும் புரளலும் அரற்றலும் எழுந்து
விழுதலும் புரியின் வீழ்ந்தவள் உயிர்த்துத்
தோன்றுவாள் ஆமெனில் தோன்றல் நின்துயரை
ஏன்றுகொண் டுனக்கா இவ்வினை எத்தனை
ஆண்டுக ளாயினும் யாமும் செய்குவம் ;
ஆண்டகாய் ! இதுசெயின் அவள்உயிர்ப் பாளா ?
எனவே இவ்வெலாம் இரவிடைக் கண்ட
கனவே எனநாம் கழிதல் ஆண்மையாம் ;
நடந்ததற் காகக் கிடந்துழ லாமல்
நடப்பதற் காவன நயத்தலே அறிவாம் ;
இத்தனை துயரையும் எதிருறு மாறுனை
வைத்தவன் வாழ்கிருன் ; நீயோ வறிதே
உலமரல் உற்றனை ; ஒன்ருர்த் தெறூஉம்
நலஞ்சிறி தேனும் நயந்திலை !

**அருளாழி:** ஐயா !
உயிரில் கரந்தென் உணர்வில் வெளிப்படும்
செயிரில் குழலியின் சிதைமண் டாங்கி
மொழிவதிச் சூளுரை ! முதலொடு நறுமா
அழிவது காண்கிலா தகன்பதி அகலேன் ;
வஞ்சனை புரிந்தென் வாழ்வினைப் பறித்த

---

*மெய்ம்மலி - உடல்நிரம்பிய, கொய்ம்மலர்ப் பிணையல் - கொய்தமலர்களால் தொடுக்கப்பட்ட மாலை, நன்முழவு - மங்கல முழவு, ஏன்று கொண்டு - ஏற்றுக்கொண்டு, ஒன்ருர் - பகைவர், தெறூஉம் - அழிக்கும், முதலொடு - வேரோடு, அகன்பதி - பெரிய நகரம், நறவுப் பட்டினம்.*



நஞ்சனை மிஞிலியை நயனிலாக் கயவனை
வெஞ்சமர்க் களத்திடை வீழ்த்தியவன் தசையை
எஞ்சலா நாய்நரிக் கிடுவெனல் லுணவா !
ஒள்ளிழை ஈமம் ஒழுக்கிலா மிஞிலியின்
வெள்ளெலும் பூன்றிக் கூரை வேய்குவென்;
முடித்தலை யோட்டினை முன்னெடுத் துயர்த்திப்
பிடித்தொரு விளக்காப் பிறங்கிடச் செய்குவென் !
சூளுரை கேட்டனை ! சொற்றன செயாதென்
வாளுறைப் படாஅ திதுவென் வஞ்சினம் ;

**கணியன் :** நஞ்சு பழுத்தென நடுவூர் நறுமா
எஞ்சா தொழிக்க என்செயக் கருதினை !

**அருளாழி :** நாளைநள் ளிரவு ஞமலியும் உறங்கும்
வேளையுட் புகுவேன் ; காவலர் வீழ்த்தி
அடிமுதல் துமித்திவ் வாற்றிடை விடுவேன் ;

**கணியன் :** ஒடியும் பேரொலி ஊரவர் எழுப்பப்
பற்றிட வருவார் ;

**அருளாழி :** படையால் அவரைக்
குற்றிக் குற்றிக் குருதிநீ ராடுவேன் ;

**கணியன் :** ஊரும் படையும் ஒருங்கே திரளின்
யாரும் மீளுதல் எளிதிலை மறவ !
அவ்வா ருயின் எவ்வணம் உய்குவை?

**அருளாழி :** வெவ்வாய்க் கூற்றின் வெகுண்டுபகை தீர்ப்பேன் ;
வெல்லினும் மகிழ்வேன் ; வீவுற் றென்னுயிர்
செல்லினும் குழலியைச் சேர்தலில் மகிழ்வேன் ;

**கணியன் :** சாவதில் உனக்குள ஆவல் சற்றும்
ஆவதில் இலையே ஐயா ! நீதான்

---

*நஞ்சனை - நஞ்சுபோன்ற, வெள்ளெலும்பு - வெள்ளிய எலும்புகளை, பிறங்கிட-விளங்குமாறு, சொற்றன - சொல்லியன, வாளுறைப் படாஅது - வாள் உறையைப் பொருந்தாது, எஞ்சாது- மிச்சமில்லாது, ஞமலி - நாய், துமித்து - வெட்டி, குற்றி - குத்தி. வெவ்வாய் - கொடிய வாய், கூற்றின் - கூற்றுவனைப்போல. ஆவதில் - நன்மை உண்டாவதில்.*

மாண்டு போவையேல் மனத்துறை வஞ்சினம்
ஈண்டார் முடிப்பர்? ஆதலின் இதற்கொரு
வழிநான் மொழிவேன்; வலியச் சென்று
கழியிருட் பொழுதில் நறுமா கடிதல்
தீங்காய் முடியுமது தீர்க!

**அருளாழி :** அன்பொடு
பாங்காய் எனக்குப் பலப்பல மொழிவீர்!
யாவிரோ நீவிர்!

**கணியன் :** கோசரின் நியமம்
ஊரெனக் கொண்டவன்; உன்போல் யானுமோர்
கோசர் குலத்தினன்; கோள்களின் இயக்கம்
பேசும் தொழிலைப் பெற்றவன்; ஆதலின்
கணியன் கீரன் என்றெனை யழைப்பர்;
இனியென் புகல? யானும் நீயும்
ஒருகுல மாதலின் உன்துயர் எனதாக்
கருதினென் ஐயா! கலங்கலை! நன்னனின்
வேழப் படையுள் வேண்டுவ ருளர்மரம்
வீழச் செய்யும் விஞ்சையைச் செய்வேன்;
(அருளாழியைத் தன்னருகில் அழைத்துக் காதோடு நெருங்கி)
நீரிற் கமுவ நெடுங்கோட் டியானையின்
ஏறிவரு வாரில் எம்மவர் உண்டால்;
உண்ணும் கவளத்தில் ஒருபொருள் சேர்ப்பின்
எண்ணுவ எல்லாம் இனிதே முடியும்;
மதங்கொளும்; யாரும் மறித்திட முடியாக்
கதங்கொளும்; மாமரக் காவினுள் புகுமேல்

---

ஈண்டார் - (ஈண்டு+ஆர்) இங்கே யார் முடிப்பார்கள், கழியிருள் - மிக்க இருள், கடிதல் - நீக்குதல், தீர்க - விடுக, நியமம் - நறவுப் பட்டினத்தை அடுத்துக் கோசர்கள் வாழுமோர் ஊர், எனதா - என்னுடையதாக, கலங்கலை - கலங்காதே, வேழப்படை - யானைப்படை, விஞ்சை - வியத்தகு செயல், கவளம்-சோற்றுருண்டை, எண்ணுவன - நினைப்பன, கதம் - சினம்.



வேரொடு பறித்து வீழ்த்திச் சிதைக்கும்;
காணுவை எல்லாம் கருத்தினிற் பொறுமை
பூணுவை இன்னே போதுவம் ஊர்க்கே.

| | |
|---|---|
| ஆசிரியம் வரி— | 145 |
| இசைப்பாடல் 6, | 24 |
| | 169 |

---

பூணுவை - பூணுவாயாக, போதுவம் - செல்லுவம்.

# இரண்டாம் அங்கம்

## முதற் களம்

இடம் : வஞ்சி.

காலம் : காலை.

உறுப்பினர் : *களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், எயினன்.*

நார்முடிச் சேரல் :
ஆயிரம் வேல்நுதி அருநிறத் தழுந்திய
தாயினும் பொறுத்துத் தாங்குதல் இயலும் ;
குழலிக் குற்ற கொடுமைகள் என்னும்
அழலின் வெம்மையை ஆற்றுதல் எவ்வணம் !
வஞ்சனை யாளர் வலைப்பட் டாளென
நெஞ்சுபக வந்த அஞ்சுதகு சொல்லான்
அலைதடு மாறிய அருங்கலம் போல
நிலைதடு மாற்றம் நிகழ்த்திய தேவினை !
பொய்ம்மொழி யாகிப் போதல்செய் யாதோ !
இம்மொழி என்றுளம் இனைந்தினைந் தேங்கும் !
பலருயிர் செகுத்தவப் பாழும் நறுமா
அலரொடும் துமித்தவ் வாற்றிடை விடாது
நாடு திரும்ப நயவேன் எனப்புறங்
காடுநின் றருளன் கழறிய சூளும்,
கீரன் எனுமோர் கணியன் கேண்மையைத்
தாரன் பெற்றதும், தந்தனர் ஒற்றர் ;

---

*அருநிறம்-மார்பு, அழல்-நெருப்பு, குழலி-சுரும்பார் குழலி, நெஞ்சுபக - நெஞ்சம் பிளக்குமாறு, இனைந்தினைந்து - வருந்தி வருந்தி, செகுத்த-அழித்த, புறங்காடு - சுடுகாடு, கேண்மையை-நட்பை, தாரன்-தாரினை அணிந்த அருளாழி.*



துணைப்படை எல்லாம் தொலையினு மஞ்சாது
வினைப்படும் உன்றன் மனத்துணி வீங்குச்
சாய்ந்தது கண்டுளம் சாம்பினேன் ; உலகியல்
ஆய்ந்ததெளி வுடையாய் ! எவ்வணம் ஆறுதல்
கூறுவேன் ! அவலக் கொடுங்கையி னீங்கித்
தேறுத லிலாதேன் !

எயினன் :
தீவினை என்பது
எவ்வண மாயினு மாகுக ! என்றன்
தெவ்வர்க்கு மிதுபோல் தீமைநிக ழற்க !
ஆவது கூறி அறிவுரை கூறினும்
சாவது விழைந்தனள் போலவென் மொழிகட்
கெதிர்மொழி கூறியதை எண்ணின் சொல்லொணு
விதிர்விதிர்ப் பென்னை வெளவுதல் செய்யும் ;
பெற்றவர் இயற்கைப் பேற்றினை அடைய
மற்றவர்க் காக மக்கள்செய் கடனைப்
பிள்ளைகட் காகப் பெற்றவர் செய்ய
வெள்கிலா திருக்கயான் வினைவந்த வாவென் !
சருகுகள் தழையவும் தளிர்கள் உதிரவும்
ஒருவிதி இருக்குமேல் ஒழிதல்செய் யாதோ ?
தன்மர பருது தழைக்க வாழ்தலே
நன்மர பாக நயப்பர் யாவரும் ;
என்பெயர் மொழிபவர் எல்லாம் ஒழிய
நன்பெயர் எடுத்தவர் என்போல் உளரோ ?

நார்முடிச் சேரல் :
அழுதல் ஒழிமதி ! அவலத்தி னீங்கி
எழுதலே ஆண்மை என்பரால் மேலோர் ;
தறுகண் என்பது தரியலர் மேற்சென்று
உறுகண் இழைப்ப தொன்றே யாமோ ?

---

*கொடுங்கை - கொடிய கை, தெவ்வர் - பகைவர், விதிர் விதிர்ப்பு - நடுக்கம், வெள்கிலாது - வெட்கப்படாது, வினைவந்த வாவென் - தீவினை வந்தவாறு என்னே !, தழையவும் - செழிக்கவும், நன்பெயர் - நற்பெயர், தறுகண்-வீரம், தரியலர் - பகைவர், உறுகண் - துன்பம்.*

எய்திய இடுக்கண் இடுக்கட் படுமாறு
செய்திடல் அன்றோ சிறந்ததறு கண்மை!
விரும்பா நிகழ்ச்சி விளைந்ததற் காகத்
துரும்பாக் கடலிடைத் துவள்தல் ஒழிகதில்!
நடுங்காமை என்றுமே நண்ணிய நின்னுளம்
ஒடுங்குமேல் அதற்கியார் உரைப்பவர் தேறுதல்!
கண்ணிலா னாகிக் கரவொடு பொருந்தி
முன்னியது மிஞிலி முடித்திட விழையினும்
பெண்ணென நோக்காது பேதைமை செய்ய
நன்னன் எவ்வணம் நயந்தனன்! ஒருத்தியைச்
சாவில் முடிப்பின் சாவா உலகில்
வீவிலாப் பெரும்பழி விளைதலை ஓராது
நடுநிலை பிறழா நன்னன் குழலிக்குக்
கெடுநிலை புரிந்தது கேட்டொறும் மருட்கை
விளைக்குமால்! இந்த வரலாற்று நிகழ்வில்
கனியினை விடுத்துக் காய்பறித் தானை
இனிவருங் காலம் எப்படிக் கருதுமோ?
ஆக்கங் கருதி அருமுதல் இழக்கும்
நோக்கிலாப் பேதையின் போக்கிலா நன்னன்
செல்லுதல் வேண்டும்; சென்றவன் அழிவைப்
புல்லுதல் தானே பொருந்துவ தென்ற
வாய்மைக்கு வெற்றி வாய்த்திடும் காலம்
சேய்மையில் இல்லை; சினத்தைப் பொருளெனக்
கொண்டவன் கேடு குறித்தவோர் முடங்கல்
கண்டனம் இன்று கலக்கம் ஒழிமதி!

**ஆய்எயி :** கலக்கம் ஒழிதலிக் கட்டையோ டல்லால்
விலக்கித் தனியே விடுத்தல் இயலுமோ?

---

இடுக்கண் இடுக்கட்படுமாறு - துன்பமே துன்பப்படுமாறு. கண்ணிலானாகி - கண்ணோட்டமில்லாதவனாகி, வீவிலா - அழிவிலா, ஓராது - ஆராயாது, கெடுநிலை - கேடு, புல்லுதல் - பொருந்துதல், சேய்மையில் - தொலைவில், முடங்கல் - கடிதம், கட்டையோடு - உடம்போடு.



என்னிலை யாவதூஉம் உறுக! வெனக்குநீ
சொன்னத னுட்பொருள் துலங்கக் கூறுக!
வினையை விதைத்தவன் வினையை அறுத்திடப்
பனையலர் தாராய்! பகரருங் காலம்
அண்மைய தென நீ அருளிய சொல்லின்
நுண்மையை விளக்குதல் நோக்கினேன்;

**நார்முடிச் :** வடக்கில்
புன்னாட் டார்க்குப் பொன்வரு வாய்தரும்
நன்மணிச் சுரங்கம் நயந்த பேரவா
பிடர்பிடித் துந்தப் பெரும்படை திரட்டி
'இடர்விளைத் துள்ளான் மிஞிலியெம் மின்னலின்
காத்தல் வேண்டு'மெனக் கழறிப்புன் னாட்டார்
யாத்துளர் முடங்கல்; யாமும் தக்கதே
செய்யத் துணிந்தனம்; சேரர் பெரும்படை
வையப் பெரும்பழி உய்யா நன்னனை
வீழ்த்தத் துணைசெயும்;

**ஆய்எயி :** விரைசெறி தாராய்!
ஊழ்த்தன வவன்றன் ஒளியும் பிறவும்;
ஆயினும் இந்த அருவினை முடிக்கக்
காயிலை நெடுவேல் கைக்கொள் படையை
முன்னின்று செலுத்தும் மொய்ம்பினன் யாரென
என்னுளம் வினவும்!

**நார்முடிச் :** என்றன் இளவல்
குட்டுவன் படையைக் குறித்து நடாத்துவன்;
மட்டலர் தாராய்! மகிழ்ச்சி தானே!

**ஆய்எயி :** இருதலைக் கொள்ளி எறும்பினை ஒத்துளேன்;

---

துலங்க - விளங்க, பனையலர் - பனம்பூ, அண்மையது - அண்மைக் காலத்தது, நுண்மையை - நுட்பத்தை, நன்மணிச் சுரங்கம் - நீலக்கல் சுரங்கம், பிடர் - பிடரி, எம்மின்னலின் - எம்மை இன்னலினின்றும், விரைசெறி - மணம் நிரம்பிய, ஊழ்த்தன - முதிர்ந்தன, மொய்ம்பு - வலிமை, இளவல் - தம்பி, குட்டுவன் - செங்குட்டுவன், மட்டலர் - தேனிறைந்த மலர்.

மறுதலை மொழியவோ மகிழ்ச்சியைக் கூறவோ
இயலா துழல்வேன்; இதைநான் மறுப்பின்
செயலாற் றுந்திறன் செங்குட் டுவனுர்க்
கில்லெனப் பொருள்படும்; இவ்வணம் குருடும்
சொல்லவிழை யாதெனின் யானே சொல்வேன்;
பொருவினைக் கென்னையோர் பொருளெனக் கொள்ளா
ஒருவினை யாலென் உளத்தில் மகிழ்விலை;
மூத்ததிப் பகடு மூரிச் செயற்கெலாம்
ஏற்ற தன்றென இகழுமுழ வன்போல்
ஆண்டில் முதிர்ந்துளான் ஆதலின் போர்க்கிவன்
வேண்டுவ தில்லென வெறுத்தனை கொல்லோ?

நார்முடிச்: ஆ! ஆ! எயினனை அருஞ்சமத் தெதிர்ந்து
போஒய் உய்பவன் ஒருவன் புகல்கிலேன்;
ஆழியுட் குறும்பரை அடக்கிய செருவிலும்,
பூழியின் பொருட்டுப் பொருதவே லையிலும்,
களத்தில்நீ விளைத்தன கண்டவர்க் கெல்லாம்
உளத்திடை நீங்கா ஓவிய மன்றே!
வெளியக் களத்திடை மிஞிலியை வெருட்டியது
எளிய தாமென எண்ணுதல் புரியார்;
ஆதலின் இதற்கா அலமரல் ஒழிக!
காதலின் மிக்கோய்! வேறொரு கரணியம்
உண்டால் அதற்கே ஒதுக்கினம் நின்னை;

ஆய்எயி: விண்டால் எல்லாம் விளங்கும்; உள்ளமும்
தக்கது கேட்டுத் தவிப்பிலா தடங்கும்;

நார்முடி: மிக்குயர் தோளாய்! மெல்லியல் மகளால்
நோய்ப்பட் டுள்ளம் நொந்தனை யாதலின்

---

மறுதலை - மறுப்பு, குருடும் - குருடரும், பொருவினை - போர்ச்செயல், ஒரு வினையால் - ஒரு செயலால், பகடு - காளை, மூரிச்செயல் - வலிமை கொண்டு செய்யும் செயல், அருஞ்சமம் - அரும்போர், உய்பவன் - தப்பிப் பிழைப்பவன், குறும்பர் - மேலைக் கடல் தீவில் இருந்தவர், வெருட்டியது - அச்சுறுத்தியது. விண்டால் - வெளிப்படுத்தினால்.



ஓய்வும் அமைதியும் உனக்குத் தருதலை
விரும்பிய தல்லால் வேறொன் றில்லை;
அரும்புக நின்னுளத் தமைதி; ஆவன
செய்தற் கியாமுளம்;

ஆய்எயி: சீர்த்தியோய்! யானிங்
குய்தற் குரியன வுரையாது நோய்ப்பட்
டொழிதற் குரியன வுரைத்தனை; அரும்பெறல்
மகளை இழந்த மனத்துயர் நெருப்பில்
உகலே யல்லால் அமைதி ஓங்குமோ?
பெற்றதூஉம் ஒருயிர்; பிறங்கு மவ்வுயிர்
மற்றிவ் வுடம்பை மண்ணிடைக் கிடத்தி
ஒழியப் போவதும் ஒரேஎ ஒருமுறை;
கழியப் போகுமிக் காயமும் உயிரும்
நோயினும் நொடியினும் நொந்துநொந் துழன்று
பாயிலும் தரையிலும் பயன்படா துறங்கி
ஈளையும் இருமும் எதிரெதிர் இழுக்கும்
வேளையில் பொறுது வீதலைக் காட்டிலும்
குலத்தின் கொடிகளை வேரொடு களைந்தெம்
நலத்தினை யழித்த நயனிலாப் பகைவரைப்
பூண்டோ டழித்துப் புனற்குருதி யாட
ஆண்டெம் ஆருயிர் அழியினும் அதனை
நயப்பதே வீரர்கள் நயப்பதா மிதனை
வியப்பது செய்வார் வீரரா வாரோ?
நாற்பெரும் படையின் தலைமை நயந்திலேன்;
போர்ப்படை வீரருள் ஒருவனுப் போதலே
போதுமெனக் கருதும் பொன்மன முடையேன்;
ஈதுமெனக் கருளலில் என்றடை யுளது?

நார்முடி: சேரர் படையின் சிறந்த தலைமகன்
வீரருள் ஒருவனுய் வெல்களம் புகுமேல்

---

அரும்புக - தோன்றுக, உகலே - (உகு+அல்+ஏ) வீழ்தலே, காயம் - உடம்பு, ஈளை - கோழை (கபம்), இருமு - இருமல், பொறுது - தாங்காது, வீதல் - அழிதல், ஆண்டு - அவ்விடத்தே.

என்னென்னை நினைப்பார்? இளிவரல் இதனினும்
பின்னெனை உளது?
**ஆய்எயி :** பேரருள் உளத்தோய்!
வாழினும் புகழொடு வாழவும், மண்டமர்
வீழினும் புகழொடு வீழவும் எண்ணினேன்;
அடர்ந்தெழு போரிற்றம் அருங்குடி மாய்தரத்
தொடர்ந்த பழியினைத் துடைக்கா தொருசிறை
முடங்கிக் கிடந்துதம் மூச்சினை யொழித்தல்
தடங்கணர்க் குரியது; தறுகணர்க் குரியதோ?
நோயாற் சாதலின் நோக்கலர் வைவாள்
வாயாற் சாதலே வாழ்க்கைப் பேறெனக்
கருதுவது நம்மினம்; களத்தில் உருக்கெடப்
பொருதுவது போலொரு புகழ்தா னுண்டுகொல்?
**நார்முடி :** அவலமோ மகிழ்வோ அளப்பிலா துற்றவர்
தவலிலா வினைசெயத் தக்கவ ரில்லெனக்
கூறும் பொருள்நூற் கொள்கை யனைத்தும்
தேறுநீ இவ்வணம் தெரிப்பினென் செய்வது!
நன்னனே மிஞிலியோ தன்னெதிர் தோன்றின்
மின்னுடல் பாய்ந்தெனும் உணர்ச்சியே மேவும்;
அறிவுநிலை திரியா தமர்புரிந் தவரைக்
கருதியது முடித்தல் கைக்கொள வியலாது;
வினைத்திறம் நோக்கின் நீயும் மிஞிலியும்
அனைத்திலும் ஒவ்வுதிர் ஆயினும் நினக்குள

---

என்னென்னை நினைப்பர் - என்னை என் நினைப்பர் என மாறுக. என்னை எவ்வாறு கருதுவார்கள், பின்னெனை உளது - பின் உளது என்னை? அடர்ந்து - நெருங்கி, அருங்குடி மாய்தர - தம்குடிப் பிறந்தார் அழிய, ஒரு சிறை முடங்கி - ஒரு பக்கத்தே முடங்கி, தடங்கணுர்க்கு - பெண்டிர்க்கு, தறுகணர்க்கு - வீரர்க்கு, நோக்கலர் - பகைவர், வைவாள் - கூர்வாள், உருக்கெட - உருவம் சிதையுமாறு, தவலிலா - குறைவிலா, தேறு நீ - துணிந்த நீ, பாய்ந்தெனும் - பாய்ந்ததெனும் - தொகுத்தல் விகாரம், ஒவ்வுதிர் - ஒத்துள்ளீர்.



முதுமையோ அவற்கிலை முனைந்துசெயல் புரிய
முதுமையின் இளமை மூத்ததுணை யன்றோ?
செவ்விசைத் திறமெலாம் தேர்ந்தவ ரெனினும்
கவ்வுமேல் முதுமை கண்டப் பாடலில்
ஒடுங்கிய குரலிலும் உச்சத் துயிர்ப்பிலும்
நடுங்குதல் இயற்கை; நாமறி யாததா?
இடமும் காலமும் எண்ணுது வினைசெயல்
மடமென அறிகுவம்; ஆதலின் மண்டமர்ச்
சேறல் ஒழிமதி! சிறுமையர் அவரை
வேறலுக் குரியன எல்லாம் விளம்புதி!
**ஆய்எயி :** படையெலாம் செல்லப் பாவியேன் உன்றன்
றடையுடம் பட்டுத் தங்குவேன் எனினும்
உடம்பினுள் இவ்வுயிர் ஒடுங்கி வாழுதற்
குடன்படா தென்பதைக் கொள்ளாது மொழிந்தனை!
மனத்தையும் நினைவையும் மண்டி எரிக்கும்
சினச்சுடர்க் குணவாச் சிறியோன் மிஞிலியை
இட்டுக் களிக்க ஏந்தல்நீ சிறிது
விட்டுக் கொடுக்கென வேண்டினென்; இலையேல்
அயிரை மலையின் அணிமுடி யேறி
உயிரை இழக்க உவந்தனென்; இதற்குநீ
தடைமொழி யாது தழுவுக; இன்றேல்
படையொடு செல்கெனப் பணிக்க; இரண்டில்
எதுநீ முன்னிய தென்பது கூறுக!
**நார்முடி :** மதுமலர்த் தாராய்! மறப்புகழ் எயினன்
இத்திரு நாட்டின் எழிற்புகழ்க் கொடியை

---

கவ்வுமேல் - பற்றுமேல், கண்டப் பாடலின்-வாய்ப்பாட்டில், மடம் - அறியாமை, சேறல் - செல்லுதல், வேறலுக்கு - வெல்லுதற்கு, தடையுடம்பட்டு - தடைக்கு உடன்பட்டு, சினச்சுடர் - சினமாகிய நெருப்பு, உணவா - உணவாக, ஏந்தல் - தலைவன், அயிரைமலை - சேரநாட்டில் உள்ளதொரு மலை, தழுவுக - உடன்படுக, பணிக்க - கட்டளையிடுக, முன்னியது - கருதியது.

ஒத்திரா வண்ணம் உயர்த்திய செயற்கு
வரைபாய்ந் திறக்க வைப்பனேல் நன்றியும்
வரைபாய்ந் திறக்கும்; வைவாட் படையோ
டெண்ணிய வாறே புன்ஞட் டார்க்கு
நண்ணிய துணையாய் நடத்துக படையை!
அரும்பகை தீர்த்துன் ஆவலும் முடித்துத்
திரும்புக வெற்றித் திருவொடு பொலிந்தே.

---

ஒத்திராவண்ணம் - மேம்பட்டிருக்குமாறு, வரைபாய்ந் திறக்க - மலையினின்றும் தரையில் வீழ்ந்திறக்க, நண்ணிய - நெருங்கிய.

# இரண்டாம் அங்கம்

## இரண்டாங் களம்

இடம்: நறவுப்பட்டின ஆற்றங்கரை.
காலம்: முற்பகல்.
உறுப்பினர்: கணியன்கீரன், அருளாழி, காவலர்.

கணியன்: *(ஆற்றை நோக்கிய தனிமொழி)*

1. அல்லெடுத்து வைத்ததெனும் கடற்பி றந்தாய்!
அருளெடுத்து வைத்ததெனக் குளிர்ச்சி கொண்டாய்!
வில்விடுத்த கணையென்ன வீறு கொண்டு
வியனிலத்து மழைக்காலாய்ச் சிதறிப் பாய்ந்து,
கல்லறுத்து மண்ணறுத்துக் காடும் மேடும்
கண்ணுறு கண்ணுறுப் பிரிந்து சென்று,
நெல்லறுத்துக் களமர்களம் குவிக்க வென்று
நிலமறுத்து நடந்துவரும் ஆற்றுப் பெண்ணே!

2. குன்றிருந்து குதிக்கின்றாய் சிறுமி போலக்,
கூடுகின்ற சமவெளியில் மடுக்கள் தோறும்
நின்றுநின்று நடக்கின்றாய் மங்கை போல,
நிலத்தில் வளர் உயிர்க்குலத்தை வாழ வைக்கச்
சென்றுசென்று வேண்டுமுண வூட்டிச் செல்லும்
சீர்த்தியையும் நீபெற்றாய் தாயைப் போல,
சென்றழித்தல் சேர்ந்தாரைக் காத்தல் என்ற
செயல்செய்தாய் எங்கட்கோர் இறையைப் போல.

---

*அல் - இருள், கண்ணுறு - சிறிய வாய்க்கால், களமர் - உழவர், இறை - அரசன்.*

3. நீவளைந்து நடந்ததனால் எங்கள் வாழ்வு
நிமிர்ந்ததம்மா! நீசினந்து நிமிர்ந்தா யானால்
தீயளைந்த துன்பங்கள் கோடி கோடி
தேடிவரும் வாழ்க்கைமுறை வளைந்தே போகும்;
காவளைந்து கழனியெலாம் கலந்து சென்று
கடல்மகனின் தடந்தோளில் கலக்க வென்று
பூமலைந்து புகழ்மலைந்து தமிழர் வாழ்வில்
பொருள்மலியத் திருவளர நடந்தா யம்மா!

4. பன்னரிய வடபுலத்தில் நதிகள் எல்லாம்
பாய்ந்தெழுந்து மக்கள்தமை அழிக்கும்; இந்தத்
தென்னகத்தின் யாறேநீ அமைதி காத்துத்
தென்னைமுதற் செந்நெல்வரை விளைக்கக் கண்டேன்;
என்ன இது விந்தையென மலைத்தல் செய்யேன்;
இருநிலத்துப் பண்பாடும் விளங்கக் கண்டேன்;
அந்நிலத்தி னியல்பாலே திரியும் நீரென்
றாய்ந்துரைத்த குறள்வாக்குப் பொய்க்கா தன்றோ?

5. தலைகாட்டும் பசும்புல்லை வளரச் செய்து
தறிகெட்ட நாடோடிக் கூட்டத் தாரை
நிலையாக ஓரிடத்தில் நிலைக்க வைப்பாய்;
நீதிமுறை நாகரிகம் பண்பாட் டோடு
கலைவளர்ச்சி மொழிவளர்ச்சி காண வைப்பாய்;
கருத்தின்றி விலங்குகளாய் அலைந்த மாந்தர்
நிலைமாறித் தேவரென உயர்ந்தா ரென்றால்
நீகொடுத்த கொடையம்மா இந்த வாழ்வு.

6. காரோடும் வழியெல்லாம் மழையி றங்கக்
கரைபுரண்டு நீயோட, மதுரை வேந்தன்
தேரோடும் பொழுதாடும் கொடியைப் போலச்
செந்நெல்லின் குலைவிளைந்து காற்றி லாட,

---

மலைந்து - சூடி.



ஊரோடும் உலகோடும் பகைவ ளர்த்தே
ஒன்றுதற்கும் இடமின்றி வறுமை யோட
யாரோடும் உறவாடிப் புகழ்வ ளர்த்தாய்
யாறேநின் போற்றுணைவர்க் காணா கில்லேன்!

7. மேவவரும் அணைகளுக்குட் சிறைப்பி டிப்பார்
மிகவிழிப்பாய்ப் பூட்டிவைப்பார்; திறந்த போதும்
ஏவலர்போல் இருகரையும் தொடர்ந்து நிற்க
இடைநெறியில் உனையழைத்து நால்வ ரப்புக்
காவலுக்குள் மீண்டும்உனைக் கட்டி வைப்பார்;
கடுகேனும் சினங்கொள்ளாய்! ஊர்க்கு நன்மை
ஆவதற்குத் தன்னுருவை அழித்துக் கொள்வாய்
ஆரேநின் னீகத்தின் நிகராய் ஆவார்

8. நீர்த்துறையில் ஒதுங்கவைப்பாய்; நீநினைத்தால்
நெடியகரை மோதுவிப்பாய்; நீரோட் டத்தில்
ஆர்த்திருக்கும் சுழலுக்குள் அமிழ்த்தி வைப்பாய்;
அடிமணலின் மடுவின்கீழ் செருகி வைப்பாய்;
பேர்த்துமவை வெளிக்கொணர்வாய்; சுமந்து சென்று
பெருங்கடற்குத் திறைதருவாய் செயல்நினைந்தால்
நீத்தரிய பழவினையால் உயிர்க ளாடும்
நிகழ்வெல்லாம் நடத்துகிறாய் உனைய டைந்தால்.

9. நீர்க்குமிழி தோற்றுவிப்பாய்; மனித வாழ்வின்
நிலையாமை காட்டுவிப்பாய்; சுடுஞா யிற்றின்
தீக்கதிரால் பிளவுண்ட நிலத்தி னூடே
திடுதிடென நீநடப்பாய்; சந்து செய்வாய்;
போக்கினிலே தளர்வில்லாய்; ஓய்வே இன்றிப்
புகழ்புரியும் செயலுடையாய்; புலவர் பாடும்
வாக்கினிலே வாழ்கின்றாய்; உன்றன் வாழ்க்கை
வையகத்து மானிடர்க்கோர் பாட மன்றோ!

---

*ஒன்றுதற்கும் - ஒளிதற்கும், நின்னீகம் - நின் + ஈகம், ஈகம்- தியாகம், சந்து செய்தல் - உடன்பாடு செய்வித்தல், சேர்த்தல்.*

10. பொன்றிகழும் மலரிதழில் துளியாய் நிற்பாய் ;
புக்கவெயிற் கதிராலே அழிந்து போவாய் ;
வன்றிகழப் பஃறுளியும் சேர்ந்தா ருவாய் ;
வானிவந்த ஆல்மரமும் பேர்த்துச் சாய்ப்பாய் ;
ஒன்றியென இருப்பாரை வலிமை கொண்டோர்
ஒருநொடியில் வீழ்த்துதலும், ஒருங்கி ணைந்து
நின்றியலும் நிலைபெற்றுல் பகைவ ரெல்லாம்
நிலையழிந்து வீழுதலும் இயற்கை தானே !

11. கார்நடக்கும் ; நடந்தாற்றுன் உலகில் யாண்டும்
கலிநடக்க வொட்டாமல் உழவர் கட்டும்
ஏர்நடக்கும் ; நடந்தாற்றுன் மனித வாழ்வில்
இசைநடக்கும் திசையனைத்தும் செல்வ தான
சீர்நடக்கும் செயல்நடக்கும் ; நெஞ்சை யள்ளும்
சிற்பமுதற் கலைநடக்கும் ; நடக்கும் வாய்மை ;
பார்நடக்க வைக்கின்ற யாறே நின்போல்
பயனடக்க வாழ்ந்தாரைக் காண்கி லேனுல்.

*[ஆலமரச் சருகொன்று நீரில் வருகிறது. அதனைக் கையில் எடுத்து]*

தேர்மிசை வரூஉம் திருவுடை மன்னனின்
நீர்மிசை வருஉம் ஆலிலைச் சருகு ! நின்
தோற்றமும் வளர்வும் ஆற்றலும் காணின்
ஏற்றமும் இறக்கமும் எத்தனை பெற்றுளை !
தளிராய் நின்றநின் னெழிலா லன்றோ
தென்கால் எழுந்து நின்றேள் அணைந்தது !
ஆலின் தளிரா அல்லை ! அல்லை !
மாலின் நிறமென மயங்கியோர் உண்டே !
தண்மையும் மென்மையும் தடவி உணர்ந்தோர்

*பொன்றிகழும் - பொன்போல் திகழும், வன்றிகழ - வன்மை வெளிப்படுமாறு, வானிவந்த - வான் + நிவந்த, வான் அளவு உயர்ந்த, தென்கால் - தென்றல், மாலின் - திருமாலின்.*



பெண்மகள் கன்னமும் பெறுஅ திதுவென
மொழிந்ததும் கேட்டுளேம்; கேட்டதாற்பெண்மனம்
அழிந்ததும் கேட்டுளேம் அன்றே ! பயணியர்
தெறூஉம் ஞாயிறு தெரித்த கதிரான்
வெரூஉம் வேளையில் விரித்த குடையென
இன்னிழல் நல்குநின் னிசைபெரி தன்றே !
எந்நிழல் வாழ்நரும் நின்னிழல் வதிய
அவாவ வாழ்ந்த அரசு நீ யலையோ !
தளிரில் இலையில் தழுவிய காற்றே
விளியும் நாளில் விரட்டுத லென்னே !
தாங்கிய கிளைதான் தவிர்க்குமே லுறவை
ஈங்கவர் நிலைதான் நின்னிலை என்கோ !
'கல்லா இளமை யாண்டுண்டு கொல்லோ
நில்லா தது'வெனும் நெடுமொழி பெரிதால் !
நின்கா லிருந்தோர் தங்கால் வீழ்ந்தனை !
ஏற்றிய மனிதரே எற்றினர் காலால் ;
எழிலும், நலமும், யாவர்க்கு முதவும்
தொழிலும் இழந்து தொல்கவின் வாடிச்
சருகெனும் புதுப்பெயர் தரித்தநின் னிலைமைக்
குருகுமென் னுள்ளம் ஓ!ஓ! சருகே !
இன்னும்நின் வாழ்க்கைப் பயணம் இறுதியை
நண்ணவு மிலையோ ! நடத்துதி பயணம்

*[சருகை ஆற்றில் போட்டு]*

திரைகட லோடியும் திரவியம் தேடெனும்
உரையினை எண்ணி ஓடுகின் றனையோ !
கண்ணறி யாதவோர் பொருளாய்க் கரந்து
மண்ணிடைக் கிடந்தாய் ! மரமென வளர்ந்தாய் !
தளிரெனு இலையெனுச் சாம்பிய பழுப்பெனு
அளியநின் பிறவி அறுஅது போலும் ;
நீரினுள் அழுகி நிலத்தினுட் கரந்தோர்

*தெறூஉம் - துன்புறுத்தும், வெரூஉம் - அஞ்சுகின்ற. விளியும் நாளில் - அழியும் நாளில்.*

வேரினுள் நுழைந்து மீளவும் பிறவி
எடுக்கும் ஆவலால் ஏகுவை போலும்!
அணுவும் சுழலும்; அணுக்களாற் செறிந்த
அண்டமும் சுழலும்; ஆதலின் நாமும்
சுழன்று சுழன்று தொலைக்கிலாப் பிறவியில்
உழன்று கிடத்தலின் உய்குதல் இலையால்!
ஓடுதி! ஓடுதி! உலக இயற்கையை
நீடுநனி தெளிந்தோர் நின்போல் யாருளர்!

*[அருளாழி வருகிறான். அவனை நோக்கி]*

யாண்டுச் சென்றனை அருள! முன்னரே
ஈண்டுவந் திருப்பாய் என்று கருதினேன்;

**அருளாழி:** எங்குநான் செல்வேன் எம்மனத் துள்ளெரிக்
கங்கினும் அவியக் கண்டே னல்லேன்;

**கணியன்:** *[அருளாழியிடம் பிறர் அறியாவாறு கூறுதல்]*
தடந்தோள் வீர! தணல்படு சிறையில்
கிடந்தாள் பொருட்டுக் கிளத்திய சூளுரை
இரண்டுநா ழிகையில் இனிதுநிறை வேறும்;
திரண்டுவரு வேழம் தெண்ணீர்க் கழுவ
ஒட்டிவரும் பாகரில் ஒருவன் நமக்காக்
கூட்டிக் கலந்த கொடுமருந் தொன்றை
அடுகளிற் றுணவொ டருத்தினன்; ஆதலின்
வடுவிலாய் எழிலொடு வயங்குமிச் சோலை
புயலாற் பாறையைப் பொருதிய கலம்போல்
மயலாற் களிறுகள் மாய்த்துத் துவைப்பதைக்
கட்புலம் குளிரக் காண்குவை; பிரிந்து
விட்புலம் படர்ந்த வேற்கண் குழலியின்
நெஞ்சமும் குளிரும் நெடுந்தகாய்! யாவரும்
அஞ்சுவரு யானையின் அருமணி யோசையும்

---

கங்கு - நெருப்புத்துண்டு, தடந்தோள் - பெரிய தோள், முகத்தான்-காரணமாக, கிளத்திய - கூறிய, அருத்தினன் - உண்பித்தனன், வயங்கும் - விளங்கும், பொருதிய - மோதிய, மயலால் - மயக்கத்தினால், விட்புலம் - விண்ணுலகம்.



எழுந்தது கேட்குமால்! ஏற்பவோர் இடத்தில்
அழுந்திக் கிடந்தவ் வழிவினைக் காண்குவம்;
கண்படா தெவர்க்கும் கரந்து காணலே
அன்ப! நலந்தரும்; அழிவுநிகழ் காலை
ஓசைப் படாஅ துவந்து காணியர்!
மாசைமெய்ப் பொருளென மயங்கிய நாடிது;

**அருளாழி:** கணியரே! வருஉம் களிற்றுள் எதுநம்
பணிசெய விருப்பது;

**கணியன்:** பச்சைக் கச்சை
அரையிடைக் கட்டியும், அரக்கொளிர் மடியை
திரைத்துத் தலையில் வளைத்துச் செருகியும்,
இருப்போன் ஏறிய எரிசினக் களிறே
மருப்பால் நறுமா மண்படச் செய்வது;
இரு! இரு! இனிநீ ஏதுமொழி யாது!
வருவது காண்க!

**அருளாழி:** வானம் இடிந்ததோ?
களிறுதான் இவ்வணம் கடுங்குர லெடுத்துப்
பிளிறியது கொல்லோ? எத்தகைப் பேரொலி!

**கணியன்:** மயல்மருந் துண்ட மதநோய்ப் படுகளி
றயல்வரு களிற்றை அடர்த்துத் தாக்கிட
எரியழற் பட்ட இருங்கூட்டுத் தேனீ
இரிவது போலவ் வியானைகள் இரிந்தே
ஓடுவது காண்க! ஒன்றோ டொன்று
சாடுவதும், கோட்டினாற் குத்திச் சாய்ப்பதும்
மலைகள் எழுந்து மற்போரி டலென
கொலைவல் களிறுகள் துதிக்கை கோத்து
மண்ணிடைப் புரளலும், மத்தக மிதித்தலும்,
விண்ணிடைத் தேவரின் விழியுங்கா ணாதது;
எருத்தமிசை இருந்தோர் ஏதுந் தோன்றாராய்த்

---

அழுந்தி - மறைந்து, அரை - இடுப்பு, அரக்கு - செந்நிறம், மடி - துண்டு, மருப்பு - கொம்பு, கோட்டினால் - கொம்பினால், எருத்தம் - கழுத்து.

பொருந்தி மரக்கிளை வாவலின் பொலிவார் ;
**அருளாழி :** வெண்மணிக் கோடெலாம் வேழக் குருதியால்
செம்மணிக் கோடெனத் திகழுதல் காணியர் !
அருநிறம் பாய்ச்சிய அணிவாள் மீள
உருவியது போல ஒளிறுமக் கோடுகள் !
ஆ ! ஆ ! அவக்காண் ! அருமாக் காவினுட்
போஒய்ப் புக்கன பொருகளி றெல்லாம் ;
களிறு துவைத்த நறுமாக் காவின்
அழிபடு கோல அழகெவ்வா றிருக்கும் ?
**கணியன் :** அதிர்நடைக் களிற்றுன் அழிந்த கொல்லேயில்
குதிரைமேய்ந் தாலென? கழுதைமேய்ந் தாலென?
**அருளாழி :** அருகில் இருந்தவ் வழிவிழாக் காணப்
பெருகிய தாவல் பிழையிலாய், போதுவம் ;
**கணியன் :** யார்கண் படினும் ஏதமாய் முடியும் ;
தார்மலி மார்ப ! ஒருசிறைத் தங்கியே
அனைத்தும் காண்குவம் ;
**அருளாழி :** ஆஆ ! என்னுளம்
நினைத்தது போலந் நெடுமரம் வீழ்ந்தது !
கிளைகள் நிலத்திடை வீழப் புரிந்தன ;
தழையும் பிஞ்சும் தகைந்துகூ ழாயின,
ஒடியுங் கிளைமர ஒலிதரூஉ மின்னிசை
இடியுந் தேனும் இசையப் பிசைந்து
பண்ணிய தாகிய பண்ணியம் போல
நண்ணுமென் செவியில் !
**கணியன் :** எண்ணு தெவணி
ஓடு கின்றனை ! ஒழிக விச்செயல் !
கேடு வருமெனக் கேட்டும் சேறியோ ?
கேளாச் செவியனின் என்மொழி கேளான்
மீளாது முன்செலும் மீளி இவன்றன்

---

வாவலின் - வெளவாலைப் போல, பொலிவர் - திகழ்வர், இடியும் - அரிசிமாவும், பண்ணியம் - பணியாரம். எவணி - எவண் + நீ, மீளி - ஆடவருட் சிறந்தோன்.



பித்தா யினன்கொல் ! பிழையா கும்மே !
அத்தா ! இனிஎவ் வழிவிலும் நின்னெடு
இருத்தலே தக்கசெய லிதோஒ விடாஅ
தருநிழல் போலுன் அடிதொடர் கின்றேன் ;
**அருளாழி :** அடியொடு வீழ்வ தருமா வோயிலை ;
கொடிய னன்னனின் கொற்றமே யன்றோ ?
ஒடிவது கிளையோ ? ஒருத்திகண் ணீரால்
தழையப் படுமவன் தளர்ந்தசெங் கோலே ;
பட்டை உரிந்த பரிய கிளையெலாம்
மட்டலர் குழலாள் மண்படு மீமம்
எடுத்து நிறுத்தநான் எண்ணிய மிருதிலியின்
பருத்தவெள் ளெலும்பைப் பார்எனக் காட்டும் ;
நஞ்சென வளர்ந்து நடுவூர் நின்று
பிஞ்சும் கனியுமாய்ப் பிறங்கிப் பெண்ணுயிர்
குடித்த மாவினைக் கொல்சினக் களிறுகள்
ஒடித்து முடித்ததை உணரின் நன்னனின்
சுற்றமும் கிளையும் தொகையாக் களத்தில்
அற்றம் படுதற்கோ ரறிகுறி யன்றோ ?
நெஞ்சங் குளிர்ந்தது ! நெஞ்சச் சூளுரை
எஞ்சாது கண்முன் னினிதுநிறை வுற்றது !
**கணியன் :** [*தனிமொழி*]
களிறு வருவது காணு ஞகி
உளறிக் குழறி உகளுகின் றனே !
அந்தோ களிறு மவனேர் வந்ததே !
பந்தோ செண்டோ எனுமா றவனை
துதிக்கையால் வளைத்துத் தூக்கு கின்றதே !
மதிக்கவும் இயலேன் ! மனநடுக் குறுவேன் !
என்கண் கனவா நனவா காண்பது !
புன்க ணுறுமாறு புறம்போய் வீழ
எறிந்ததே ! ஐயோ ! என்செயக் கைகால்

---

பரிய - பெரிய, அற்றம்படுதற்கு - அழிதற்கு, உகளுகின்றனே - குதிக்கின்றனே.

முறிந்ததோ? அறிகிலேன்! மூச்சிருக் கின்றதோ?
[அருகில் சென்று பார்க்கிறான்—மூச்சு வருவது கண்டு]
ஆகூழ் போலும் அழிவிலும் ஆக்கம்
தாவாது வந்தது?
[காவலர் வருகின்றனர்]
**காவலன் :** தரையில் கிடக்குமிவன்
யாரெனக் கூறுதி! நாட்டின் மன்னவன்
பேரிசைக் கிழிவாப் பேசினன்; மாவின்
அழிவினை உள்ளம் ஆர்ந்தவ னாகிக்
கழிமகிழ் காட்டினன்; ஆதலின் காவலன்
கோயில் குறுகியிவன் கொள்கை கூறுவோம்;
**கணியன் :** காயிலை நெடுவேற் காவலீர்! ஆருயிர்
நீங்குமோ நிலைக்குமோ அறிகிலேன்; மயக்கொடு
ஈங்குக் கிடக்கும் இவனிலை தெரியின்
இங்ஙனம் மொழியீர்! என்மக னையா!
திங்கள்மூன் றாக அறிவு திரிந்துளான்;
பகலில் ஆவினைப் பார்க்கக் கண்ணிலான்
இரவில் எருமையை யாங்ஙனம் காணுமோ?
பித்தே றியவன் பிதற்றலை மெய்யென
ஒத்துத் தேறுதல் ஒவ்வுமோ ஐயா!
காய்சினக் களிறுகள் கட்டறுத் தெங்கும்
பாய்தலைக் கண்டு தானும் பாய்ந்தனன்;
அறிவுடை யானேல் அடுகளிற் றின்முன்
செறிய வரு வானோ? திறம்பாச் சித்த
மருத்துவர் தந்த மருந்துதலைத் தேய்த்துப்
பொருந்த இவ்வாற்றின் புனல்முழுக் காட்டக்
கூட்டி வந்தேனே; கொல்களி றெறிய
நீட்டி நிமிர்ந்து நிலங்கி டக்கவோ?

*பேரிசை - பெரும்புகழ், ஆர்ந்தவன் - பொருந்தியவன், கோயில் - அரண்மனை, செறிய - நெருங்க, திறம்பா - மாறுபடாத, எறிய - தூக்கி வீச.*



ஒருவா ரத்தில் உன்மகன் அறிவினைப்
பெறுவா னென்ற பிழையிலா மருத்துவன்
மொழிமகிழ்ந் தேனே! முதிர்படு வினையால்
விழிமூ டினையே! வீவுற் றனையோ?
**காவலன் :** திரியா அறிவுத் தெளிவுடை யானேல்
கரியின் எதிரிற் கலங்காது வருதலும்
உரியவை அல்லன உளறலும் குதித்தலும்
புரியான்; இவன்றான் புரிந்தது நோக்கின்
பித்தன் என்பது பித்தனும் அறிவான்;
கொத்தலர் தாராய்! கோயில் செல்குவம்!
**கணியன் :** வீழ்ந்துள மகனை வீட்டுக் கெடுத்திட
ஆய்ந்த புலத்தீர்! உதவுதல் அவாவினேன்.
**காவலன் :** முதுமையும் துன்பமும் முதிர்ந்தவன்; ஆதலின்
எதுவும் செய்திட இயலான்; எனவே
மயக்குற் றிருப்பான் மனையிடைச் சேர்க்க
செயற்குரி யனயாம் செய்குவம் விரைந்தே.

ஆசிரியம் அடி — 188
ஆசிரிய விருத்தம் 11, அடி—44
மொத்த அடி 232

———

# இரண்டாம் அங்கம்

## மூன்றும் களம்

இடம்: *வெளியம்—பரணர் இல்லம்.*

உறுப்பினர்: *பரணர், அணிவளை.*

காலம்: *காலை.*

*[பரணர் வையாவிக்கோ பேகன் வரலாற்றை ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுத மனங்கொள்கிறார். அணிவளை அங்கு வந்து வாயிற் கூடத்தில் பரணர் காணாது அமர்கிறாள்]*

*[அணிவளை தனக்குள்]*

**அணிவளை:** ஏடும் ஆணியும் கையி லெடுத்துப்
பாடும் வேளையிது ; பாவியேன் யானுறு
துன்ப நெருப்பினைத் தூயவர் வாய்மொழி
அன்புப் புனலால் அவித்திட வந்தேன் ;
காலமறி யாது கற்பனை நீக்கின்
ஞாலம் பெறுமோர் நற்றமிழ்ப் பாடல்
பிறவா தொழித்த பிழைக்கா ளாவேன் ;
சிறவா விச்செயல் செய்திட விழையேன் ;
வேட்டவை எல்லாம் விரும்பிய பாடலாய்
ஏட்டில் வரும்வரை இவணமர்ந் திருப்பேன் ;
*[அணிவளை அமரப் பரணர் பாடுகிறார்]*

---

*ஆணி - எழுத்தாணி, சிறவா - சிறப்பில்லாத, வேட்டவை - விரும்பிய.*



**பரணர்:** 1. காரே தவழும் மலையெல்லாம் ;
கனியே தவழும் கிளையெல்லாம்
ஊரே தவழும் வழியெல்லாம் ;
உவப்பே தவழும் உளமெல்லாம்.

2. நீராற் பொலியும் யாறெல்லாம் ;
நெல்லாற் பொலியும் நிலமெல்லாம் ;
வாராற் பொலியும் வளைக்கையார்
வண்கைப் பொலியும் அறமெல்லாம்.

3. அந்தி மலர்ந்தால் அகப்பாடல்
ஆர்க்கும் ; இருள்போய்ச் செங்கதிரோன்
முந்தி எழுந்தால் புறப்பாடல்
மோதி ஒலிக்கும் பொதினிமலை.

4. கருங்கற் குன்றில் வெள்ளருவிக்
கால்கள் பலவாய்ப் பிளவுற்று
வருங்கால் புடலைப் பந்தரென
வயங்கும் பேகன் பொதினிமலை.

5. கல்லாக் கடுவன் கிளைதோறும்
களிப்பில் குந்தும் ; வால்தொங்க
எல்லா மரமும் ஆல்மரமாய்
இலங்கும் பேகன் பொதினிமலை.

6. கழையின் முடியில் தேன்தூங்கக்
கனியின் சாற்றில் சுவைதூங்க
வழையின் இணரில் மணம்தூங்க
வளங்கள் தூங்கும் பொதினிமலை.

---

*கார் - மேகம், வாரால் - கச்சினால், வண்கை-கொடைக்கை, கால்கள் - வாய்க்கால்கள், இலங்கும் - விளங்கும், கழை - மூங்கில், தூங்க - துயில, வழை - சுரபுன்னை, இணர் - பூங்கொத்து.*

7\. வளமே தூங்கிப் பொலிவதனால்
வறுமை தூங்கி வறங்கொள்ளும்;
உளமே சிறந்த சான்றோரின்
ஓங்கும் பேகன் பொதினிமலை.

8\. படையின் மலைந்த பொருளெல்லாம்
பசியின் மலைந்தார்க் கருளியதால்
கொடையின் மலையாய் விளங்குமெழிற்
கோமான் பேகன் பொதினிமலை.

9\. முல்லை வேலி நல்லூரன்
மொய்ம்பும் வளமு மிகப்பெற்றான்;
இல்லை எனுஞ்சொல் இயம்புதலில்
இயலா வறுமை வயப்பட்டான்.

10\. கண்ணகி என்னும் பெயராளைக்
காதல் சிறக்கும் உளத்தாளைப்
பெண்ணிற் சிறந்த மனையாளாப்
பெற்றான் அனைத்தும் பெற்றானால்.

11\. காதற் கொழுநன் நலம்பேணிக்
கடமைகள் யாவும் வழுவாமல்
மாதர்க் குரிய அறமெல்லாம்
மண்ணிற் றழைக்க வருநாளில்.

12\. அறமே புரிவார் தம்வாழ்வில்
அவலம் வரலும், அறஞ்சாய
மறமே புரிவார் மனம்போல
மகிழ்வே வரலும் இயல்பன்றோ.

13\. ஆடல் வல்லாள் ஒருத்திநலம்
அணிதேர்ப் பேகன் நயந்ததனால்
வாடல் ஆனாள்; கொல்லுலையின்
வருந்தல் ஆனாள் வாட்கண்ணாள்.

---

**வறுமை தூங்கி - வறுமை சோர்ந்து, வறம் - வறட்சி, படையின் மலைந்த - படையால் போரிட்டுக் கொணர்ந்த, வாடல் - வாடிய மலர்.**



14\. ஊழின் பிழையென் றுரைத்திடவோ?
உரவோன் பிழையென் றுரைத்திடவோ?
யாழின் இனிய மொழியாளின்
இருகண் கடலாய் மாறியதை.

15\. விருந்தெதிர் கோடல் மறந்தாளாய்
வீட்டின் கடமை துறந்தாளாய்
முருந்தேர் முறுவல் இழந்தாளாய்
முகத்தில் அவலம் படர்ந்தாளாய்

16\. கண்ணின் அருவி பொழிவாளாய்க்
கடலின் நெஞ்சம் அலைவாளாய்ப்
பண்ணின் திறமும் கசந்தாளாய்ப்
பகலாய் இரவும் ஆனாளால்.

17\. வருவான் என்னும் நசைசாய
வழங்கும் குடியின் இசைமாயப்
பொருவார் அழியப் புலம்புகளம்
போலத் துயரிற் புதையுண்டாள்.

18\. பொய்யா நாவிற் கபிலனொடு
புரையில் பெருங்குன் றூர்கிழவன்
தொய்யாப் புலமை அரிசில்கிழான்
தொடரப் பொதினி மலைசென்றேம்.

19\. 'காரும் வந்தது விண்ணேறிக்
கலங்கு மடவீர்! காதலரின்
தேரும் வந்தது தெரிமி'னெனத்
தேனார் செவ்வழி பாடினமா.

---

**உரவோன் - பேகன், கடலின் - கடலைப் போல, நசை - விருப்பம், பொருவார் - போரிடுவார், புலம்பு - தனிமை, தொய்யா - தளர்ச்சியில்லாத, தெரிமின் - தெரிந்து கொள்ளுங்கள், செவ்வழி - செவ்வழிப்பண், பாடினமா - பாடினேமாக.**

20. பெய்தல் ஆனாக் கண்களினாள்
பீரம் மலர்ந்த மேனியினாள்
நெய்தல் கறங்கும் அழுகையினாள்
நேரா எம்முன் வரலானாள்.

21. தையால் இஃதென் ? நினக்குற்ற
தாவா விடுக்கண் யாதுகொலோ ?
உய்யா விழும உவரியுளே
ஒடுங்கு மகளே உரைப்பாயால் !

22. எம்மொழி கேட்டாள் ; உரையாளாய்
இருவிழி விரலாற் றுடையாளாய்
எம்மொழி கணவன் கொடைவல்லான்
எனக்கே யருளிய கொடையென்றாள்.

23. இங்கெவ் வுயிரும் நடுக்கின்றி
இன்பஞ் சூழ வருள்கின்ற
வண்கைப் பேகன் திருநாட்டில்
வாழும் நினக்கும் ஒருகுறையா ?

24. என்றேம் மொழியைக் கேட்குங்கால்
எழுதாக் கண்ணில் நீர்பெருக
நன்றே புரியும் கொடைப்பேகன்
நங்காய் உன்றன் உறவாமோ ?

25. உறவா யிருந்தேம் முன்னாளில் ;
உண்ணா வேம்பே மிந்நாளில் ;
சிறவா ஒருத்தி நலம்வேட்டுச்
சென்றான் மனையென் றிருக்கின்றேன்.

---

ஆனா - நீங்காத, நெய்தல், நெய்தற்பண், விழுமஉவரி - துன்பக்கடல், பீரம் - பீர்க்க மலர், எம்மொழி கணவன் - எம்மை நீங்கிய கணவன், எழுதாக் கண்ணில் - மைதீட்டப் பெறாத கண்ணில், மனையென்று - மனைவி என்று பெயரளவில் மட்டும்.



26. நன்றே புரிவான் உயிர்க்கெல்லாம்
நாடன் கொடுத்த துயரெம்மைத்
தின்றே யொழிய வாழ்கின்றேன் ;
தீரா விடும்பைக் குறவானேன் ;

27. கேட்டேம் கேட்டுக் கிளக்ககிலாக்
கிளர்வே கொண்டேம் துயர்நீக்க
வேட்டேம் 'அன்னாய் நினைத்துயரின்
விடுவிப் பே'மென் றுரைத்தேமால்.

28. வள்ளல் ஒருவன் சிறுபிழையால்
வடுவில் மனையாள் நல்வாழ்க்கை
பொள்ளல் உடைத்தாய்ப் போகாமல்
புலவீர் தடுத்தல் கடனென்றேன்.

29. வீட்டில் அமைதி தவழாமல்
வியனாட் டமைதி எவன்தோன்றும் ?
பாட்டில் வல்லீர் இதுகாக்கப்
பாடல் நமது பண்பன்றோ ?

30. வாய்மொழிக் கபிலன் இதுமொழிய
வடுவில் புலவர் அரிசில்கிழார்
'காய்மொழி சொலினும் பேகனிவள்
கடிமனை உய்த்தல் கட'னென்றார்.

31. 'பரிசில் நமக்குப் பெரிதில்லை ;
பனிவார் கண்ணள் துயர்நீக்கக்
குரிசில் இவள்பாற் கொடுவரலே
குறியாப் பரிசில் நமக்கெல்லாம்'.

---

இடும்பை - துன்பம், வேட்டேம் - விரும்பினேம், வடுவில் - குற்றமில்லாத, பொள்ளல் - குற்றம், வியனாடு - பெரிய நாடு, எவன் - எவ்வாறு, காய்மொழி - சினச்சொல், கடிமனை - காவல் அமைந்த வீடு, பனிவார் கண்ணள் - நீரொழுகும் கண்ணள், குரிசில் - பேகன், குறியா - வரையறுக்காத.

32\. என்றார் பெருங்குன் றூர்கிழவர் ;
இடக்கை யாழின் இசைகூட்டிக்
கன்றார் வத்தால் மடிவீங்கும்
காரா போல்வான் மனைசேர்ந்தேம்.

33\. "முல்லை சிரித்தது புறவெல்லாம் ;
முகில்பாய் வானம் எழுவண்ண
வில்லை வளைத்து மழைப்பகழி
விடுக்க நிலத்தின் நெஞ்செல்லாம்

34\. செம்புனல் வெள்ளம் குருதியெனத்
திரளும் வண்ணம் வந்ததுகார் ;
வெம்புநல் மடவார் துயர்தீர்க்க
வினைமாண் டேர்கள் எழுந்தனவால்'

35\. காரி னியல்பை யாம்பாடக்
கதிர்செய் தாமம் தலைக்கொண்டான்
நீரின் றண்ணிய நோக்கினனா
நெடுவாய் எதிர்ந்து கொண்டானால்.

36\. வாட்டம் நீங்கத் தமிழ்பாடி
வருவார் புலவர் தனித்தின்றோ
கூட்ட மாகி எழுந்தருளல்
குறிப்ப தோரேன் எனச்சொன்னான்.

37\. கூட்டம் விழைவாய் ! முறையல்லாக்
கூட்டம் விழைவார் போலன்றிக்
கூட்டம், நன்மை செயலல்லால்
கொடுமை இழையா தென்றேமால்,

---

*கன்றார் வத்தால் - கன்று + ஆர்வத்தால், காரா - கரிய பசு, புறவு - காடு, பகழி - அம்பு, வெம்பும் - மனம் புழுங்கும், வினை மாண் - தொழிற் சிறப்பமைந்த, கதிர் செய்தாமம் - ஒளிவீசும் மணிக்கோவை, நெடுவாய் - நெடிய வாயிலில், கூட்டம் விழை வாய் - கூடியிருக்க விரும்புகின்றவனே.*



38\. மல்லின் வேறல் எளிதல்லால்
வாய்மைப் புலவீர் நும்மோடு
சொல்லின் வேறல் எளிதாமோ ?
சொல்வீர் நுங்கள் விழைவென்னா

39\. நயப்பார் ஒருவர் பலபரிசில்
நாட ! இதுநீ முற்கண்டாய் ;
வியப்பாய் ! நாங்கள் நால்வேமும்
விழையும் பரிசில் ஒன்றேயாம் !

40\. நால்வீர் விழைவும் வேறுபடின்
நல்கேன் என்று நாட்டின்கண்
போல்வீர் பரிசில் ஒன்றெமக்குப்
போது மென்றீர் : இதுதகுமோ ?

41\. என்றாற் றடுத்தேம் 'இசைமிக்காய் !
ஈயாய் என்னும் கொள்கையிலை ;
என்றான் வருவார் விழைந்தாலும்
ஈதல் வல்லாய் அறிவோமால்.

42\. வசையில் இசையால் வான்கொள்ள
வளர்தல் நினக்குத் தகுவதெனும்
நசையால் பரிசில் ஒன்றுன்னை
நயந்தே மல்லால் வேறில்லை ;

43\. ஒன்று பலவா என்றெண்ணி
ஒடுங்கல் ! கொடையின் பயனிங்கு
நன்று வன்று எனக்காணல்
நன்மை விளைக்கும்' என்றேமால் :

---

*மல்லின் - மற்போரினால், வேறல் - வெல்லுதல், என்றாற் றடுத்தேம் - என்றானைத் தடுத்து, என்றான் - (என் + தான்) என்ன தான், வசையில் - பழியில்லாத, வான்கொள்ள - விண்ணளாவ, ஒடுங்கல் - தளராதே.*

44. முன்னிய திதுவே யாமாயின்
மூத்தீர் ! நுங்கள் மொழிப்பொருளைச்
சென்னிய தாகக் கொண்டேற்குச்
செப்புக உள்ளம் சிறந்ததெனு

45. 'நின்புகழ் பாடி நெடுங்கோயில்
நெருநல் புக்கேம் ; நெடுவேலாய் !
என்புகல் வேன்யான் ! நின்மனையாள்
இருவிழி நிறுத்தல் இயலாளாய்

46. குழலினை வதுபோல் அழுதாளாய்க்
கொடுந்துயர் வாயில் நைந்தாளால் ;
அழலுமிழ் வேலாய் ! இதுமாற்றி
அறஞ்செய் இதுவெம் பரிசிலெ'னும்

47. வாய்மொழிக் கபிலன் மொழிகேட்டும்
வையா விக்கோ வாய்திறந்தோர்
ஏய்மொழி கூறு திருந்ததனல்
யாமும் கூறல் மேயினமால்.

48. 'காட்டு மயிலின் நடுக்கத்தைக்
களைந்தாய் என்பர் ; கலங்கும்நின்
வீட்டு மயிலின் நடுக்கத்தை
விலக்கா திருத்தல் என்கருதி ?

49. முல்லை வேலி நல்லூரார்
முறைமை தவறிப் போவாரேல்
இல்லை உலகில் நல்லனவே
என்பதை யோர்தல் வேண்டுகிறேன்.

---

முன்னியது - கருதியது, சென்னியதாக - தலைமேலதாக, சிறந்ததெனு - சிறந்தது என்று கூற. நெருநல் புக்கேம்-நேற்றுப் புகுந்தேம், குழலினைவதுபோல் - குழல் இரங்கி யொலிப்பது போல, அழலுமிழ் - நெருப்பை உமிழ்கின்ற, ஏய்மொழி - பொருந்திய சொல், களைந்தாய் - நீக்கினுய், முல்லை வேலி நல்லூரார் - முல்லைக்கொடியை வேலியாகக் கொண்ட ஊரார், கற்பை வேலியாகக் கொண்ட நல்ல ஊரவர், முல்லை - கற்பு.



50. மடுக்கும் பசியோ எமக்கில்லை ;
மணியும் பொன்னும் பெரிதில்லை ;
நடுக்கும் துயரின் அவள்மீள
நயப்ப தல்லால் பரிசில்லை.

51. உயன்மா றறியா துலமருவாள்
ஒடுக்கம் தவிர்க்க உறுவளியின்
இயன்மா நெடுந்தேர் ஏறுவையால்
இதுவெம் பரிசில்' என்றேனல்.

52. 'நெய்யணி மறந்த நெடுங்குழலில்
நிகரில் வான்பூ அணிகொள்ள
ஐமலர்த் தாராய் தாழ்த்தாமல்
அணிதேர் பூணுக நின்மாவே'

53. என்ருர் பிறரும் இதுகேட்டும்
இயம்பா ஞக இருந்தானைப்
'பொன்ருர் மார்ப எமக்கென்ன
புகல விருப்பம் கொண்டுள்ளாய்.

54. அழியப் படுமோர் பொருள்வெஃகி
அழியாப் பொருளை இழப்பாயோ ?
கழியப் புகழ்மை கொண்டாய்நீ
கறைசேர் வாழ்வே நயப்பாயோ ?

55. எவ்வழி மேலோர் அவ்வழியே
இயங்கும் உலகம் எனக்கண்டோம் ;
இவ்வழி யுன்வழி ஆமாயின்
இனியிந் நாட்டின் நிலையாதாம் ?

---

மடுக்கும் - உண்ணும், உயன்மாறு - உய்யும் நெறி, உறுவளியின் இயன்மா - புயலினும் விரைந்து செல்லும் குதிரை, வான்பூ - பெருமைக்குரிய பூ—முல்லைப்பூ, ஐமலர் - அழகிய மலர், வெஃகி - விரும்பி, கறை - குற்றம்.

56. கொண்டான் உலகில் வாழ்கையிலும்
குழலில் நெய்யும் வெண்மலரும்
பெண்டான் அணிய இயலாத
பேரவ லம்போற் பிறிதுண்டோ ?

57. வீடுகள் தோறும் கண்ணகியர்
விம்மிக் குலைந்து வீழ்என்புக்
கூடுக ளாக விரும்புதியேல்
குறித்தது செய்க கூர்வேலாய் ?'

58. என்றே மொழியக் கேட்டதனால்
ஈரங் கசியும் விழியுடையான்
'என்றே மொழியின் இன்னலெலாம்
இன்னே இறுக' என்றானால்.

59. பொன்னேர் மலரை யவள்சூடப்
புனலிற் புனலாய் உளஞ்சேர
இன்னே எழுக என்றேமுன்
இனநா மணித்தேர் எழுந்ததுவே.

60. விரும்பும் பரிசில் கொடுத்ததனால்
வீயாக் களிப்பில் எம்முடனே
அரும்பும் மலர்ந்து சிரிக்கின்ற
அடுக்கம் நீங்கிச் சென்றேமால்.

*[பாடல் முடிந்தது. அணிவளை தனக்குள் கூறிக்கொள்கிறாள்]*

**அணிவளை :** பெண்ணாப் பிறந்த பிழைக்கோ இத்தனை
எண்ணாத் துயரம் இழைத்தனன் பேகன் ;
பரிசில் வாழ்க்கையர் பயனுற வாழும்
வரிசைதான் என்னே ! வற்றாக் கண்ணளா

---

*கொண்டான் - கணவன், பெண்டான் - பெண்+தான், என்றே மொழியின் - என்+தேமொழியின், இன்னே இறுக - இப்பொழுதே அழிக, பொன்னேர் - பொன்னை ஒத்த, இனநா மணி - இனமாகிய பல மணிகளை, அடுக்கம் - மலை.*



அழுவாள் ஒருத்தியின் அவலம் துடைத்தற்கு
எழுவார் புலவர் என்பதை எண்ணின்
தொழுவதே யல்லால் சொல்லவும் படுமோ ?
விழுப்புகழ் மேய வேந்தனே எனினும்
இழுக்குறல் செயினவற் கிடித்துரை கூறல்
ஒழுக்கென எண்ணும் உரமும் ஆண்மையும்
என்றும் வாழ்க ! இசைகெழு புலவோர்
ஒன்றும் படியா உரைத்தன கேட்டபின்
என்பிழை கூற விவரியார் என்னாது
தன்பிழை நாணித் தாவிலா நெடுந்தேர்
ஏறிப் படர்ந்துதன் இல்லம் வைகிய
மாறிலாப் பேகனின் மனமென்றும் வாழ்க !
அவலமும் குழப்பமும் அலைத்துச் சுழற்றக்
கவனெறிப் பட்டவென் கலங்கிய நெஞ்சும்
உண்ணெகிழ்ந் துருகி யொருவழிப் பட்டது
கண்ணகி பேகன் கதையா லன்றோ ?

*[பரணர் வெளியில் வந்து]*

**பரணர் :** வருக அன்னாய்! வாயிற் கூடத்தில்
ஒருசிறை யமர்ந்ததென் உள்நுழை யாமல் ?

**அணிவளை :** எந்தாய் சற்றுமுன் இவண்வந் தமர்ந்தேன் ;
கொந்தார் குழலி கண்ணகிக் குற்றன
பாடியது கேட்டுப் பருவரல் உற்றேன் ;
வாடியது கேட்டுளம் வாடினேன் ; அவள்துயர்
மாற்றினீர் என்னும் மங்கலத் தாலுளம்
ஆற்றினேன் ; நெஞ்சத் தவலம் நீங்கினேன் ;
இடையில் நுழையின் இனியவோர் காப்பியம்
தடையால் நிற்கும் ஆதலின் தவிர்ந்தேன் ;
பெண்ணாப் பிறந்தோர் யாவரும் நும்பெயர்
கண்ணாக் கோடலே கடமையாம் ஐயா !

**பரணர் :** அன்னாய் அணிவளை ! ஆர்வமிக் கூரச்

---

*கவனெறி - (கவல்+நெறி) பிளவுபட்ட நெறி, பருவரல் - துன்பம், மங்கலத்தால் - நன்மையினால்.*

சொன்னாய் இவ்வணம்; சோர்ந்தவர்க் காக
உதவுதல் மானிடர்க் குறுகடன் அன்றோ?
புதுவதோ விச்செயல்? முன்னோர் புரிந்ததே!
கண்ணகி யொருத்தியின் கண்ணீர் எனநான்
எண்ணுதல் செய்யேன்; இதுபோல் நிகழ்தல்
தமிழக் குலமே தழைக்காது மண்ணில்
அமிழச் செய்வ தாமெனும் கொள்கையேன்;
நாடுங் குலமும் நனிசிறந் தோங்கப்
பீடுசெயல் புரியப் பெட்பார் யாவரும்
புரிவதே செய்தனம்; பொலங்குழை இதற்கோ
விரிவுபட மொழிந்தனை! விடுக்கநீ மகளே!
வந்தது குறித்து வாய்மொழி யலையால்;

**அணிவளை:** தந்தாய்! துயரால் தவிக்கு மெனக்கோர்
அருள்மொழி கூறியென் அவலம் இரிய
மருளொழித் தமைதி மல்குவிப் பாயென
ஓடி வந்துளேன்;

**பரணர்:** உறுகவல் நீங்குதி!
நாடிய வெல்லாம் நண்ணலும் இல்லை:
வெறுப்பன எல்லாம் விலகலும் இல்லை;
ஒறுப்பன வரினஃ துவப்பன வாக
எண்ணுத லிம்மனக் கெளிதாய் விடுமேல்
நண்ணுமெத் துன்பமும் நலிவிக்கு மாறிலை;
வேம்பின் தளிரை விரும்பியுண் பவரும்,
சாந்திற் றொடுத்த தீந்தேன் வெறுநரும்;
கண்டன மல்லமோ? கருதின் ஒருபொருள்
உண்டெனத் தெளிகுவம்; உவப்பும் வெறுப்பும்
பொருளிடை யில்லை; பொருளை யவாவிய
மருளுறு மனத்தின் மாயத் தோற்றமெனக்

---

அமிழ - ஆழ்க, புரிய - செய்ய, பெட்பார் - விரும்புவார், மொழியலை - கூறவில்லை, மல்குவிப்பாய் - நிறைவிப்பாய், நண்ணல் - நெருங்கல், ஒறுப்பன - துன்புறுத்துவன, சாந்தில் - சந்தனத்தில், வெறுநர் - வெறுப்பவர்.



காணுவம்; காணின் கவலித் தலைய
நாணுவம்; மகளே! நால்வகைப் படையொடும்
போர்த்துணை யாகப் புன்னாட் டரசர்க்
கார்ப்பொடு சென்ற ஆஅய் எயினன்
செய்திகள் வந்தவா?

**அணிவளை:** செய்திகள் வருமேல்
உய்தியில் லாமல் உலமரு வேனா?
களங்கொளச் சென்றொரு வாரம் கழிந்ததே!
உளங்கொளும் செய்தி ஒன்றும்வர விலையே!
இன்னதென உரைக்க வியலா ஒருபொருள்
என்னுள் தோன்றி ஏதம் வருமென
அஞ்சுதல் செய்யும்; அண்மை நிகழ்வுகள்
எஞ்சுதல் இலாமல் எண்ணிப் பார்ப்பின்
நடுக்குறும் என்மனம்; நல்லன நயப்பார்க்
கெடுக்கவும் அறந்தான் கிளையாய் நிற்குமோ?
மணம்படு கோலம் மகிழ்வே மெனுநாள்
பிணம்படு கோலம் பெற்றனன் மகனும்;
எய்ப்பினில் உதவும் என்று தொகுத்த
வைப்புநிதி யத்தை வஞ்சனைக் கள்வர்
எஞ்சாது கவருதல் என்னத் தீவினை
வஞ்சனை யாளரான் மகனை இழந்தனம்;
பிணமா யேனும் பெறுமகற் கண்டேன்
நிணவேல் விழியை யதுவும் காண்கிலேன்;
விழுதெலாம் அழிய வீழ்தற் குரிய
பழுதுறு மரம்போல் படருழந் தேனான்;
எங்கடி படினும் இணைவுறும் குக்கல்
தங்கால் நொண்டுதல் தானே இயற்கை!
புன்னாட் டாங்கண் போர்முகஞ் சேர்ந்தார்
என்னா யினரோ? ஏதும் அறிகிலேன்;

---

கவலித்து - கவலைப்பட்டு, எய்ப்பினில் - இளைப்புற்ற காலத்தில், வைப்புநிதி - ஏமநிதி, நிணவேல் விழி - சுரும்பார் குழலி.

விரும்பாச் செய்திகள் வீழுமோ எனுந்துயர்
துரும்பாய் அலைக்கும்;

பரணர்: சுடரிழாய் இஃதென்?
தெருளா மாந்தரின் தேம்புதல்; சாம்புதல்;
வெருவுதல் ஒழிமதி! வெல்போர்க் களம்பல
கண்டதும், பகைபல கழித்ததும், வெற்றியைக்
கொண்டதும் சேரர் குடிப்படை யன்றோ?
ஆனை படுப்பினும் ஆட்டுக்குத் தாழுமோ?
எத்தனை வெற்றிகள் எயினன் குவித்துளான்?
இத்தனை தெரிந்தும் எண்ணு துலமரல்
பொருந்துவ தில்லை;

அணிவலை: புலமையீர்! முன்னர்
அருஞ்செருக் களமவர் அடைந்த போதெல்லாம்
துன்பக் கனவுகள் தோன்றிநெஞ் சத்தை
புண்படச் செய்ததில்; புதுவதிந் நிகழ்ச்சி;
அரும்பற மலர்ந்த நறும்பூ முல்லையில்
சுரும்புறும் வேளை, சுடர்வா ளெடுத்து
முதலோ டரிவது போலவும், முடிவில்
புதலோ டெரியுணல் போலவுங் கண்டேன்;
பிரியினும் கண்ணகி பேகனைப் பெற்றுள்
பெரியீர் எனக்குமப் பேறு கிடைக்குமா?

பரணர்: அழாஅல் மகளே! அவ்வணம் தீவினை
எழாஅ தென்றே என்னுளம் கருதும்;
எண்ணிய ஒன்றுநம் எதிருறல் கூடும்;
எண்ணிய வெல்லாம் எதிருறல் கூடுமோ?
கனவு பலித்தது கண்டுளேம்; கண்ட
கனவெலாம் பலித்தது காண்கிலே மாதலின்
மூடும் இமைக்குள் மூண்ட கனவுக்கு
வாடுதல் ஒழிமதி! வாளாற் பகையைப்

---

தெருளா - தெளியா, சுரும்பு - வண்டு, புதலோடு - தூறோடு.



புறந்தரச் செய்து புகுவான் வெற்றியொடு
மறக்குல மகளே மாற்றுக துயரே.

| | |
|---|---|
| ஆசிரியம் அடி | *127* |
| குறள் வெண் செந்துறை-60, அடி | *120* |
| ஆகமொத்த அடி | *247* |

# இரண்டாம் அங்கம்

## நான்காம் களம்

இடம்: *கோசரின் நியமம், கணியன் கீரன் இல்லம்.*

காலம்: *மாலை.*

உறுப்பினர்: *அருளாழி, அனிச்ச அடி.*

அருளாழி: (*தனக்குள்*)
பகைபடு வஞ்சரின் தகைபடாச் செயலால்
தொகைபட வந்துள துன்ப நிகழ்ச்சிகள்
நெஞ்சிடை முளைத்தும் நினைவிடை எழுந்தும்
மஞ்சிவர் மலையின் மதித்திட ஓங்கும்;
குழலிக் குற்ற கொடுமைகள் செவிப்பட
அழலின் புழுவாய் அவட்பயந் தோர்தாம்
துடித்திருப் பாரே! துயரான் நெஞ்சம்
வெடித்திருப் பாரே! வினையிலேற் பயந்த
இருமுது குரவரும் என்னா யினரோ?
ஒருமகற் பெற்றவர் உறுதுயர் நீங்கார்;
கலத்தையும் பொருளையும் கடலில் இழந்தயல்
நிலத்தில் கிடப்பவன் நேருமென் நிலையை
யார்வாய்க் கேட்குவர்! யாரொடுஞ் சூழா
தோர்வா யிலராய் ஒழிந்திருப் பாரோ!
(வெளிப்படையாக)
அடங்காச் செயலரின் அரும்பழி துடையாது

மஞ்சிவர் - மேகம் ஏறும், ஓர்வாய் - தெளியுமிடம்.



முடங்கிக் கிடக்க விதிமுந் தியதே!
பன்னரும் இந்தப் பழிச்செயல் சேர
மன்னரும் பிறரும் அறியநண் ணியதோ?
எதுநான் மொழிவேன்! எதுநான் ஒழிவேன்!
எதுநான் நினைவேன்! எதுநான் தவிர்வேன்!

அனிச்ச அடி: மொழிவதும் ஒழிவதும் மூரித் தடக்கையாய்
பழியினைத் துடைக்கப் படருநெறி யில்லை;
புலம்பலும் கலங்கலும் போற்றா திருத்தல்
நலம்பட வருமென நம்புகின் றனையோ?
அமுதுண விழைந்தாய் நஞ்சும் உண்பையோ!
எண்ணி எண்ணி இரங்கிக் கிடத்தல்
பெண்ணிய லாரின் பெருங்குண மன்றோ?
பெருமழை பொழியினும் உறுவளி தாக்கினும்
வெருவரு கதிரோன் வெயிலாற் றெறினும்
நடுக்கிலா திருக்கு மடுக்கம் போல
ஒடுக்கிலா தெழூஉ முள்ளம் காட்டுதல்
ஆடவர்க் குரிய தாமெனக் கூறுவர்;
பீடவர்க் கதுவெனப் பேசலும் பேசுவர்;
இடைக்கண் முரியா தெடுத்த வினைமுடிக்கும்
நடக்கையை யென்றுனை நம்பியுள் ளேமை
வஞ்சியா திருக்க வழுத்துவெ னின்னை;

அருளாழி: பஞ்சியின் மெல்லடிப் பாவாய்! நீற்றால்
புதைபடு நெருப்பைப் போன்றுள தென்னுளம்;
துதைபடு நினைவெனும் தென்கால் துரக்குமேல்
துன்ப நெருப்புத் தோன்றி என்னுள்ளே
என்புட் சுடுதலின் எவ்வணம் உய்குவென்!

[*வாசலில் துறவியார் ஒருவர் வருகிறார்*]

பன்னரும் - சொல்லுதற்கரிய, ஒழிவதும் - சொல்லாமல் விடுவதும், படரும் - செல்லும், வெயிலாற் றெறினும் - வெப்பக் கதிர்களால் அழித்தாலும், எழூஉ - எழுகின்ற, பீடு - பெருமை, பஞ்சியின் - பஞ்சினும், நீற்றால் - சாம்பலால், துதைபடு - நெருங்கிய, தென்கால் - தென்றல், துரக்குமேல் - அகற்றுமேல், என்புள் - எலும்புக்குள்.

**அனிச்ச :** யாரவர் வாசலில்?
**வந்தவர் :** அன்னாய்! பிறிதோர்
ஊரவன்; கணியனூர் உறையுளிது தானே?
**அனிச்ச :** பெரியீர் வருக! பிழையிலாத் துறவுக்
குரியீர் அமர்க!
**வந்தவர் :** (அருளாழியைச் சுட்டிக்காட்டி) குழந்தாய்! யாரிவர்?
**அனிச்ச :** (தனக்குள்)
கொடியன் மிஞிலியின் ஒற்றன் கொல்லோ?
படிறன் துறவுப் படிவம்கொண் டானோ?
உண்மை யுரைப்பின் உய்கலாத் துன்பம்
நண்ணுமிப் பொழுதே; யானென் செய்குவென்!
ஒவ்வா தாயினும் உண்மை உரைத்திலேன்!
(வெளிப்படையாக)
துவ்வா நறவினர்; தொலைநாட்டு வணிகர்;
உடல்நல மின்மையால் இவணுறை கின்றார்;
தடவலி என்னும் பெயரைத் தரித்தவர்;
**வந்தவர் :** மூன்று காலமும் முற்றஉணர்ந் தேமைத்
தேன்றுளி மொழியாய் தெருமர மொழிந்தனை;
ஏனடா தென்னையில் ஏறினாய் என்றால்
ஆவிற் கறுகு பறிக்கும் அவாவினால்
ஏறினேன் என்றவற் கேதடா தென்னையில்
அறுகெனக் கேட்டால் அதுதான் காண்கிலா
திறங்குகின் றேனே என்னும் எத்தனின்
நன்கு தெரித்தனை! நகைபட மொழிந்தனை!
வஞ்சகன் என்றெனை மதித்ததால் இவ்வணம்
நெஞ்சி லுள்ளதை நீக்கினை; இவனோ
தொலைநாட்டு வாணிகன் அல்லன்; சேரரின்
கொலைநாட்டு வாட்படைக் குரிசில்; பெயரும்
தடவலி யில்லை; தாவிலரு ளாழி;

---

*படிறன் - வஞ்சகன், படிவம் - உருவம், உய்கலா - உய்ய முடியாத, தெருமர - மயங்குமாறு, கொலைநாட்டு - கொல்லுதலை நிலைநிறுத்தும்.*



கடலென மண்டிய கழியாத் துன்பினுள்
நெஞ்சிடை விளைந்த வஞ்சின முடிக்க
வஞ்சியுன் னில்லம் வதிந்துளா னிதனை
என்னை மறைத்தல் இயலுமோ? இடையில்
மின்னை மறைத்த மெல்லியற் பாவாய்!
**அனிச்ச :** நெஞ்சின் மறையை எஞ்சாது மொழிந்தீர்!
வெஞ்சினங் கொள்ளல் விலக்க வேண்டினென்!
வாயிலாச் சிறுமியின் வறுமொழி என்று
காயிலா தென்னைக் கருதுதல் புரிக!
ஆன்ற பெரியீர்! அருளாழி நெஞ்சில்
ஏன்றுள யாவும் இனிதுநிறை வுறுமோ?
**வந்தவர் :** நறுமா கொன்று நாட்டிற் போக்குங்
கறுவு முடிந்தது; களத்திற் பகையை
எஞ்சா தழித்தலே எஞ்சி யிருப்பது;
துஞ்சா தனைவரும் தொழிற்படி னஃதும்
முற்ற முடியும்;
**அருளாழி :** மூத்தீர்! இவ்வெலாம்
தெற்றென மொழிந்தெமைத் தேற்றினீர் யாரென
அறிய விழைந்தனன் அருளுதிர்!
**வந்தவர் :** கெடுக்கும்
சிறியன விழையாச் சிந்தையாய்! என்னைக்
கூர்ந்து நோக்குதி!

*[வந்தவர் தம் வேடத்தைக் களைய அருளாழி எழுந்து நிற்க அனிச்சஅடியும் எழுந்து நிற்கிறாள்]*

**அருளாழி :** குட்டுவ மன்னரா?
தேர்ந்தறி யாது செய்பிழை பொறுக்க!
ஐயம் சிறிதும் அரும்பா வகையிற்
செய்தவ வேடம் சிறந்தது நும்மிடம்;

---

*என்னை - எனக்கு, மறையை - இரகசியத்தை, வறுமொழி - வெறுமொழி, காயிலாது - சினவாது, ஏன்றுள - ஏற்றுக் கொண்டுள்ளன, கறுவு - சினம், துஞ்சாது - சோராது, தெற்றென - தெளிவாக.*

சேரநாட் டரசியற் செய்திகள் ஒன்றும்
சேர வியலாச் சிறைப்பட் டாலென
ஒதுக்குற்று வாழும் ஊழ்வினை வாய்த்தேன் ;
பதுக்குற்றுத் திரியும் பாழ்த்த வாழ்வினேன் ;
அற்றம் படுமென் அவலவாழ் வுக்காச்
சுற்றமும் நட்பும் உற்றன கூறுக ;
ஈன்ற குயிற்கும் வளர்த்தெடுத் திரையினைக்
கான்று கொடுத்த காக்கைக்கும் பயன்படா
தேகித் தனியே இரங்கிசை பாடும்
குயிற்பார்ப் பாகிக் குமைகின் றேனல் !

குட்டுவன் : துன்னரு வலியோய் ! துன்ப நிகழ்ச்சிகள்
எண்ணில வாகி எதிருறும் போதும்
கலங்கா உள்ளம் காட்டலே தறுகண் ;
பொலங்கா நுழையினும், போர்க்களம் புகினும்,
ஒன்றே என்னும் உறுதியிற் பிறழார்
வென்றே விடுவர் என்பது விளங்குவை ;
உயிருடம் பியற்கையின் உறவும் பகையும்
செயிரிலா தறிந்தவர் மயர்வினைக் கொள்ளார் ;
'நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம்' என்னும் முதுமொழி
உணர்ந்தனம் அலமோ ? உரவோய் ! நினக்கும்
வணரைம் பாற்கும் வந்ததை யறிந்த
எயினன் பட்டது யார்படு வார்கள் !
வயின்வயின் தாக்கி வஞ்சகன் மிஞிலியைத்
தன்வாட் படுத்தத் தடந்தோள் கொட்டிப்
புன்னாட் டரசின் போர்த்துணை யாகிச்
சென்றான் எயினன் ; செருக்கள முழுமையும்
நின்றான் ; சுழன்றான் ; நெடுவாட் குணவாக்
கொன்றான் பலரைக் குறித்ததுகொ ளானாய்

---

பதுக்குற்று - மறைவுற்று, பாழ்த்த - பாழ்பட்ட, அற்றம் - அழிவு, பொலங்கா - அழகிய சோலை, மயர்வினை - மயக்கத்தை, புணை - தெப்பம், வணரைம்பால் - சுரும்பார் குழலி, வயின் வயின் - இடந்தோறும், வாட்படுத்த - வாளினாற் கொல்ல.



நின்றான் நடுகல் ; நிகழ்விது கேட்டுப்
பனையின் வீழ்ந்தவற் கரிமிதித் தாலென
அணிவளை யாட்டி ஆவி ஒடுங்கினள் :
பிணிவளை நீங்காது, பெய்ம்மலர் களையாது,
மணவணி ஒழியாது, மங்கலஞ் சிதையாது,
கணவன் தாணிழல் கண்ணினாள் திறத்தை
ஊரவர் ஏத்தி யுரைத்து வியந்தனர் ;
யாரெது மொழியினும் ஏற்கா ராகி
நாடேய் தோறும் நலந்தேய்ந் தாராய்,
வாடேய் விழியின் வருகணீர் அறாஅது,
வருவாய் என்னும் வற்றா நசையால்
இருமுது குரவரும் இருக்கின் றனரால் ;
நிலத்தின் அடியில் நிகழினும் மறையைப்
புலத்தின் திறத்தால் பொருந்துவழிக் கொணரும்
ஒற்றர்கள் துளுநாட் டுற்றன வனைத்தும்
தெற்றெனத் தரலால் தெளிந்தனம் ; மேலும்
கையி னீங்கிய பூழியைக் கவர்தல்
செய்யாது வாழ்தல் சிறுமை நமக்கெலாம் ;
இமைப்பொழு தாயினும் வாளா விருத்தல்
சுமைப்பொருள் நிலக்கெனத் தூற்றுமிவ் வையம் ;
துளுநாட் டரசைத் துடைக்கா திருத்தல்
வழுவாம் ; ஆதலின் திட்டம் வகுக்க
பௌவத் தீவில் பலரும் கூடி
எவ்வம் தொலைக்க எடுப்போம் முடிவென
நார்முடிச் சேரல் ஆணை நவின்றுளார் ;
பேரிருட் பக்கம் பிறங்குநள் ளிரவில்
நடக்குமவ் வாய்வில் நல்லுரை கூறக்

---

நின்றான் நடுகல் - நடுகலாகி நின்றான், நடுகல் - இறந்த வீரர்க்கு எடுக்கப்படும் நினைவுக்கல், பிணிவளை - கையில் பிணைந் திருந்த வளையல், பெய்ம்மலர் - கூந்தலில் வைத்த மலர், களையாது - நீக்காது, நாடேய் தோறும் - நாள்+தேய்தோறும், வாடேய் - வாள்+தேய், ஒளிதேய்ந்த, பூழி - பூழிநாடு, பேரிருட் பக்கம் - அமாவாசை.

கடக்கருந் தானைக் களநா யகன்நின்
வரப்பணித் துள்ளார் ; வருகநீ ! இனியான்
புறப்படு கின்றேன் ;

அருளாழி : புரையிலாய் ! யானும்
நின்னொடு வருகுவென் ;

குட்டுவன் : நினைப்பை ஒழிமதி !
நன்னர் உடலின் நலம்பெற் றந்நாள்
வருக ! இனியான் வஞ்சி மீள்குவென் ;

[குட்டுவன் சென்ற பின்னர் அவன் சென்ற திக்கையே நோக்கிய அருளாழியை நோக்கி]

அனிச்ச : ஒருதனி யாகி ஒன்றுமொழி யாமல்
சிலையாய் நேரம் செல்லலு மறியாது
நிலையாய் இருத்தல் நீங்குதி ! உளத்தில்
பல்வே றுணர்ச்சிகள் பாயினும் அவற்றைக்
கொல்வே லண்ணல் ! ஒருமுனைக் குவிக்க !,
எதனையும் உளம்புதைத் தேக்கறல் புரிதலின்
அதனைப் பிறர்பால் அறைத லமைதியைத்
தரூஉம் ; மலரொடு தளிருடை தரித்து
வரூஉஞ் சாரலின் வழிமருங் கெய்துவம் ;
வண்ணமும் கோலமும் வளருமச் சாரல்
எண்ணம் புதுக்கி இனிமை வழங்குமால் ;

[இருவரும் செல்கின்றனர்]

செம்புலம் படரும் தம்பலப் பூச்சிகள்
வந்தது காரெனும் வண்ணம் உணர்த்துமால் ;
செந்நீர்த் துளிகள் சிந்திக் கிடப்பபோல்
கண்ணீர்த் தலைக்குமக் கவின்மிகு பூச்சிகள் ;
அருவினை மலிந்த ஆரப் பேழையுள்

---

கடக்கருந்தானை - வெற்றிகொளற்கரிய படை, நின் - நின்னை, ஏக்கறல் - இளைத்துச் சோர்தல், வண்ணமும் - நிறமும், கோலமும் - அழகும், தம்பலப் பூச்சி - செந்நிறப் பூச்சி, கண்ணீர்த் தலைக்கும் - கண்ணை இழுத்து அலைக்கும், அருவினை - அரிய வேலைப்பாடு, ஆரப்பேழை - சந்தனப் பேழை.



உருவொளிர் செம்மணி ஒளிகான் றன்ன
பருவயி றுடைந்த பாகற் பழங்கள்
வருவழி மருங்கில் வருவார் மருட்டிக்
கிடத்தல் காணுதி ; கீழ்கடற் கொண்டல்
நடத்தல் காணுதி ; நடந்ததால் மண்ணில்
சிறுகொடி செடியெலாம் செழுமுகை காட்டிக்
குறுநகை புரியும் கோலங் காணியர் ;
காயா மலரெலாம் கவினுறப் பூத்து
மாயோன் கிடந்த வண்ணங் காட்டுமால் ;
காரர சாளன் கைகள் வழங்கிய
பேரருட் கொடைத்திறம் பெற்றுப் புறவெலாம்
புதிய வண்ணம் வதியப் பொலியுமால் ;

அருளாழி : நுதிவேற் கண்ணாய் ! நோக்குடை யெவரும்
பிணிப்புறல் அல்லால் பிழைப்புற வியலா
தணிபெற விறுத்த அழகின் சிரிப்பை
என்னென் றுரைப்பது ?

அனிச்ச : எதனினும் தீரா
உண்ணின்ற வருத்தம் ஒழிப்பது ;

அருளாழி : ஆயிழாய் !
நின்னொன் றுவினவுவல் ; நெடுந்துயர்ப் பட்டேன்
கண்ணொன்றி யிழிதரும் கண்ணீர் மாற்றியும்,
போக்கியும் அவலம் புரையிலா நல்வினை
ஊக்கியும், எனக்கோர் உறுதுணை யாவதில்
ஆற்றொணாப் பல்துயர் அடையினும் அத்துயர்
ஏற்றலை நயத்தல் எதனால் என்பதை
மொழிய வேண்டுவல் !

அனிச்ச : முழவுறழ் தோளாய் !
அழிபவர்க் குதவுதல் அன்றோ மானிடர்
கடமெனல் கண்டோம் !

---

உருவொளிர் - நிறம் விளங்கும், ஒளி கான்றன்ன - ஒளி உமிழ்ந்தாற் போன்று, செம்மணி - மாணிக்கக் கற்கள், கொண்டல் - மழை மேகம், காரரசாளன் - கார்காலம் என்னும் அரசன், வதிய - தங்க, அணிபெற விறுத்த - அழகுபெறத் தங்கிய.

அருளாழி : மடப்பிணை விழியாய்!
உதவுதல் மட்டும் புரியின் ஒப்புவென் ;
கதுவும் துன்பமும் தாங்குதல் கருதினே ;
என்பொருட் டெதற்கோ இத்தனே உழத்தல்?
மின்புரை இடையாய்! இதற்கென் விளம்புதி?

[ஒன்றும் மொழியாதிருக்க]

மறுமொழி கூறும் மனமுனக் கிலேயோ?

அனிச்ச : தெறுவினை வல்லாய்! தீவினை யாளரால்
எங்குலக் குற்றதோர் இடுக்கண் போக்கலில்
மங்குதல் பரிசெனின் மங்குதல் புரிகுவென் ;
கொங்கலர் தாராய்! குடிப்பழி துடையார்
இங்கொரு புழுவிற் கிணையென நினைகுவென் ;
நின்னுறு துயரை என்னுறு துயரா
எண்ணினெ ஞதலின் இவ்வணம் புரிந்தேன் ;
ஆதல் புரிந்துன் அரும்படர் களேதலில்
சாதல் வருமெனின் சலிப்பிலா தேற்பேன் ;
நோதல் ஒழிமதி! தீதிலாக் கதிரொளி
போதலின் இல்லம் போதுவம் விரைந்தே.

———

கதுவும் - தீண்டும், தெறுவினே - போர்வினே, மங்குதல் - சாதல், ஆதல் - நன்மை, போதுவம் - செல்லுவம்.

# மூன்றும் அங்கம்

## முதற் களம்

**இடம் :** நன்னன் அரண்மனே.

**உறுப்பினர் :** நன்னன், மிஞிலி, வேங்கைமுகன், மற்றும் பலர்.

மிஞிலி : ஞால மனைத்தும் நயந்திடு மொளிகால்
நீல மணியால் நிறைபொருள் குவிக்கும்
புன்ஞட் டரசைத் தன்ஞட் படுத்தியும்,
பன்ஞட் டரசும் பணிந்து திறைதரச்
சேரன் பூழியைப் போரிஞற் கவர்ந்தும்,
நீர்வரும் யவனரின் நெடுங்கல மறித்து
வானவர் வணிகம் வளரா து தடுத்தும்,
தானமர் வேட்டுத் தருக்கொடு சூழ்ந்து
கெடுமிட ஞடிக் கிளேயொடும் பொருத
நெடுமிடல் அஞ்சி படுகளம் சாய
நெஞ்ச வேட்டினில் நெடுவா ளாணியால்
எஞ்சா வெற்றியை எழுதிக் காட்டியும்,
வடுநீங்கு புகழை வான்ரெுட வைத்த
நெடுவேல் எங்கோ கொற்றம் நிலேஇயர் ;
பெற்றுள வெற்றி பெரிதா வதுபோல்
அற்றம் கருதுவார் ஆர்வமும் பெரிதால் ;

———

ஞாலம் - உலகம், ஒளிகால் - ஒளியுமிழும், மறித்து - தடுத்து, வானவர் – சேரர், தானமர் வேட்டு – போரைத் தான் விரும்பி, கெடுமிடன் – கெடுதற்குரிய இடம், நாடி – ஆராய்ந்து, அற்றம் - அழிவு.

பலருளர் நம்மைப் பகைக்குநர் எனினும்
சிலருளர் பகைமை வெளிப்படச் செய்பவர் :
அன்னநீ ராரின் ஆர்வம் பெருக்கி
ஒன்னலர்க் கெல்லாம் ஊன்றுகோ லாகி
நிற்கும் நார்முடிச் சேரலை நிலத்திடை
வட்கும் காலம் வாய்த்துள தோர்மின் !
மேற்புல வாணிகம் வேங்கை முகனைல்
காஅற் பகுதியும் காணா தொழியச்
சேரர் வருவாய் சிதைவுற் றுள்ளது ;
யாரவர்க் குதவுநர் ? ஒருவரு மிலரால் !
படையின் பெருக்கமும் தடைபட் டுள்ளது !
மடையின் பாயும் மாநீர்ப் பாய்வில்
தாக்குதல் தொடுக்கின் தளர்ந்த படையினர்
போக்கிட மிலராய்ப் புறங்கொடுத் தழிவர் !
வஞ்சியும் நமதுகை வசமாய் வருமேல்
எஞ்சிய புகழும் இல்லையிந் நிலத்தில் ;
வெற்றியின் பாதை கண்முன் விரிந்துளது ;
சற்றுநாம் தாழ்த்தல் சரியிலை ; பிறர்மறை
ஒற்றிக் கொணரும் உரவோர் தலைவர்
வெற்றிக் குரியன விளம்புதல் வேண்டினென் ;

**ஒற்றர் தலைவன் :** பொன்படு கானப் புரவல ! கொற்றம்
மண்படு காறும் மறிக்கிலா தோங்குக !
தொண்டியுள் வஞ்சியுள் துதைந்துள ஒற்றர்
தண்டிய செய்திகள் தருகுவென் ; வடக்கில்
புன்னாட் டாரின் போர்த்துணை யாகி
என்னாட் டாரும் இகழ்ந்திடு மாறு
தோற்றதும், எயினன் தொலைந்ததும் எண்ணிச்
சீற்றங் கொண்டுளன் சேரன் ; முன்னரே
பூழியை இழந்தது பொருனைய் உள்ளம்

ஒன்னலர் - பகைவர், வட்கும் - வணக்கும், மடையின் - மடையினின்றும், ஒற்றி - ஒற்றாய்ந்து, உரவோர் - அறிவுடையோர், மண்படுகாறும் - மண்ணுலகம் அழியுமட்டும், மறிக்கிலாது - தடையிலாது, தண்டிய - திரட்டிய.



ஆழியை மான அலைப்புண் டுள்ளனன் ;
பழியெலாம் துடைக்கவோர் வழியினைத் தேடும்
கழியவாக் கொண்டுளன் ; கருமத் தலைவர்கள்
காண்பதும், சூழ்ந்து கணிப்பதும், மறைச்செயல்
பூண்பதும் தெரியின் போருக் குரியன
இயற்றுவான் போன்மென எண்ணுகின் றேனன் ;
அயற்றுறை யாள ரனைவரும் கோயில்
நண்ணலும், ஆய்வு நடத்தலும், கருதின்
எண்ணலே சரியென இயம்புமா றுளது ;
உலைக்கள மெல்லாம் ஒய்வில தாகிக்
கொலைக்கரு விகளைக் குவித்துக் கொண்டுள ;
நால்வகைப் படையும் நாடொறும் குழுமி
ஏல்வகைப் பயிற்சியில் ஈடுபட் டுளவால் ;
குட்டுவன் பயிற்சியைக் குறித்து நடத்தலால்
மட்டலர் தாராய் ! மண்டமர்க் களத்தில்
படையின் தலைமை குட்டுவன் பாலே
அடையும் என்பதை அறிய வேண்டினென் ;
தரைச்செருக் குரியன தாவிலா தியற்றியும்
திரைச்செருக் குரியன செய்கிலா தொழிந்தும்
இருத்தலைக் கருதின் இழந்த பூழியில்
செருத்தொழில் மேற்கொளும் கருத்தினர் என்பது
வெள்ளிடை மலையென விளங்குமால் ; ஆதலின்
முள்ளிடை யிட்ட வெள்ளுடை மெல்ல
எடுப்பது போனம் மெதிர்ப்பவர்க் கெதிர்ப்பை
மடுப்பது நம்கடன் ;

**மன்னன் :** மாறிலாய் கடற்செருக்
குரியன ஒன்றுஞ் செய்யா தொழிவது

மான - ஒப்ப, கருமத் தலைவர்கள் – அரசாங்கத்தின் பல பிரிவுத் தலைவர்கள், கணிப்பது - முடிவு செய்வது, மறைச்செயல் - பிறரறியாச் செயல், போன்ம் - போலும், அயற்றுறையாளர் - வேறுவேறு துறை சேர்ந்தோர், ஏல்வகை - பொருந்தும் வகை, தரைச்செரு - தரையில் நடக்கும் போர், திரைச்செரு - கடற்போர், போனம் - போல் + நம்.

புரியா துளது ;
**ஒற்றர்தலை :** புரவலர் தலைவ !
கடல்வழித் தாக்குதல் கருதின் சேரர்
அடலொடு நறவை அடர்த்தலே எளிது ;
தொண்டியே ஏற்ற துறையவர்க் காவது ;
தொண்டியும் நறவும் பவழத் துருத்தியும்
முக்கோண மாகி முறைப்பட அமைந்தது;
தக்கவோர் கடற்படை சேரர் சமைப்பின்
ஏற்றது தொண்டியே எனினும் கடற்படை
ஆற்றலைத் தொண்டியில் அதிகரித் தாரிலை ;
நிலப்படை போல நீர்ப்படைப் பெருக்கம்
புலப்படு மாறிலை ; ஆதலின் போரை
நிலத்தில் நடத்தவே நினைத்துளர் சேரர் ;
கலத்தினை நடத்தும் பயிற்சியும் காண்கிலம் ;
ஒற்றி உணர்ந்தன அனைத்தும் உரைத்தேன் ;
வெற்றித் தலைவ ! விரும்பியது மொழிக ;
**நன்னன் :** ஈங்கிவை யனைத்தும் எஞ்சாது கேட்ட
வேங்கை முகன்றன் உள்ளம் விளம்புக !
**வேங்கை முகன் :** ஈரமும் வீரமும் இருகண் ணுக
ஆரமும் தாரும் அணிசெய் மார்ப !
ஒற்றர் தலைவன் உரைதெரி வேமேல்
கற்றறி மிஞிலி கருத்தினை ஏற்றல்
முற்றும் சரியென மொழிகுவம் ; மேலும்
பல்வகைத் திறனும் படைத்த எயினன்
இல்லா ததுமோர் இழப்பே யவர்க்கு ;
கலப்போர்த் திறம்சிறிது கனிந்த குட்டுவன்
நிலப்போர்த் தலைமை ஏற்குமேல் நிலைமை
நமக்கே நலந்தரும் : மேலும், நம்போற்
பெரியதோர் கடற்படை பெற்றவ ரல்லர் ;
உரிய படையோ உருவிலுஞ் சிறியது ;

---

*அடலொடு - வலிமையொடு, ஆரம் - சந்தனம், முத்துமாலையுமாம், ஈரம் - இரக்கம், கலப்போர் - மரக்கலப் போர், கனிந்த - நிரம்பிய.*



தரையில் மிஞிலியைத் தகைத்தெதிர் நின்று
வரையுந் திறமை குட்டுவன் வாய்த்திலன் ;
இளைதா இருக்கையில் இடர்தரு முள்மரம்
களைதலே அறிவெனக் கழறுவோர் மேலோர் ;
பகையை வளர்த்துப் பாடுற் றுழத்தல்
நகையை விளைக்கும் ; நார்முடிச் சேரல்
வளரா முனரே வளைத்துத் தாக்கத்
தளரா வினைசெயல் தக்கதென் றுன்னினேன் ;
**நன்னன் :** போர்வாய்ப் பகையைப் புறங்கொடச் செயலே
தீர்வா மென்று தெரித்தீர் ! ஆயினும்
புன்னாட்டுக் களத்துப் புண்ணினு மாறு
இந்நாள் மற்றுமோர் இரும்போர் என்னின்
ஈரிரு படையும் இசையுமோ ? மேலும்
சேரரின் ஆற்றலைச் சிறிதாய் எண்ணலும்,
குட்டுவன் தரைப்படை கொண்டு நடத்த
எட்டுணைத் தகுதியும் இல்லென மொழிவதும்,
ஒருப்பட விழையேன் ; உரைத்தன வற்றுள்
செருத்தொழில் தரையில் செய்தலே சேரர்
விருப்பென மொழிந்த தொன்றை விலக்கிலேன் ;
துருத்தியில் நமக்கோர் தொலையாத் துணையாம்
வேங்கை முகனெதிர் வியனீர்ப் பரப்பில்
தாங்கை கலப்பின் தவிராது தோல்வி
என்பதால் தரைப்போர் தேஎர்ந் தெடுத்துளார் ;
அன்புசான் றீராய் ஆர்வ நெஞ்சமோ
டாய்ந்தீர்க்கு நன்றி ! ஐய மனைத்தும்
மாய்வுறு மாறு மனங்கொளுங் கருத்தைக்
கொல்களி றன்ன மிஞிலி கூறுக !

---

*தகைத்து - தடுத்து, வரையும் - நீக்கும், பாடுற்றுழத்தல் - துன்புற்று வருந்தல், புண்ணினுமாறு - புண் + இன்னும் + ஆறுத, ஈரிருபடை - நால்வகைப் படை, எட்டுணை - எள்ளளவு, இல்லென - கிடையாதென, ஒருப்பட - உடன்பட, தொலையா - நீங்கா, துருத்தி - பவளத்தீவு, வியனீர்ப் பரப்பில் - கடலில், மாய்வுறுமாறு - மறையுமாறு.*

மிஞிலி : வெல்கநின் கொற்றம்! வேற்படை மறவர்
இன்னுமொரு போரைப் பின்னும் நயப்பரோ!
என்றனை மன்ன! இந்நாட்டு மறவர்
சென்றநாட் பெற்ற சிறுபுண் வருந்திலர்;
மெய்யைப் போற்றும் மேம்படு வாழ்வினர்;
மெய்யைப் போற்றுதல் மேவார் களத்தில்;
நாடொறும் வாள்முனை நல்கும் புதுப்புண்
கோடலே வாழ்நாட் குறியெனக் கொண்டவர்;
விழுப்புண் படாது வீயும் நாளெலாம்
வழுப்படு நாளென வருந்தும் நெஞ்சினர்;
சேரரின் ஆற்றலைச் சிறிதாய் எண்ணிப்
போரெதிர் கொள்ளுதல் புன்மையாம்; அதுபோல்
பெரிதாய் எண்ணிப் பீடு கெடுதலும்
உரியதா காதால்; உண்ணிலைக் கேற்பப்
பரியன செய்தல் பகுத்தறி வாகும்;
இன்றுள நிலையில் நமக்கவர் இளையார்:
குன்றென அவர்தம் வலிமை கூடுமேல்
எதிர்கா லத்தில் இளையா ராகி
அதிர்கால் போல அடர்ப்பரால் நம்மை;
அஞ்சாத் தறுகணும் ஆற்றல் தலைமையும்
எஞ்சாது பெற்ற இரும்படை யெனினும்
வினைக்குள காலம் விலகுமேல் யாரும்
நினைக்கவு மியலா நெடும்பிழை எய்தும்;
சேரர்ப் பழிப்பது செய்திலம் பகையை
வேறற் குரியது விளம்பிய தல்லால்;
இரண்டு போரினும் இருநீர்ப் போரில்
திரண்டவன் குட்டுவன்; சினவேல் எயினன்
இன்மையாற் றரைச்செருக் கிவன்றலை யேற்றுளன்;

---

சிறுபுண் - சிறிய புண்ணுக்காக, மெய்யைப் போற்றுதல் - உடம்பைப் போற்றுதல், விழுப்புண் - பெருமைக்குரிய புண், வழுப்படும் - குற்றப்படும், உண்ணிலைக்கு - உள்ள நிலைமைக்கு, பரியன - பெரிய செயல்கள், இளையார் - இளையவர், அதிர் கால் - புயல், அடர்ப்பர் - நெருங்கித் தாக்குவர்.



நன்மை தீமையை நாடி யுரைத்தனர்;
கலப்படைத் தலைமையும் நிலப்படைத் தலைமையும்
புலப்பட நாடின் பொருந்து வதில்லை;
ஆண்டுள உத்திகள் ஈண்டைக் கெய்தா;
ஈண்டுள உத்திகள் ஆண்டைக் கெய்தா;
வேங்கை முகனிவ் வியன்றரைப் படைக்கும்
ஆங்கவன் படைகட் கியானும் அணித்தலை
பெறுவமேல் எங்களைச் சிறுவனும் வெல்வான்;
உறுவலித் தடக்கை ஒள்வா ளுரவோய்!
நெடும்புனல் வெல்லும் நீள்கராம்; அதனை
அடும்பிற நீரின் அகலுமேல் என்ற
பொய்யா மொழியின் பொருளுரை தேர்ந்தநீ
எய்யா மொழியென இசைத்திட வேண்டா;

நன்னன் : ஏற்பன உரைத்தனை இனிநாம் மேற்கொளும்
போர்க்குள திட்டமும் பொருந்தக் கூறுக!

மிஞிலி : இனியா னுரைப்பன நனியார் வத்தொடு
முனியாது கேண்மின்! மூளும் போரில்
எவ்வா றாயினும் இளையோன் குட்டுவன்
பௌவப் போரில் படையின் தலைமை
கொள்ளான் என்பது வெள்ளிடை மலையாம்;
கொள்ளினும் அதனால் தள்ளருந் தீமை
வருதலும் இல்லை; மாறுக நன்மை
உறுதல் ஒருதலை; உரவுநீர்ச் செருவில்
வேங்கை முகனே வெல்லுவான்; எனக்கெதிர்
தாங்கும் திறமை தரைப்படை யுண்மற்
றொருவரும் பெற்றிலர்; ஆதலின், உரவோய்!
வெருவரு போர்நிலை வினாடியில் முடிவுறும்;
ஆழி நிகர்படை அருந்துணைக் கொண்டு
பூழி வழியாப் பொறையன் வஞ்சியை

---

புலப்பட - உண்மை புலப்படுமாறு, ஈண்டைக்கு - தரைப் போருக்கு, ஆண்டைக்கு - கடற்போருக்கு, அணித்தலை - அணித் தலைமை, கராம் - முதலை, எய்யா - அறியா, முனியாது - சினங் கொள்ளாது, பொறையன் - சேரன்.

நோக்கி நடப்பேன் ; நூறுவேன் பகையை ;
வாக்கின் மொழிகலா வலியன் வேங்கையன்
பவளத் தீவின் கப்பற் படைகொடு
தவழும் திரைபாய் தாவிலாத் தொண்டியைத்
தாக்கிப் பிடித்துத் தளராது வஞ்சியை
நோக்கி வருவான் ; வருவனேல் நோக்கம்
முற்ற முடியும் ; மொய்ம்பினேய் ! கிழக்கில்
செற்றம் காட்டிடக் கொங்குச் சேரர்தாம்
வருவரேல் அவரை வளைத்துத் தாக்கப்
பொருபடை கொண்டுகீழ் எல்லை போற்றுக ;
கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலும் கெழும
உழக்கினுட் சுழலும் உருள்பொருள் போல,
நிலையிலா தழிவர் ; நெடுநகர் வஞ்சியும்
உலைவிலா துன்னிழல் ஒடுங்குமால் இனிதே.

---

நூறுவேன் - அழிப்பேன், வாக்கின் மொழிகலா - சொல்லினுற் சொல்ல முடியாத, கிழக்கில் - துளு நாட்டின் கிழக்கு எல்லையில், செற்றம் - பகை, கொங்குச் சேரர் - கொங்குநாட்டையாளும் சேரர், போற்றுக - பாதுகாப்பாயாக, கெழும - நிறைய, உலைவிலாது - அழிவிலாது.

## மூன்றும் அங்கம்

### இரண்டாங் களம்

இடம் : *நியமம்.*

காலம் : *மாலை.*

உறுப்பினர் : *அனிச்சஅடி, தோழி மான்விழி, கணியன் கீரன் (சோலையுள் அமர்ந்து).*

*(தனிமொழி)*

அனிச்ச : என்மட நெஞ்சே ! இனைந்துநீ வருந்தல்
என்மட நெஞ்சே ? ஏழில் மலையின்
அப்பாற் கடலில் ஞாயி றாழ்குமேல்
இப்பால் துயர்க்கடல் மூழ்குதல் என்னை ?
செக்கர் காணின் சிந்தையில் எண்ணம்
எக்கர் மணலின் எண்ணரி தாகி
வளருதல் என்னை ? வளரின் உறுதி
தளருதல் என்னை ? கோவலன் தரூஉம்
குழலின் இசைசெவி கொள்ளுந் தோறும்
அழலின் கொடுநா அருஞ்செவிச் சுடலும்,
கிள்ளை மொழியும் புள்ளின் இசையும்
சள்ளை மொழியாய்ச் சலிப்புற வருதலும்,
புறவின் மீள்தரும் கறவை மணியொலி
உறவுறத் தளர்வுற் றுடுக்கங் கொளலும்,

---

என் மடநெஞ்சே - என்னுடைய இளைய நெஞ்சமே, என் மட நெஞ்சே - என்ன அறியாமை? நெஞ்சே ! கோவலன் - முல்லைநில மகன், புறவின் - காட்டிலிருந்து.

அலைவாய்ப் பேரொலி அருஞ்செவிப் படப்படக்
கொலைவாய்ப் படுமுயிர் போலக் குதித்தலும்,
தண்கதிர் மதியம் விண்ணில் எழுதர
எண்குகண் டாற்போல் இடிந்து நடுங்கலும்,
தண்மலர்க் காவினைத் தழுவியும் மகளிர்
கண்மலர்ந் தாலெனக் காட்டிக் கழியினுள்
பூத்த நெய்தலின் புதுமணம் நுகர்ந்தும்,
நீத்த மாடியும் நெடுநகர்ப் புகுந்தும்
முகிலொடு மாறும் மொய்குழற் கூட்டும்
அகிலொடு புணர்ந்தும் அருமணச் சேற்றில்
தங்கிநன் மணமும் தண்மையும் சுமந்தும்
எங்குந் திரிதரும் இளங்கால் தொடுந்தொறும்
பொங்கெரி மேனி புதைதந் தாலென
இங்குநீ வருந்தலும் எவன்வாழி நெஞ்சே!
நிலவும் ஆழியும் நெடுமலர்க் காவின்
உலவும் தென்றலும் உறுபகை எனக்கே,
ஆயின வாவென்? அருளன் பண்டு
வாரா திருப்பின் வருத்தஞ் சிறிதும்
சாரா திருத்தலும் சாலும்;
[தோழி மான்விழி வந்து]

**மான்விழி:** இளங்கொடி!
என்வர வறியா தெங்கோ நினைவாய்த்
தன்னினை வின்றித் தனியே இருந்தனை.
தோழி இஃதென்?

**அனிச்ச:** தூமொழி! அலைகள்
ஆழியின் எழலும் அடங்கலு மாகி
அவாஅ வுற்றவர் ஆர்த்தலும், அறிவு
தவாஅ திடிக்கத் தாழ்தலும் காட்டும்,
உண்மையில், நெஞ்சம் உறைந்து கிடந்ததாற்
பெண்மயில் வந்தது கண்ணறி கில்லேன்;

**மான்விழி:** ஒண்டொடி! உரைத்த துறுநகை விளைக்குமால்;

---

எண்கு - கரடி, கழி - கடற்கழி, நீத்தம் - நீர், புதை தந்தா லென - புதையுண்டாற்போல, தவாஅது - ஒழியாது.



அறிவேன்! அறிவேன்! ஆலிலை தானே!
புளியிலை போலப் பொடியாய் இருக்கும்;
எனச்சொலும் பித்தனை நினைவுற வைத்தனை!
கண்ணெதிர் அலையோ ஆழியோ காண்கிலம்;
செறிமரக் காவின் ஒருசிறை யிருந்து
மறிகடல் அலைக்கே மனங்கொடுத் தேனென
உரைக்கக் கேட்பவர் நகைக்கா திருப்பரோ?
வரைக்கெழு கழையென வயங்கு தோளினுய்!
ஆழியின் அயர்ந்தேன் என்றனை எந்த
ஆழியின் விளைந்ததிவ் வயர்வென மொழியின்
முற்றும் அறிகுவென்; முளரி முகத்தில்
சுற்றும் நாணமேன்? தோகைநின் மனத்தில்
உறைவதை எனக்கோ ஒளித்தனை; கண்தான்
அறைபறை யாகி அறிவிக் கின்றதே;
கயல்விழி யாரும், கவின்மலர்க் கொடியும்
அயலில் உள்ளதை அணைத்தலே இயல்பாம்;

**அனிச்ச:** நின்னை மறைக்கும் நினைவெனக் கில்லை
என்னையென் மனமே மறைக்கின் என்செய;
அருளனை நெஞ்சே! அவாவுகின் றனையேல்
தெருள வெனக்குத் தெரித்தியால் என்று
கேட்கா நாளிலை; விடாது கேட்டும்
தோட்காச் செவியெனத் துலங்குமென் னெஞ்சம்;
'என்ன கருதி எனக்குநீ உதவுதல்
பன்னுக' என்றரு ளாழி பணித்தநாள்
நீங்கா நாணமோ நெகிழ்விலாச் செருக்கோ
தாங்கா தாகியோர் துணிவெனக் கருளி,
'ஒன்றுங் கருதி உதவினே னல்லேன்'

---

வரைக்கெழு கழையென - மலையில் தோன்றிய மூங்கில் போல, ஆழியின் விளைந்தது - இதில் ஆழி என்பது அருளாழி என்பதை மறை பொருளாகச் சுட்டுகிறது, தெரித்தியால் - கூறுவாயாக, தோட்காச் செவி - கேளாச் செவி, தாங்காது - சோராது.

என்று கூறுமா றேவ வவ்வழி
மொழிந்தனென் கேட்டு முகமாறி ஞுனுளம்
அழிந்தனன் போலும்; அவன்பாற் கேடுகள்
பற்பல தோன்றிப் பாழுறச் செய்கையில்
பிற்பட யானுமோர் பிழையே செய்தனென்;
ஆதலின், என்மீ தளப்பிலா வெறுப்பாய்ப்
போதல் புரிந்தனன் போலும் இளங்கொடி!

**மான்விழி:** வெறுத்தான் என்பது விளம்பலே! சிலநாள்
பொறுத்தால் எல்லாம் புலப்படும் நினக்கே;

**அனிச்ச:** தேறுதல் நன்கு தெரித்தனை; அவன்மன
மாறுதல் மட்டும் மதித்தா யல்லே;
பொன்னை மேனியில் புதைத்தாய்! சென்றவன்
என்னை வெருஅ இயல்பினன் ஆயின்
நாள்பல கழிந்தும் நலமாய் வந்ததை
ஆள்பல ரிருந்தும் அறிவியா திருத்தல்
எதனுல் என்பதை இசைப்பையோ? இச்செயல்
விழைவைக் காட்டுமோ? வெறுப்பைக் காட்டுமோ?

**மான்விழி:** கழையின் பிழிசுவை காட்டும் மொழியாய்!
தழையைக் கறிக்க விழையும் மறிபோல்
பிழையைப் பலபடப் பேசுதல் அவாவினை!
விழைந்தில னெனினும் வெறுத்தலெவ் வாறும்?
உழைந்து ழைந்துநீ செய்த உதவியும்,
மறக்கும் கயமை மலிந்தவ ஞகித்
துறக்கும் எனநான் துணியகில் லேனுல்;
வினையே யாடவர்க் குயிரா மாதலின்
நனையேய் நகையாய்! நவின்றசூள் முடிக்க
ஆக்கும் வினையுள் ஆழ்வனேல் செய்தி
போக்குத லிலாது போதல் இயல்பே;
இத்தனை வருத்தம் எய்துவை என்பது
கொத்தலர் குழலாய்! அத்தன் அறியுமேல்

---

*விளம்பலை - சொல்லாதே, மறி - ஆட்டுக்குட்டி, உழைந் துழைந்து - வருந்திவருந்தி, நனையேய் - முல்லையரும்பு போன்ற; அத்தன் - தலைவன்.*



ஆயிரஞ் செய்திகள் அனுப்பி யிருக்கும்;
தாயினு மேலாம் தண்ணரு ளாழியை
அம்ம! இவ்வணம் அடாது மொழியுநின்
மம்மர் ஒழிகதில்!

**அனிச்ச:** மதிமருள் முகத்தாய்!
அலமர லுறுவோர்க் கயலவர் அவர்தம்
புலமுற வாறுதல் புகலல் தலையெனும்
மொழிப்படி யுரைத்த மூதுரை கேட்டனென்;

**மான்விழி:** கழிபடர் உற்ற கரணியத் தால்நீ
என்னை யயலா எடுத்து மொழிந்தனை;
புன்னை முகையின் நன்னர் விளங்கும்
நகையாய்! உன்றன் நலிவிற்கு நலிந்தேற்
பகையாய்க் கருதும் பண்புமிக நன்று!
உள்ளந் திறந்தவற் குரைத்திருப் பாயேல்
வெள்ளம் விழியில் சுரந்து வீழுமோ?
அன்பும் உரிமையும் அயராது கொண்டவென்
நண்பும் பகையாம் வன்பும் தோன்றுமோ?
மொழியால் உரைக்க நாணம் முட்டினும்
விழியாற் சிறிது விளக்குதற் கென்றடை?

**அனிச்ச:** கள்ளூறை மலர்க்குழல்! கழறிய வென்றன்
உள்ளறி யாதுநீ உரைத்தல் நகையாம்;
நெஞ்சமே எனக்கு நெடும்பகை யாயின்
அஞ்சன விழியாய் யாரைநான் நோவது!
ஒருவழி நோக்கின் நெஞ்சம் ஒளித்ததும்
தகுவதே யாகும்; தளர்விலா மனையென
வாழ வந்தவள் வன்கணுர் பகையால்
வீழத் துயர்க்கடல் வீழ்ந்தவன் வருத்தம்
மாரு நிலையில் மனத்துள கூறுதல்
தீரா வெறுப்பைத் திரட்டுவ தொன்ருே!
மனமெனும் ஒன்று வாய்க்கப் பெற்றவர்
கனவினும் நினைக்கக் கூசுங் கருத்துமாம்;

---

*மம்மர் - மயக்கம், முட்டினும் - தடுப்பினும், உள்ளறியாது - உள்ளத்தை யறியாது, வன்கணுர் - மிஞிலி நன்னன் முதலியோர்; மனத்துள - மனத்தில் உள்ள விருப்பத்தை.*

ஒருகால் என்றன் உளக்குறிப் பறிந்து
பெருகவும் வேட்கை பேசியெம் மில்லம்
தங்குமேற் கொடிய தறுகணன் மிஞிலியால்
இங்கவன் அழிவினை எய்தலும் எய்தும்;
சேரர் நாடு செல்லா திருப்பின்
ஆரப் புகழை அடையும்வாய்ப் பிழந்து
சொல்லிய சூளுரை வெல்லாது தோல்வியைப்
புல்லிப் பழியுரை பூணலும் பூணும்;
கோசர் குலமகன் குறிக்கோள் பிழைபட்
டேசற் குரிய விழிநிலை எய்தவென்
காதலே முதலெனக் கழறுஞ் சொல்லினும்
சாதலே புகழினைத் தருஉந் தேமொழி!
என்னலக் கேள்வன் இவனென் றாரவர்
பன்னலின் குலக்குறு பழியினைத் துடைத்தத
னின்னலம் பேணிய இசையின னெனச்சொலும்
கன்னலி னினியசொற் காதிற் கேட்டலே
விரும்பினென்; என்றன் விருப்பிதற் கெல்லாம்
பெருந்தடை யாமேல் பிழையிலாய்! அதனைத்
தீய்த்துக் கொள்ளும் திறமெனக் குண்டு;
வாய்ப்பது வாய்க்க;

[கணியன் கீரன் வருதல்—தணிந்த குரலில்]

**கணியன்:** வளர்மதி முகத்தீர்!
எவ்வந் துடைப்பதற் கேற்பன வியற்றப்
பௌவத் தீவில் படைகெழு வேந்தன்
கூட்டிய மந்திரக் குழுவிற் சென்ற
ஈட்டிய புகழின் ஏந்தல் அருளன்
நலமா உளனும்; நல்ல முடிவுகள்
பலதேர்ந் துளராம்; பதினைந் தாம்நாள்
காரிருள் வேளையில் காளை அருளன்
சேரி வருமெனச் செய்திவந் துளதால்;
இம்மறை யாரொடும் இயம்பாது காத்தல்
கொய்ம்முறை தாரீர் நோன்பெனக் கொண்மே.

ஆர - மிகுதியாக, புல்லி - பொருந்தி.

## மூன்றும் அங்கம்

### மூன்றுங் களம்

இடம்: நன்னன் அரண்மனை.
காலம்: முன்னிரவு.
உறுப்பினர்: நன்னன், மிஞிலி.

**நன்னன்:** (தனிமொழி)
கால மென்னுமோர் காறுற்று நெறியில்
ஞாலத் துயிர்களின் நலிவுதான் என்னே!
நில்லா உடலை நெடுங்கல மாக்கிப்
புல்லா திவ்வுயிர் புக்கவோர் செலவும்,
பற்றிட மெல்லாம் வெற்றிட மாக
எற்றியும் இழுத்தும் எவ்வழி உய்க்குமோ
அவ்வழி யெல்லாம் அலைக்கழி வுறலும்,
செல்வழி இன்றிச் சேற்றுட் புதைதலும்,
சாரும் சார்ச்சியும் சாராச் சார்ச்சியும்
ஓரும் அறிவிலா துறுசுழற் சிக்கலும்,
நெடியவா வென்னும் நீளிரும் பாறையின்
கடியமோ துண்டு கவிழ்ந்து போதலும்,
இருவினைப் பயனெனும் இருங்கடற் கோடித்
தருவினைக் கேற்பத் தரளமாய் உப்பாய்
உருவினைப் பெறுதலும், அலையின் ஒதுங்கி

நெடுங்கலம் - பெரிய தெப்பம், சாரும் சார்ச்சி - பொருந்திய இணைப்பு, சாராச் சார்ச்சி - பொருந்தா இணைப்பு, நெடியவா - நெடிய + அவா, கடிய - விரைவாக, தரளமாய் - முத்தாகி.

வருதலும் தாமே வாழ்வெனக் கண்டோம்;
தெரிந்தும் செருக்கால் சிறியன புரிதலும்
பரிந்துள் நெகிழ்ந்து பைதல் உறுதலும்,
கொள்ளும் என்போல் எள்ளலுக் குரியார்
விள்ளின் உலகில் வேறியார் உளரே?
குழலி என்னுமக் குலப்பிறப் பாட்டி
நிழலின் நுடங்கியென் நேர்வந் தாற்போல்
தோன்றலும், எதிர்நின்று துணைவிழி சோரக்
கான்றெழு சினத்தீ முகத்திற் காட்டி,
'வினைமுதிர் காலம் விளைந்ததா' லென்று
கனைகடல் முழக்கெனக் கம்பலை செய்தலும்,
அஞ்சுதக உடைத்தால்; அவள்முகம் நினையின்
நெஞ்சுசுடு மதனுல் நிகழ்வதை யறியேன்;
புனல்யாற் றொருகரைப் பொலியுமா மரத்தில்
தினற்குள தீம்பழம் செழுங்கிளை வளைத்துத்
தூங்கக் கண்டனென்; சுவைக்கனி கையால்
வாங்கக் கிளையை வளைக்கக் கனியெலாம்
மனிதத் தலைகளாய் மாறிச் சிரித்தன;
முனிவும் நகையும் முழங்க வார்த்தன;
வடுவெலாம் குழந்தையின் வளர்கரு வாகியும்,
கெடுவிலா மலரெலாம் கெழுதசை போலவும்,
தேன்றுளி குருதித் துளிகள் போலவும்,
வான்பருந் தாகி வண்டுகள் சுழலவும்,
திடுக்குற் றெழுதரத் தீர்ந்தது கனவு;
மிடுக்கும் வலியும் மேவா தொழிந்தனென்;
பரிதிக் கதிரெனப் பசும்புண் ணிழியும்
குருதிப் புனலில் குடைந்துநீ ராடியும்,
பிணமலை யேறியும், நிணமலர் தூவியும்,
அணவரி தாகிய அமர்க்கள வேள்விகள்
அடுக்கடுக் காக ஆக்கிய நாளிலிந்
நடுக்கம் சிறிதும் நானறி கில்லேன்;

---

பைதல் - துன்பம், கான்றெழு - உமிழ்ந்து எழுகின்ற, கம்பலை - ஆரவாரம், வாங்க - பறிக்க.



வாள்முனை கிழித்த வயிர நெஞ்சங்கள்
கோள்முழு தெண்ணிக் குறிப்பதை யொக்கும்:
கூர்வேல் நுதிக்குயிர் கொடுத்தவர் தொகையோ
ஆர்கடல் மணலை எண்ணி யளப்பதாம்;
அத்தனை நிகழ்ந்த அருஞ்சமர்க் களத்திலெள்
ளத்தனை நடுக்கமும் அடையகில் லேனுல்
பெண்மகள் ஒருத்தி பிணம்பட நெஞ்சம்
உண்முக மொடுங்கி உலமரல் புதுவது;
வாளொடு வாளும் வரையென உயர்ந்த
தோளொடு தோளும் தொடுத்த போர்களில்
வெல்லுதல் எளிதாம்; செல்மழை பொழியக்
கல்லலைத் திழிதரும் மல்லல் யாறென
ஒருத்தி கண்களில் ஒழுகுநீர்க் கெதிராத்
திருத்திய நெடுவாள் செய்வது முளதுகொல்?
அறங்கூ றவையில் முரண்மொழி யாளேல்
மறங்கூர் தண்டம் வழங்குதல் செய்யேன்;
ஒற்றி யுரைத்தார் உரைக்கோ மிஞிலி
பற்றி யுரைத்த பரிசுக் காகவோ
இப்பெருங் கொடுமை இழைத்தே னல்லேன்;
செப்பருந் தீவினை சேர்ந்தவா வென்னே!

*[காவலன் வந்து]*

காவலன்: கோடாச் செங்கோல் கொற்றத் தலைவ!
வாடாத் தார்மலி மிஞிலி வந்துளார்;

மன்னன்: காவல மிஞிலி கடிதிவண் தருக!

*[மிஞிலி வருகை]*

மிஞிலி: மேவல செயுநர் மீள்கிலா தொறுத்தும்
அமைதியு மின்பும் வாழ்விடை யரும்பச்
சுமையெலாம் ஒருதா ளுகிச் சுமந்தும்,
வையங் காக்குநின் செய்யதாள் மலரில்
ஐய! இவ் வுலகம் அகலா துறைக!

மன்னன்: கண்ணிலி காட்டிய வழிசெலக் கருதிய

---

செல் - மேகம், கல்லலைத்து - கல்லை உருட்டி, ..ச்சமும் - ..ளப்பம், கண்ணிலி - குருடன்.

எண்ணிலி எண்ணிய இடத்தினை எய்துமோ?
அமைதியும் இன்பும் இழந்துளம் அழிவேன்
அமைதியும் இன்பும் அளித்தல் இயலுமோ ;
சுமையெலாம் தோளிற் சுமந்தே னல்லேன்
சுமையா நிலமகள் சுமக்க வாழ்கிறேன் ;
பழியே சுமந்த பாவியேன் தாள்நிழல்
அழிவே யல்லா லாக்கமு முண்டுகொல் !

மிஞிலி : என்னிவ ணிகழ்ந்துளது ? ஏனிம் மறுக்கம் ?
உன்னிழல் வதிந்துநீ ஊட்டிய உண்டு
கன்னிவந் தாலெனக் காட்டுமிவ் வுடலில்
இன்னுயிர் தாங்கியா னிருப்பநீ வருந்தக்
கேட்டுளே னினக்குங் கிளையென விதுபோல்
காட்டுமோர் புதுமை நிலத்திலார் காண்பார் ;

நன்னன் : உடன்பிறந் தாயலே ! எனக்கா உயிர்தரும்
கடன்மறந் தாயலே ! மிஞிலிகைம் மாரு
என்னுன் தருகுவென் ! நின்னரு மேனியில்
பொன்னுண் தொடுத்த பொறிகிளர் நீலம்
பதித்தென விளங்கும் பழம்புண் தழும்புகள்
மதித்தெண் ணுவமேல் அத்தொகை மானும்
எனக்குநீ செய்துள இருங்கள உதவியும்
மனக்கினி யாய்! நீ வருந்தல் ; வயவுறு
குழலிக் கிழைத்த கொடுமையென் னெஞ்சில்
அழலின் வருத்த அமைதி இழந்துளேன் ;
கனவினும் நனவினும் கண்ணினீர் வழியும்
புனமயில் தோன்றிச் சினமுகங் காட்ட
அஞ்சிலா மனமும் அஞ்சினேன் மிஞிலி !
எஞ்சிலா தழிக்குமோர் ஏதம் வருங்கொல் ?

மிஞிலி : காரென வழங்குங் கையினய் ! எதையும்
போரெனக் கருதாது புல்லெனக் கருதும்

---

எண்ணிலி - அறிவிலி, கன்னி வந்தாலென - கல்+நிவந்தா ர,—கல்லெழுந்து நின்றாற்போல, வருந்தல் - வருந்தாதே, ——குழலி - கருப்பமுற்ற குழலி, போரென - வைக்கோற் பைத

கம்பலை - ஆர



உள்ளம் பெறுகதில் ! பெறுவையேல் உறுதுயர்
வெள்ளம் எழுந்து விழுங்குமா றில்லை ;
அலையிலாக் கடலில் யாரும் திறம்பட
நாவாய் செலுத்துவர் ; நடுக்குற வந்தெதிர்
எற்றும் அலையினை எதிர்த்துச் செலுத்தி
முற்றப் பயணம் முடிப்பதே சிறந்த
மீகா மற்குள மீத்திற மாமால் !
அன்பிற்கு மனிதன் அடங்கிலன் வருத்தும்
துன்பிற் கஞ்சியே தொழுது கிடக்குவன் ;
ஆளும் நெறிகளும் ஆணையும் வருத்தும்
வாளும் படையும் வகுத்ததென் கருதி ?
அச்சமாம் வித்தின் அமைதித் தளிர்கள்
நிச்சமும் தோன்றும் என்னும் நெடுமொழி
பொருள்நெறி கூறும் பொன்மொழி யன்றே ?
இருள்நெறி உலகிற் கடிய எண்ணுவோர்
தண்டம் விதித்தல் தகாதென மொழியார் ;
பண்டும் இந்நெறிப் பட்டதே அரசியல் ;
கொலையிற் கொடியார்க் கொல்லுதல் பயிரிற்
களையை யகற்றிக் காத்தலை ஒக்குமென்
றறையும் பொருட்பா லதுநீ யறிந்ததே ;
ஆதலின் இதற்கா அலமரல் ஒழிமதி !
போதலும் பின்னர்ப் புலம்பலும் புரிதல்
தலைமைக் கழகிலை ! தவிர்க ! இன்றுள
நிலைமைக் குரியன நினைந்தது புரிக !
போரெனக் கேட்டுத் தோள்கள் புடைத்தெழ
வேறென யாங்கள் விழைவ தாமெனப்
பயிற்சிகள் பலவும் அயர்ச்சியி லாராய்
நேர்ந்துளர் ; கொல்லுலை நெருப்பிற் கனிந்து
வார்ந்துள கருவியின் குவியல் வான்றொடும் ;
புலவர்கள் நீபெறும் புதிய வெற்றியைப்
பலபட வேத்தப் பயன்படு சொற்களின்

---

மீகாமன் - கப்பலோட்டி, நாவாய் - கப்பல், நிச்சமும் - எப்பொழுதும், போதலும் - ஒன்றில் ஈடுபடுதலும்.

தொகுதியை ஆய்ந்துளர் ; துடியரும் பாணரும்
தகுதிய விருந்தின் தாளமும் பாட்டும்
புனைந்துளர் ; பழந்தேர் புள்ளெனப் பொருளை
நினைந்தெழு நெஞ்சொடு நெடுநகர்ப் புகுந்து
சேரர் நாட்டின் செல்வக் குவியலை
ஆர வழங்குவாய் என்னு மவாவினுல்
இரவலர் யாவரும் எதிர்பார்த் துள்ளனர் ;
கரவிலாய் ! நாடே களப்போர் காணிய
சூழ்ந்துள வேளையிற் சோர்வுக் கடலில்
ஆழ்ந்துள தடாஅது ; இவ்வா றயர்ந்தனை
என்பது பகைவருக் கெட்டுமேல் இதனினும்
துன்பமொன் றுண்டுகொல் ! ஆதலின் துளங்கா
ஊக்கமும் திண்மையும் உறுக !
ஆக்கமும் புகழும் ஆமெனல் தெளிந்தே.

———

விருந்தின் தாளம் - புதிய தாளம், ஆர - மிகுதியாக, காணிய - காண்பதற்காக.

## நான்காம் அங்கம்

### முதற் களம்

இடம் : *நியமம், கணியன் கீரன் இல்லம்*

காலம் : *இரவு*

உறுப்பினர் : *அருளாழி, கணியன் கீரன், அனிச்சஅடி*

கணியன் : கலிமான் அருள ! கருதியது முடிக்கப்
புலிமான் அனைய பொருவிலாச் சேரன்
தக்கன வியற்றலும், அதற்குத் தகும்பணி
புக்கனை யாயிவண் போந்தனை என்பதும்,
ஒருசிறி தியாங்கள் உணர்ந்துளே மாயினும்
பொருவலை அலைதரப் புலாஅல் கமழ்தரும்
பௌவத் தீவில் பகைப்புல மழிக்க
எவ்வெம் முடிவுகள் யாங்கனம் எடுத்துளீர் ?

அருளாழி : அடுத்த உவாவில் அடுபோர் தொடங்க
எடுத்துளர் முடிவை ; இருங்கடற் செருவில்
வேங்கை முகனை வீழ்த்துதற் கென்றே
தீங்குசெய் ஒற்றர் தெரிகிலாச் சேண்படு
மாந்தைத் துறையில் மரக்கலப் பயிற்சிகள்
போந்தைத் தாரணி புகழ்க்குட் டுவனுல்
மேம்பட் டுள்ளன ; மிஞிலிபொரு களத்தில்
தான்படை யொடுவந் துதவி தருகென

பொருவலை-மோதுகின்ற அலை, உவா - முழு நிலவு, மாந்தைத் துறை - சேரநாட்டுத் தென்கோடியிலுள்ள துறைமுகம், போந்தைத்தார் - பனம்பூ மாலை.

வளவனைக் கேட்டியான் வந்துளேன் ; இதுபோல்
களமர் கொழுவழி நீலக் கல்லெழூஉம்
புன்னாட் டரசர் போரெழு நாளில்
தன்னாட் டகத்து நன்னன் ஆட்சியை
நீக்கவோர் நெடுங்கலாம் நிகழ்த்தச் செய்துநல்
ஆக்கம் விளைக்க வந்நாட் டாங்கண்
சென்றுளன் குட்டுவன் ; செருவில் மிஞிலி
பொன்றுதற் குரியநற் காலம் பூத்ததால் !
கணியன் : எவ்வெம் முனையில் யார்யார் போரைச்
செவ்வையின் றெடுப்ப தென்னும் செய்திகள்
இறுதியா யினவா ?
அருளாழி : இல்லை, அதனை
உறுதிசெய் தொன்றும் உரைத்திலர் யாரொடும் ;
கணியன் : பூவிரி மலர்தொறும் புரிவண்டு முரலும்
காவிரி நாடன் ?
அருளாழி : கைவிரித் துள்ளான் ;
வானவர் வெற்றி வாய்த்திடச் சோழர்
தாமுயிர் இழப்பது தக்கது மன்றும் ;
இருபெரு வேந்தர் குறுநில மன்னனைப்
பொருவதற் கெழுவது புகழுக் கிழுக்காம் ;
அடங்கலும் எழுதியோர் முடங்கல் தந்துளான்
கணியன் : மடங்கலாய் ! இதற்கா வருந்தலை ஒழிமதி !
துளுநா டெதிர்க்கத் தொடங்கு மெவர்க்கும்
கொழுபடை யுதவி கொடுக்கிலே னெனவோர்
வாக்கினைச் சோழன் வழங்கியுள் ளானென
அணுக்கர் சிலரான் அறிந்துளேன் ; ஆயினும்
துணுக்குற எழூஉம் துதைபோர்க் களத்தே
சுழலில் வந்த துரும்பெனச் சோழனை

---

களமர் - உழவர், கலாம் - கலகம், முரலும் - ஒலி செய்யும், அடங்கலும் - முற்றிலும், முடங்கல் - கடிதம், மடங்கலாய்- சிங்கம் போன்றவனே, வருந்தலை - வருந்துதலை, அணுக்கர் - நெருங்கியுள்ளோர், துதைபோர்க் களத்தே - நெருங்கிச் செய்யும் போர்க் களத்தே.



இழுத்து விடுதலே இனியென் கடனும் ;
அருளாழி : உறவினைக் காட்டி உரைத்தும் கூட
மறவினைத் துணையா வருதற் கொருப்படா
வளவன் போர்த்துணை வருவான் என்பது
தளவம் மிடைந்த தாரினோய் வியப்பே !
கணியன் : வியப்புக் குரியவும் விரிநீர் உலகில்
செயப்படு மென்பது தேர்ந்துளே மன்றே ;
இயற்கையின் ஒவ்வோ ரியக்கமுந் தெளியின்
மயற்கையும் வியப்பும் வருதல்கா ணோமோ ?
ஐம்பெரும் பூதம் அளவிய அளவின்
மொய்ம்பினுக் கேற்ப மனத்தின் மோதல்கள்
விளைதலைப் போலொரு வியப்பும் உண்டுகொல் !
அளைநீர் நெருப்பும் அனலிற் காற்றும்
காற்றுட் புனலும் கனலும் கரத்தல்
தோற்றும் மருட்கை துணிந்துளே மன்றே !
அண்டத் துள்பொருள் அமைப்பு மப்பாலே
கண்டுகண் ணறியாக் கவின்பெறு சுழற்சியும்
எண்ணின் உள்ளம் இறும்பூ தெய்துதல்
மண்ணில் யாவரும் மதித்தறிந் ததுவே !
இயற்கையின் கூறும் மனிதனும் இங்கொரு
செயற்கையின் மருட்கை சேர்ப்பதும் இயல்பே !
நெடுந்தகா யதுநான் நிகழ்த்துவென் ; சோழன்
அடுந்தொழிற் றுணையா யாதல் உறுதி !
அருளாழி : ஆடுகொ டாதவன் ஆவைக் கொடுப்பனோ !
எவ்வணம் இச்செயல் இயற்றுவாய் என்பதைச்
செவ்வணம் உரைமதி
கணியன் : செல்லுறழ் தடக்கையாய் !
என்சொல் மறுஅது ஏவிய நெறியில்
முன்செல் வேனெனும் உறுதி மொழியினை
மொழிவையேல் அதனை மொழிகுவென் யானும் ;
அருளாழி : கழியருள் காட்டுநீ காட்டும் நெறிசெல

---

தளவம் - முல்லை, மிடைந்த - சேர்த்துக் கட்டிய, அளவிய அளவு - கலந்துள்ள அளவு, இறும்பூது - வியப்பு.

மறுக்குவெ னெனநீ மதித்ததென் னுளத்தை
ஒறுக்குமால்; உறுதி உரைத்தே னின்னுளம்
கருதிய தெஞ்சாது கழறுக;

**கணியன்:** அருள!
செருவிழை கில்லாச் சோழன் செய்தியைக்
கொஞ்சம் திருத்தி 'வெஞ்சமர்க் களத்தில்
வஞ்சன் மிஞிலியை வாள்வாய்ப் படுத்தித்
தீர்க்கும் போரில் சேர்ந்து கொள்ளுவேன்
ஆர்க்கு மிதனை யறிவியா தொழிக'
என்னுமா றியற்றி இன்னே மிஞிலிகைத்
துன்னுமா றிதனைத் துரக்கின், சோழன்
இருமுகப் போக்கினை எண்ணிச் சினந்து
கறுவு கொள்ளுவன்; யானுமக் காலை
சிறிய படையினைத் திரட்டிச் சோழன்
குறிபடு வண்ணம் கொடுவரிக் கொடியை
ஏந்துவென்; ஏந்தி எல்லைப் புறத்தே
போந்துவன் படைகொடு போரிடைக் கவர்ந்த
அருங்கல வெறுக்கை நிறைந்துள பாழியை
நெருங்கி முற்றுவென்; நெருங்காது தடுக்கப்
படையாண் டில்லை; படையெலாம் பூழியின்
இடையாண் டுளதால்; இதுகேட்ட மிஞிலி
விரைகுவன் யானென் வீரரொ டதற்குள்
மறைகுவென்; அதனால் மண்டிய சினத்தன்
வளவனொடு முரணும் வாய்ப்புண் டாகும்;
வளவனும் நன்னனும் மறைவில் வகுத்த
உடன்பா டெல்லாம் உருத்தெரி யாமல்
படல்நாம் காண்குவம்; அடலே றனையாய்!
மடல்கைக் கொடுநீ வழியில் மிஞிலிகைச்
சேர்தற் குரியன செய்து மீள்குவென்;

---

துன்னுமாறு - நெருங்குமாறு, துரக்கின் - செலுத்தினால், இருமுகப் போக்கு - இருவகையாக நடக்கும் தன்மை, கறுவு - வஞ்சனை, கொடுவரிக் கொடி - புலிக்கொடி, வெறுக்கை-செல்வம், பாழி - கோட்டை.



பேர்தற் குரியயாம் இதற்படல் பிழையென
எண்ணுதல் வேண்டா! எச்சிறை வைக்கினும்
நண்ணுதல் புரிவரென் னயந்த நட்பினர்;
ஒருபகல் அல்லது அச்சிறைக் குழலல்
மறுபகல் இல்லையால்; மயக்க மொழிகதில்;
(அனிச்சஅடியை நோக்கி)
நன்னுதல்! யான்போய் மீளுவென்; அருளன்
உண்ணுதற் காவன பண்ணுக;
*(கீரன் போதல் - அருளாழி சிந்தித்திருக்க)*

**அனிச்ச:** எதிரில்
உறைவன யாவும் ஒழியவும், உள்ளம்
சிறைவிரித் தெங்கோ செல்லவு மாகி
இருந்தனை; இஃதென்!

**அருளாழி:** எழில்படு தோகை
முருந்தனை முறுவலாய்! மோதிய அலைநீர்
தெறித்துச் சிதறித் திவலையாய் மாறினும்
மறித்தும் தொகுதியா மாறுதல் கண்டனம்;
உறவெனும் நாவாய் ஓடி அரசியற்
பரவையில் சூழ்ச்சிப் பாறை மோதுமேல்
எஞ்சுதல் யாதாம்? எழிலிற் சிறந்த
அஞ்சுதை பழித்த அரிய மேனியாய்!

**அனிச்ச:** அரசியல் என்றனை! அடுத்து யாவரும்
பரசிடும் உறவெனப் பகர்ந்தனை! இரண்டும்
எதிரெதி ராவதே இயல்பா மென்பதை
முதிரறி வாளர் முற்றும் அறிகுவர்;
பாச மெனுமோர் பரிய கயிற்றினை
நாசப் படுத்தி நலிவிப்ப தரசியல்;
கிடக்க அது! நீ கிளத்திய சொல்லின்
தொடக்கமும் முடிவும் விளக்குக சிறிதே;

**அருளாழி:** சோழன் மகட்குச் சுடர்த்தா ரணிந்த

---

மறித்தும் - மீண்டும், நாவாய் - கப்பல், பரவை - கடல், அஞ்சுதை - அழகிய சுதை, பரசிடும் - போற்றிடும், பரிய - பெரிய, கிடக்க அது - அது கிடப்பதாக.

ஆளன் சேரன்; ஆயினும் அவரிடை
நேர்ந்துள அரசியல் நெருப்புச் சிதறலால்
தீய்ந்து கரிந்தது தீர்கிலா உறவும்;
உறவெனப் போற்றலும், பகையெனத் தூற்றலும்,
முறையே யாமென மொழியுமா றிலேயே !

**அனிச்ச :** இதனல் உறவும் இகலுமொன் ருமோ ?
மதனல் மனிதன் அறிவு மயங்கிக்
கதனழ்ந் தாஞய்க் கருதிய தியற்றி,
அன்பும் உறவும் அடியோ டழித்து,
வன்பும் பகையும் வளரநீர் வார்த்துத்
திரிவதால் உறவே தீங்காம் என்பது
பரியதைச் சிறியதா யுரைக்கும் பான்மையே !
உறவால் தமக்கோர் உறுபயன் தேடும்
கரவால் உறவு கலிக்குமா றில்லை;

**அருளாழி :** கொளேபடு நடையாய் ! குளிர்நீர் உலகில்
கிளையினல் எய்திய கேடும் ஆக்கமும்
மயக்கறத் தெளியின் மலையும் கடுகுமாம்;

**அனிச்ச :** மின்ஞென்று வேலோய் ! மீப்பட மொழிந்தனே
நின்ஞென்று வினவுவென்; நீயும் பொய்யினைத்
திருத்தி யுரைக்கும் திருப்பணி செய்திட
அருத்திகொண் டனேயோ ?

**அருளாழி :** அயில்வேற் கண்ணுய் !
**'உறவினல் உறுவது ஒழிகலாத் துன்பமே**
**இறவினல் பெறுவது எண்ணிலா வின்பமே'**
என்னும் மொழிகளே இசைத்தவன் ஒட்பம்
பன்னும் நாத்திறம் படைத்தவ னல்லேன்;

**அனிச்ச :** கிளேயால் உறுவது கேடென் பாயக்
கிளேயால் நன்மை கெழுமுத லிலேயோ ?
கெடுதலோ நன்மையோ விளேயினும் கிளேயை

*ஆளன் - கணவன், மதனல் - செருக்கால், கதன் - சினம், கலிக்குமாறில்லை - தழைக்குமாறில்லை, கொளே - தாளம், கேடும் ஆக்கமும் மலையும் கடுகும் என நிரனிறையாகப் பொருள் கொள்க, இறவினல் - நீங்குதலினல்.*



விடுதலே யாரும் விரும்புதல் உண்டோ ?
அவ்வினே புரியநீ ஆர்வமிக் கனேயோ !

**அருளாழி :** எவ்வினே யாயினும் இடர்வரு நாளில்
வெவ்வினே யொழிக்க விலகலே அறிவாம் !

**அனிச்ச :** துன்ப மல்லது தொடருதல் இல்லெனும்
அன்பநீ எம்மனே அடைந்ததும் எதற்கோ ?
பகையென எண்ணிப் பார்க்கவந் தனேயோ ?
திகையுறல்; எனக்கொன்று தெரிந்தல் வேண்டினென்;
வளநாட் டிருந்து வருவார் யாவரும்
துளுநாட் டெல்லேயைத் தொடாது செல்வரேல்
தண்டம் ஆமென விண்டுள் ளனரோ ?
அண்டம் முழுவதும் அலேயினு மிதையலால்
வஞ்சி செல்லவோர் வழிதா னிலேயோ ?
வஞ்சியாய் ! எதனல் வந்தாய் இம்மனே ?
வருமா றுன்னே வைத்ததும், அயல்நெறி
யுறுமாறு விடாஅ தொழித்ததும் யாதாம் ?
உள்ளம் பிழையா துரைத்தல் வேண்டினென்;

**அருளாழி :** (தனக்குள்)
கள்ளம் மனத்திற் கரந்துளேன் என்பதை
அறிந்துகொண் டாளோ ? அல்லேயேல் என்மனம்
செறிந்துள உண்மையை எவ்வணம் செப்புவள் !
அறிவெனும் தோட்டிக் கடங்கா தென்மனம்
செறியிழை இவள்பாற் சேறுதல் என்னே !
குழலி இருந்த கோயிலிற் பின்ஞெரு
எழிலியைக் கொணர எண்ணுதல் தகுமோ ?
அடிமனக் கூவலின் ஆழநீர் எவ்வணம்
கடிமலர் கண்டனள்; கண்டதா லன்றே
இவ்வினைத் தொடுத்தனள்; எனினும் உள்மனம்
செவ்விதின் காட்டுதல் சீர்மையு மன்ரும்;

*திகையுறல் - வியப்படையாதே ! அண்டம் - உலகம், வஞ்சியாய் - வஞ்சி நகரத்தவனே ! தோட்டி - அங்குசம், சேறுதல் - செல்லுதல், கூவல் - கிணறு, கடிமலர் - அனிச்ச அடி.*

*(அருளாழி ஒன்றும் மொழியாதிருத்தலைக் கண்ட அனிச்ச அடி)*

**அனிச்ச :** விடைதரத் தயக்கமென் ? வெல்லும் சொற்களின்
படைநிரல் வகுத்துப் பார்க்கின் றனையோ ?

**அருளாழி :** மான்விழி ! மனத்துள் மண்டிக் கிடப்பதை
யான்மொழி தற்காம் இன்றமிழ்ச் சொற்களை
ஆய்கிறேன் ! ஆய்கிறேன் ! ஆயினும் அகப்படா
தோய்கிறேன் ! நெஞ்சு மொடுங்குகின் றேனல்;

**அனிச்ச :** மொழியால் விளக்க முயலினும் முடியாது
கழியுமவ் வுணர்வுதான் என்னவோ ?

**அருளாழி :** காசிலாய் !
ஆற்றுவார் இன்றியும், அழுதகண் துடைத்துத்
தேற்றுவார் இன்றியும் திகைத்தேன் முன்னர்
ஒடிவந் தென்மாட் டுறுதுயர் களைந்து,
நீடிய வன்பால் நித்தமும் என்னலம்
பேணும் நும்பால் பிறங்குமென் னன்றியாற்
காணும் கொள்கை கால்பிடித் துந்த
வந்துளேன் அல்லால் கொந்நலர் குழலாய்
விந்தையொன் றில்லை;

*(அனிச்ச அடி சலிப்புடன்)*

**அனிச்ச :** வெற்றுரை விடுக
எந்தை வருமுன் இன்சுவை அடிசில்
அடுதல் வேண்டும்; அதுவரை களைப்புக்
கெடுமா றேய்விற் கெழுமுக சிறிதே;

*(தன் மனத்திற்குள்)*

அரைப்பணம் கொடுத்தே அழச்சொலிக் கேட்டவர்
ஒருபணம் கொடுத்தே ஓயச்சொன் னலெனை
ஆயதே என்னிலை ! அருளன் உள்ளம்
மேய உண்மையை ஆய்தலும் அரிதே !

---

நீடிய - பெருகிய.

# நான்காம் அங்கம்

## இரண்டாங் களம்

இடம் : *பாரம், சிறைக்கூடம்*

காலம் : *இரவு*

உறுப்பினர் ; *அருளாழி, காவலர்*

**அருளாழி :** *(தனக்குள்)*
கணியன் இதுவரை கணித்தன வெல்லாம்
இனிதே நடந்தன ; இனிவரு வனவும்
செவ்விதின் நடக்குமோ ? சிறைப்பட் டேனை
எவ்விதி யுய்க்குமோ ? யானறி கில்லேன்;
முடங்கல் கண்ட மிஞிலியின் முகத்தில்
படங்கொள் ளரவின் பகைமை நெளிந்ததும்,
ஒற்றன் எனவெனை உரைத்த மிஞிலியின்
செற்றம் காட்டும் விழியிடைச் சிவப்பும்,
நெடுவா ளாலெனை யடுதற் கெழுந்த
கெடுவாய் மிஞிலியைத் தடுத்துக் கீழ்ப்படா
வேற்றுநாட் டானே யாயினும் விதிப்படி
போற்றுக என்ற புரையிலாச் சொற்களான்
கட்டளை விடுத்த நன்னன் கருணையும்,
எட்ட வியலா திருஞ்சுவர் வளைத்த
சிறையுட் கிடந்து சிந்தித் திருப்பதும்,

---

செவ்விதின் - நன்மையாக, படங்கொள்ளரவின் - படம் விரித்த பாம்பு போன்ற, கீழ்ப்படா - அடிபணியாத, இருஞ்சுவர் - பெரிய மதில்.

அறையின் நீள வகலம் அளந்து
முடிப்பதும், மீண்டும் முனைவதும், முடிவுகள்
வடிப்பதும், பின்னர் வருந்தலும், முறையே
தெரியின் இஃதோர் தீராக் கனவென
வரிசை வரிசையா வளர்ந்து தேயுமால்;
சேர மன்னரின் திருமுகப் பணியின்
தீர எண்ணாது தீர்ந்துள் ளேனோ ?
தேனடை பிறங்கித் திகழ்துளு நாட்டை
யானடை யாமல் நடந்திருப் பேனேல்
இத்துணை குழப்பம் எழுமா றில்லை;
எத்துணை கொடியான் இதனின் மீளுதல் !
வேலினும் கொடிய விழியாட் காணக்
காலினும் முந்திக் கடுகியான் வருமா
றுய்த்த தெதுவென ஒவா தாய்ந்தியான்
எய்த்துளே னல்லால் இதற்கோ ருண்மை
கண்டுளே னல்லேன்; கனிமொழி என்பால்
கொண்டுள வன்பைக் குறிப்பால் உணர்த்தியும்
விண்டுறை யேனாய் வேட்கையை விழுங்கி
வண்டுறை கனியின் வடுப்படு மனத்தனா
எத்தனை காலம் இயங்குதல்; தேராப்
பித்தனை மானத் தனியே பேசியும்,
உரிய விடத்தே உரையா தொடுங்கியும்
திரிய லுறுமென் திகைப்பு நீங்குதல்
எந்நாள் கொல்லோ ? இடும்பைகள் நீங்கும்
அந்நாள் வருங்கொல் ? ஆர்வமீக் கூரக்
கயமலர்க் கண்ணாள் கழியவ வினளாய்
'நியமம் புகுந்தாய் நின்னுளம் யா'தெனக்
கேட்ட பொழுதில் உண்மைகிள வேனாய்

---

திருமுகப்பணி - கடிதம் கொண்டு செல்லும் பணி, தீர எண்ணாது தீர்ந்துள்ளேனோ - முழுமையாக ஆராயாது முடிவெடுத்துள்ளேனோ, எத்துணை கொடியான் - எத்துணைகொண்டு யான், காலினும் - காற்றினும், எய்த்துளேன் - இளைத்துளேன், வண்டுறை கனியின் - வண்டு குடைந்த கனிபோல.



வாட்ட முறுத்த வாணிலா முகத்தில்
துன்பக் கொண்மூ தோய்வது கண்ட
பின்பும் உள்ளம் பேசினே னில்லை;
மின்னையே மாற்றினே னல்லேன்; மெய்யா
என்னை நானே ஏக்கறச் செய்துளேன்;
கறங்கினும் விரைந்து காரியஞ் செய்வேன்
உறங்கியும் விழித்தும் ஒடுங்கியும் எழுந்தும்
காலங் கொன்னே கழியுமா றிச்சிறை
ஏலங் குழலியால் இருக்க நேர்ந்ததே;
இறைவன் அறியுமேல் இளையோன் அறிவிலன்,
குறையென மொழியுமோ ? கொற்றவன் பணிக்கிவன்
தக்கவன் அல்லன்; தடங்கணாட் காச்சிறை
புக்கவன் இவன்பாற் பொறுப்பினை நல்கின்
முடியான் எனவொரு முடிவினைக் கொளுமேல்
அடியான் உலகம் அளந்தான் உருவென
ஓங்கி வளருமென் உளத்துறை வஞ்சினம்
ஈங்கிவ ணெவ்வணம் எண்ணிய முடிப்பென் ?
இரவிற் சிறையுள் இராயென மொழிந்த
கரவிலாக் கணியன் கழறிய வண்ணம்
ஆற்றுதற் கெத்தனை அவலம் படுமோ ?
போற்றுதற் குரியன்; புகுவன வகுக்கும்
கணியன் எம்மிடர் காத்தலின் உயிரின்
நணியன்; இவனை நட்பாக் கொளற்கியான்
பெற்றுள பேற்றின் பெருமைதான் என்னே !
பொற்றளிர் மேனி மனத்துட் புதைந்துள
கணியன் அறியுமோ ? அறிந்தே கணியனும்
இனிய தாமென எண்ணி யிருக்குமோ ?
என்னை மருகனா எதிர்கொளற் காகவே
தன்னை எனக்காத் தவப்பே றிடர்களில்
தருதலோ ? சீச்சீ தகவிலை இவ்வணம்

---

கொண்மூ - மேகம், மின்னையே மாற்றினேன் - மின்னை + ஏமாற்றினேன், ஏக்கற - தாழ, கறங்கினும் - ஒலியினும், ஏலம் - மணம், இறைவன் - அரசன், நார்முடிச்சேரல்.

கருதலோ நெஞ்சே ! கணியன் உதவியில்
காரணம் கருதுதல் கழிமதங் கொண்ட
வாரணம் பாகனை வதைப்பது போலாம்;
நெஞ்சே ! இவ்வணம் நினையல் நெருப்பிற்
பஞ்சே யாமெனப் பற்பல நினைவுகள்
பற்றிச் சுடுமுனம் பருமதிற் புரிசை
சுற்றிய சிறையை நீங்கின் தொல்லையின்
உய்குவென்; இன்றேல் ஒழிகுவென் !

*(காவலன் ஒருவன் உணவுகொண்டுவந்து)*

**காவலன் :** ஐய !
நெய்கனி இவ்வுணு நீயுண் டாறுக !
வருத்தும் பசியெலாம் திருத்தும் உண்ணுக !
*(தாழ்ந்த குரலில்)*
ஒருத்தன் கணியன் உனக்கென் றனுப்பினன்;

*[அருளாழி உணவை வாங்கிச் சென்று பார்க்கிறான். உணவை மூடிய துணியில் ஏதோ எழுதியிருப்பது கண்டு படிக்கிறான்.]*

**அருளாழி :** உணவிலை ! இதனை உண்ணுதல் ஒழிமதி !
அணிவரி தாகிய சிறையின் அருஞ்சுவர்க்
காலதர்த் தொகுத்த பொன்னின் கம்பியில்
வந்துள வண்ணக் குழம்பினை வைப்பின்
வெந்துள பொருள்போற் கையான் வீழ்வுறும்;
அடியில் வைத்துள அரும்புரித் துணைகொடு
விடியவீ ரைந்து நாழிகை முன்னர்
இறங்குக; இறங்கி எதிருள ஆல்மரம்
உறங்கும் புள்ளினம் ஊழ்மலர் விழுந்தொறும்
சிலம்பும் இயல்பின; சிறிதுமொலி செயாமல்

---

வாரணம் - யானை, கருதல் + ஓ - கருதல் - கருதாதே, ஓ - அசை. புரிசை - கோட்டை, காலதர் - சன்னல், பொன்னின் கம்பியில் – கரும்பொன்னால் (இரும்பால்) செய்யப்பட்ட கம்பியில், ஊழ்மலர் - முதிர்ந்த மலர், சிலம்பும் - ஆரவாரம் செய்யும்.



புலம்புகொள் சிறுநெறி போற்றி மேற்றிசை
இருகற் றொலைநீ ஏகின் நறவுசெல்
பெருவழி தோன்றும்; பிழையிலாய் ஆண்டு
நீவரல் நோக்கி நிற்குவென்—
மீவரு மனைத்தும் கடந்து மீள்கவே.

---

புலம்புகொள் - தனிமை கொள்ளும், மீவரும் - மேல் வருகின்ற, கடந்து - வென்று.

## நான்காம் அங்கம்

### மூன்றாங் களம்

இடம் : நறவுப் பட்டினச் சாலை
காலம் : பின்னிரவு
உறுப்பினர் : அனிச்ச அடி, அருளாழி

அனிச்ச : (தன்னுள்)
இருபா னாழிகை ஏகியும் அருளன்
வருவா னெனுமோர் வழுவிலா நசையான்
கொள்ளுதல் தகுவதே ! கொடுஞ்சிறை மீண்டு
கள்ளுமிழ் இரவிற் கானெறி இருகல்
கடப்பதற் கின்னும் காலம் வேண்டுமால் !
நடக்கும் நெறியில் நலிவெத் தனையோ ?
முள்ளும் புதரும் மூடிய நெறியை
உள்ளும் மனமே ஒடுங்குமே ! அவ்வழி
புதியன் எவ்வணம் விரைந்து போதுவன் !
விதியின் றாயினும் வேறும் மதியினன் ;
ஆதலின் நெஞ்சே அலமரல் ஒழிக !
காதலின் வருவன கழியிட ராமெனப்
புதியவோ ரெண்ணம் உளத்திடைப் புகுந்து
பதியநேர்ந் துள்ளதை விதியென் றுரைக்கவோ ?
அன்புக் குரியார் அனைவரும் இவனைத்
துன்புக் குரியனா ஆக்கித் தொலைந்ததால்

---

*கள்ளுமிழ் - கருமையை உமிழ்கின்ற, கானெறி - காட்டுவழி, வேறும் மதியினன் - வெல்லும் அறிவினை யுடையவன், துன்புக் குரியனா - துன்பத்திற்கு உரியவனாக.*



இதுவே முடிவென எடுத்துளன் கொல்லோ !
பொதுவே இவ்வணம் பொய்யுரை யாடி
என்னுளம் அறிய இஃதொரு விரகோ ?
பெண்ணுளம் எளிதில் பேசவும் படுமோ !
நன்றி யுணர்ச்சியான் நியமம் நண்ணினேன்
அன்றிவே றென்றும் அறிகிலே னெனவோர்
அழலுமிழ் வேலால் அருநிறங் கிழித்தவற்
சுழலுதல் எவனோ நெஞ்சமே சொல்லாய் !
எற்றிய காலையும் இருகையின் விடாது
பற்றிய செல்லல் பார்த்திடின் வியப்பே !
என்னுட னுறைந்தும் எனக்கா காதவன்
றன்னுட னுழலலும் நெஞ்சே தகுமோ ?
(இருளில் அருளாழி வருதல் கண்டு)
தடக்கையாய் வருக ! தனியடிப் பாதை
நடக்கையில் ஏதம் நண்ணிட விலையே ?
இற்றை நாழிகை வரையென் னெஞ்சம்
உற்றதை யார்தாம் உரைத்திட ஒண்ணும் ?
அருளாழி : மடலவிழ் குழலாய் ! வழியிடை யொன்றும்
கெடலுற விலையால் ;
அனிச்ச : கேழிலாய் ! இந்தப்
பெருநெறி விலக்கிப் பருமரக் காட்டின்
அருநெறிச் செல்லுவம் ; அஃதே ஏமமாம் !
(இருவரும் சிறிய நெறியில் செல்லுகின்றனர்)
முடங்கலில் குறித்த முறைப்படி யனைத்தும்
மடங்கலாய் நடந்தவா ?
அருளாழி : மாநீர்த் துறைசெலும்
நெறியிடைக் கீரன் நிற்பது தவிர
முறிபுரை மேனியாய் ! முற்றும் நடந்தன ;
அனிச்ச : தந்தைவா ராமையின் தளர்வா ? அன்றியான்

---

*பொதுவே - பொதுவாக, விரகோ - தந்திரமோ, அருநிறம் - மார்பு, எற்றிய - உதைத்த, கெடலுற விலை - கெடுதல் நேர வில்லை, கேழிலாய் - ஒப்பில்லாதவனே, மாநீர்த்துறை - கடல் துறை, முறிபுரை - தளிர் போன்ற.*

வந்ததை எண்ணிய வருத்தமா? எதனுல்
இவ்வணம் மொழிந்தனை ! இன்னு வாயினும்
அவ்விதி உய்க்குமேல் அதனொடுந் தாங்கி
உழத்தலே உலகியல்; மேலும் உறுதுயர்
வாழ்நாள் முடிய வருதலும் இல்லை;
பானுள் இரவு மட்டுமே பற்றிப்
படரும் படர்யான்; ஆதலின் பெரிய
இடரென எண்ணல்; எழுஞா யிறுவான்
வருமுன் அகலும் வறியபனி யாவேன்;
வலியன் மிஞிலிதன் வன்பரி யேறிப்
புலியன வீரர் குழாம்புடை சூழப்
பாழி போதலைப் பற்றித் தொடர்ந்துளார்;
நாழி யாகுமேல் நன்னுதால் அருளனைச்
சேரன் தொண்டி சேர்ப்பது நின்கடன்;
ஆரன் புடையான் இருளிடை யருந்துயர்
உழக்கும்நீ யேகென உய்க்க வந்துளேன்;
கிழக்கொளி கொளாமுன் கீரன் பணிமுடித்
தேகுவென்; ஆதலின் இனையல்;

அருளாழி :
எல்வளை !
ஆகுவ யாவும் ஆகா தகலா
என்பது மானிடர் எழுநாள் தொட்டே
மன்பதைக் குரிய மறைமொழி யாவதே !
ஆயினும் நின்னென்று வினவ அவாவினேன்;
தாயினும் அன்பு ததும்புநின் சொற்களில்
தீயினும் வெம்மை தோன்றித் தெறுதல்
விளங்ககில் லேனுல்; விளங்கிழாய்! மற்றியான்
துளங்கும் படிவரும் துயரென நின்னைக்
கூறிய துண்டுகொல்? கொடுமை திரண்டொருங்
கேறிய சொற்களான் இதுமொழி வாயெனல்

---

பானுள் - பால்+நாள் - நாளின் பகுதியாகிய, படர் - துன்பம், எண்ணல் - எண்ணுதே, வறிய - சிறிய, எல்வளை - ஒளி பொருந்திய வளையலை அணிந்தவளே !, தெறுதல் - அழித்தல், விளங்கிழாய் - ஒளி பொருந்திய அணிகளை அணிந்தவளே.



அறிவனேல் மிஞிலியின் அருங்கடிச் சிறையினுட்
செறிவதே மேலெனத் தீர்ந்திருப் பேனுல்;
(இருவரும் ஒன்றும் பேசாது நடந்து செல்கின்றனர்)

அனிச்ச : திரைகடல் நெருங்கினம்; திரும்பத் திரும்பக்
கரைவந் துடையும் கழிநீ ரோதை
எழுந்தது கேளாய் !

அருளாழி : எங்குநாம் வந்துளோம் ?

அனிச்ச : சுழுந்தொளி தெரிவது துறைமுகப் பட்டினம்;
இருகல் தெற்கில் இருக்கின் றேமயல்
துறுகல் மறைவிற் சிறுகலம் உளதால்;
புரட்டி நீர்மிசைப் போவமேல் நாழிகை
இரட்டி வருமுன் என்பணி முடியும்;
ஆதலின் விரைக;

அருளாழி : ஆழியின் அலைவந்து
போதலின் வந்த பொறிமாண் அலவனின்
வளையொலிக் கஞ்சிக் கிளையொடும் ஒடுதல்
கொளைநேர் நடையாய் காணுதி !

அனிச்ச : குளிர்கடல்
நண்டும் அஞ்சி நடுங்கி யொதுங்கக்
கண்டும் வாழும் காலம் நேர்ந்ததை
நோவதே யல்லால் வேறென நுவல்வது ?

அருளாழி : ஆவதை நோக்கின் அஃதும் முரணே !
இங்கோர் அலவனின் எழில்முகம் நோக்கித்
தங்கிளை மீண்டதுந் தானுண ராமல்
நிற்பது காண்க !

அனிச்ச : நெடுந்தகை ! நின்றன்

---

அருங்கடிச்சிறை - அரிய காவல் அமைந்த சிறை, செறிவதே - அடைபட்டுக் கிடப்பதே, தீர்ந்திருப்பேனுல் - ஒழிந்திருப்பேன், கழிநீரோதை - கடலின் ஆரவாரம், சுழுந்து - இரவில் ஒளியினிமித்தம் பயன்படுத்தப்படும் எரிகோல், துறுகல் - பாறை, சிறுகலம் - சிறிய மரக்கலம், பொறிமாண் - புள்ளிகளால் மாட்சிமைப்பட்ட, அலவனின் - அலவன்+இன், தங்கிளை - தம் சுற்றம்.

கற்பனை கண்டுளம் களிகொள் கின்றேன் !
புலம்புறும் இந்தப் பொறிமாண் அலவனின்
நலம்புதி துண்ட நாயகன் அன்பின்
**'உறவினால் உறுவ தொழிகலாத் துன்பமே**
**இறவினால் பெறுவது எண்ணிலா வின்பமே'**
என்னுங் கொள்கையின் நன்மையை யோர்ந்ததால்
இன்னுந் தொடர்ப்பா டெதற்கென நினைந்து
நீங்கி யிருக்குமோ வெனநான் நினைவென்;
(அலவனை நோக்கி)
பாங்குள வாழி படர்தர வியலாது
ஓங்குந் திரையின் வரவினை யோர்ந்துள
தண்டுறை யலவ ! தரைவாழ் மானிடர்
விண்டுரை கேட்பையேல் வியப்பில் மூழ்குவை !
உள்ளமென் றோதலும் உரனென மொழிதலும்
வெள்ளமாம் அன்பென விளக்கம் பேசலும்
நாளும் நடக்கும்; நலம்பழு தாயின்
தேளும் வெள்குறத் தீமொழி பிறக்கும்;
இதுதான் அம்மவோ யாமுறை யுலகம் !
நிலம்வா ழெனக்கும் நீர்வாழ் நினக்கும்
புலங்கொடு நோக்கின் பொருத்தமிக் குளதால் !
ஆழித் திரையான் அலைவுறு கின்றாய் !
ஊழின் கையால் உலமரு கின்றேன் !
மீளினும் மீள்குவை; மேலலை இலையேல்
வீழினும் வீழ்குவை; விதிக்கைச் சுழல்வேன்;
நின்னிலை என்னிலை; நீள்கடற் பேரலை
ஒன்றிவண் வருமென் றோர்ந்துவா ராமையால்
உணங்கல் எனப்பிறர் உரைக்கக் கிடக்குநங்
கணங்கள் வாழ்க்கையும் கண்டுளே மன்றே !
முடிவைக் கண்டு முணகுதல் வேண்டா !
விடிவுக் காவன விடாஅ தியற்றுவம் !
நின்னை யழைக்கவோர் நீளலை வருமால் !

---

*வெள்குற - நாணுமாறு, உணங்கல் - கருவாடு, கணங்கள் - கூட்டத்தின்.*



என்னை யழைக்கவோர் இரும்பணி உண்டால் !
பணிசெயப் பிறந்துளோம்! பயன்பெறப் பிறந்திலம்!
அணியலைச் சேறி அலவ !
(அருளாழியை நோக்கி)
ஆண்டகாய் !
கலத்தினைப் புரட்டிக் கடலிற் செலுத்துவம் ;
(கடலிற் செலுத்த முயலுமுன்)
அருளாழி : நலத்தகை ! இனியான் நாவாய் செலுத்தித்
தொண்டியை அடைவென்; தோகைநீ விரைந்து
நியமம் மீளுக !
அனிச்ச : நிகரிலாய் ! நின்மொழி
செயலுற வியலேன் 'சேரர் தொண்டியின்
உய்த்து மீள்'கென உரைத்த தந்தைசொற்
பொய்த்து மீளுதல் புரியகில் லேனால் ;
அருளாழி : நின்னுள மிஃதேல் என்னான் மொழிவது !
(கலம் சென்று கொண்டிருக்கிறது)
அனிச்ச : விண்ணின் விரிந்து கிடக்கும் மீன்களை
எண்ணி முடிக்க எண்ணியுள் ளனையோ ?
காயம் நோக்கிய கண்விலக் காமல்
ஏய ஒருசொல் என்னொடும் மொழியா
திருப்பது மேனோ ?
அருளாழி : எதுநான் மொழியினும்
நெருப்பென நினையும் நின்னொடு பேசி
வெறுப்பினைப் பெறுதலின் வாளா விருத்தலே
ஏற்ப தென்பதிவ் வேழையின் கருத்தாம் !
ஆர்ப்புறு கடலின் அலவனொடு மொழிந்தன
இன்று நினையினும் எண்ணிலா ஆண்டுகள்
சென்று நினையினும் தீயெனப் பற்றுமால்;
இனைத்தென வறியாது சுழலும் இயல்பினேன்
பிழைத்த துளதேல் பிழையிலாய் பொறுக்க !

---

*நின்மொழி செயலுற வியலேன் - நின்சொற்படி செயற்பட இயலாதவளாயிருக்கிறேன், காயம் - ஆகாயம், ஏய - பொருத்தமாக, இனைத்தென - இன்னதன்மையது என, பொறுக்க - பொறுப்பாயாக.*

தொண்டியும் வந்தது துணைவனே ! என்னுளம்
மிண்டிச் சுழன்று மேலெழும் ஒன்றை
வினவுவென் அதற்குள விடையினைச் சிறிதும்
சினவுத லின்றிச் செப்புமா றிரந்தனென்;
கறுப்பும் வெறுப்பும் காட்டும்நீ எதற்கிப்
பொறுப்பினை ஏற்றுத் துணையும் புரிவது ?

**அனிச்ச :** தந்தையின் ஆணையை எம்மகள் தள்ளுவாள் ?
விந்தையென் றிதனை விளம்புதல் வேண்டா.

**அருளாழி :** தந்தையின் ஆணை தவிரவே றென்றும்
கொந்தலர் குழலாய் கொண்ட தில்லையே !

**அனிச்ச :** முற்ற மொழிவதேல் மற்றென்று முள்ளது !

**அருளாழி :** எற்றென் றதனை இயம்ப வேண்டினென் ;

**அனிச்ச :** துணை நான் புரியின் தோன்றல்நீ என்றன்
மனை நாடி வருகுவை; வந்துசெந் தமிழில்
'நன்றி' எனுமோர் நறுஞ்சொல் கூறுவை !
அன்றென் னிருசெவி அளப்பிலாக் களியினை
எய்து மாதலின் இத்துணை புரிந்துளேன் ;
பெய்தார் மார்ப பின்னர்க் காண்குவம் !

**அருளாழி :** நல்லாய் அனிச்சம் ! நான்மொழி தற்கு
நில்லாய் சற்றே ! கலத்தினை நிறுத்துக !
*(நிறுத்தாது செல்லுகிறுள்)*

**அனிச்ச :** *(தனக்குள்)*
உள்ளுறை கூறும் ஒருவாய்ப் பினையும்
தள்ளி வந்தது தக்கதோ ? அன்றே ?
வினவினுற் குரியது விளம்புதல் தடுத்த
மனமென மனமோ ? மற்றியான் இன்று
மொழிந்தன கேட்டு முதுக்குறை விலியெனக்
கழியுமோ ? அன்றிக் காக்குமோ ? அறியேன் !
விரிந்து கெடுவது நறுமலர் என்பதூஉம்

---

*மிண்டி – தள்ளி, கறுப்பு – சினம், எற்றென்று - என்ன தன்மைத் தென்று, நறுஞ்சொல் - இன்சொல், உள்ளுறை - உள்ளத்தில் உள்ளனவற்றை, முதுக்குறைவிலியென - அறிவில்லாதவள் என.*



மொழிந்து கெடுவது சிறுநா என்பதூஉம்
அறியா உளமே ! இனியா உய்குவை ?
காணுப் பொழுதிற் கரைதலும், காணின்
மாணு மொழிதலும் மனமே நின்செயற்
கெளியதே யாயினும் ஏழை யென்னலம்
அளிய தாமென அறியகில் லாயோ ?
*(கலம் வருதலைக் கண்டபின் வெளிப்படையாக)*
ஒளிவிளக் குயர்த்திய உறுகலம் நான்கு
வழியெதிர்ப் பட்டதே வருபவர் யாரோ ?
அகலவும் இயலாது அணுகிவிட் டனரே !
*[வேங்கை முகனும் வீரர்களும் வருகின் றனர் விளக்கை உயர்த்தி அனிச்ச அடியை நோக்கி.]*

**வேங்கை :** பகல்செய் நகையாய் ! பனிக்கடற் றனியே
இந்நே ரத்தில் எம்மெதிர் வந்தனை !
எந்நாட் டாள்நீ ! ஏனிவண் வந்தனை ?

**அனிச்ச :** உள்ளங் கவர்ந்தான் உறவு நீக்கத்தால்
வெள்ளநீ ரேனும் அமைதி விளைக்குமென்
றுள்ளி வந்தனென் !

**வேங்கை :** ஒளியிழாய் ! வருந்திய
நின்னிலைக் கிரங்கினென் ! ஆயினும் நெடுங்கடல்
தனியே வரும்நின் செயல்தக் கதுமிலை !
பனிமொழி எங்கலம் படருக !

**அனிச்ச :** பெரியீர் !
என்னையோ மகளுக் கெதிர்ந்தன வாமென
அன்னையு மத்தனும் அலக்க ணுறுவரே !
போதல் அவாவினேன் அருளுக !

**வேங்கை :** பொலம்படு
காதல் மகளே ! கைதிநீ ! விடிந்தபின்
நின்சொல் லாய்ந்துன் நெடுமனைச் சேர்ப்பென்;
என்சொல் தேறி ஏறுக கலமே.

---

*மாணு – மாட்சிமை இல்லாதன, பகல்செய் - ஒளி செய்கின்ற, படருக - ஏறுக.*

# நான்காம் அங்கம்

## நான்காங் களம்

இடம்: வஞ்சி நகரம்.

காலம்: முற்பகல்.

உறுப்பினர்: நார்முடிச்சேரல், செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அருளாழி, அமைச்சர் முதலியோர்.

**நார்முடி:** வானவர் நாடென வழங்குநம் நாட்டைத்
தானவன் மிஞிலி தறுகணுற் கவர
எண்ணி யுள்ளதூஉம், நன்னன் இசைந்ததூஉம்,
நண்ணிய ஒற்றர் நமக்குக் கொணர்ந்துளர் ;
பூழியை இழந்ததூஉம், புலிநிகர் மறவர்
ஆழியை மான அடர்த்தெதிர் வரினும்
அதிர்வில னாகி அமர்க்களங் கோடலில்
எதிர்வில னாகிய எயினன் மாய்ந்ததூஉம்,
கண்டனர் ஆதலின் கரையிலா மண்ணசை
கொண்டனர் போலும்; குறித்தவிச் சூழலில்
அடுத்துள பகையின் ஆணி வேரையும்
எடுத்துத் தொலைக்கநா மெவ்வணம் செயல்படல்?
தீர எண்ணித் தெரித்திட வேண்டினென் ;

**அமைச்சர்:** சேரர் தலைவ! சிறியன விலக்கா

---

தானவன் - கொடியவன், அதிர்விலனாகி - நடுங்காதவனாகி, எதிர்விலனாகிய - ஒப்பில்லாதவனாகிய, சிறியன - கீழ்மைக் குணங்கள்.



நன்னனும் அவனை நயந்த மிஞிலியும்
பொன்னென நெல்விளை பூழியின் வழியே
தொடக்குமுன் னமே போரைத் தொடக்கி
மடக்குதல் வேண்டும்; மாநீர்த் தீவின்
வேங்கை முகன்படை வெளிப்பட விடாஅது
தாங்குதல் வேண்டும்; தவறா திவற்றை
ஒரேஎ பொழுதில் உடற்றுவ மாயின்
பகைவர்தம் மெண்ணம் பாழ்பட லன்றியும்
நகைவிளை முதலாய் நலிவையும் எய்தும்;

**நார்முடி:** குட்டுவ! அமைச்சர் கூற்றினைத் தொடர்ந்ததை
ஒட்டுவ வாயினும் வெட்டுவ வாயினும்
உரியன கூறுதி!

**செங்குட்டுவன்:** உரவோர் தலைவ!
ஆன்ற கேள்வி அமைச்சர் மொழியினை
ஏன்று கொள்வதோ டின்னென்று மொழிகுவென்;
பவளத் தீவினைப் பாழ்படச் செய்தபின்
தவள நீரலை தவழும் நறவினைத்
தாக்கி யழித்துத் தலைநகர் பாரம்
நோக்கிமுன் னேறுதல் வேண்டும்; கிழக்கில்
கொங்குநாட் டிருந்தொரு கொல்படைப் பிரிவு
தென்கிழக் காகித் திகழும் அணியூர்
கடம்பின் வாயிலைக் கருதுதல் வேண்டும்;
இடம்பின் னிலராய் இடர்ப்படு வாரின்
மடம்படு செயற்கிம் மன்பதை நகைக்கும்;
தொடக்கில ராகித் துளுவர் அலைகையில்
வடக்கிற்புன் னாடு பகையை வளைத்துக்
கலாஅம் விளைத்திடும்; கடையுறு காலை
எலாஅம் இனியவா எய்துதல் காண்குவம்;
புலாஅல் கமழும் பொருவேல் அருளன்

---

தாங்குதல் - எதிர்த்தல், ஏன்று கொள்வது - ஒப்புக்கொள்வது, தவளம் - வெண்மை, கடம்பின் வாயில் - துளுநாட்டிலுள்ள ஓர் ஊர், தொடக்கிலராகி - பற்றுக்கோடு இல்லாதவராகி, கலாஅம், கலகம், எலாஅம் - எல்லாம்.

தன்னுளம் கூறுக!
அருளாழி: தண்டமிழ் நாயக!
என்னுளம் எனநான் இயம்புதற் கென்னுள?
குட்டுவர் மொழியும் அமைச்சர்தம் கூற்றும்
எட்டுணை யேனும் எதிர்ப்பதா யில்லை;
இருவர் கூற்றும் இன்னே இணைத்துப்
பொருவதற் குரிய வென்பதே புகலுவென்;
'வினையே யாடவர்க் குயி'ரெனும் செம்மொழி
பனையே என்னப் பாரித்த நாட்டில்
அடுத்தவன் கவர்ந்த அணிநிலம் மீட்க
எடுத்த முயற்சிகள் இனியேனும் வெல்க!
இரும்பெலாம் தொடுத்த இணையிலா ஆற்றல்
நரம்பெலாம் பெறுக! நலிவெலாம் தொலைக!
தொழுநோ யாளன் தொடுந்தொறும் கூசும்
வடுவிலா நலத்து மாந்தரின் பகைவர்
தழுவிய பூழித் தமிழ்நில மங்கை
கூசுதல் கண்டும் கொடும்போ ருடற்றுது
பேசுதல் எதற்கோ? பெற்றவள் மானம்
பிறந்தவன் முன்னர்ப் பிழைப்பது கண்டும்
இறந்தவன் மான இருப்பதும் எதற்கோ?
சேர மக்களின் செறுபசி களைய
ஆரநெல் மணியை ஆக்கும் தாய்நிலக்
குற்ற துயரினை ஒழிக்கக் களம்புகா
வெற்று மனிதரும் எற்றுக் கிங்குளர்!
புரையென வந்தவிப் புன்மை துடைக்கிலார்
வரையெனத் தோளை வளர்த்துத் திரிதல்
கண்டுல கனைத்தும் கைகொட்டி நகைக்கும்;
பண்டுள பெருமையும் பனியென மறையும்;
நாளினை எண்ணி நகர்த்தும் இயல்பினர்
வாளினைப் பிடித்து வாழ்தலின் மகளிர்

எட்டுணை - எள் + துணை, எள்ளளவு, இறந்தவன் மான - இறந்தவனைப்போல, ஆர - மிகுதியாக, புரையென - குற்றமாக, வரையென - மலைபோல.



தாளினைப் பிடித்து வாழ்தலே தக்கதாம்;
மண்கொள விரும்பா மனிதரைப் பழியாம்
புண்கொள வந்த பொதியுடல் எனச்சொலும்
பழிகொண்டு வாழவோ! பகைவன் துளுவனின்
கழியவாக் காண்பவர் நகையே காட்டுவர்;
அன்னப் பாலுக்குத் தென்னனுப் போட்டவன்
ஆவின் பாலுக்குக் கற்கண்டு கேட்கிறான்;
இறக்குங் காலம் எழுந்தால் அல்லவோ
பறக்கச் சிறகினை விரிக்கும் ஈயலும்;
உண்டு கொழுத்த நண்டுபோ லானவன்
வளையில் இருப்பனே? வயங்கும் பூழியில்
வாலை இழக்க வந்துளான் நரியன்;
எவ்விலை உதிரினும் ஈந்திலை உதிருமோ?
எப்படை தோற்கினும் இப்படை தோற்குமோ?
பிறந்த மண்ணின் பெரும்பழி துடைக்கிலார்
இறந்தவர் என்பதே இம்மா நிலத்தின்
வழக்கெனக் கொண்ட மறக்குல மைந்தர்
நிலக்குச் சுமையென நிற்க விரும்பிலர்;
கார்முகம் துரக்கும் கடுங்கணை பறக்கும்
போர்முகம் காணப் பொழுதெலாம் வீணெனும்
ஆற்றல் மறவர்கள் ஆர்த்துக் கிளர்ந்துளர்;
கூற்று வெகுண்டென நாடே கொதித்துள
பொழுதிதன் மேலோர் பொழுதும் உளதுகொல்?
பழுதிதை நன்கு பயன்படுத் தாமை;
படையின் பெருக்கமும் பயிற்சிப் பெருமையும்
கொடையின் மிக்கோய் குறித்தாய் வோமேல்
நமக்கே நலமாம்; நாட்டின் கோடியில்
அமைத்துள கலப்படை அறியார் பகைவர்;

அன்னப்பால் - நீராகாரம், ஈயல் - ஈசல், ஈந்திலை - ஈச்ச இலை, வழக்கு - வழக்கம், கார்முகம் - வில், கூற்று - சாவு, வெகுண்டென - சினந்தாற்போல, பழுதிதை நன்கு பயன்படுத்தாமை - இவ்வமயத்தை நன்கு பயன்படுத்தாமை பழுது என மாற்றிக் கொள்க. கலப்படை - கப்பற்படை.

துளுவர் படையினும் இரட்டி நம்தொகை ;
முழுமையும் பயிற்சி முடித்துத் திகழுவ ;
முன்னர்க் குறித்த வண்ணம் மதியம்
நன்னர் நிரம்பிய நாளில் அடுபோர்
தொடங்கலே விழைகுவென் ;

**நார்முடி :** துகளிலார் மொழிந்தன
அடங்கலும் கேட்டுளீர்; ஆதலின், அடுபோர்
விலக்குதற் கில்லை என்பது வெளிப்படை
நலக்குரி யீரிஞ் ஞாட்பினில் எவ்வெவர்
எவ்வெம் முனை நின்று போரரை இயக்குதல்?
செவ்வனம் உரையீர்!

**அமைச்சர் :** செருமேம் படுந!
என்னணம் எவர்வினை இயற்றுத லென்பதை
முன்னமே மனத்திடை முடித்திருப் பாயேல்
மொழிகதில்! அதனொடு முரணுதல் உளவேல்
மொழிகுவம்!

**நார்முடி :** அறிவும் மொய்ம்பும் சிறந்தீர்!
நான்கு முனையிலும் நடைபெறும் போரின்
போங்கும் நலமும் புரையிலா தறியின்
பூழியுள் மிஞிலியொ டுடற்றும் போரும்,
ஆழியுள் வேங்கை முகனை அடர்த்தலும்,
தானையிற் சிறந்தீர் தலையா யினவாம்;
ஏனை யிரண்டின் இயல்பும் தெரியின்
முன்னதன் றுணையா முரணியோர் ஆற்றலைப்
பின்னப் படுத்தலே பெரிதும் கருத்தாம்;
இணைப்போர் இரண்டும் அவற்றிற் கியையும்
துணைப்போர் இரண்டும் ஆமெனத் துணிந்தே
முடிவுகள் கொண்டுளேன்; மேலுமிம் முடிவில்
அடிமுதல் நிகழ்ந்தன கருதியும் அவரவர்

---

ஞாட்பினில் - போரில், செவ்வனம் - செம்மையாக, முரணுதல் - மாறுபடுதல், போங்கு - போக்கு, முரணியோர் - பகைவர், பின்னப்படுத்துதல் - சிதைத்தல், இணைப்போர் - சமமான போர்.



ஏற்ற பணியினை எதிரிலா வகையில்
ஆற்ற நிகழ்த்தும் அரிய திறலும்
எண்ணிக் கொண்டுளேன்;

**செங் :** எண்ணிய வெல்லாம்
முன்னி எமக்கு மொழியவும் வேண்டுமோ?
இஃதெம் மாணை! இயற்றுக வினையெனின்
அஃதொழி யேமென அறிந்தீர் இவ்வணம்
கூறல் எதற்கு முடிவினைக் கூறுக!

**எல்லாரும் :** வேறு மொழியல் முடிவே விளம்புக!

**நார்முடிச் :** வேங்கைப் போத்தென விளங்கு மறவீர்!
தீங்கும் நலனும் தெரிக்கு மமைச்சீர்!
துருத்திக் குறும்பரைத் தொலைக்க நெடுநாள்
அருத்திய னாகி அருங்கலப் பயிற்சிகள்
மிக்குள குட்டுவன் கடற்செரு மேவுக!
இக்கெழுந் தசையும் எழில்தவழ் பூமியில்
கொடியன் மிஞிலி அடியற்று வீழவும்,
வடிமலர்க் குழலி வஞ்சனை யாளரால்
கொலைப்படு நாளில் அருளன் வெகுளியால்
உலைப்படு நெருப்பென உரைத்த வஞ்சினம்
முடிக்கவும், அருளன் வடிக்கணை தெறிக்க!
புன்னாட் டாரொடு பொருந்திப் போரெழும்
அந்நா ளாங்கோர் அருங்கலாம் மூட்டலை
ஆடுகோட் பாட்டுச் சேரலன் ஆற்றுக!
கொங்குநாட் டிருந்தொரு குறும்படை கொண்டு
கடம்பின் வாயிலைக் கடக்கும் வினையினை
நான்மேற் கொள்ளுவென்; நான்கு முனையினும்
போர்மேற் கொள்ளுவம்; புகன்றனம் ஆணை;
பவளத் தீவின் படையின் வலியை

---

ஆற்ற - முழுமையாக, மொழியல் - மொழிய வேண்டா, துருத்திக் குறும்பர் - பவளத்தீவில் உள்ள குறும்பரை, அருத்தியனாகி - விருப்பமுடையனாகி, இக்கெழுந் தசையும் - இக்கு + எழுந்து + அசையும், இக்கு - கரும்பு.

நவையற அறிவது நங்கட னுதலின்
துறையில் நிற்கும் கலத்தின் தொகுதியை
மறைவாய்ச் சென்று மதித்து மீள்கென
அருளற் காணை அருளினம் சென்மே!

---

சென்மே - செல்வாயாக.

## ஐந்தாம் அங்கம்

### முதற் களம்

**இடம்:** *பவளத்தீவு.*

**காலம்:** *முன்னிரவு.*

**உறுப்பினர்:** *அனிச்ச அடி, கோட்புலி, அருளாழி.*

*[இருள் பரவிய நேரத்தில் அருளாழி பவளத் தீவைச் சுற்றி வந்து, அடர்ந்து இருள் செறிந்த இளமரக்காவினுள் அமர்ந்து, உடன்வந்தான் வரவுக்காக எதிர்நோக்கி யுள்ளான்]*

**அருளாழி:** *[தனிமொழி]*
வெள்ளலை தவழுமிவ் விரிநீர்த் துருத்தியை
ஒன்னலர் நெருங்க வொண்ணு திருக்க
நூறு கலங்களை வேறுவே றியற்றி
ஆறு பிரிவா அதனைப் பகுத்து
நினைத்த நொடியே போரினை நிகழ்த்த
அனைத்தும் செய்துள வேங்கையன் ஆற்றலைப்
போற்றலே வேண்டும்; ஆயினும் குட்டுவன்
ஆற்றலும், மும்மடங் காகிய கலத்தின்
பெருக்கமும் தொகுத்துப் பேசின் வெல்லுதல்
சுருக்கில் என்பதை எவரும் துணிகுவர்;
இயல்பிலே தலைமைக் கேற்றன அமைந்தவன்

---

*வேறுவேறு இயற்றி* - வேறுவேறு வகைப்பட்ட வடிவினை யுடையவாய் இயற்றி, *சுருக்கில்* - விரைவாக.

முயல்விலும் தளரா மொய்ம்பினன் குட்டுவன்;
யவனமீ காமர் எழுவர்வந் துதவிய
தவலிலா உத்திகள் தளராது கற்றவன்;
ஆழித் தீவே! ஐந்து நாள்களில்
பாழில் லாகுவை! பருந்தும் கழுகும்
பறக்கும்; அவற்றொடு பருமரத் துச்சியில்
சிறக்கும் விற்கொடி சேர்ந்து பறக்கும்;
ஏழிரு நாழிகை கழிந்ததால் இன்னே
மீளுதல் வேண்டும்; மேற்புறம் சென்றவன்
என்னா யினனோ! இன்னுமோர் நாழிகை
பின்னும் தாழ்த்துவென்! பேதை அனிச்சம்
அலவனொடு மொழிந்ததும் அழைத்தும்நில் லாது
பலவன் மொழியாற் பாடுறுத் தியதும்
நினையின் துன்பம் நெருப்பெனப் பற்றும்;
கணையினுங் கொடிய கண்ணி யனிச்சம்
நோயுற் றேனைத் தாயெனக் காத்ததும்,
பேயுற் றாள்போல் பின்புபே சியதும்,
எண்ணின் இதுவோ பெண்ணின் மனமெனக்
கண்ணுதல் அல்லால் கழறுதல் இலையால்;
உள்ளம் அவளோ ஒளித்தனள்; இல்லை.
கள்ளன் யானும் கரந்துளே னலனோ?
வெளிப்பட உரையா வினையினால் வாழ்க்கை
புளிப்படை தற்கிரு வேழும் பொறுப்பே;
[யாரோ பேசிக்கொண்டு வரும் அரவம் கேட்க]
இருவர் பேச்சொலி எழுந்ததால்! யாரவர்?
இரும்புதர் மறைந்தவர் இசைப்பது கேட்பென்;
ஆ! ஆ! ஆரிவள் அனிச்ச அடியா?
ஏனென் இவனோ டிங்குப் புகுந்தனள்?
இன்னும் மறைந்துநின் றிவர்பேச் சனைத்தும்
நன்னர் அறிகுவென்;

---

*மொய்ம்பினன் - வலிமையுடையவன், யவனமீகாமர் - யவனக் கப்பலோட்டிகள், தவலிலா - குற்றமில்லாத, கண்ணுதல் - கருதுதல், இரும்புதர் - பெரிய புதர்.*



அனிச்ச : நகையறா முகத்தோய்!
துன்பமுற் றேனைத் தொடர்ந்து தொடர்ந்து
வன்புசெய் வதனை மாற்றகில் லாயோ?
கோட்புலி: வன்பென மொழியல் வாட்கணாய்! அளப்பிலா
அன்பென மொழிவையேல் அதுவே சாலும்;
அடிதான் அனிச்சம் ஆவது போலும்;
பொடிதான் ஆகிப் புலம்புமென் நெஞ்சை
அறிந்தும் இரங்கா நின்மனம் வன்மை
செறியும் பாறையோ?
அனிச்ச : சிறவா இம்மொழி
பெண்பா லாரிடம் பேசற்கு நாணா
நின்பால் தீரா வெறுப்பே நிகழ்வது;
கோட்புலி: சேரரும் யவனரும் சேர மேற்கடல்
தீரரும் நடுக்கம் செய்யும் வேங்கையன்
ஒருமகன் யானெனல் ஓர்ந்திலை போலும்;
மருமகள் ஆகிஎம் மனைக்கண் வைகிடும்
பேற்றினைத் தந்தும் பேதைநீ அறியாது
தூற்றினை!
அனிச்ச : பேச்சால் தொகுத்திட வல்லாய்!
தந்தையின் சிறப்பெலாம் தவறா தடுக்கி
மைந்தன் யானென மருளுற மொழியுநின்
ஆற்றல் பெரிதே! ஆயினும் மடவார்
ஏற்றல் இல்லையே இதனை!
கோட்புலி: பேதாய்!
பெற்றவர் ஈட்டிய பேறெலாம் மகவாய்
உற்றவர்க் குரிய வென்பதோர்ந் திலையோ?
ஏழுநாட் செல்லின் எழூஉம் செருவில்
சூழும் பகையின் தொகுதி மாய்த்தலில்
வேங்கையன் மகனுமோர் வேங்கையே என்பதை
மூங்கையும் பாடுவான்!
அனிச்ச : மூரித் தடக்கையாய்!

---

*நகையறா - சிரிப்பு நீங்காத, பொடிதான் ஆகி - புழுதியாகி, மூங்கையும் - ஊமையும்.*

பெரும்போர் எழுமெனப் பேசினை ; எதனுல்
வரும்போர்? பகையென வருபவர் யாவர்?
**கோட்புலி :** சேர நாட்டொடு சினப்போர் நடைபெறும்
**அனிச்ச :** ஈர முடையாய்! எங்குபோர் நிகழ்த்துவை
வானவர் வலிமை வாய்ந்தவர் என்பரே !
ஏனமர் வேட்டனிர் ! எவ்வணம் முடிப்பீர் !
**கோட்புலி :** கடலிலெம் ஆணை கடந்திடச் சேரர்
கடலினும் பேரவாக் காட்டினர் ; ஆதலின்
தொடக்கின மிச்செரு ; தொண்டித் துறையை
மடக்கி யழிப்பேம் ; மலையில் மோதிய
ஆடியை மான அழியு மவர்படை ;
நீடிய புகழ்சால் வஞ்சியை நெருங்குவம் ;
பூழியி லிருந்து பொருபடை மிஞிலி
ஆழிப் பேரலை யாமெனப் படைகொடு
வஞ்சியை நோக்கி வருவான் ; ஆயிடை
இஞ்சியைத் தின்ற இருங்கலை முகத்தராய்
இருதலைக் கொள்ளி எறும்பின் மானக்
கெடுதலை யுறுவர் சேரர் ; கிளத்தற்
கரிய வெற்றியை அடைந்த மறவனை
உரிய கணவனு ஒப்புவை யல்லையோ !
**அனிச்ச :** நகைபடுங் கற்பனை நன்கு தெரித்தனை
தொகைபடுந் திறத்தினேய்! தூங்கும் வேளையில்
கனவு காண்டலே கண்டனம் ; உறங்கா
நனவிலும் கனவினை நண்ணினை எவ்வணம்?
**கோட்புலி :** சேரரை வேறல் இயலாச் செயலெனக்
காரனை குழலாய் கருதுகின் றனையோ ?
காலமும் இடமும் கருவியும் எண்ணியார்
ஞாலம் கருதினும் நண்ணுவர் என்பது
பொதுமறை அன்றோ? பொருவிலாய்! போர்க்கள
மதுகையர் அனைவரும் நன்னன் மனையினில்

---

*ஆடியை - கண்ணுடியை, இருங்கலை - கரிய குரங்கு, தொகைபடும் திறத்தினேய் - பலவாகிய ஆற்றலையுடையவனே !, காரனை - கார்போன்ற, மதுகையர் - ஆற்றலுடையவர்.*



இறுதி முடிவினை எடுத்திருப் பார்கள் ;
அறுதி கூறவெம் தந்தையும் ஆண்டுளன் ;
ஆதலின் அணியிழாய் ஆயிரு வழிப்படும்
மோதலிற் சேரர் முன்னிலா தோடவும்,
வஞ்சி நகரில் வலம்வரு வேனேல்
பஞ்சின் மெல்லடிப் பாவாய் ! அன்றென்
தோள்படு தாரின் துதைந்திருப் பாயா ?
**அனிச்ச :** தேள்படு நஞ்சின் தீய சொற்களால்
கூறல் இவ்வணம் ; கூடார் வஞ்சியைப்
பற்றுதற் கில்லை ; பன்னுள் விடாது
முற்றினும் மாறியோர் முடிவு மேற்கொளேன் ;
**கோட்புலி :** எதனுல் இவ்வணம் இசைக்கின் றுய்நீ !
கதனுல் இவ்வணம் கழறுகின் றனையோ ?
தோற்றமும் அழகும் தொல்படைக் கஞ்சா
ஊற்றமும் உலகியல் ஒழுக்கமு மில்லெனப்
பொய்யாக் கருதினை போலும்நீ ! மறுக்க
மெய்யா அமைந்தன விளம்புக !
**அனிச்ச :** ஐயா !
குப்பையில் முளைத்த கொழுவிய தண்டு
கப்பற் பாய்மரம் ஆதல்எப் போது ?
சமைக்கப் படைக்கத் தெரியாய் எனினும்
உடைக்கக் கவிழ்க்க உறுதிகொண் டனையோ ?
குலப்பிறப் பாட்டியான் குன்று ஒழுக்கம்
தலைப்படு மொருவனின் தாள்நிழல் வாழ்தலே
வேண்டுவென் ; ஆதலின் விரும்பேன் ; அவாவுதல்
ஈண்டுநீ விடுமதி !
**கோட்புலி :** இளநகை! குறும்பர்
குலத்தில் நீயென குற்றம் கண்டனை ;
புலத்தில் நீதான் புரைபட் டுளையோ?
**அனிச்ச :** தன்குலப் பெருமை தானே பேசுதல்
பெண்குலக் குரியது ; பேசேல் அதனை !

---

*அறுதி - முடிவு, கதனுல் - சினத்தினுல், ஊற்றம் - மன எழுச்சி, மறுக்க - மறுப்பதற்கு.*

எருக்கு மலர்ந்தென ? மருக்கொழுந் தாகுமோ !
தலைப்படு குலமெனின் தரையெலாம் அதன்றன்
வலைப்பட வேண்டும் ; மாறு வசைப்பட
வாழ்வது நற்குல வாழ்வெனப் படுமோ ?

கோட்புலி : தாழ்குழல் ! எங்குலம் தாழ்ந்த தென்பதை
அழலுமிழ் சொல்லான் அறையினும் உன்றன்
குழலிணை மொழியால் கூறல் வேண்டினென் ;

அனிச்ச : மேற்புல வணிகரின் மிதவைகள் மறித்துப்
பாற்பட வகுத்த பண்டத் தொகுதியைக்
கொள்ளை யடிக்கும் குலத்தின் சிறப்பை
வெள்ள நீ ரலைகளே விளம்பும் ; தகவோய் !
கடல்வாழ் உயிர்கள் கழறுதிறம் பெறுமேல்
அடல்சால் நுங்குல அருமையைப் பாடும் ;
ஆறலை கள்வரின் ஆர்கடல் விரிப்பில்
நீரலை கள்வராய் நிற்குநுங் குலக்குக்
குறும்பர் எனப்பெயர் கொடுத்தோன் ஒட்பம்
இறும்பூது கொள்ளற் கேதுவாம் தகைத்தால் !

கோட்புலி : (சினங் கொண்டு)
முறையிலாச் சொற்களான் முதிர்ந்தவெங் குலத்தைக்
கறைபடப் பேசிய கட்டிலா நாவை
அறுப்பென் இன்னே !

*[கோட்புலி சினத்தால் அனிச்ச அடியின் கூந்தலைப் பற்றி இழுக்க மறைவில் நின்ற அருளாழி வெளிப்பட்டு வாளை உருவிநின்று]*

அருளாழி : அணியிழை யொருத்தியை
ஒறுப்பதற் கெழுந்த ஒப்பிலா மறவ !
நாணிலி யாகி நல்லார் குழல்தொடும்
மாணிலி நின்போல் மண்ணில் யாருளர் ?

கோட்புலி : சொல்லால் எறிதலில் வல்லாய் ! சுடர்வாள்
அல்லால் மற்றென் றெறிதலை அறியேன் ;

---

மாறு - மாறுக, இறும்பூது - வியப்பு, மாணிலி - மாட்சிமை யில்லாதவன்.



கோட்புலிக் கெதிரோர் குறுநரி வந்து
வாட்படை தொடுவதை வையம் நகைக்குமால் !

அருளாழி : வையம் நகைப்பதும் வானம் நகைப்பதும்
செய்யுநம் அமரின் இறுதியிற் றெரியும் ;
ஐய ! இன்னுமென் தயக்கம் !

*[இருவரும் வாட்போரிடுகின்றனர்]*

அனிச்ச : ஆ ! ஆ !
இருவரும் மாறி இடவல மாகி
வெருவுறு மருஞ்சமர் விளைக்கின் றனரே !
மின்னலின் வாள்கள் கண்ணொளி மழுக்குதல்
பன்னற் கரிய பதைப்பினைத் தருமால் !
இச்செரு வெவ்விதம் முடியுமோ ? கோட்புலி
நச்சரா வீழுமோ ? நல்லவன் வேறுமோ ?
ஓ ! ஓ ! கோட்புலி ஒடுங்கித் தளர்ந்தனன் !
வீழ்ந்தது தீமை ! வென்றது நல்லறம் !
சாய்ந்தனன் கோட்புலி ! சமரிடை நெடுவாள்
பாய்ந்ததத் தீயோன் பருவயிறு கிழிந்தது ;

அருளாழி : ஒழிந்தனன் தீயோன் ! ஒன்னலர் வருமுன்
கழிதலே தக்கது ; கலம்ஆண் டுளதால் ;
விரைகதில் !

அனிச்ச : இந்த விரிநீர்த் தீவில்
சிறைப்பட் டேனெனத் தெரிந்துவந் தாயோ ?

*[வீழ்ந்து கிடந்த கோட்புலி குறுவாளால் எறிய அவ்வாள் அனிச்ச அடியின் கழுத்தில் பாய்கிறது]*

கழுத்தில் குறுவாள் அழுத்திய வாவென் !

அருளாழி : பழுதிலாய் ! உன்றன் பனிமலர்க் கழுத்தில்
அந்தோ குருதியின் அருவி வழிந்ததே !
செந்தேன் மொழியே செப்பகில் லாயோ ?
கயக்கறு மதியே மயக்கமுற் றனையோ ?

---

அமர் - போர், சமர் - போர், செரு - போர், ஒன்னலர் - பகை, விரிநீர் - கடல்.

(நெஞ்சில்)
தயக்கம் தீயது! தளர்ந்தா ளிவளைத்
தூக்கி எடுத்துத் தூநீர்க் கலத்தினைப்
போக்கித் தொண்டி விரைந்து போவனேல்
வாடிய கொடிக்கு வாழ்வு கொடுக்கலாம்!
கோடிய புருவக் குமுதவாய் காக்க
ஏற்ற வினைகளை யாற்றுவென் இன்னே!

———

கோடிய புருவம் - வளைந்த புருவம்.

# ஐந்தாம் அங்கம்

## இரண்டாம் களம்

**இடம்:** வெளியம்.

**காலம்:** மாலை.

**உறுப்பினர்:** பரணர், அனிச்ச அடி, மருத்துவர், அருளாழி.

**பரணர்:** மூத்தீர் வள்ளியை முதலோ டரிந்து
பாத்தியுட் போட்டெனப் படுக்கையிற் கிடக்கும்
இம்மகள் உடல்நிலை எவ்வா றுளது?
**மருத்துவர்:** மம்மர் ஒழிக! மற்றிவள் மிடற்றின்
புண்ணும் பெரிது; புண்படக் கழுத்தில்
நண்ணிய வாள்கொடு நஞ்சிற் றோய்த்ததாம்;
அஞ்சுதற் குரியதா யிருப்பினு மதனையும்
விஞ்சும் மருந்துகள் விளைத்துளர் மருத்துவர்;
குருதிக் குழலைக் குறுவாள் சிதைத்ததால்
பெருகிக் குருதி பீறிட் டெழுந்ததால்;
உணர்வு வயப்படல் ஒருவுதல் வேண்டும்;
தணிவரும் உணர்வுகள் தாக்குமேல் குருதியின்
ஓட்டம் விரைவுறும்; அதனால் உடல்நலம்
வாட்டமும் கேடும் வாய்ப்பது கூடும்;
மன்னிய புகழீர் மாலையில் வருவேன்!
**பரணர்:** சொன்ன பரிசே சுடர்த்தொடி நலத்தினை
ஓம்புவம்;

*[மருத்துவர் செல்ல அனிச்ச அடி
பரணரை நோக்கி]*

வள்ளி - வள்ளிக்கொடி, போட்டென - போட்டாற்போன்று, மம்மர் - மயக்கம், மிடற்றின் - கழுத்தின், ஒருவுதல் - நீங்குதல், தணிவரும் - தணிதல் இல்லாத.

அனிச்ச : தமிழர் உளம்நிறை பெரியீர் !
காம்பினை நீங்கக் காலம் நோக்கும்
கனியென உள்ளேற் காக்கும் முயற்சிகள்
இனியென வேண்டும் ; பிழைத்தும் இனிநான்
என்செய வல்லேன் !

பரணர் : எழுதரு மின்னிடை !
என்செய வல்லேன் என்பதை யெண்ணித்
தேம்புதல் ஒழிமதி ! காம்பும் கனியும்
தாம்படு முறவினைத் தன்னொடு பொருத்தி
நலிவுகொள் ளற்க ! நலமுதிர் கனிகள்
உதிர்தல் இயற்கை ! ஒண்டொடி நீயோ
உதிரும் பருவமும் உறவிலை ; பகைவன்
உதிர்க்க முனைந்ததும் இயற்கையும் ஒன்றோ ?
பிழைப்பாள் என்றவென் பேச்சினை நம்பியே
தழைக்கும் மனத்தனு அருளன் தனக்குறு
பணிமேற் சென்றுளன் ; பழியினைத் துடைக்கவும்,
கொடிய மிஞிலியின் கூட்டம் அழியவும்,
படிமிசைக் கோசரின் புகழொளி பரக்கவும்,
தொடங்குமிப் போரில் வெற்றி தோன்றுதல்
கொடுங்குழை நீநலம் கொளல்சார்ந் துளது ;
நினக்குக் கேடெனின் நிகரிலா அருளன்
தனக்கும் அஃதே தணவாக் கெடுதலாம் ;
அவன்கே டுறுமெனின் அமரிடை மிஞிலியை
எவனோ வெல்லுதல்? ஆதலின் ஏந்திழாய் !
வெற்றியை நீதான் விரும்புவை யாயின்
முற்றிய நலத்தொடு வாழ்தலை முதற்கண்
கொள்ளுதல் வேண்டும் ;

அனிச்ச : கோதிலாப் பெரியீர் !
மள்ளரின் சிறந்த மாவலி அருளன்
யாண்டுச் சென்றுளன் ! எவ்வினை ஏற்றுளன் ?
ஈண்டவன் வருவனோ ?

---

**நணிய** - நெருங்கிய, **படிமிசை** - உலகில், **பரக்கவும்** - பரவவும், **தணவா** - நீங்கா, **எவனோ** - எவ்வாறு.



பரணர் : இனையல் மகளே !
தலைநகர் வஞ்சி சார்ந்துளன் அருளன் ;
நிலைச்செரு மிஞிலியொடு நிகழ்த்துதற் குரிய
இறுதி முடிவுகள் எடுக்கச் சென்றுளன் ;
பூழியுள் மிஞிலியைப் பொருதுகட் டழிக்க
ஆழியை மானும் அரும்படைத் தலைமையை
சேரன் கொடுத்துளன் ; சிறிது நேரத்தில்
நின்னைக் காணவும், நின்னலம் வினவவும்,
முன்னை வஞ்சினம் முடிக்கும் போர்க்களம்
'போய்வா' எனநீ புகலக் கேட்கவும்,
ஆய்நுதல் மடந்தை ! அருளன் வருவான் ;

அனிச்ச : பேரறி வுடையீர் ! பேதையென் னையம்
தீரற் குரியன தெரிக்க வேண்டினென் ;
சேரர் படையிற் சிறந்த எயினனே
சோரற் குரிய தோள்வலி மிஞிலியை
அருளன் எளிதில் அடுதலும், வெற்றி
தருமெனத் துணிதலும் தக்கதோ ?

பரணர் : மகளே !
எயினன் போர்முறை யாவையும் அருளன்
செயிரறக் கற்றவன் ; செருக்கள மருங்கில்
படையை வகுத்தலும் ! பகைவர் எழுப்பிய
தடையை உடைத்தலும், தக்ககா லத்தே
உத்திகள் மாற்றி ஒன்னார் படையைப்
பித்துறச் செய்தலும், பிறவும் நாடின்
தலைமகன் செயலிற் சரிபாதி யாகும் ;
அலையெனத் திரண்டொருங் கார்த்துவரு வாருள்
தலைமைசான் றாரொடு தனித்துப் போரிடல்
எஞ்சிய பாதியென் றியம்பலாம் ; மிஞிலி
தனிப்போ ருடற்றும் தகைமையைப் போல
அணிப்போர் நடத்தும் ஆற்றலன் அல்லன் ;
தனிப்போர் முறைகள் தவலிலா தறியின்

---

**கட்டழிக்க** - நிலைகுலையச் செய்ய, **சோரற்குரிய** - தளர்தற் குரிய, **செயிரற** - குற்றமற.

ஆற்றலும் விரைவுமே அளப்பிலா வெற்றியைத்
தோற்றுவிப் பனவாம்; துகளிலா எயினனே
ஆற்றலன் ஆயினும் அடர்த்துச் சுழலுதற்
கேற்ற விரைவினை இழந்த முதியவன்;
இருமையும் பொருந்திய இளையோன் மிஞிலி
செருவிடை வென்றனன்; செம்மலர் நிறத்தாய்;
அருளன் மிஞிலி இருவர் ஆற்றலும்
விரைவும் பிறவும் விளங்க நாடின்
அருளனின் மிஞிலி ஆண்டில் மூத்தவன்;
முதுமை வாயிலின் முதற்படி நிற்பவன்;
இளமை அருளனின் விரைவினுக் கீடு
கொடுப்பது மிஞிலியாற் கூடுவ தில்லை;
தனிப்போர் ஒன்றையே தறுகண் மிஞிலி
நனிவிழைந் துள்ளான்; நாயகன் அருளன்
வெல்லுதல் உறுதி! கவலல் விடுமதி

*[அருளாழி உள்ளே நுழைந்து]*

**அருளாழி:** எல்லின் ஓங்கிய இசையொளி சான்றீர்!
வணங்கினென்!

**பரணர்:** அருள! வா! வா! அமர்க!

**அருளாழி:** கனங்குழை! நலமா? கழுத்தில் உள்ளபுண்
எவ்வணம் உள்ளது?

**அனிச்ச:** எந்தை பரணரின்
செவ்விய அன்பும் சிறந்த மருந்தும்
நலத்தைத் தந்துள; நள்ளாப் பகைவரின்
நிலத்திடை யடுபோர் நிகழ்த்தும் தலைமை
ஏற்றுளாய் என்பதை அறிந்தேன்; யாவரும்
போற்றிடு மாறு புல்லியன் மிஞிலியை
வடிவாள் நூறிக் கூறிய வஞ்சினம்
முடிவான் செய்யும் முயற்சிகள் யாவும்
ஓங்குக; தோன்றும் ஊறுகள் அனைத்தும்

---

ஆற்றலன் - ஆற்றலுடையவன், அடர்த்து - நெருங்கி, இருமையும் - ஆற்றலும் இளமையும், எல்லின் - ஞாயிற்றைக் காட்டிலும், வடிவாள் நூறி - வடிவாளாற் கொன்று.



நீங்குக! இதுவென் நெஞ்சின் கிடக்கை.

**அருளாழி:** கைம்மா தாக்கக் கடுநோய் உழந்தேன்
உய்ம்மா றெத்தனை உதவிகள் புரிந்தனை!
அல்லும் பகலும் அகலாது யானலம்
புல்லும் படிசெயத் துன்பம் பொறுத்தநீ
படருறு காலைப் பக்கத் தமர்ந்துன்
இடர்களை யேனாய்ச் செல்லும் என்செயல்
நாணுந் தகைத்தால்!

**அனிச்ச:** நற்றமிழ்ப் பரணர்
பேணுந் திறத்தினை அறியாது பேசுதல்
நீக்குக! என்னயல் நீயிருந் தாகும்
ஆக்கம் சிறிதால்! அதனினும் குலத்தின்
மானங் காத்தலே மாண்பின் மிக்கதாம்;
ஈனம் அதனை இயற்றா தொழிவது!
களத்தில் நீபெறும் வெற்றிக் கணக்கென்
நலத்தை விளைக்கும் நல்லதோர் மருந்தாம்;
உள்ளம் வருந்தல்! முன்னர்யா னுரைத்த
சொல்லெலாம் மறந்து சுடர்வா ளேந்துக!
என்பிழை யென்பதை யறிந்துளே னாதலின்
பெண்பிள்ளை என்றன் பிழையைப் பொறுத்துக்
குலமும் நாடும் குறையா ஒளிபெற
வலமே பொலிய வாட்படை தொடுக!
வலம்படு தோளில் வாகைத்தார் கண்டு
நலம்பட் டுய்ய நல்லருள் செய்க!

**அருளாழி:** தேன்படு நின்சொலென் செவிப்படச் செவிப்பட
வான்படு பகையும் வணக்கும் ஆற்றலைப்
பெற்றுளேன்; அனிச்சம்! ஆயினும் பேதுறுத்
தெற்றுமோர் நினைவான் யான்சுழல் கின்றேன்;
பொற்றொடி என்னைப் புரட்டுமத் துயரம்

---

கைம்மா - யானை, உய்ம்மாறு - உய்யுமாறு, படருறுகாலை - துன்புறும்பொழுது, ஈனம் - இழிவு, பெண்பிள்ளை - பெண் பிள்ளை, பேதுறுத்து - மயக்கந்தந்து.

இற்றொழி தற்குநீ உண்மை இயம்புக!

அனிச்ச: எதுநான் இயம்புதல் வேண்டும்; இசைக்க!

அருளாழி: மதுநாண் மலர்க்குழல்! மறிகடல் அலவனொடு
மொழியவும், அழைத்தேன் முன்னிலா தம்பியொ
டொழியவும் நின்னை யூக்கிய உணர்ச்சியை
இயம்புக!

அனிச்ச: (தனக்குள்)
அந்தோ! எதைநான் நினைக்கத்
தயங்குகின் றேனோ அதனையே தருகென
விழைகின் றனனே! விரித்துரை செய்வதோ!
பிழையெனத் தவிர்ந்து பேசா திருப்பதோ?
கனிந்தது காலம் ஆமெனக் கருதித்
துணிந்தென் உட்கிடை சொல்லவோ? சொல்லின்
பற்றும் உறவும் பாரித் தெழுவதால்
முற்றும் போர்வெறி சற்றே குறையுமோ?

அருளாழி: நெய்தற் பழிக்கும் நெடுங்கணாய்! செருவில்யான்
உய்தலை நயப்பின் உண்மை விளம்புக!

அனிச்ச: மனத்தின் போலி மயக்கமும், ஏக்கறு
சினத்தின் முனைப்பும் சேர்ந்து திரண்டென்
உள்ளம் மறைக்கும் திரையாய் ஓங்கக்
கள்ளம் சொற்களில் கலந்துன் நெஞ்சைப்
புண்படச் செய்துளேன்; பொருவிலாய் பொறுக்க!
கண்படல் மறைத்தவம் மாயக் கருந்திரை
இந்நாள் ஒழிந்தது! இனிவரு நாளெலாம்
பொன்னாள் என்பதைப் புந்தி தெளிந்தது;
முற்றிலும் கூற முனைகிறேன்! விடாது
சற்றெனைத் தடுப்பது நாணோ பிறவோ!
அறியகில் லேனால்; அமரிடைப் பகைவர்
இரியவும், புலவோர் ஏத்தவும் புகழொடு
எம்முன் வருங்கால் எஞ்சிய செய்தியைத்

---

இற்றொழிதற்கு - அழிந்தொழிதற்கு, அம்பியொடு - கலத்தொடு, பொருவிலாய் - ஒப்பில்லாதவனே, புந்தி - அறிவு.



தெம்முரண் கடந்தநின் திருவடி மலர்களில்
வைத்து வணங்குவென்; வானவர் நாட்டை
மொய்த்துள பகையின் எலும்பை முறித்துக்
கடலெனும் புகழொடு வருவாய்க் காண
உடலம் ஒடுங்கினும் ஒடுங்கா உயிரொடு
காத்திருப் பேனான்; கடந்தடு சுடர்வாள்
மீத்திறங் காட்டநீ மேவுக களமே.

———

---

தெம்முரண் - பகைவர்களின் மாறுபாட்டை, உடலம் - உடம்பு, மீத்திறம் - மேலான திறம்.

# ஐந்தாம் அங்கம்

## மூன்றாங் களம்

இடம் : *பாரம்.*

காலம் : *பகல்.*

உறுப்பினர் : *நன்னன், காவலன், அமைச்சர்.*

**அமைச்சர் :** கொண்பெருங் கானக் கொற்றவ ! பூழியுள்
வன்பெரும் சேரரின் வயப்படை நம்மினும்
முன்னரே போரினை முடுக்கி யுள்ளது ;
பன்னரும் மிஞிலியப் படையெதிர் தாங்கியும்
செருக்கள மனைத்தும் செந்நீ ராடியும்
வெருக்கொளப் பகைவரின் விலங்கூ டறுத்தும்
போர்மேற் கொண்டுளன் ; புயலென வரூஉம்
சேரர் படையினைச் செலுத்தும் இளையவன்
புதியனே யாயினும் போர்முறை உத்தியில்
முதியனே எனப்பிறர் மொழியும் திறத்தனும் ;
மின்னெனச் சுழன்று மெலிவு தோன்றிடும்
முன்னரங் கெல்லாம் முளைத்து, வீரரின்
தொய்வு நீக்கலில் தொய்யா உளத்தனும் ;
எய்வென லறியா இரும்புலி யனையனும் ;
அணிப்போர் செய்தலில் அரும்பய னிலையேல்
தனிப்போர் புரிந்து தலைமையை வீழ்த்திட

---

*கொண்பெருங் கானம் - துளுநாட்டின் மற்றொரு பெயர், வயப்படை - வலிய படை, வெருக்கொள - அச்சங்கொள்ளுமாறு, விலங்கூடறுத்தும் - படையின் குறுக்கே ஊடுருவிச் சென்றும், எய்வு - தளர்ச்சி, தலைமையை - படைத்தலைவனாகிய அருளாழியை.*



எண்ணி யுள்ளனன் இருந்தோள் மிஞிலி ;
அண்ணிய கொங்குநாட் டாங்கண் எல்லையில்
நார்முடிச் சேரல் படையொடும் நண்ணியாங்
கோர்முனை செய்தலை ஒறுக்க மதவலி
தலைமையில் செல்படை தன்கடன் கொண்டுளது ;
நிலைமை இஃதாம் !

*[புன்னாட்டிலிருந்து தூதுவன் வந்து]*

**தூதுவன் :** நீர்சூழ் உலகெலாம்
மன்னர் பெருமான் மலரடி வைகி
நன்னர் விளங்குக ! புன்னாட் டிருந்து
போந்துளேன் ; ஆண்டுப் புகுந்துள சேரலன்
தான்றுணை புரியத் தடுக்கிலாப் பெருங்கலாம்
மூண்டெழுந் துள்ளது ; முன்னுள் அரசரும்
ஆண்டவ ரோடு அணுக்கம் கொண்டுளார் ;
நம்மவர்க் காணின் நமனுல குய்த்திடச்
செல்மருங் கறியாது திகைத்தநம் வீரர்
அடவியைத் தஞ்சம் ஆமெனக் கொண்டுளர் ;
இடரினைக் களையவோர் இரும்படை கேட்டு
வந்துளேன் ; ஆதலின் வாய்ப்பன செய்க !

**நன்னன் :** வந்துள தூதன் வாய்மொழி கேட்டீர் !
புன்னா டனுப்பப் போர்ப்படை யாண்டுள ?
என்னான் புரிவ தமைச்சர் இயம்புக !

*[நறவிலிருந்து வீரன் வந்து]*

**நறவுவீரன் :** ஏழ்பிறப் படியேன் கொற்றம் வாழியர் !
சூழ்கழல் தொழுது சொல்லுவ துடையேன் !
நென்னல் இரவு நெடுநீர்த் துருத்தியை
முன்னிய குட்டுவன் முந்நூறு கலத்தொடு
முற்றினன் ; நம்படை முடக்கினன் ; தீவைச்
சுற்றிய வன்படை தொடக்கிய போரில்

---

*அண்ணிய - பக்கத்தேயுள்ள, சேரலன் - ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், ஆண்டவரோடு - ஆண்டு + அவரோடு, அணுக்கம் - நெருக்கம், அடவி - காடு, நென்னல் - நேற்று, குட்டுவன் - செங்குட்டுவன்.*

வேங்கை முகனும் வீழ்ந்தன னாகத்
தேங்குத லிலனாய்த் திரும்பிப் படையொடு
நறவினை முற்றி நலிவுகள் செய்தனன் ;
மறவினைத் தலைவனும் மாண்டனன் ; ஆதலின்,
திசைகள் எட்டினும் சிதறினர் வீரர் ;
விசையொடு சேரனின் வியன்படை தலைநகர்
பாரம் நோக்கிப் படரும் என்பது
சேரர் படையின் ஒற்றித் தெளிந்தனம் ;
கேட்ட மறையினைத் திருமுன் கிளத்தல்
வேட்டிவண் வந்தனென் ; வெல்கநின் வேலே !

நன்னன் : நல்லதன் நலனும் நயனொடு படாஅ
அல்லதன் அழிவும் அறிந்தெனைத் தெளிக்கும்
புலத்திற் சிறந்தீர் ! புழையுற்று மூழ்கும்
கலத்தினை எவ்வணம் காத்தல் இயலும் ?
ஓட்டைக் கலத்திற் கொன்பதுமீ காமர்
கூட்டாய் முயலினும் பிழைத்தல் கூடுமோ ?
குழலொடும் யாழொடும் குலவிய செவிகள்
அழல்படு மிடியிசை இனிமையென் றாருமோ ?
எவ்வாய் மருங்கு மிருந்தொவ் வொருவராக்
கூடிய வாடல் அரங்கின் கூட்டம்
நாடக முடிந்தவந் நாழிகைப் போதே
நில்லா தொழியும் நிகழ்ச்சியே போலவும்,
எண்ணிலாத் தேனீ எழில்கால் மலர்தொறும்
பன்னா ளெடுத்துப் பருமரக் கிளைமிசை
ஈட்டிய தேனடை எடுக்குங் குறவன்
கோட்டுடன் அரியக் குலைவது போலவும்,
வழிவழி யாக வளர்த்த புகழெலாம்
ஒழிவில தாகி ஒழியுநாள் வந்ததோ ?

---

*தங்குதலிலனாய் - தடுப்பாரிலனாய், மறவினை - போர்வினை, பாரம் - துளுநாட்டுத் தலைநகர், படரும் - செல்லும், கிளத்தல் - வெளிப்படுத்தல், திருமுன் - அரசன்முன் ; வேட்டிவண் - வேட்டு + இவண் - விரும்பி இங்கே ; புழை - ஓட்டை, கோட்டுடன் அரிய - கிளையொடு வெட்ட.*



இடமே ஆடும் வேளையில் வைத்த
குடமா டாமல் இருத்தல் கூடுமோ ?
முடிவிலா ஆற்றல் மிஞிலியின் முடிவும்
வடுவெனப் பொய்க்கும் காலமும் வாய்த்ததோ ?

அமைச்சர்: இதனினுஞ் சிக்கல் எழுந்த நாளிலும்
மதனழி யாநின் மனமோ நடுங்குவது ?
நன்னன் போர்க்களம் நண்ணக் கேட்டபின்
முன்னர் வரூஉம் வீரரு முளரோ ?
கூப்பிய கையர் அல்லது கூர்வேல்
ஓக்கிய கையர் உய்ந்தது கண்டிலம் !
புயலிடை யசையாப் பொருப்பென நிற்குநீ
மயலுறக் காண்பது மருட்கை உடைத்தால் ;

நன்னன் : இறந்த காலப் பெருமைகள் எத்துணைச்
சிறந்த வென்பதைத் திறம்பட மொழிந்தீர் !
முன்னாட் போர்களில் நம்மொடு முரணியோர்
பொன்னால் வடித்த பொருபடைக் கலங்களே
துணையெனக் கொண்டுபோர் தொடக்கினர் ; ஆதலின்
பனையென வெற்றி படைத்தனம் ; இன்றோ
குழலி என்னுமோர் குலப்பிறப் பாட்டியின்
அழலுமிழ் விழியின் அடங்கா ஊற்றெனப்
பொங்கிப் பரந்ததோர் புனலின் வெள்ளமும்
தங்கள் படையின் தணவாத் துணையென
ஏற்றுளர் ; ஆதலின் இன்றெழு செருவில்நாம்
தோற்பதே யல்லால் துணிவதொன் றில்லை !
வினையை விதைத்தவன் வினையை அறுப்பது
முனைவன் வகுத்த முதுநெறி யன்றோ

*[பூழியிலிருந்து வீரனொருவன் வந்து]*

பூழிவீரன் : மண்கொள வந்தவர் மறிபடா ராகப்
பின்கொள நேர்ந்தநம் பெரும்படை இணைந்து
கடம்பின் வாயிலைக் களமாக் கொண்டுள ;
திடம்படு நெடுவேல் அருளன் சினத்தொடு

---

*மதன் - வலிமை, ஓக்கிய - உயர்த்திய, இணைந்து - ஒன்று சேர்ந்து.*

கடம்பின் பெருவாயிற் காவன் மரத்தின்
முழுமுதல் துமித்து முற்றி யுள்ளனன் ;
[மற்றொரு வீரன் வருகின்றான், வந்து]

மற்றொரு வீரன் : நறவினைப் பற்றிய நள்ளார் நமரை
மறவினைப் படுத்தியும் மறிபடா ராகியும்
பாரத்தை முற்றப் படர்ந்துள் ளனரால் !

நன்னன் : ஆரத்தை மார்பில் அணிவதா யெண்ணிச்
சேற்றினைப் பூசின் செழுமணம் எவன்வரும் ?
பெண்கொலை புரிந்த பெரும்பழி யொன்றே
மண்படு காறும் மறையா திருப்பது !
ஒன்னலர் வருங்கால் ஒதுங்கிப் பணிந்தான்
நன்னன் என்னுமோர் நயவாப் பழியையும்
பெறயான் விரும்பிலேன் ; பெறலரும் துணையாம்
திறவோர்த் திரட்டியான் தீர்கிலாப் பகைவரைப்
பாரத்தின் மேலைப் பறந்தலை எதிர்ப்பேன் !
வீரத்தின் விளைநிலம் வேறற் கரிய
தென்பதைக் குட்டுவன் இன்னே யுணரவும்,
மன்பதை வாழ்நர் முற்றும் மதிக்கவும்,
பொருகரிப் படையொடு புகுந்தனென் களமே.

---

முழுமுதல் - அடிமரம், துமித்து - வெட்டி, முற்றியுள்ளனன் - முற்றுகையிட்டுள்ளனன், நள்ளார் - பகைவர், ஆரத்தை - சந்தனத்தை, மண்படு காறும் - உலகம் அழியும் வரையிலும், பறந்தலை - போர்க்களம்.

# ஐந்தாம் அங்கம்

## நான்காம் களம்

இடம் : வெளியம்.

காலம் : நண்பகல்.

உறுப்பினர் : அனிச்ச அடி, பரணர், கணியன்கிரன், வீரன்.

அனிச்ச : தந்தையீர் ! போர்க்களம் தரூஉம் செய்திகள்
வந்தவா ? ஆயின் வாளா விருப்பதேன் ?

கணியன் : மகளே யனிச்சம் ! மருத்துவர் கூற்றைத்
தகவொடு காத்தலே தக்கதாம் ; உணர்ச்சியின்
வயப்படு வாயேல் வருந்துயர் நீக்கச்
செயப்படு மருத்துவம் சிறிதும் இல்லென
மொழிந்த மருத்துவர் மொழியினைத் தேறி
ஒழிகநின் னுவல் !
[பரணரை நோக்கி]

அனிச்ச : ஒண்டமிழ்ப் புலவீர் !
மறக்களச் செய்திகள் மகள்கேட் பாளேல்
பிறக்கிலா அரும்படர் பேதை எய்துவள்
என்னும் கருத்தால் இசைத்திலர் ; அளியர் !
துன்னிஎன் மனத்துட் சுழன்று சுழன்று
வருத்தும் உணர்ச்சியின் வன்மை தெரிந்திலர் ;
எருத்துறு புண்ணின் எரிபடும் என்மனம்
அழியாது காத்தலை அவாவின் இவ்வணம்

---

பிறக்கிலா - நீங்குதல் இல்லாத, எருத்துறு புண்ணின் - கழுத்தில் உள்ள புண்ணைக் காட்டிலும்.

மொழியாது காத்து மூடி மறைப்பிரோ !
பரணர் : ஒருமக ளல்லால் உறவென யாரையும்
பெறுவதற் கில்லாப் பெற்றவர் நோவ
இவ்வணம் உரைப்பது செவ்விதோ மகளே !
தெவ்வரின் எண்ணிச் செப்புதல் ஒழிமதி !
ஏறச் சொன்னால் எருது சினங்கொளும் ;
இறங்கச் சொன்னால் முடவன் சினங்கொளும்
எனுமாறு தயங்கும் எங்கள் உளத்தினைத்
தினுமாறு வந்தவித் தீச்சொல் மொழியல் !
உணர்வொடு படாமல் உற்றன கேட்ப
திணர்படு குழலாய் இயலா தாதலின்
மொழிந்தில மாயினும் முனைதொறும் நம்மவர்க்
கழிந்தன ராகிப் பகைவர் அதிர்ந்துளர் ;
ஆதலின் அவலக் காட்படா தமைக !
அனிச்ச : கோதகல் புலமையீர் ! கொடும்போர்க் களத்தின்
நிலைமையை எவ்வணம் நீர்தெரிந் துள்ளீர் !
பரணர் : சிலையெனக் குனித்த புருவச் சேயிழாய் !
களத்தின் வந்த வீரன் கழறினன் !
அனிச்ச : குளத்தின் கெண்டை கருதிய குருகென
நன்மொழி வரவை நோக்கி நலிந்துளேன் ;
என்முனவ் வீரன் இயம்பாது தடுத்துளீர் ;
பொய்படு மிதனைப் புகலவே போலும் !
நைபடு மெனக்கொரு நலமொழி யீரோ !
வெற்றியே களத்தில் விளையுமேல் என்னைச்
சுற்றியோர் திரையைத் தொங்க விடுவதேன் ?
உண்மை மறைப்பதால் உயிர்வாழ் வேனெனும்
திண்மைகொள் ளாதீர் !
கணியன் : தேமொழி ! உள்ளம்
வெம்புத லொழிக !யாம் விளம்பிய சொற்களை
நம்புக மகளே ! நம்புக மகளே !
அனிச்ச : வஞ்சின முடித்து வருவா னெனுமோர்

தெவ்வரின் - பகைவரைப்போல, நைபடும் - துன்புற்று வருந்தும்.



எஞ்சா நசையும் இறுவதோ அருள !
இருஞ்சமர்க் களத்தில்நீ என்னா கினையோ ?
வறுஞ்சுமை உடலை வைத்துயிர் வாழ்கிலேன் !
காற்று வெளியில்நீ கரக்கினும் நின்னடி
ஏற்றுத் தொடர்ந்திட எழுவேன் இன்னே !
*[வீரன் ஒருவன் உள்ளே வருகிறான்]*
பரணர் : கற்பனை செய்துளம் கலங்கலை விடுமதி !
எற்படு குழலாய் ! எம்முரை தெளிய
விருப்பிலை எனினும் வெல்களத் திருந்து
வருமிவன் மொழியும் வாய்மை கேண்மதி !
வீரன் : வாழ்க எங்கோ நார்முடிச் சேரல் !
காலங்கள் தொறுமவன் வேலே காக்க !
துருத்தியுள் குறும்பு தொகுக்கும் வேங்கையை
வருத்தியும், அவன்றன் வாழ்வினை முடித்தும்,
மீண்டு நறவின் மேவலர் ஒட்டியும்,
ஆண்டுள பகையின் ஆணிவேர் கல்லியும்,
பாரத்தை முற்றிப் பன்மலர் தொடுத்த
ஆரத்த னாகி யடுகளம் புக்கெதிர்
வந்த நன்னனை வாட்படைத் துமித்தும்
ஐந்து நாள்களில் அருஞ்சமர் முடித்துக்
குட்டுவன் வைகினன் என்னுமோர் குளிர்மொழி
தொட்டுண் மகிழவோர் தூதனும் வந்தனன் ;
கடம்பின் வாயிற் களத்திடை மிஞிலி
படம்விரித் தாடும் அரவெனப் பாய்ந்தும்
தோல்வியே கண்டனன் ; துளங்கிய மிஞிலி
ஏல்வது தனிப்போர் எனமனம் துணிந்து
தலைவன் அருளனொடு தனிப்போர் தொடங்கினன்;
கொலைவன் படையைக் கொண்டன ராகி
அருவிசைப் பட்ட ஆழியைப் போலச்
செருவிடைச் சுழன்று திரிந்தும் மோதியும்

*இறுவதோ - அழிவதோ ! கரக்கினும் - மறையினும், வேங்கையை - வேங்கை முகனை, மேவலர் - பகைவர், ஏல்வது - பொருந்துவது, ஆழியை - சக்கரத்தை.*

ஈரிரு நாழிகை இடைவிடா துடற்றியும்
போரில் முடிவு புலப்பட வில்லை;
ஆர்வம் விடாஅ தரும்போ ரியற்றச்
சோர்வினால் மிஞிலியின் சுடர்வாட் கையிலோர்
நடுக்கம் கண்ட நாயகன் அருளன்
முடுக்கினன் விரைவை முன்னினும் இரட்டி;
வேலும் தோலும் வீழ்ந்தது கண்டிலம்
போழும் நெடுவேல் புக்கதே கண்டனம்;
மண்ணிடை மலையென மிஞிலி கிடந்தனன்;
புண்ணிடைச் செந்நீர் பொங்கி யருவியாய்
வழிந்தது; வீரரின் வாழ்த்தினால் செவிப்பறை
கிழிந்தது; கேட்டவர் உள்ளம் கிளர்ந்தது;

அனிச்ச: செருக்கும் வஞ்சமும் சிறுமையும் அறிவில்
திருக்கும் நிரம்பிய மிஞிலி தீர்ந்தனன்!
பெண்மகள் ஒருத்திகண் பெய்தசுடு நீரில்
மண்முழு தாண்ட மன்னரும் மூழ்கினர்!
வாய்மொழிக் கோசர் என்னும் வண்மொழி
ஏய்மொழி யாகி எங்கும் பரந்தது!
வஞ்சினம் முடித்து வருமுனைக் காண
அஞ்சனம் எழுதிய அருவிழி மூடாது
நிற்பேன்! காண நெடுந்தகாய் வருக!
அற்புளங் காண அருளநீ வருக!!
[மேலும் உரத்த குரலில்]
இத்தனை யழைத்தும் என்பால் வந்திலை
அத்தநீ யாண்டுளை? அன்பநீ யாண்டுளை?

பரணர்: [தமக்குள்]
சேயிழை இவ்வணம் செப்புதல் தீதாம்
வாயிடைக் குருதி வடிந்ததே! யந்தோ
மயக்குற் றாள்போல் மலரணை மீது
தளர்ந்துவீழ்ந் தனளே;

---

உடற்றியும் - போர் செய்தும், தோலும் - கேடகமும், திருக்கும் - முரண்பாடும், ஏய்மொழி - பொருத்தமான சொல், அஞ்சனம் - கண்மை, அற்புளம் - அன்புளம், அத்த - தலைவனே.



கணியன்: தையாஅல் அனிச்சம்!
உடம்புக் கென்னை உற்றது கூறுக!
[ஏவலனிடம்]
திருந்திழைக் குற்றன தெரித்து மருத்துவர்
மருந்தொடும் விரைந்து வருகென மொழிமே!

---

மொழிமே - மொழிவாயாக.

# ஐந்தாம் அங்கம்

## ஐந்தாங் களம்

இடம்: *நறவுப்பட்டினப் புறங்காடு.*

காலம்: *அந்தி மாலை.*

உறுப்பினர்: *அருளாழி, கணியன்கீரன், பரணர்.*

**அருளாழி:** வளிமுத லைந்தொடும் கரந்து வைகிய
அளியுலாம் குழலியுன் ஆருயிர் மகிழவும்,
வஞ்சமும் கொடுமையும் வாழ்முதல் இழக்கவும்,
நெஞ்சம் கனற்றிய நெடுமொழி முடியவும்,
பற்றிய பழியெலாம் பகலவன் பொற்கதிர்
எற்றிய இருளென இரியவும், இடைவிடாது
என்னுள் இருந்து இயக்கினை யாதலின்
துன்னும் களத்திலத் துளுவன் மிஞிலியின்
அருநிறம் பிளந்தனென்; அடுவேல் நுதியின்
குருகெழு செந்நீர் கொண்டு வந்துளேன்;
வஞ்சின முடித்துளேன்; வட்கார் படைகளை
எஞ்சாது துமித்துளேன்; ஆயினும் என்பயன்?
நெடும்புகழ் கிடைத்தது! நீணிலம் கிடைத்தது!
கடும்பின் புலவரின் காசிலா வாழ்த்தும்
கிடைத்த தாயினும் கிடைத்திலை நீதான்!
பூழியை மீட்டுளேன்; பண்டு போயநம்
ஆழியை மானும் அரும்புகழ் மீட்டுளேன்;

---

*வளிமுதலைந்து - ஐம்பெரும் பூதம், குருகெழு - நிறம் பொருந்திய, வட்கார் - பகைவர், கடும்பின் - சுற்றத்தினையுடைய.*



இழந்தன யாவையும் மீட்டுளே னெனினும்
பிளந்தன வடுக்கண் பேதையை மீட்டிலேன்!

*[பரணரும், கணியன்கீரனும் வருகின்றனர்]*

**பரணர்:** ஆரமர்க் கடந்துபகை அனைத்தும் கொண்ட
பேரமர்த் திறமெலாம் பேசக் கேட்டனம்;
ஆண்டகை நின்றன் அடுதிறம் கண்ணுற்
காண்டகை பெறேஎ மெனினும் கண்டவர்
எடுத்து மொழியக் கேட்டவெஞ் செவிகள்
தொடுத்த பேற்றினைச் சொல்லவும் படுமோ?
சேரலர் நாட்டின் சீர்த்தியை உலகெலாம்
காரலர் மணமென யாண்டுங் களிபெறச்
செய்தநின் சுடர்ப்படைத் திருத்தோள் வாழியர்!

**கணியன்:** மொய்ம்பினோய்! பகையை முடித்தது கேட்டுனைக்
காண வந்தனம்; களத்தின் நிகழ்வுகள்
பாணரும் பொருநரும் பாடிச் சென்றனர்;
ஆயினும் பாடிய அவ்வெலாம் நின்றன்
வாயினுற் கேட்டுளம் வாழ்த்த வந்துளேம்;

**அருளாழி:** அன்பிற் சிறந்தீர் அமர்க்களச் செய்திகள்
பின்பு கூறுவென்; பேதை குழலியின்
மாட்டுளம் கரைந்து மயங்கும் வேளையில்
மேட்டுள பூளையின் மெலிந்த செடியுதிர்
செம்மலென் கைகளில் வந்து சேர்ந்தது;
இம்மலர் நிகழ்ச்சியான் எதிர்வரு மாறுள
உண்டேல் கணியன் ஒழியா ததனை
விண்டு கூறுதல் வேண்டினென்;

**கணியன்:** அருள!
நாண்மலர் கைகளை நண்ணி யிருக்குமேல்
ஆண்டகாய் நல்லதே யாமெனக் கூறுவேன்;
ஒளியும் மணமும் ஒழிந்த பழம்பூ

---

*பிளந்தன வடுக்கண் - மாவடுவைப் பிளந்தாற் போன்ற கண், காண்டகை - காணும் தகுதி, காரலர் - முல்லை மலர், பூளை - பூளை மலர், செம்மல் - வாடிய பூ, நாண்மலர் - புதுமலர்.*

விளிவதும் கையில் வீழ்வதும் காணின்
இழப்பே யல்லால் எதிருறல் வேறிலே ;

அருளாழி : தொழத்தகு பெரியீர் ! துடியிடை யனிச்சம்
எவ்வணம் உள்ளாள் ? இடுக்கண் நீங்கிச்
செவ்விய நலத்தொடு திகழ்கின் றனளா ?
வருவேற் காண வளர்ந்தெழு நசையால்
செருவேற் கண்ணி செப்பிய துண்டுகொல் ?
[ஒன்றுஞ் சொல்லாதிருக்க]
மொழியா தமைதியின் மூழ்கினீர் ! யான்படு
கழியா குலத்தைக் காணிரோ ?

பரணர் : பெரும !
உலகிய லனைத்தும் ஒழிவறத் தெரிந்தாய் !
பலபட நினக்கியான் பகர்தல் வேண்டுமோ ?
விரும்பிய வனைத்தும் வேட்டவா றெய்துதல்
இருங்கட லுலகில் இயலுமா றிலேயே !

அருளாழி : பெரியீர் என்னைப் பேதைப் படுத்தாது
சுரிகுழற் குற்றன சொன்மினோ வின்னே ?

பரணர் : காளையுன் கைகளிற் காற்றின் உதிர்ந்த
பூளையும் பறந்து போயது ! போயது !
வெற்றிச் செய்திகள் செவியிடை விழவிழ
முற்றிய பேரவா மூண்டெழு மனத்தளாய்
'அருளநீ யாண்டுளே' என்றவள் அடங்காக்
குரலாற் கூவினள் ; ஆதலின் குருதி
வாய்வழிப் பெருகிட வஞ்சியாள் நம்மின்
போயினள் ; அதற்காப் புலம்பியென் னுவது ?
காலம் கொடுக்கும் கழிபடர்க் கொடையினே
ஏல்வதே யல்லால் எதிர்ப்பதி யாங்ஙனம் ?

அருளா: 1. அலைநோக்கும் பொறியலவற் கன்றுநீ சொன்னசொலின்
தொலைநோக்குத் தேருதே நோகாய் நினைப்பிரிந்தேன் ;
தொலைநோக்குத் தேருந் தொழிலாற் படரென்னும்
கொலைநோக்கிற் காளாகி உள்ளம் குலைந்தேனல் !

விளிதல் - உதிர்தல், கழியாகுலத்தை - கழி + ஆகுலத்தை—
பெரிய துன்பத்தை.



2. மீனுணங்கல் போலியதாம் மெல்லியலார் வாழ்க்கையெனத்
தானுணங்கிக் கூறியசொற் றன்மை உணரேனல் ;
தானுணங்கிக் கூறியசொற் றன்மை உணர்வேனேல்
யானுணங்கி உள்நலியும் எவ்வம் அடையேனல் !

3. கண்படுமோர் மாயக் கருந்திரையும் போயதென
வண்படுமோர் வாய்மொழியான் வாழ்ந்துரையும் நல்கினேயே ;
வண்படுமோர் வாய்மொழியின் வாழ்ந்துரையை மெய்யாக்கிப்
புண்படுவே னுளமாழ்கப் பொய்யாகிப் போயினேயே !

4. 'வென்று வருவாய்முன் உள்ளம் வெளிப்படுத்தி
ஒன்றுவே' னென்றோர் உறுதிமொழி நல்கினேயே ;
ஒன்றுவே னென்ற உறுதிமொழி கொண்டேனைத்
தின்று துயரங்கள் தீர்க்கவென் றேகினேயே !

5. காமஞ் சுமந்தவக் கண்ணும் கருங்குழலும்
ஈமஞ் சுமந்த எரிவாய்க்கே போயினவோ ?
ஈமஞ் சுமந்த எரிவாய்க்கே போயபினும்
நாமஞ் சுமந்தே நானிருத்தல் காணீரோ !

6. நடையும் முகமும் நனிசிறந்த மெல்லியலாட்
கிடையே மறைந்துளதா மென்றுள் மகிழ்ந்தேனல் ;
இடையே மறைந்துளதா மென்றுள் மகிழ்வாழ்வின்
இடையே மறைந்தாய் எரிவாய்க்கே புக்கனேயே !

7. வெப்புநீ ராகி விழியி னிழிந்துவரும்
உப்புநீ ராலிவ் வுடலரித்துப் போகாதோ !
உப்புநீ ராலிவ் வுடலரித்துப் போய்விடுமேல்
துப்புநேர் வாயின் துணைதேடித் தொடர்வேனல் !

துளுநாட் டெல்லையுள் வாய்மை தொழிற்படல்
வழுவென மொழிந்த எயினன் வாய்மொழி
குழலியைப் பிரித்த கொடுவா ளாயது !

வண்படுமோர் - வளப்பம் பொருந்திய ஒரு, காமம் - அன்பு.

மனத்திடைக் கொண்ட மறையெலாம் விரித்துப்
புனத்திடை மயிற்குப் புகன்றிருப் பேனேல்
எய்யேன்! நடுங்கேன்! இப்படர் உழலேன்!
பொய்யே வாழ்க்கையைப் பொய்ப்பட வைத்ததே!

*[பரணரை நோக்கி]*

வாகை கொண்டு வருவேன் முன்னர்
தோகை தன்னுளம் துலக்கியோர் உண்மையை
மொழிவேன் என்றனள்; இன்றே மொழியாது
கழிவான் புக்கனள்; காசிலீர்! அனிச்சம்
உம்மிடம் ஏதும் உரைத்தனள் கொல்லோ?

பரணர்: எம்மிடம் ஏதும் இயம்பிலள்; ஆயினும்
ஆவி பிரிவதன் முன்னர் அவள்வாய்
தூவிய சிலவாம் சொல்லின் தொகுதியைக்
குறித்து வைத்துளேன்; கோதை யதனையே
மறித்தும் மறித்தும் கூறி மரித்தனள்;

அருளாழி: பொன்படு மம்மகள் புகன்றன யாவும்
புண்படு மெனக்குப் புகலுதிர் வல்லே!

பரணர்: **'உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பமே**
**இறவினால் பெறுவது எண்ணிலா வின்பமே'**
இவையே அனிச்சம் இசைத்தன;

*[அருளாழி கேட்டு மயங்கி வீழ]*

மகனே!
நவையே தருமென நானறி யேனால்!
சொற்றன கேட்டுநீ சோருமா றென்னே!
கற்றும் உணராக் கடையே னாயினென்;
கணியரே! மயங்கிய காளைக் கேதம்
நணியது முண்டோ?

*[கிரன் கையைப் பிடித்து நாடி பார்க்கிறான்]*

கணியன்: நற்றமிழ் வல்லீர்?
வன்படர் நம்மை வளைத்ததே! அந்தோ!

---

படர் - வருத்தம், வாகை - வெற்றி, நவை - குற்றம்.



விண்படர்ந் தாள்பால் விளக்கம் கேட்கப்
பின்படர்ந் தான்போல் அருளன் பிறங்கிய
உடலை நம்பால் விடுத்துப்
படலைக் கண்ணியின் பாற்சென் றனனே!

ஆசிரியம் வரி — 101
இசைப்பாடல் 7, வரி — 28
ஆக வரி -- 129

---

படலைக் கண்ணி - பச்சிலையும் மலரும் கொண்டு கட்டப்பட்ட மாலையை அணிந்த அனிச்ச அடி.

அனிச்ச அடி

முற்றும்

### பின்னிணைப்பு

# மேற்கோள் விளக்கம்

## பழமொழிகள்

பக்கம் வரி

19— 96 *'வெருகின் கையில் வீழ்ந்த கிளியென'*
கிளியைவளர்த்துப் பூனைகையிற்கொடுத்தாற்போல.

22— 57 *'முன்னுழை திருடன் கையில்*
*மூரித்தேள் கதுவத் தன்னின்*
*பின்னுளான் தனக்கும் கூடப்*
*பேசிட முடியா மைபோல்'*
திருடனுக்குத் தேள் கொட்டினாற்போல.

36— 67 *'அடுக்களைக் கிணற்றில் அமுதமெழுந் தாலென'*
அடுக்களைக் கிணற்றில் அமுதம் எழுந்தாற்போல்.

36— 77 *'கிணற்றினுள் வீழ்ந்த*
*குழவியை எடுப்பதா? கொல்லெரி சூழ்ந்த*
*மழலையை எடுப்பதா? மயங்குமோர் தாய்போல்'*
இரண்டு கன்றுக்கு இரங்குமோர் ஆபோல்

43— 95 *'ஆமைக் குலகம் ஆழ்கிண றுகலாம்*
*அரசின் உலகமும் ஆழ்கிண றுகுமோ'*
ஆமை உலகம் கிணறுதான்.

44—124 *'கையொடு பட்ட கள்வன் கவிழ்ந்து*
*நெய்யொடு பட்ட கிமிராத் திரிபோல்*
*இருப்பது தானே உலகத் தியற்கை'*
கையும் களவுமாகப் பிடிபட்டாற் போல.

44—133 *'கையிடை இருக்கும் கனியென விளங்கும்'*
உள்ளங்கை நெல்லிக்கனி போல.

பக்கம் வரி

46—175 'முள்ளை முள்ளால் எடுக்க முயல்பவர்
நெருப்பை நெருப்பால் நீக்க முனைவரோ;'
முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்
நெருப்பை நெருப்பால் அணைக்கலாமா?

48—226 'களிற்றினைக் காணக் குடத்தினுட் கைவிடும்
தெளிவினை எண்ணி அழவோ? திகைக்கவோ?'
யானையைப் பார்க்கக் குடத்துட் கைவிட்டாற்போல.

48—236 'ஊன்றக் கொடுத்த உறுதடி உயிரை
வாங்கிய தென்ன'
ஊன்றக் கொடுத்த தடி மண்டையை உடைத்தாற் போல.

49—250 'அரவம் பசியையே கருதலும் தேளை
விதியை எண்ணி வீழலு மாயதே''
பாம்பு தன் பசியை நினைக்கும்; தேரை தன் விதியை நினைக்கும்.

61— 72 'வினையை விதைத்தவன் வினையை அறுத்திட''
வினை விதைத்தவன் வினை யறுப்பான்.

61— 92 'இருதலைக் கொள்ளி எறும்பினை ஒத்துளேன் ;
மறுதலை மொழியவோ மகிழ்ச்சியைக் கூறவோ
இயலா துழல்வேன்'
இருதலைக் கொள்ளி எறும்பு போல.

74—101 'அதிர்நடைக் களிற்றான் அழிந்த கொல்லையில்
குதிரைமேய்ந் தாலென? கழுதைமேய்ந் தாலென'
அழிந்த கொல்லையில் குதிரைமேய்ந்தாலென்ன? கழுதை மேய்ந்தா லென்ன?

76—161 'பகலில் ஆவினைப் பார்க்கக் கண்ணிலான்
இரவில் எருமையை யாங்ஙனம் காணுமோ?
பகலில் பசுமாடு தெரியாதவனுக்கு இரவில் எருமை மாடு தெரியுமா?



பக்கம் வரி

91— 95 'எங்கடி படினும் இனைவுறும் குக்கல்
தங்கால் நொண்டுதல் தானே இயற்கை'
எங்கே அடிபட்டாலும் நாய் காலைத்தான் நொண்டும்.

92—105 'ஆனை படுப்பினும் ஆட்டுக்குத் தாழுமோ?'
ஆனை படுத்தால் ஆட்டுக்குட்டிக்குத் தாழுமா?

96— 56 'ஏனடா தென்னையில் ஏறினாய் என்றால்
ஆவிற் கறுகு பறிக்கும் அவாவினால்
ஏறினேன் என்றவற் கேதடா தென்னையில்
அறுகெனக் கேட்டால் அதுதான் காண்கிலா
திறங்குகின் றேனே என்னும் எத்தனின்
நன்கு தெரித்தனை நகைபட மொழிந்தனை'
ஏண்டா தென்னையில் ஏறினாய் என்றால்
கன்றுக் குட்டிக்குப் புல்பிடுங்க என்கிறான்
தென்னைமரத்தில் புல் ஏதடா என்றால்
அதுதானே கீழே இறங்குகிறேன் என்கிறான்.

98— 97 'ஈன்ற குயிற்கும் வளர்த்தெடுத் திரையினைக்
கான்று கொடுத்த காக்கைக்கும் பயன்படா
தேகித் தனியே இரங்கிசை பாடும்
குயிற்பார்ப் பாகிக் குமைகின் றேனால்'
பெற்ற தாய்க்கும் வளர்த்த தாய்க்கும்
பயன்படாமல் பிரிந்த குயிலைப் போல.

99—121 'பனையின் வீழ்ந்தவற் கரிமிதித் தாலென'
பனை மரத்திலிருந்து வீழ்ந்தவனை எருது மிதித்தாற் போல.

105— 68 'முள்ளிடை யிட்ட வெள்ளாடை மெல்ல
எடுப்பது போனம் எதிர்ப்பவர்க் கெதிர்ப்பை
மடுப்பது நம்கடன்'
முள்மேல் துணிபோட்டால் மெல்லத்தான் எடுக்க வேண்டும்.

பக்கம் வரி

*113— 43* *'அறிவேன் ! அறிவேன் ! ஆலிலை தானே !*
*புளியிலை போலப் பொடியாய் இருக்கும்*
*எனச்சொலும் பித்தனை நினைவுற வைத்தனை'*

அறிவேன் அறிவேன் ஆலிலை புளியிலை போல இருக்கும்.

*113— 57* *'கயல்விழி யாரும் கவின்மலர்க் கொடியும்*
*அயலில் உள்ளதை அணைத்தலே இயல்பாம்'*

பெண்ணும் கொடியும் பக்கத்தில் உள்ளதைப் பற்றியே வளரும்.

*121—107* *'அலையிலாக் கடலில் யாரும் திறம்பட*
*நாவாய் செலுத்துவர்'*

அமைதியான கடலில் அனைவரும் கப்பலோட்டியே.

*125— 66* *ஆடுகொடாதவன் ஆவைக் கொடுப்பனோ ?*

ஆடு கொடுக்காத இடையன் ஆவைக் கொடுப்பானா?

*130—202* *'அரைப்பணம் கொடுத்தே அழச்சொலிக் கேட்டவர்*
*ஒருபணம் கொடுத்தே ஓயச்சொன் னலென*
*ஆயதே என்னிலை'*

அரைப்பணம் கொடுத்து அழச்சொல்லி ஒரு பணம் கொடுத்து ஓயச் சொன்னாற்போல.

*142—171* *'விரிந்து கெடுவது நறுமலர் என்பதூஉம்*
*மொழிந்து கெடுவது சிறுநா என்பதூஉம்*
*அறியா உளமே! இனியா உய்குவை?'*

பூவிரிந்து கெட்டது நாமொழிந்து கெட்டது.

*147— 77* *'அன்னப் பாலுக்குத் தென்னனைப் போட்டவன்*
*ஆவின் பாலுக்குக் கற்கண்டு கேட்கிறான்'*

அன்னப்பாலுக்குச் சிங்கிஅடித்தவன் ஆவின் பாலுக்குச் சர்க்கரை கேட்கிறான்.

*147— 79* *'இறக்குங் காலம் எழுந்தால் அல்லவோ*
*பறக்கச் சிறகினை விரிக்கும் ஈயலும்'*



பக்கம் வரி

இறக்குங் காலம் வாராமல் பிறக்குமா ஈசலுக்குச் சிறகு.

*147— 81* *'உண்டு கொழுத்த நண்டுபோ லானவன்*
*வளையில் இருப்பனோ?'*

நண்டு கொழுத்தால் வளையில் இராது;
தண்டு கொழுத்தால் தரையில் இராது.

*147— 84* *'எவ்விலை உதிரினும் ஈந்திலை உதிருமோ?'*

எந்த இலை உதிர்ந்தாலும் ஈச்சஇலை உதிராது,

*155—114* *'குப்பையில் முளைத்த கொழுவிய தண்டு*
*கப்பற் பாய்மரம் ஆதலெப்போது'*

குப்பையில் முளைத்த கீரை கப்பலுக்குப் பாய்மரம் ஆகுமோ?

*155—116* *'சமைக்கப் படைக்கத் தெரியாய் எனினும்*
*உடைக்கக் கவிழ்க்க உறுதிகொண் டனையோ?'*

சமைக்கப் படைக்கத் தெரியாமற் போனாலும் உடைக்கக் கவிழ்க்கத் தெரியும்.

*156—126* *'எருக்கு மலர்ந்தென்ன மருக்கொழுந் தாகுமோ?'*

எருக்கு பூத்தால் மருக்கொழுந் தாகுமோ?

*168— 57* *'ஓட்டைக் கலத்திற் கொன்பதுமீ காமர்*
*கூட்டாய் முயலினும் பிழைத்தல் கூடுமோ?'*

ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி.

*169— 71* *'இடமே யாடும் வேளையில் வைத்த*
*குடமா டாமல் இருத்தல் கூடுமோ?'*

இடம் ஆடும்போது குடம் நிற்குமா?

*172— 21* *'ஏறச் சொன்னால் எருது சினங்கொளும்*
*இறங்கச் சொன்னால் முடவன் சினங்கொளும்*
*எனுமாறு தயங்கும் எங்கள் உளத்தினைத்*
*தினுமாறு வந்தவித் தீச்சொல் மொழியல்'*

ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச் சொன்னால் நொண்டிக்குக் கோபம்.

# இலக்கியப் பகுதி

பக்கம் வரி

8— 78 "வயிறு வாய்த்த செயிரிலா மகளிர்
எயிறு விளங்க எதிரெதிர் நின்று
நெல்லும் மலரும் நிரைத்துத் தூவி
சொல்லும் பொருளும் ஆமெனப் **பிணைவீர்** ;
உற்ற கடமைகள் ஒருவாது பேணிப்
பெற்றோன் பெட்கும் பிணையை யாகென."

'உச்சிக் குடத்தர் புத்தகல் மண்டையர்
பொதுசெய் கம்பலை முதுசெம் பெண்டிர்
முன்னவும் பின்னவு முறைமுறை தரத்தரப்
புதல்வற் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோற் பெட்கும் பிணையை யாகென'

—அகம், 86

20—104 "கலத்தொடு கவிழ்ந்த பாலென"

'கன்று முண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துக் காஅங்கு.'

—குறுந்தொகை, 27

34—13 "வானோக்கி நோக்கி வளருமுயிர் ; குடியெல்லாம்
கோனோக்கி வாழ்கின்ற குறிப்புடைய என்பரால்?"

'வானோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன்
கோனோக்கி வாழும் குடி.'

—குறள், 542

46—186 "ஒறுத்தல் என்பது ஒரேஎ தன்மையாய்
இருத்தல் தகாஅது ; எத்தகு சூழலில்



பக்கம் வரி

இழைத்தனர் குற்றம் என்பதை யாய்ந்து
பிழைத்ததைக் கொள்கெனப் பேசும் பொருள்நூல்"

'தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்
ஒத்தாங் கொறுப்பது வேந்து' —குறள், 561.

53—68 "மதிய முகத்தினள் மலரைக் களைந்து
கைம்மைவாய்ப் படலும், கடிமணம் வாய்ந்தவள்
மெய்ம்மலி உவகையொடு கொய்ம்மலர்ப் பிணையல்
சூடலும், வாழ்வைச் சுவைத்தலும், இன்பில்
ஆடலும் உலகின் அமைப்பெனல் கண்டோம் ;
சாப்பறை யோர்பால் கறங்கவும், சான்றோர்
நாப்பறை வாழ்த்த நன்முழ வொலித்தலும்
கண்டன மன்றே"

'ஓரில் நெய்தல் கறங்க ஓரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாளன்
இன்னாது அம்மவிவ் வுலகம்
இனிய காண்கிதன் இயல்புணர்ந் தோரே'

—புறம், 194

55—101 "முடித்தலை யோட்டினை முன்னெடுத் துயர்த்திப்
பிடித்தொரு விளக்காய்ப் பிறங்கிடச் செய்குவென்"

'முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி—எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்' —முத்தொள்ளாயிரம், 76.

58— 9 "பொய்ம்மொழி யாகிப் போதல்செய் யாதோ !
இம்மொழி என்றுளம் இனைந்தினைந் தேங்கும்"

'பொய்யா கியரோ ! பொய்யா கியரோ !
...... ...... ...... ......

பக்கம் வரி

போரடு தானை எவ்வி மார்பின்
எஃகுறு விழுப்புண் பலவென
வைகுறு விடியல் இயம்பிய குரலே'

—புறம், 233

*59—41* ''தறுகண் என்பது தரியலர் மேற்சென்று
உறுகண் இழைப்ப தொன்றே யாமோ''

'பேராண்மை என்ப தறுகண் ஒன்றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.'

—குறள், 773

*60—43* ''எய்திய இடுக்கண் இடுக்கட் படுமாறு
செய்திடல் அன்றோ சிறந்ததறு கண்மை''

'அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்'

—குறள், 625

*60—58* ''கனியினை விடுத்துக் காய்பறித் தானே''

'கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'

—குறள், 100

*61—92* ''இருதலைக் கொள்ளி எறும்பினை ஒத்துளேன்''

'இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் னெஞ்சு'

—முத்தொள், 100

*63—127* ''பெற்றதூஉம் ஒருயிர்; பிறங்கு மவ்வுயிர்
மற்றிவ் வுடம்பை மண்ணிடைக் கிடத்தி
ஒழியப் போவதும் ஒரேஎ ஒருமுறை;
கழியப் போகுமிக் காயமும் உயிரும்
நோயினும் நொடியினும் நொந்துநொந் துழன்று
பாயிலும் தரையிலும் பயன்படா துறங்கி
ஈளையும் இருமும் எதிரெதிர் இழுக்கும்
வேளையில் பொருது வீதலைக் காட்டிலும்
குலத்தின் கொடிகளை வேரொடு களைந்தெம்



பக்கம் வரி

நலத்தினை யழித்த நயனிலாப் பகைவரைப்
பூண்டோ டழித்துப் புனற்குருதி யாட
ஆண்டெம் ஆருயிர் அழியினும்''

'இருக்கின்ற உயிர் ஒன்றுதான்; அது போகப் போவதும் ஒரே ஒரு முறைதான். அவ்வாறு போகின்ற உயிர் ஈளைகட்டி இருமிப் போகாமல் என் தாய் மொழியாகிய தமிழைக் காக்கப் போகுமானால் அதற்காக மகிழ்ச்சியடைவேன்.'

—பேரறிஞர் அண்ணா

(இந்தி எதிர்ப்புப் போராட்ட நாளில் பேசியது)

*64—155* ''நோயாற் சாதலின் நோக்கலர் வைவாள்
வாயாற் சாதலே வாழ்க்கைப் பேறெனக்
கருதுவது நம்மினம்''

'குழவி இறப்பினும் ஊன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்'

—புறம், 74

*65—175* ''இடமும் காலமும் எண்ணாது வினைசெயல்
மடமென அறிகுவம்''

'ஞாலங் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்'

—குறள், 484

*68—15* ''அந்நிலத்தி னியல்பாலே திரியும் நீரென்
றுய்ந்துரைத்த குறள்வாக்குப் பொய்க்கா தன்றோ ?''

'நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு'

—குறள், 452

*81— 5* ''விருந்தெதிர் கோடல் மறந்தாளாய்
வீட்டின் கடமை துறந்தாளாய்
முருந்தேர் முறுவல் இழந்தாளாய்
முகத்தில் அவலம் படர்ந்தாளாய்''

பக்கம் வரி

'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'
—சிலப், கூ - 71-73

87— 21 "எவ்வழி மேலோர் அவ்வழியே
இயங்கும் உலகம் எனக்கண்டோம்"

'எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'
—புறம், 187.

95— 25 "அமுதுண விழைந்தாய் நஞ்சு முண்பையோ"

'நவையிலை வந்த தென்னீ
அமுதுண்பாய் நஞ்சுண் பாயோ'
—கம்பரா, கும்ப. படலம், 131.

85— 34 "இடைக்கண் முரியா தெடுத்த வினை முடிக்கும்
நடக்கையை"

'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர்'
—குறள், 473.

107—103 "இளைதா யிருக்கையில் இடர்தரு முள்மரம்
களைதலே அறிவெனக் கழறுவோர் மேலோர்"

'இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து'
—குறள், 879.

108—134 "நாடொறும் வாள்முனை நல்கும் புதுப்புண்
கோடலே வாழ்நாட் குறியெனக் கொண்டவர்;
விழுப்புண் படாது வியும் நாளெலாம்
வழுப்படு நாளென வருந்தும் நெஞ்சினர்"

'விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து'
—குறள், 776.



பக்கம் வரி

113— 64 "தோட்காச் செவியெனத் துலங்கு மென் னெஞ்சம்"

'கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி'
—குறள், 418.

117— 1 "கால மென்னுமோர் காணுற்று நெறியில்
ஞாலத் துயிர்களின் நலிவுதான் என்னே!
தில்லா உடலை நெடுங்கல மாக்கிப்
புல்லா இவ்வுயிர் புக்கவோர் செலவும்,
பற்றிட மெல்லாம் வெற்றிட மாக
எற்றியும் இழுத்தும் எவ்வழி உய்க்குமோ
அவ்வழி யெல்லாம் அலைக்கழி வுறலும்,
செல்வழி இன்றிச் சேற்றுட் புதைதலும்,
சாரும் சார்ச்சியும் சாராச் சார்ச்சியும்
ஓரும் அறிவிலா துறுசுழற் சிக்கலும்,
நெடியவா வென்னும் நீளிரும் பாறையின்
கடியமோ துண்டு கவிழ்ந்து போதலும்,
இருவினைப் பயனெனும் இருங்கடற் கோடித்
தருவினைக் கேற்பத் தரளமாய் உப்பாய்
உருவினைப் பெறுதலும், அலையின் ஒதுங்கி
வருதலும் தாமே வாழ்வெனக் கண்டோம்"

'மின்னொடு
வானம் தண்துளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம்'
—புறம், 192.

121—122 "கொலையிற் கொடியார்க் கொல்லுதல் பயிரிற்
களையை யகற்றிக் காத்தலை யொக்கும்"

'கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்'
—குறள், 550.

பக்கம் வரி

125— 55 "அளைநீர் நெருப்பும் அனலிற் காற்றும்
காற்றுட் புனலும் கனலும் கரத்தல்
தோற்றும் மருட்கை துணிந்துளே மன்றே"

'நிலம்தீ நீர்வான் விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம்'
—தொல்காப்பியம், 635.

128—148 "உறவினுல் உறுவது ஒழிகலாத் துன்பமே
இறவினுல் பெறுவது எண்ணிலா இன்பமே"

'இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்' —குறள், 369.

137— 25 "எற்றிய காலையும் இருகையின் விடாது
பற்றிய செல்லல் பார்த்திடின் வியப்பே"

'செற்றூர்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்றூர் அறிவதொன் றன்று' —குறள், 12 5.

137— 27 "என்னுட னுறைந்தும் எனக்கா காதவன்
றன்னுட னுழலலும் நெஞ்சே! தகுமோ?"

'அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவனெஞ்சே
நீஎமக் காகா தது' —குறள், 1291.

140— 97 "இன்னுந் தொடர்ப்பா டெதற்கென நினைந்து
நீங்கி யிருக்குமோ வெனநான் நினைவேன்"

'மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றூர்க் குடம்பும் மிகை' —குறள், 345.

146— 51 "அடுத்தவன் கவர்ந்த அணிநிலம் மீட்க
எடுத்த முயற்சிகள் இனியேனும் வெல்க!
இரும்பெலாம் தொடுத்த இணையிலா ஆற்றல்
நரம்பெலாம் பெறுக"

'உரம்பெய்த செந்தமிழுக்
கொன்றிங்கு நேர்ந்ததெனை



பக்கம் வரி

உரைக்கக் கேட்டால்
நரம்பெல்லாம் இரும்பாக
நனவெல்லாம் உணர்வாக
நண்ணி டேரோ'!
—தமிழியக்கம்-பாவேந்தர்-பாரதிதாசன்.

154 — 93 "காலமும் இடமும் கருவியும் எண்ணியார்
ஞாலம் கருதிலும் நண்ணுவர் என்பது
பொதுமறை அன்ருே?"

'காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலம் கருது பவர்' —குறள், 485.

159— 1 "மூத்திர் வள்ளியை முதலோ டரிந்து
பாத்தியுட் போட்டென"

'ஊடி யவரை உணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று' —குறள், 1304.

168— 62 "கூடிய வாடல் அரங்கின் கூட்டம்
நாடக முடிந்தவந் நாழிகைப் போதே
யில்லா தொழியும் நிகழ்ச்சியே போலவும்,
எண்ணிலாத் தேனீ எழிற்கால் மலர் தொறும்
பன்னு ளெடுத்துப் பருமரக் கிளைமிசை
ஈட்டிய தேனடை எடுக்குங் குறவன்
கோட்டுடன் அரியக் குலைவது போலவும்"

'கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று' —குறள், 332.

172— 34 "குளத்தின் கெண்டை கருதிய குருகென
நன்மொழி வரவை நோக்கி நலிந்துளேன்"
'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு' —மூதுரை, 16.

———

# அகப்பொருள் துறை விளக்கம்

ஒருவன் ஒருத்தியிடை நிகழும் ஒழுக்கம்பற்றிய செய்திகள் விளக்கமாக வெளிப்படுத்தப்படுவன அல்ல. குறிப்பு மொழிகளாலும் உள்ளுறை உவமத்தாலும் வெளிப்படுத்தப்படும் பெற்றியை உடையன. ஆதலின், இவ்வாறு ஒருவன் ஒருத்தியிடை நிகழும் காதல் ஒழுக்கம் பற்றிய செய்திகளை நன்கு படித்துச் சுவைக்க வேண்டுமானால் அவ்வகப் பாடல் எத்துறைப்பாற்பட்டது என்பதை அறிந்திருத்தல் வேண்டும். அகப்பாடல்களில் பொதிந்துள்ள கருத்து - உணர்ச்சிச் சுரங்கங்களின் திறவுகோலாக விளங்குவன இத்துறைகளே. இவை பாடலில் வரும் நிகழ்ச்சி பற்றிய சூழ்நிலையை விளக்குவன ; யார் யாருக்குக் கூறுவது என்ற செய்தியை வெளிப்படுத்துவன ; இடமும், சூழலும், கூற்றும் வெளிப்படும்போதுதான் பாடலின் உண்மைக் கருத்தையும் உணர்ச்சிப் பெருக்கையும் அறிய முடியும். துறை பற்றிய செய்தியில் தெளிவில்லையானால் பாடலின் கருத்தை அறிவதிலும் இடர்ப்பாடு விளையும். எனவே, இந்நாடகத்துள் வரும் அகப்பாடல்களின் துறை பற்றிய விளக்கம் இங்கே தரப்படுகிறது.

பக்கம் 17—29

**1. தோழி கையுறை மறுத்தது:**

பெண்மகள் ஒருத்திபால் உள்ளத்தைப் பறிகொடுத்த தலைமகன் அவளை அடைதற் பொருட்டுத் தலைமகளுக்குற்ற தோழியிடத்தில் தன்னுள்ளத்தை வெளிப்படுத்தத் தழையும் கண்ணியும் கொடுத்தல் கையுறை எனப்படும். தோழியானவள் தலைவன் உள்ளக் குறிப்பை உணராதவள் போன்று இதனினும் சிறந்த பொருள் எம் நாட்டு உளதாதலின் இக்கையுறை வேண்டேம் என மறுத்துக் கூறுதல் 'தோழி கையுறை மறுத்தல்' என்னும் துறையாகும்.



**2. கழற்றெதிர்மறை:**

தலைமகள்பால் உள்ளத்தைப் பறிகொடுத்த தலைமகனின் மனமும், உடலும் மெலிந்திருத்தல் கண்ட பாங்கன் இவ் வேறுபாடு எதனால் விளைந்தது என்று கேட்க அதற்குத் தலைமகன் கூறும் மறுமொழி கழற்றெதிர்மறை எனப்படும். 'கழற்றெதிர் மறை' வினவியதற்கு விடை.

**3. தோழி வரைவு கடாயது:**

தலைமகன் தலைமகளின் நலமுண்டு மகிழ்தலையே விரும்பி இரவிலும் பகலிலும் வருதல் கண்ட தோழி இவ்வாறு நீ தலைமகளைக் காணவருதல் தகாது என்றும் அயலில் உள்ளார் தூற்றும் அலர்மொழி பெரிதாயிற்றென்றும், செவிலியும் நற்றாயும் இம் மறையொழுக்கத்தை அறிந்தார் போன்று தலைமகளைப் புறத்தே போகாதவாறு தடுத்துள்ளனர் என்றும் எடுத்துக் கூறி வரைந்து கொள்க (திருமணம் செய்துகொள்க) என்று கூறுதல் 'வரைவு கடாதல்' எனப்படும். வரைவு—திருமணம். கடாதல்—வினவுதல்.

**4. இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னெஞ்சிற்குச் சொல்லியது:**

அலர்மொழி எழுந்ததாலும், தலைமகளிடத்தே தோன்றிய வேறுபாட்டைச் செவிலி அறிந்ததாலும் தலைமகள் புறத்தே செல்லாதவாறு தடுப்பது இற்செறித்தல் எனப்படும். இது வீட்டிற்குள் தங்கவைத்தல் என்னும் பொருளினையுடையது. இவ்வாறு இற்செறிக்கப்பட்ட தலைமகள் தன்னெஞ்சொடும், தோழியொடும் தன் ஆற்றாமை தோன்றப் பேசுவாள். இது தன்னாற்றாமையைத் 'தன்னெஞ்சிற்குச் சொல்லியதாகும்.'

**5. வரைவு நீட்டித்தவழித் தோழி இயற்பழித்தாளாகத் தலைவி இயற்பட மொழிந்தது:**

இயற்பழித்தல் — தலைவன் இயல்பினைப் (குணத்தினை) பழித்தல். இயல்பட மொழிதல்—தலைவன் குணம் தோன்றுமாறு கூறுதல்.

இக்காலத்தே திருமணம் செய்வேன் என்று கூறிச் சென்ற தலைமகன் ஏதேனும் ஒரு காரணியத்தால் குறித்த நாளில் வரைவொடு வரத் தவறினால் தலைவியை ஆற்றுவித்தற் பொருட்டுத் தலைமகன் சொற்பிழைத்ததனை எடுத்துக்காட்டிப் பழிப்பான். இதனைக் கேட்கப் பொறாத தலைமகள் தலைமகன் நல்லியல்புகளை எடுத்துக்கூறி, 'தோழி நீ இவ்வாறு மொழியாதே' என்று கூறுவாள். இது வரைவு நீட்டித்தவழித் தோழி இயற்பழித்தாளாகத் 'தலைவி இயற்பட மொழிந்தது' என்னும் துறையாகும்.

6. தலைமகள் பொழுது கண்டழிந்தது:

தலைமகனைக் காணாப்பொழுதில் தலைமகள் மாலை நேரத்தையும் மாலை நேரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளையும் கண்டு தன் நெஞ்சம் அழிந்து கூறுவாள். இது 'தலைமகள் பொழுதுகண்டழிந்தது' எனப்படும்.

7. காம மிக்க கழிபடர்கிளவி:

வேட்கை மிகுந்தவழி அந்நிலத்துப் பயிலும் பறவை, ஆண்டுள்ள பொழில் ஆகியவற்றோடு தலைமகள் தன் துன்பத்தினைக் கூறுதல். என்னிலை கண்ட நீ தலைமகன்மாட்டுச் சென்று கூறுயோ? என்று தலைமகள் பேசுவது 'காமமிக்க கழிபடர்கிளவி' எனப்படும்.

8. தன்னுட் கையாறெய்திடு கிளவி:

தலைமகள் தன்மாட்டெழுந்த துன்பத்தை அயலில் உள்ள ஒரு பொருள்மேல் இட்டுக் கூறுதல். தலைமகள் கடலையோ, காற்றையோ ஆண்டுள்ள பிற பொருள்களையோ விளித்து ஏன் துன்புறுகின்றனை. என்போலவே நீயும் ஒருவன் பிரிவினால் வருந்துகின்றனையோ என்று தன்னுள்ளத்தைப் பிற பொருள்மேல் ஏற்றிப் பேசுதல் 'தன்னுட் கையாறெய்திடு கிளவி' எனப்படும்'. கையாறு—துன்பம்—கிளவி—சொல். தன்னுள் எழுந்த கையாற்றைப் பிறிதொன்றும் எய்தியதாகக் கூறும் சொல் என இது விரியும்.



9. வெறியாட்டயர்ந்துழித் தோழி அறத்தொடு நின்றது:

தலைமகள் வேறுபாடு கண்ட செவிலி நற்றாய் முதலியோர் இவ் வேறுபாடு எதனால் விளைந்தது என அறியாராய் இது தெய்வத்தான் வந்திருக்குமோ என்றெண்ணி, வெறியாடும் வேலனை அழைத்து வெறியாட வைத்து வினவும் வேளையில் தோழியானவள் 'இவள் வேறுபாடு தெய்வத்தால் ஏற்பட்டதன்று; தலைமகனால் ஏற்பட்டது' என்று உண்மை கூறி நிற்றல் 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி/அடி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| 23 | 12 | இன்பமெற் | இன்பெமக் |
| 28 | அடிக்குறிப்பு-1 | என்னைப்போல் | என்னை போல் |
| 48 | 247 | தவழும்; | தவழும் |
| 112 | 30 | எனக்கே, | எனக்கே |